தேசிகம்

சதாபிஷேகார்ப்பணம்

50.9
டி
L/PR

450.9
நமசி
SLPR

தேசிகம்

இலக்கணவித்தகர் இ. நமசிவாய தேசிகர்
சதாபிஷேகார்ப்பணமலர்

20862

பதிப்பாசிரியர்
க. இரகுபரன்

பாலர் ஞானோதய சங்கம்
கட்டுவன் – மயிலிட்டிதெற்கு – வருத்தலைவிளான்
யாழ்ப்பாணம்
2000

நூல் விபரம்

பெயர் : தேசிகம் - (இலக்கணவித்தகர் இ. நமசிவாயதேசிகர் சதாபிஷேக மலர்)

பதிப்பாசிரியர் : க. இரகுபரன்

பதிப்பு : முதலாம் பதிப்பு - 19. 03. 2000

வெளியீடு : பாலர் ஞானோதய சங்கம், கட்டுவன் - மயிலிட்டிதெற்கு - வருத்தலைவிளான்.

அச்சுப் பதிப்பு : யுனி ஆர்ட்ஸ் தனியார் நிறுவனம்
48B, புளுமெண்டால் வீதி,
கொழும்பு - 13.
Tele/Fax : 330195/478133
Email: uniearts@slt.lk

பக்கங்கள் : 125

அறிவொளிக்கு அகவை எண்பது !

ஓர் ஒளிக்கதிர் எண்பதாண்டைக் கடக்கிறது.
இது அறிவொளி;
வழி வழியாய்த் தொடரும் ஒளி;
தொடரப்போகும் ஒளி;
இறைவனைப் போலவே இவ்வொளிக்கும்
முதலும் இல்லை; முடிவும் இல்லை.
உலகத்தின் கண்களுக்கு
யாழ்ப்பாணத்தை உணர்த்தியது இவ்வொளி;
இது தமிழாய் மிளிரும் தனி ஒளி;
ஒழுக்கம் எனும் வெம்மை கலந்தது இவ் ஒளி.
இலக்கியங்களின் மூலை முடுக்கெல்லாம் சென்று
விளக்கம் செய்த வீரிய ஒளி.
தொல்காப்பியத்தால் துலங்கியது இவ் ஒளி;
தொல்காப்பியத்தை துலக்கியது இவ் ஒளி;
இது,
விழிக்குத் துணையான ஒளியல்ல
விழியேயான ஒளி;
முகத்திரண்டு புண் இருந்த புல்லர்க்கும்
கண்கொடுத்துக் காட்டிய ஒளி;
இவ் ஒளியால் ஒளிபெற்ற
அகல்விளக்குகள் ஆயிரமாம்.
இது,
தன் பிரகாசத்தை பிரபல்யப்படுத்தத் தெரியாத பேதை ஒளி;
இவ் ஒளியின் முழுமை கண்ட விழிகள் ஏதுமில்லை;
இது, மற்றவர்க்கு இரங்கி தன்னைத்தான் தாழ்த்திக் காட்டும்
தண்ணளி பொங்கும் தனி ஒளி.
இது,
மிளிரும் ஒளி மட்டும் அல்ல;
குளிரும் ஒளியுமாம்.
இவ் ஒளியை;
தமதெனச் சொல்லித் தருக்குறுவார் பலர்;
ஆனால் இதுவோ தருக்கறியா ஒளி;
இவ் ஒளிபட்டவர், பழி விட்டவர்.
இது,
கணேசையர் என்னும் கனலில் பிறந்த ஒளி;
நாமம் கடந்த இவ்வொளியின் இன்றைய நாமம்
நமசிவாயமாம்.
ஒளிக்கும் வயது வரம்பா ?
பயன் பெற்றார் காலத்தைச் சாட்டாய் வைத்து
கடன் தீர்க்க முயல்கின்றார்.
அவ்வொளியோ,
பாராட்டைக் கடந்து பரவெளி நோக்கியபடி.
ஒளியே மாதா!
ஒளியே பிதா!
ஒளியே குரு!
ஒளியே தெய்வம்!

வித்தகத்தின் வித்து

கூரிய நுண்ணறிவால் அன்பால் குணச்சிறப்பால்
சீரிய கல்விச் சிறப்பதனால் - ஊரறிய
வித்துவசி ரோமணிக ணேசையர் மெச்சியநம்
வித்தகரே வித்துவத்தின் வித்து.

முன்னுரை

க. இரகுபரன்
மொழித்துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

நம் ஈழத்திருநாட்டுக்கென்று ஒரு புலமைப் பாரம்பரியம் உண்டு. இலக்கியம், இலக்கணம், தத்துவம் எனப் பல்வேறு துறைகளிற் பரந்துவிரிந்தது அப்பாரம்பரியம். அப்புலமை வழியின் கொடுமுடி என்று கருதப்படுபவர் நல்லைநகர் ஆறுமுக நாவலர் அவர்கள்.

நாவலர்தம் மருகரும் மாணாக்கருமாய், தமிழ்நயம் சொரிந்து உலகம் உவப்ப உலவியவர் வித்துவ சிரோமணி பொன்னம்பல பிள்ளையவர்கள். நாவலர்தம் கொள்கைவழி நின்று, அறிவுச்சுடர் கொழுத்தி 'நடமாடும் கலைக்களஞ்சியம்' என உலகு பாராட்ட உலவியவர் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரவர்கள்.

நாவலர்தம் உயர்புலமை வழிவந்த இந்த இருபெரும் அறிஞர்க்கும் மாணவராய் அமர்ந்து பெரும்புலமையுற்று, தன்காலத் தமிழுலகில் தனக்கு ஒப்பாரும் இல்லை, மிக்காரும் இல்லை எனும்படியாய் அறிவொளி பரப்பி நின்றவர் வித்துவசிரோமணி பிரமஸ்ரீ கணேசையர் அவர்கள். ஒல்காப்புகழுடைத் தொல்காப்பியக்கடலை நிலைகண்டுணர்ந்து அல்காப்புகழ் தேடிக் கொண்டவர் அவர்; அக்காலத்தில் இலக்கண, இலக்கியங்களில் எழுந்த 'தடை'களுக்கெல்லாம் 'விடை'யாய் விளங்கியவர்.

அத்தகு மேதையின் அறிவுப்புனலை அள்ளிப்பருகி மற்றோரை விட அவர்தம் மிக்க அன்புக்கும் அரவணைப்புக்கும் ஆளாகி, தலைமாணக்கர் ஆகும் பெரும்பேறு பெற்றவர், நாமெல்லாம் "தேசிகர் ஐயா" எனப் போற்றும் எங்கள் ஆசிரியப் பெருந்தகை, பேராசான், பண்டிதர், செந்தமிழ்த்திலகம், மஹாவித்துவான், இலக்கணவித்தகர் இ. நமசிவாய தேசிகர் அவர்கள்.

பாரம்பரியத் தமிழறிவுலகின் இன்றைய தலைமைப்புலவர், அவரே.

திருக்குறள், கம்பராமாயணம், வில்லிபாரதம், கந்தபுராணம், சங்கத்தொகைநூல்கள், நெடும்பாடல்கள் முதலாம் இலக்கியங்களிலும் தொல்காப்பியம் முதலாம் இலக்கண நூல்களிலும் சிவஞானபோதம் முதலாம் சித்தாந்த சாத்திரங்களிலும் அவ்வவற்றின் உரைகளிலும் பிறவற்றிலும் மிகுபுலமை வாய்த்தவர்கள். நூற்கல்விக்கு மேலாக எதையும் நேரிய நெறிநின்று நோக்கும் கூரிய நுண்ணறிவு வாய்த்தவர்கள்; ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சால்பினர்; அறிவுக்குரிய அருங்குணமான அடக்கத்தையே தன் பெருங்குணமாகக் கொண்டொழுகியதால் வெற்றாரவாரங்களை வெறுத்து ஒதுங்கி வாழ்ந்தவர்.

அவர் அடங்கி நின்றாலும் அவர்தம் அறிவுதான் விகர்சித்த ஆறிவாயிற்றே!

அதுநோக்கி அறிவுலகம் அவரை உச்சிமேற் கொள்ள வேண்டியதாயிற்று.

ஐயா அறிவுலகில் ஒதுங்கி வாழ்ந்தாலும் அன்புலகில் ஒதுங்கியது இல்லை. ஊருக்கு அவர் உபாத்தியாயர் மாத்திரமல்ல; உபகாரியும் ஆனவர். நியமிக்கப்படாத நீதிபதியும் அவரே.

சாதாரணன் ஒருவனையும் தழுவும் தண்ணளியால் ஊரார்தம் உள்ளத்தில் இடம் பிடித்துக் கொண்டவர் அவர்.

ஐயாவின் ஊர், இன்று ஊராக இல்லை; ஊரார் ஊராராக இல்லை; 'புலம் பெயர்ந்தவர்கள்' ஆனார்கள்.

சிதறிக்கிடக்கும் தம் ஊரவர்களை ஒன்றுதிரட்டி, தங்கள் பழைய 'பாலர் ஞானோதய சங்க'த்தை மீள்தாபிதம் செய்து, தங்களூர்க்குப் பெருமை தேடித்தந்த பேரறிஞருக்கு சதாபிஷேகப்பெருவிழா எடுத்து அழகியதோர் மலரையும் அர்ப்பணித்து நன்றிபாரட்ட விழைந்தார்கள் அப் 'புலம் பெயர்ந்தவர்கள்'.

உலகமெல்லாம் சிதறிவாழும் அவலநிலையிலும் தங்கள் ஊரின் உயர்நிலை – உயிர்நிலை – எது எனக்கண்டு கொண்டாடும் அவர்களது விவேகம் பாராட்டுதலுக்குரியது.

பேரறிஞரின் சாதபிஷேகார்ப்பண மலரை உருவாக்கும் பொறுப்பு வாய்த்தது என் முன்னைத் தவப்பயன்.

வித்தகரையாவின் மாணவர்களும் அன்பர்களுமாய் அவர்தம் புகழ்மணம் கமழ இதனை மலர்த்தியிருக்கிறார்கள். நம்நாட்டிலும் தமிழ் நாட்டிலும் உள்ள அறிஞர்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகள் உதவியுள்ளார்கள்.

அன்பர்கள் ஐயாவைப்பற்றி நன்றியுணர்வோடு அவர்மேல் தமக்கிருக்கும் அன்பு புலப்பட எழுதியவை அன்பியல் என்றும் அறிஞர்கள் தம் அறிவு புலப்பட எழுதி ஆராய்ச்சிக் கட்டுரைகள் அறிவியல் என்றும் பகுதிபடத் தொகுக்கப்பட்டுள்ள இம் மலருக்கு 'தேசிகம்' என்று பெயரிடப்பட்டது.

ஐயாவுக்குக் கிடைத்த விருதுகளுளெல்லாம் உயரியது தேசிகர் எனும் விருதே. ஏனெனில் அது வித்துவசிரோமணி கணேசையரால் தம்மாணவரின் தகுதிகண்டு வழங்கப்பட்ட சிறப்பினது. ஆசிரியர் எனப் பொருள்படும் தேசிகர் எனும் அப்பதத்தின் தத்திதாந்தமாய் அமைவதே 'தேசிகம்.'

அது அவர்தம் 'நல்லாசிரியத்துவ'த்தின் தேசுமிகு புகழினைப் புலப்படுத்துவதாய் அமையட்டும்.

ஐயாவின் திருவடிக்கு வணக்கங்கள்!

வெளியீட்டுரை

பாலர் ஞானோதய சங்கம்

கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வர்த்தலைவிளாவ்

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வர்த்தலைவிளான் ஆகிய கிராமங்களின் வளர்ச்சிக்காக அயராது உழைத்தவர் பலர். அவர்களுள் க. பொன்னம்பலம், சி. சின்னப்பு, சி. முத்துவேலு, சி. சரவணமுத்து, சு. இரத்தினம், சு. நல்லையா, ஆ. சின்னத்துரை, சீ. சிவசுப்பிரமணியம், த. செல்லத்துரை, இ. தாமோதரம்பிள்ளை, ஆ. கணபதிப்பிள்ளை, சீ. வேலுப்பிள்ளை, இ. ஆறுமுகம், ந. நல்லதம்பி, அ. கனகசபை, சு. சின்னத்தம்பி முதலியவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். 'அக்காலத்தில் இளைஞர்களாய் இருந்த இவர்களால் தோற்றம் பெற்றதே 'பாலர் ஞானோதயம் சங்கம்' என்ற அமைப்பாகும்.

கட்டுவன், மயிலிட்டி தெற்கில் சில பகுதிகளும் வர்த்தலை விளானும் இச் சங்கத்தினுள் அடங்கும். சங்கத்தின் நோற்றம், தொழிற்பாடு காரணமாகக் கல்வி, விளையாட்டுத்துறைகளில் இக் கூட்டுக் கிராமம் முன்னேற்றம் கண்டது. இதனால் மகிழ்வும் உற்சாகமும் கொண்ட இவ்விளைஞர் இக்கிராமப் பகுதியில் பாடசாலை இல்லாத குறையைப் போக்க விழைந்தனர். அதனால் சி. சுவாமிநாதன், சி. கந்தவனம், ச. அம்பல்வாணர், க. கந்தையா, சி. கார்த்திகேசு முதலாய காத்திரமான பெரியாரைச் சங்கத்தில் அங்கத்தவர்களாக்கினர். சங்கம் சங்கப் பலகையாகியது.

ஊரிலும், ஊருக்கு வெளியேயும் பல்வகைத் தொழில்களிலும் ஈடுபட்டிருந்த க. கந்தையா வியாபாரியார், வ. நாகலிங்கம், சி. தாமோதரம்பிள்ளை, சி. குணரத்தினம், அ. தாமோதரம்பிள்ளை போன்றோர், மலாயா, சிங்கப்பூரில் வாழ்ந்த க. கந்தையா, சி. ஆறுமுகம், த. கந்தையா முதலியோர் வழங்கிய பொருளுதவியுடன் 'ஞானோதய வித்தியாசாலை' தோற்றம் பெற்றது. எழுமையும் ஏமாப்புடைய கல்வி சான்றோர் பலரை உவந்தளித்தது.

அஞ்சல் நிலையம், மருந்தகம், சனசமூக நிலையம் (வாசிகசாலை), நெசவுசாலை, விளையாட்டு மைதானம் என்பன அமைக்கப் பெற்றமையால் மக்கள் சுயதேவைகள் பல நிறைவேறின.

பின்னர், ஐக்கிய நாணய சங்கம், விளைபொருட் சங்கம், ஐக்கிய பண்டசாலைச் சங்கம், அந்திய சகாய நிதிச் சங்கம், மாதர் சங்கம், மத்தியத்தர் சபை, என்பனவும் தொடர்ந்து அமைக்கப்பட்டன. இதனால் கிராமம் பெரு வளர்ச்சி கண்டது. இளைஞர் கூடி ஊருக்கு உழைத்திட்ட யாகம் மக்கள் நலமோங்க யோகமாக மலர்ந்தது.

இந்நிலையில், போர் மூண்டதன் காரணமாக எமது மண்ணின் சகல வளங்களுடன் அதில் நிமிர்ந்து நின்ற மாட மாளிகைகள், கூட கோபுரங்கள் அனைத்தும் மண்மேடுகளாகின; மக்கள் நிலை குலைந்தனர்; இடம் பெயர்ந்தனர்; நாட்டிலும் பிறதேசங்களிலும் சொந்த முகவரி தொலைந்த நிலையில் ஏதோ வாழ்கின்றனர். மூப்பு, நோய், அகாலம் முதலாய பல காரணங்களால் இன்று பலர் உயிரோடு இல்லை என்பது நெஞ்சை அழுத்தும் வேதனையான செய்தி.

எமது கிராம் உட்பட வலிகாமம் வடக்கைச் சேர்ந்த மேலும் பல கிராமங்கள் அரசினரால் 'அதி உயர்பாதுகாப்பு வலயம்' என்ற எல்லைக்குட்பட்ட பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

எமது மக்கள் தமது ஒட்டு மொத்தமான இடப்பெயர்வு காரணமாக மீண்டும் ஒன்று சேர இயலாமை, நிறுவன ரீதியாகத் தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறும் வகை தெரியாமை என்ற நிலையில் வாழ்கின்றனர். இந்த வேளையில்தான் எழுபத்தேழு ஆண்டுகட்கு முன்னர் எமது முன்னோர் நிறுவிச் சீர், சிறப்பொடு வளர்த்தெடுத்த எமது முது சொத்தாகிய பாலர் ஞானனோதய சங்கத்தை புனரமைப்பதே ஒரே வழி எனத் தெளிந்தோம். பாலர் ஞானோதய சங்கம் புனரமைப்புச் செய்யப்பட்டது. இதற்கான பொதுக் கூட்டம் இணுவில் மஞ்சத்தடி சனசக நிலைய மண்டபத்தில் 25. 04. 99 ஞாயிறன்று எமதூர் மக்களின் ஆதரவோடு இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் பாலர் ஞானோதய சங்கத்தின் பல்லாண்டு வாழ்வின் நிறைவை பெருவிழாவாக எடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அதனிலும், மேலாக எமது ஊரின் புகழுக்கும் பெருமைக்கும் அணிசேர்ந்தவரும் எமது சங்கத்தோடு தமது வாழ்வின் பெரும் பகுதியை இணைத்துப் பெரும் தொண்டாற்றியவருமான உயர்திரு பண்டிதர் இலக்கணவித்தகர் இ. நமசிவாயம் ஐயா அவர்களின் சதாபிஷேக விழாவினை கொண்டாடுவதே எமக்கெல்லாம் முதன்மையானதாகப்பட்டது. ஐயாவுக்கு எடுக்கும் விழா எங்கள் ஊருக்கு எடுக்கும் விழாவே.

காலவெள்ளத்தில் எமது கிராமம் கரைந்துவிடுமோ, யாழ். மாவட்டத்தின் வரைபடத்தில் இது மீண்டும் வாழும் கிராமமாக இடம் பெறுமோ என ஐயப்படும் காலக் கட்டம் இது. எனவே எமது வருங்கால சந்ததியினருக்கு இது ஒரு கனதியான வரலாற்று ஆவணமாகத் திகழும் என நாம் உறுதியாக நம்ப முடியும்.

ஐயாவின் மேலும் கிராமத்தின் மேலும் அபிமானங் கொண்டவர்களாய் வெளிநாடுகளில் வாழும் எமது கிராமத்து அன்பர்கள் அனைவர்க்கும் சிரம் தாழ்த்தி, கரம் கூப்பி நன்றி கூறுகிறோம். நிம்மதியாய் வாழமுடியாத சூழலில் இந்த நாட்டில் வாழ்ந்து கொண்டு இத்தகையதொரு காரியத்துக்கு மனமுவந்து ஒத்துழைத்த அன்பர்கள் அனைவரையும் வணங்கி மகிழ்சிறோம். இம்மலரை அணி செய்யும் ஆக்கங்களை வழங்கிய அறிஞர் பெருமக்கள் அனைவர்க்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகள்.

மலரை ஒழுங்கு செய்து பதிப்பித்த தேசிகர் ஐயாவின் மாணாக்கராகிய தென்கீழ்ப் பல்கலைக்கழக விரிவுரையாளர் க. இரகுபரன் அவர்களுக்கு எமது பணிவான நன்றிகள்.

இம்மலரை உருவாக்கித் தந்த அச்சகத்தார், கணனி தட்டச்சுச் செய்த அன்பர்கள் அனைவர்க்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகள்

எம்கடன் பணிசெய்து கிடப்பதே!

பாலர் ஞானோதய சபை

தலைவர்

திரு. K.T. பாலசுப்பிரமணியம்

இணைச் செயலாளர்கள்

திரு. வ. இராசதுரை

திரு. க. சிதம்பரநாதன்

உபதலைவர்கள்

திரு. த. சுப்பிரமணியம்

திரு. சி. கந்தசாமி

திரு. ந. பாலச்சந்திரன்

பொருளளார்

திரு. க. தர்மநாயகம்

உறுப்பினர்கள்

திரு. வே. சந்திரன்
திரு. அ. கணேசலிங்கம்
திரு. க. கனகநாயகம்
திரு. த. வேலாயுதம்
திரு. இ. இராசநாயகம்
திரு. த. தெட்சணாமூர்த்தி
திரு. க. தங்கராசா
திரு. மு. சிவப்பிரகாசம்
செல்வி சி. மகேஸ்வரி
திரு. மு. இராசசிங்கம்
திரு.சி. தில்லையம்பலம்
திருமதி கோ. சிவபாக்கியம்
திருமதி நி. விமலாதேவி

மறுபக்கத்தில் உள்ள படங்கள் மேலிருந்து கீழாக முறையே தலைவர், இணைச் செயலாளர்கள், பொருளாளர் ஆகியோருடையவை

உ

நல்லாசியுரை

மஹாராஜ ஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள்
மாவையாதீனம்

சமயச்சார்போடிணைந்த சமூக வளர்ச்சிக்கும், சிவநெறியோடு சார்ந்த தவ நிலைகளினின்று ஆற்றும் ஆசிரம தர்மங்களுக்கும் உரிமை கொள்ளும் மனிதர்கட்கு சில தகைமைகள் அவசியம் வேண்டும். அவை குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுநிலைமை, அழுக்காறின்மை, அவாவின்மை எனும் எண் குணங்களேயாகும். இந்த எண்குணங்களைக் கொண்டவர்களே நல்லாசிரியர்களாவர். இவர்களே அந்தணர்களுமாவர். இதனை நீதிநூல்கள் அறியத் தருகின்றன. திருவள்ளுவரும் இதனை,

அந்தண ரென்போ ரறவோர், மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலான்,

என்றார்.

திருவோங்கவும், புண்ணியச் செயலோங்கவும், அன்பருள் திறலோங்கவும், செல்வங்களோங்கிச் செறிவோங்கவும், அறிவோங்கி நிறைவான இன்பத்தினோங்கவும் இன்றும் இவ்வுலகில் சிலர் அதற்குரிய சேவைகளையாற்றி வாழ்ந்து கொண்டு தானிருக்கிறார்கள். இவ்வாறு சேவை செய்வதற்குக் கூட வாழையடி வாழையாக வளரும் பரம்பரையினரது செயலாதிக்கங்களின் புண்ணியங்கள் உறுதுணை தந்து நிற்கின்றன. இதற்கு தமிழ் மொழியில் உருவங் கொண்ட நீதி நூல்களும், பெரும் புலவர்கள் தந்த செந்தமிழ்ப் பாக்களும் தேவார திருவாசகங்களும், பாசுரங்களும், இதிகாச புராணங்களுமே துணை போகின்றன.

நீண்ட நெடிய வரலாறுகளைக் கொண்டது தமிழ் மொழி. தெய்வீகங்கொண்ட தமிழ் மொழியின் வரலாறுகூட எத்தனையோ யுகங்களுக்கு முற்பட்டதென கந்தபுராணம் அழகாகக் கூறுகிறது. கந்தசுவாமியாரது திருக்கரங்களுடே பிறந்தன உயிரெழுத்துகள். கண்களுடே தோற்றங் கொண்டன மெய்யெழுத்துக்கள். கைவேல் மூலம் பிறந்ததே ஆய்த எழுத்தான அஃகேனம். இந்த உயிர் மெய் எழுத்துக்களின் ஓசையை அகத்தியர் மூலமாகவே முருகப் பெருமான் ஒலிக்கச் செய்தார். ஒலி பிறந்ததும் அகத்தியர் வணங்கியதை,

ஆதியுற்றுழி அச்சமொ டே யெழீஇ,
மூதரைத் தமிழ் முற்றுணர் மாமுனி
கோதையுற்றிடக் கொம்பொடு வாங்கிய
பாதலத்திற் பணிந்தனன் பன்முறை

எனக் கந்தபுராணம் கூறி நிற்கிறது.

ஆதியாகிய பரமசிவம் தோன்றியருளிய நேரத்து, சிறந்த பெருங் காவியங்களை பாடல்களையுடையதான தமிழினை உலகிற்குத் தந்த அகத்தியர் மரம்வீழ்ந்தது போல் வீழ்ந்து வணங்கினாராம். தமிழ் மொழியிலாக்கங் கொண்ட நீதி நூல்களும், தோவார திருவாசகங்களும், இதிகாச புராணங்களும் ஏனையயாவும் தெய்வீகங் கொண்ட சிறப்பினையும், புகழையும், அழியாத் தன்மையையும் கொண்டிருப்பது முருகப் பெருமானின் அம்சமாக அவையிருப்பதினாலேயாம். அகிலத்தின் மாட்சிமைக்கு உதவியதே, இத்தமிழ் மொழிதான். பாதிரிமார்களோ, அல்லது மிலேச்சர்களோ தமிழ் மொழியை உலகிற்கு ஈந்ததில்லை. பௌத்தம், கிறீஸ்துவம், இஸ்லாம் என்றவை தோன்ற முன்பே தமிழ் மொழி தோன்றி விட்டது. பழம் பெரும் புலவர்கள் இத் தெவீகத் திருமொழியை நன்குணர்ந்து நன்றாகக் கற்று, தமது செய்யுள்களில் பெரும் ஞானப்புதையல்களையும் வைத்து விட்டுள்ளனர். இப் புலவர்கள் கூட தமிழ்க் கல்விதான் செல்வங்களுட் பெருஞ்செல்வமென அறியத் தந்துள்ளனர். அவர்கள் வாழ்வையும் அவ்வழியில் இயக்கியுள்ளனர்.

கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே தீங்கவியாச் – சொல்வளம்
மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்தும்
செல்வமு முண்டு சிலர்க்கு.

என்றவாறு புலவனுக்கு தான் கற்ற கல்வியே கற்புள்ள மனைவியாகிறது. அவர் இயற்றிய இனிய செய்யுளே அம் மனைவியாரிடம் பெற்ற அரிய மைந்தனாம். சொல்வன்மையே வளம் தருஞ் செல்வமாம். அவ்வாறு விளங்குவதோடு பெருமைமிக்க கற்றோர் அவையில் இடம் பெற்றமர்ந்து அவையை அழகு பெறச் செய்யும் தனிச் சிறப்புஅதற்குண்டு. இவ்வாறாக நினைந்து வாழும் வாழ்க்கையைப் பெற்றிருப்போர் ஒரு சிலரேயாம்.

இவ்வாறாகச் சிந்தனைகளில் ஊற்றெடுத்து வாழ்ந்த ஞானப் பரம்பரையினர்தான் மாவையாதீன மஹாராஜ ஸ்ரீக்களுக்கும், இளவரசர்களுக்கும் ஞானக் குருவாக விளங்கியவர்கள். இந்தவரிசையில் தான் ஸ்ரீ பஞ்சாட்சர மந்திரத்தைத் தனது நாமமாகக் கொண்டுள்ள இராமசாமி நமசிவாய தீக்ஷிதரும் விளங்குகிறார். எண் குணங்களையும் உயிரிலும் மேலாகப் பேணுபவர். இச் செந்தமிழ்த் திலகம், மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதராகவும், யாழ். பல்கலைக்கழக இலக்கண வித்தகராகவும், யாழ். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்க மகாவித்துவானாகவும், முத்திரையிடப்பட்டு, அந் நிறுவகங்களின் புனிதத் தன்மைகளுக்கு மெருகூட்டி நல்லாசிரியனுமாகி விட்டார். இலங்கை அரசுகூட இவரைச் சமாதான நீதிபதியாக்கி இவரது எண் குணங்களின் அருமையை உலகறியச் செய்து விட்டது.

தீக்ஷிதர் என்பதைத் தேசிகர் என்றும் கூறுவர் பெரும்புலவர்கள். தில்லை மூவாயிரவர்களை தீக்ஷிதர் என அழைப்பது வழமை. சிவபிரானால் சிருஷ்டிக்கப்பட்டவர்களே தீக்ஷிதர்கள். எனினும் அந்தணர் வாழ்க்கையைத் தம்மகத்தே கொண்டு சில சிந்தனைகளிலேயே காலத்தைப் போக்குவோரும் தீக்ஷிதராகவே மதிக்கப்படுவதற்குச் சான்றுண்டு. எப்பொழுது சிவ சிந்தனையுடையவரும், கணேசன் தொண்டுகளையே உடல் பொருள் ஆவி மூலம், நிறைவேற்றியவரும் தொல்காப்பியத்திற்கு விளக்கம் செய்தவருமான மகாவித்துவான் கணேசயர் அவர்கள் தமது சிஷ்யரான நமசிவாயம் அவர்கட்கு 'தேசிகர்' எனப் பட்டயஞ்சூட்டி மகிழ்ந்து ஆன்மீகத்தின் உயர்வுக்கும் அவரை ஆற்றுப்படுத்தி விட்டார். நமசிவாய தீக்ஷிதரது முன்னோர்கள் அதி சிறந்த ஒதுவா மூர்த்திகளாக மாவையாலய ஆதீனத்தில்

இணைந்து மாவைக் கந்தனது திருவருட் துணை பெற்று இனிது வாழ்ந்து ஞானபானுக்களாகத் திகழ்ந்தனர். இதனால் யாழ்ப்பாணக் குடாநாடே பெருமையைப் பெற்றிருந்தது. இவர்களது பரம்பரையே ஞானகுரு பரம்பரை.

வைத்தியநாத தர்மசாஸ்திரத்தில் குரு எத்தகைமையுள்ளவர் என்பதனை விளக்கும் போது கூறுவது, இறைவனும் இறைவன் ஸ்தானத்தில் வாழும் மாதா, பிதாவும் முதற்குரு, ஆகிறார்கள். எவன் குரு மூர்த்தமாக அமைந்து சிஷ்யர்கட்கு வேண்டிய அஷ்டாதச கிரியைகளைச் செய்து, கல்ப சூத்திரங்கள், உபநிஷத்துகளைக் கற்பித்து பக்குவப்படுத்துகிறானோ அவன் 'ஆசார்யன்' ஆகிறான். ஞானத்தை ஊட்டும் வகையில் எவன் தெக்ஷிணைகளைப் பெற்று ஒருவனைப் பக்குவப்படுத்துகிறானோ அவன் 'உபாத்தியாயன்' எனப்படுகிறான். பத்து உபாத்தியாயர்களை விட ஆசார்யனும், நூறு ஆசார்யரைவிட பிதாவும், ஆயிரம் பிதாக்களைவிட மாதாவும், கௌரவத்தால் குருத்துவம் மிகுந்தவராகின்றனர். மேற்கூறிய குருபாவனைகள் எவரிடம் அமைகிறதோ அவரே 'குருக்கள்' ஆகிறார். அக் குருக்களே பிரம்மா, விஷ்ணு என்றும் அழைக்கப்படுவர். அவரே ஸ்கந்த குருவுமாகிறார். பிரம்மஸ்வரூபமாகவும் ஆகிறார். வயது முதிர்ந்தோரும், வயதில் இளமையானோரும்கூட மேற்கூறிய யோக்யாம்சங்கள் பெற்றிருப்பின் அவர்களும் குருவாகலாம். தந்தைக்கு உபதேசம் செய்த, ஞானகுரு ஞானஸ்கந்தன் ஓர் எடுத்துக் காட்டு. குரு என்றும் குருக்களென்றும் சொல்லப்படுவோர் வாழும் இடங்களில் அவர்களின் திருஷ்டியினால் ஜீவராசிகள் அனைத்தும் நல்லுணர்வுகளைப் பெறும் வாய்ப்புண்டு. அந்தளவிற்கு அவர்களது ஞானதீட்சை வலுவைத் தருகிறது. இதற்கு திருவருளும் கைகூட வேண்டும். குரு நமசிவாய தீக்ஷிதர் இக்காலத்தில் எமக்கிடையே இருப்பதினால்தான், பல்வேறு துறைகளாலும் கொடூரமாக அல்லற்படும் ஜன சஞ்சாரத்தில் ஓரளவிற்குச் சாந்தி நிலவுகிறது. புனிதமும் நிலவுகிறது. நிறைவான தகைமைகளைக் கொண்டு, இந்த உலகம் ஆசிரம தர்மங்களால் நிறைக்கப்பட்டு பூரணமான புண்ணிய சீலர்களைக் கொண்ட சிவ பூமியாக விளங்க வேண்டுமென்ற சிந்தனைகளோடு அதற்கான காரியங்களைத் தன்னடக்கத்தோடு நிறைவேற்றுபவர் இவர்தான். இதனையறிந்து தான் கம்பன் கழக ஸ்தாபகர் இ. ஜெயராஜ் அவர்களும் இவரைக் கண்ணும் கருத்துமாகப் பேணிவருகிறார். இவ் வாறாகக் குரு மூர்த்தமாக விளங்கும் நமசிவாய தீக்ஷிதர் அவர்களை இன்றும் எனது ஞான குருவாகவே கொண்டு பணிந்து அஞ்சலி செய்கின்றேன். எனக்கும் தமிழ் கற்பித்து ஆதீனகர்த்தாவாக உயரும் தகைமைக்கு வேண்டிய உபதேசங்களையும் தந்து நல்வழியில் ஆற்றுப்படுத்தி மனோரம்யமாக வாழ வகை செய்த இச் சான்றோனுக்கு சதாபிஷேகம் செய்கிறார்கள் என்பதனையறிந்து அளவிலா மகிழ்ச்சி பெறுகிறேன். ஆயிரக்கணக்கான நன் மாணாக்கர்களையும், பண்டிதர்களையும், புலவர்களையும், புண்ணிய சீலர்களையும் உருவாக்கிய இச் சான்றோன் சுக்கிராச்சாரியார் போன்ற உபாத்தியாயர்கள் மத்தியில் வாழ்ந்தாலும், சிலரது பற்றுக் கோடோடு தமது சிவ தொண்டுகளையும் சளைக்காது சீராகவே செய்து வருவதை அவதானிக்கும் இந்த ஞாலத்தினர் இன்புறுகின்றனர்.

தகுதியான அக்ஷய பாத்திரத்தில் சதாபிஷேக அக்ஷதை தகுதியாகவே சேர்க்கப்படுகிறது.

நீடூழி வாழ்ந்து மாவைக்கந்தனது திருவருட் கடாக்ஷத்திற்கு ஆளாக வேண்டுமெனப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேன்.

உ

சிவமயம்

அருளாசிச் செய்தி

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
இரண்டாம் குருமஹா சந்நிதானம்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

அன்பு சால் பெருந்தகையீர்,

இந் நாட்டின் கல்வி வளர்ச்சியில் தனக்கென ஒரு இடத்தை வகுத்துக் கொண்ட பண்டிதர் நமசிவாய தேசிகர் அவர்களுக்கு சதாபிஷேக விழா நடைபெறுவது எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தருவதாகும். சமயமும் தமிழும் ஒருங்கே இணைந்து வளரும் இந் நாட்டிற் கல்விக்குத் தொண்டாற்றிய அறிஞர்கள் பலர் உளர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வழிகாட்டலில் உருவாகிய நமசிவாய தேசிகர் அவர்கள் தமிழை முறையாகக் கற்று, கற்றபடி ஒழுகி, ஏனையோருக்கும் கொடுப்பதில் சிறப்புடையவர். இன்று நம்மிடையே இருக்கின்ற அறிஞர்களில் இலக்கண வித்தகர் எனச் சிறப்பித்துக் கூறக்கூடியவர்கள் இவர்களே. ஆசாரசீலர், அடக்கம், பணிவு அனைத்தையும் கொண்ட பெருமைக்குரியவர். பல கல்வியாளர்களை உருவாக்கித்தந்தவர். இவர்களை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் செந்தமிழ்த் திலகம் எனும் பட்டம் சூட்டிச் சிறப்புச் செய்தமை எல்லோருக்கும் மன நிறைவைத் தந்தது. யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் மகாவித்துவான் பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தால் இலக்கண வித்தகர் எனும் பட்டத்தையும் மதுரைத் தமிழ் சங்கத்தால் பண்டிதர் பட்டத்தையும் அரசாங்கத்தால் சமாதான நீதவான் எனும் பட்டத்தையும் பெற்று வாழ்ந்து கொண்டிருப்பது தமிழுக்கும் சமயத்திற்கும் சிறப்புடையதாகும். இவருடைய வாழ்க்கை ஏனைய மக்களுக்கு எடுத்துக் காட்டாக உள்ளது. இவர்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து சமயத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்ற இறைவனை வேண்டுகிறோம். இவரது பணியைச் சிறப்பித்து விழா எடுத்து அனைவரையும் மகிழ்விக்கும் பாலர் ஞானோதய சங்கத்தினருக்கும் இறைவனது திருவருளை வேண்டி, சங்கத்தின் பணிகள் சிறக்க வாழ்த்துகிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

உ

சிவமயம்

வாழ்த்துரை

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

ஸ்ரீ துர்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை

கேட்டுவன் கிராமத்தை அறிவு வளத்தினாலும் ஆன்மிக பலத்தினாலும் அணிசெய்த அறிஞர்கள் பலர் .

இவர்களில் எமது வணக்கத்துக்கும் வாழ்த்துக்கும் உரியவராக இன்றும் எம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பவர் பண்டிதர் நமசிவாய தேசிகர் ஐயா அவர்கள்.

தொல்காப்பியம், நன்னூல் விருத்தி ஆகிய பழந்தமிழ் இலக்கண நூல்களிலும் சங்க இலக்கியம், திருக்குறள் ஆகிய இலக்கிய நூல்களிலும் ஆழ்ந்த பயிற்சியும் கற்பிக்கும் திறனும் கொண்ட பெரியார் இவர்.

ஆழமான கருத்துக்களை இனிமையும் எளிமையும் கலந்த பேச்சுக்கள் மூலம் வெளிப்படுத்தும் திறமை மிகவும் போற்றுதற்குரியது.

நன் மாணாக்கர் பலரை உருவாக்கிய பேராசான் என்று நாமனைவரும் வணங்குதற்குரிய பெருமையைப் பெற்றவர் இவர்.

ஐயா அவர்களின் கல்விப் பணியைப் போற்றி நிற்பது எமது தலையாய கடனாகும்.

பண்டிதர் இராமசாமி நமசிவாயம்

'இலக்கணவித்தகர்' பட்டமளிப்பு அறிமுகவுரை

பேராசிரியர் கலாநிதி கா. சிவதம்பி எம். ஏ.,
தமிழ்த்துறைத் தலைவர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மாண்புமிகு வேந்தர் அவர்களே,

தாங்களும் நானும் சம்பந்தப்பட்ட இந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ஒரு திரிவேணி சங்கமம். இந்த யாழ்ப்பாணத்துக்குரிய இலக்கண, இலக்கியச் செம்பாட்டு ஊற்றுக்களுடன், அமெரிக்காவில் தொடங்கி வட்டுக்கோட்டையில் கொப்புளித்துப் பாய்ந்த, சுதேச மயமாக்கப்பட்ட ஒரு பாரம்பரியமும் கொழும்பில் ஊற்றெடுத்துப் பேராதனையில் ஓடிய, இலங்கை முழுவதற்கும் பொதுவான ஒரு தேசிய ஆராய்ச்சிப் பாரம்பரியமும் இணைந்த பொழுதுதான் யாழ்ப்பாணமே பல்கலைக்கழகமாயிற்று; யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தோன்றிற்று.

இப்பல்கலைக்கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழாவெனும் தலைப்பிரசவ விழாவின் பொழுது, இந்த ஆற்றுப்படுகையின் அடியூற்றுகளை, இலங்கைத் தமிழ்ப் பாரம்பரியத்தின் நீர்நிலைகளை இனங்கண்டு போற்றத் தீர்மானித்துள்ளோம்.

இலங்கைத் தமிழ்ப் பாரம்பரியத்தின் இலக்கணக் கொடுமுடி வருத்தலைவிளானிலிருந்த ஒரு தமிழ்க்கொட்டில். அதுதான் உலகம் உவப்பத் தொல்காப்பியத்துக்குத் தெளிவுரை தந்தது. வித்துவசிரோமணி பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அங்கு தட்சணாமூர்த்தமாகத் தமிழிலக்கண ஐயங்களைத் தீர்த்து வந்தார்.

அந்தக் கணேசையர் பாரம்பரியத்தின் திருக்கொழுந்தாக விங்குபவர் இராமசாமி நமசிவாயம் அவர்கள்.

1915 இல் பிறந்த இவர் ஆரம்பக் கல்வியின் பின்னர், 1932 இல் கணேசையரிடம் சென்றடைந்தார். பிரவேச பண்டித வகுப்பில் தொடங்கிய உறவு பின்னர் நமசிவாயம் அவர்களை அந்தக் கணேசையர் கல்லூரியின் பண்டித வகுப்புக்களையே நடத்தும் ஆசானாகிற்று. இராமசாமி நமசிவாயம் அவர்கள் கணேசையர் அவர்களின் தொல்காப்பியப் பதிப்பு முயற்சியின் பொழுது அவர் அருகிலிருந்து உதவியர்; வரன்முறையான இலக்கணத் தெளிவு பெற்றவர். இத் தெளிவு காரணமாகக் கணேசையர் அவர்களே தாம் நடத்திவந்த வகுப்புக்களை இவரிடம் ஒப்புவித்தார். கணேசையரின் அகநானூற்று ஆராய்ச்சிக்கும் உதவிபட நின்றவர். தொகுத்துக் கூறின், கணேசையர் அவர்கள் நமசிவாயம் அவர்களின் திறமையிலும் பணியிலும் தமது இலக்கணப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியைக் கண்டார்.

யாழ்ப்பாணத்துக் கல்விப் பாரம்பரியத்தின் இலக்கணச் செம்மையைப் பலருக்கும் ஊட்டி வந்துள்ள நமசிவாயம் அவர்கள், தெல்லிப்பளை வீமன்காமத்துத் தமிழ்ப் பாடசாலையிலே தலைமையாசிரியராக விளங்கியவர். அந்தப் பாடசாலை எமது துணைவேந்தர் குடும்பத்தினராலே தொடங்கப்பெற்றுப் பரிபாலிக்கப்பட்டு வந்தது. எமது பாரம்பரியத்தின் விட்ட குறைகள் பல யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே தொட்டுப் பூரணத்துவம் பெறுகின்றன.

நமசிவாயம் அவர்கள் தமிழ் இலக்கணத் தெளிவும் சைவசித்தாந்த அறிவும் நிறைந்தவர். மாண்புமிகு வேந்தர் அவர்களே,

யாழ்ப்பாணத் தமிழ்க் கல்விப் பாரம்பரியத்துக்குரிய இலக்கண ஆற்றலின் தலைசிறந்த பிரதிநிதிகளுள் ஒருவராக விளங்கும் இராமசாமி நமசிவாயம் அவர்களை 'இலக்கண வித்தகர்' என்னும் பட்டத்துக்குரியவராக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

Convocation for Conferment of Degres Univesity of Jaffna. 13.09.1980, பக். 63–64.

அன்பியல்

என் பார்வையில் இக்கணவித்தகர்	— ஸ்ரீலஸ்ரீ க. வைத்தீஸ்வரக்குருக்கள்
சாதபிஷேக வாழ்த்து	— பண்டிதமணி மு. கந்தையா, B.A
பல்லாண்டு பாடுமின்	— பண்டிதர் க. சச்சிதானந்தம்
இக்கணவித்தகர் பண்டிதர் இ. நமசிவாயம்	— பேராசிரியர் அ. சண்முகதாஸ்
நான் கண்ட 'நமசிவாயம்'	— திரு. க. சிவராமலிங்கம்
மதி ஆயிரங்கண்டு மகிழும் மாட்சி!	— 'சொக்கன்'
யான் கண்ட 'வித்தகர்'	— திரு. கே. கே. சோமகந்தரம்
குவலயம் போற்றும் குரு	— முதுபெரும் புலவர் வை. க. சிற்றம்பலம்
மெய்ப்பொருளை நாடிநிற்கும் வித்துவ பரம்பரை	— திரு. ச. விநாயமூர்த்தி
எண்டிசையும் புகழ் நிலவு எழில் மதியம்	— புலவர்மணி அ. ஆறுமுகம்
நெஞ்சுக்கு நெருக்கமாக நிலைத்து நிற்பவர்	— பேராசிரியர் நா. கப்பிரமணியன்
சோதிடக் கண்ணாடியில் எங்கள் தேசிகர் ஐயா	— சோதிடப் புலவர் ச. அழகரத்தினம்
சிந்தனையால் மிக உயர்ந்தோய் வாழிய நின் நாமம்	— புலவர் ம. பார்வதிநாதசிவம்
இக்கணவித்தகர் பண்டிதர் இ. நமசிவாயம்	— கவிஞர் வி. கந்தவனம்
என்றென்றும் வாழ்க	— பண்டிதர் சி. அப்புத்துரை
தேசிகர் தந்த திருவந்தாதி	— கவிஞர் சோ. பத்மநாதன்
நுண்மாண் நுழைபுலத் தரிசனம்	— திரு. இ. ஜெயராஜ்
புகலிடம் பிறிது நேரோம்	— கவிஞர் மண்ணவன் மு. கந்தப்பு
சோதிபோற் சுடர்	— கவிஞர் கல்வயல் வே. குமாரசாமி
தமிழ் வாழத் தான் வாழ்பவர்	— மாவை . சோ. சேனாதிராசா
எங்களது ஊரும் பண்டிதர் ஐயாவும்	— கலாநிதி என். சண்முகலிங்கன்
இக்கணவித்தகர் இ. நமசிவாயதேசிகர் வரலாறு	— திரு. க. கதிர்காமர்
தேசிக மாமணி வாழ்க	— திரு. க. உமாமகேசுவரன்

என் பார்வையில் இலக்கண வித்தகர்

ஸ்ரீலஸ்ரீ க. வைத்தீசுவரக் குருக்கள்
தலைவர், தமிழ்வளர்ச்சிக் கழகம்
காரைநகர்.

இலக்கண வித்தகர் இ. நமசிவாய தேசிகர் அவர்கள், தென்னிந்தியத் தமிழ் அறிஞர்களாலும், ஈழத்துத் தமிழ் அறிஞர்களாலும் பெரிதும் மதிக்கப்பட்ட மகாவித்துவான் சி. கணேசையர் அவர்களின் உத்தம மாணாக்கர் ஆவர்.

1939 ஆம் ஆண்டு வறுத்தலைவிளான் என்னும் கிராமத்திலுள்ள விநாயகர் ஆலய மண்டபத்திலிருந்து யான் கணேசையா அவர்களிடம் சிறிது காலம் பாடங் கேட்டு வந்தேன். ஒரு நாள், அறிஞர் திரு. குல. சபாநாதன் அவர்கள் அங்கே வந்து, ஐயா அவர்களுடன் நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருந்தார். அப்போது ஒரு சந்தர்ப்பத்தில் ஐயா அவர்கள், "நமசிவாயத்தை என்னைப்போல எண்ணுக" என்று திரு. சபாநாதன் அவர்களுக்குக் கூறியமை இன்றும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

கலாநிதி எவ். எக்ஸ். சி. நடராஜா அவர்கள், இலக்கண நூல்களை நன்கு கற்றவர்; பல நூல்களின் ஆசிரியர்; செந்தமிழ், செந்தமிழ்ச்செல்வி, கலைக்கதிர், விவேகி முதலான சஞ்சிகைகளில் வெளிவந்த இவரது இலக்கண ஆராய்ச்சிக் கட்டுரைகள், அறிஞர்களின் பாராட்டைப் பெற்றுள்ளன. இவர் இலக்கணஞ் சம்பந்தமாகத் தமக்கு ஏற்பட்ட சந்தேகங்களை நிவிர்த்தி செய்வதற்கு இலக்கண வித்தகர் நம சிவாய தேசிகர் அவர்களின் உதவியை நாடினார் என்பதை யான் நன்கு அறிவேன்.

தேசிகரின் மாணாக்கர் பலர் சிறந்த அறிஞர்கள் ஆவர். பண்டிதர் ச. பொன்னுத்துரை, பண்டிதர் க. உமாமகேசுவரன், பண்டிதர் சி. அப்புத்துரை, கம்பவாரிதி இ. ஜெயராஜ் என்போர் அவர்களுட் சிலர்.

இலக்கண வித்தகர், சிவநெறிக் கழகத்தின் தலைவராக இருந்து ஆற்றிய பணிகள் பலப்பல. அவைகள் சைவமக்கள் மனத்தில் என்றும் நிலைத்திருக்கும்.

பகீரதப் பிரயத்தனஞ் செய்தே சமாதான நீதிபதிப் பட்டத்தைப் பலர் பெற்றுக் கொள்ளுகின்றார்கள் என்பது பகிரங்கரகசியம். ஆனால், அப்பட்டம், ஆக்கம் அதர்வினாய்ச் செல்வதுபோலத் திரு. நமசிவாய தேசிகர் அவர்களைச் சென்றடைந்ததென்பது ஒரு சிறிதும் மிகையாகாதது.

யான் தேசிகரோடு அறுபது ஆண்டுகள் மிக நெருங்கிப் பழகியிருக்கின்றேன். அவர் பெரும் விவேகி ; சிறந்த சிந்தனையாளர் ; இலக்கிய இரசிகர்; இலக்கண நூல்களையும் பிற நூல்களையும் பழைய வரலாற்று முறையில் எழுத்தெண்ணிப் படித்தவர் ; சிவஞான முனிவரின் இலக்கணக் கருத்துக் களுக்குப் பெரிதும் மதிப்புக் கொடுப்பவர் ; அறிவிற்கு மாட்சிமையாவது பொருள்களைக் கடிதிற் காண்டலும் மறவாமையும் முதலியன என்னும் பரிமேலழகரின் கூற்றுக்கு இலக்கணமாகத் திகழ்பவர் ; எத்துணைச் சிக்கலான விடயங்களையும் கேட்போர் இலகுவில் விளங்கிக் கொள்ளத்தக்க வகையில், மிகத் தெளிவாக எடுத்துச் சொல்வதில் மிகச் சமர்த்தர் ; படாடோபமோ ஆரவாரமோ இன்றி மிகமிக அடக்கமாக வாழ்ந்து வருபவர் ; எந்த இடத்திலும் தம்மை விளம்பரப்படுத்த விரும்பாத சுபாவமுள்ளவர் ; தம்மாற் செய்யக்கூடிய உதவிகளை மனமுவந்து செய்வதில் முன்னிற்பவர்.

இலக்கண வித்தகர் உரையாடும் பொழுது வாக்கியச் சொற்களுக்கு அடைமொழிகளைக் கொடுத்து வீணே நீட்டிக்கொண்டு போகாமல் அளந்துதான் பேசுவார். அவருடன் உரையாடுவது சுவாரஸ்யமாக இருக்கும். அறிஞர்களைப் பகிரங்கமாகப் பாராட்டுவதற்கும் பலர் தயங்கு கிறார்கள்; அவர்களை மட்டந்தட்டுவதற்குப் பலர் முனைகிறார்கள். ஆனால் தேசிகர், எவ்வித தயக்க முமின்றி மனமுவந்து அவர்களைப் பகிரங்கமாகப் பாராட்டுவார். தவறுகளைக் கண்டவிடத்து அவைகளை நாகரிகமான முறையில் – மற்றவர்களின் மனம் புண்படாத வகையில் அறிவுரை கூறுவது போல– நாசூக்காக எடுத்துக் கூறுவார். எல்லோரையும் திருத்திப் படுத்துவதற்காகத் தாளம் போடுவதும் தலையாட்டுவதும் அவருக்குத் தெரியாத கலைகளாகும்.

தேசிகர் அவர்களுக்கு எனது ஆசிகள். அவர் உடல் நலத்துடன் நீண்ட காலம் வாழவேண்டுமெனக் கூத்தப்பிரானைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

சதுர்ப்தேக வாழ்த்து

கலாநிதி, பண்டிதமணி, மு. கந்தையா, B.A.
ஏழாலை

(இருபத்தெண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

சீர்மல்கு செந்தமி ழிலக்கிய விலக்கணச்
சிக்கறுத் துண்மை தேர்வார்
சிந்தையமு தூற்றெழச் சிலசொலித் தேற்றிடுவி
சித்திர விவேக மேதை
செம்மையறி வாசார சீலத்தி னான்றுநற்
செந்தமிழ்ப் புரவு பூண்ட
செம்மல்க ணேசையர் சீருளங் குடிகொள்
சிறப்பினுற் றுயர்ந்த மாணி,
பார்மல்கு சைவவுய ராசார நெறிவழாப்
பழமைகூர் குலத்தோன் றல், நற்
பண்பருமை மீக்கொளும் பழுத்தஅறி வநுபவப்
பாங்குறு மகாவித் துவான்,
பண்டிதர் பலர்மல்கி யெண்டிசையு நிலவிடப்
பண்ணுமோர் பரபண்டிதன்,
பகருலக பிரசித்தி நாட்டமொரு சற்றிலாப்
பவ்யமார் திவ்ய குரவன்,
நார்மல்கு சிந்தையன் புந்துநவ ரசபிரச
நகுலேச ரந்தாதியும்
நாமமிகு மாவைநற் பதிகமும் சந்நிதிக்
கந்தரின் சதகமு மெனாஅ,
ஞானநெறி யூற்றமெய்ப் பனுவல்கள் நாவூர்
நயப்பூர நல்கு புலவன்,
நடுவுநிலை யிவரதென நாடுமுழு தறிபுகழ்
கூடுசமு தாய நேயன்,
ஏர்மல்கு வித்துவக் கிறுக்குறுத் துழல்நரையும்
இகழாத நோன்மை மேற்கொள்
இலக்கணநல் வித்தகர் என்றுலகு சீர்போற்றும்
ஏந்தல்நம் தோன்றல், யாரும்
எங்கள்குரு தேசிகரை யாவென உவந்தேத்த
இலங்குமெம் ஐயன் வாழ்க,
எண்பதுகள் மேலுமே லிருபதுகள் நிரவியிங்
கின்பூர வாழ்க வாழ்க.

பல்லாண்டு பாடுமின்!

பண்டிதர் க. சச்சிதானந்தன்,
மாவிட்டபுரம்.

வாக்கு வளமுடையான் வற்றா இலக்கணத்தை
நோக்கு நுனித்த நுழைபுலத்தான் – தேக்குந்தேன்
கன்னற் றமிழின் கரைகண்டான் கற்றோர்கள்
சென்னிக் கணியச் சிறந்து.

ஈழ முனிவர் கணேசர் இலக்கணத்தின்
ஆழக் கடலில் அமிழ்ந்தினான் – நாளுமொரு
முத்தெடுப்பான் புத்தம் புதிதாய்; இலக்கண
வித்தகனே மேலோர் மணி.

சிந்திக்கும் மேலாம் திறமு எஃகனைய
புந்தித் திறனும் புகலுமொழி – பந்திக்கும்
காந்தக் கவர்ச்சிப் புலமும் கனிந்துள்ளான்
ஏந்தற் குரிசில் இவன்.

தந்தைக்கோர் அந்தாதி தந்தான் அதன்முன்னம்
முந்தி முருகனுக்குத் தோத்திரமும் – சந்தப்
பதிகமும் பாடினான் மாவையுறை வோற்கு
பொதிகைத் தமிழ்முனியைப் போல்.

சித்தாந்தச் சாகரத்தைச் சிந்தைப் புலமையாம்
மத்தாற் கடைந்து வருவெண்ணெய்ச் – சத்தாலே
ஊட்டினான் உற்றடைந்தோர் யாவர்க்கும் மாசகல
காட்டினான் ஞானத்தின் கண்.

பாட்டின் உயிர்தேடித் தொட்டுப் பலருக்கும்
கூட்டும் சுவையிற் குளிர்விப்பான் – ஏட்டில்
வடிப்பான் இயற்றமிழ் வைத்த இலக்கணம்
முடிப்பான் முழுதும் அதில்.

ஓவியமும் வல்லான் உயர்ந்த நடைபயிலும்
காவியமும் வல்லான் கருத்துடைய – பாவியலும்
நாவியலும் வல்லான் நயப்புக் கலைவல்லான்
தேவியலான் செல்வன் இவன்.

எட்டியடி எண்பத்து நான்கிலே இட்டாலும்
கட்டிளமைக் காளை உளத்தாலே – தொட்டகலை
ஏதிவனால் ஏற்றம் அடையாத தேதிவனும்
காதலொடு கல்லாக் கலை.

நட்டார்க்குத் தோற்கும் நயமுடையான் ; பண்புடையான்
எட்டார்க்கும் கெட்டார்க்கும் ஏதிலர்க்கும் – ஒட்டார்க்கும்;
குன்றனையான் என்றெடுத்துக் கூவுமினோ என்றென்றும்
சென்றடையாச் செல்வன் புகழ்.

பல்லாண்டு பல்லாண்டு பாடுமின் பைந்தமிழால்
சொல்லாரம் சூட்டுமின் சான்றீரே – எல்லாரும்
ஏத்துமின் நாத்தழும்ப என்றென்றும் பைந்தொடியீர்
கூத்திடுமின் ஆனந்தங் கொண்டு.

இலக்கண வித்தகர் பண்டிதர் இ. நமசிவாயம்

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தன்னுடைய முதலாவது பட்டமளிப்பு விழாவின் போது பல அறிஞர்களைக் கௌரவித்துப் பட்டங்கள் வழங்கியது. இவ்வாறு 1980 இல் கௌரவிக்கப்பட்டவர்களுள் பண்டிதர் இ. நமசிவாய தேசிகரும் ஒருவர் ஆவார். இலக்கண வித்தகர் என்னும் பட்டத்தினை இவருக்குச் சூட்டி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மகிழ்ச்சியும் பெருமையும் அடைந்தது. பண்டிதர் நமசிவாய தேசிகருக்கு ஏன் இப்பட்டம் வழங்கப்பட வேண்டும் என்று பல்கலைக்கழக மூதவையிலே பல பரிந்துரைகள் கூறப்பட்டன. அவற்றுள் மிகவும் உன்னதமானது எங்களுடைய பாரம்பரிய இலக்கண ஆய்வு ஊற்றுக்களில் ஒன்றாகப் பண்டிதர் நமசிவாய தேசிகரை இனங்கண்டமையேயாகும். தமிழ் இலக்கணத் தெளிவுடன் சைவசித்தாந்த அறிவினையும் அவர் கொண்டமைந்துள்ளார்.

எங்களுடைய நாட்டுக்கு உயர்புகழ் சேர்த்தவர்களுள் ஒருவர் வித்துவசிரோமணி பிரம்மஸ்ரீ சி. கணேசையர் ஆவர். இவருடைய தொல்காப்பியப் பதிப்பும், தெளிவுரையும், ஆய்வுரையும் உலகம் உவக்கும்படியாக அமைந்தன. அண்மையில் சென்னையில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் டாக்டர் இராமர் இளங்கோ, கணேசையர் பதிப்பித்த எல்லாத் தொல்காப்பியத் தொகுதிகளையும் மறுபதிப்புச் செய்ய முடிவெடுத்து பணியிலே ஈடுபட்டுள்ளார். இத்தகைய பெருமகனிடம் பண்டிதர் நமசிவாயம் 1932 இலிருந்து இலக்கணக் கல்வி கற்றார்.

கணேசையர் அவர்களிடமிருந்து பெறவேண்டியவற்றைப் பெற்று வருத்தலைவிளானில் அமைந்த ஐயர் அவர்களின் கல்லூரியிலே பண்டிதர் நமசிவாய தேசிகர் பண்டித வகுப்புகளை நடத்தினார். கணேசையர் ஊடாக ஓடிவந்த எம்முடைய பாரம்பரிய இலக்கண ஊற்று தேசிகர் ஊடாகவும் ஓடத் தொடங்கிற்று. தெல்லிப்பளை வீமன்காமத் தமிழ்ப் பாடசாலையின் தலைமை ஆசிரியராகப் பணிசெய்த தேசிகர் அவர்கள் யாழ்ப்பாணத்துக் கல்விப் பாரம்பரியத்தின் இலக்கணச் செம்மையைப் பலருக்கும் ஊட்டிவந்தார்.

இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகர் ஐயா அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து தன் இலக்கண இலக்கியச் செம்மையை மற்றவர்களுக்கும் கையளிக்க வேண்டுமென இறையருளை வேண்டுகிறேன்.

நான் கண்ட 'நமசிவாயம்'

திரு கு. சிவராமலிங்கம்,
முன்னாள் பிரதி அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

மெலிந்த, சற்றுக் கறுத்த திருமேனி; வைகை ஆற்றில் தவழ்ந்த தமிழ் போன்ற மென்மையான நடை; தீட்சணியமான கண்கள்; மலர்ந்த முகத்தில் புன்முறுவல்; "வாருங்கள்" என்று வரவேற்று இருக்கையைத் தொடும் திருக்கை.

இத்திருக்கோலத்தைப் பல ஆண்டுகட்கு முன்பும் கண்டிருக்கிறேன். அப்போதெல்லாம் கண்டு கொள்ளவில்லை; பாக்கியமின்மைதான். இவரும் ஒரு பண்டிதர்தானே என்ற என் பேதமை நெஞ்சம்!

நேரகாலம் கனிந்தது. கண்டேன் கம்பன் கோட்டத்தில் ஒரு சிவமாய பொருளை. அன்புக்கு அது இருப்பிடம்; அறிவின் கொள்கலம் – நிறை குடம்; தமிழ் இலக்கணத்தின் செம்மைக்கு அது புகலிடம்; இலக்கியப் பொய்கை; ஆடினோர் பாக்கியசாலிகள்; பொய்கை அருகிருந்து தமிழ்க்காற்று வாங்கினோரும் கொடுத்து வைத்தவர்கள்தான். அதில் நனும் ஒருவன்.

எத்தனை அறிஞர் பெருமக்களை ஈன்று புறந்தந்தது இந்த மண். ஆனால் முற்றான பயனை நாம் பெறமுடியவில்லை. இது நம் குறைத்தவம். தொல்காப்பியம் நூல் வடிவிற் கிடைக்காவிட்டாலும், கவலை வேண்டாம். வித்தகர் ஐயா இருக்கிறார். சேனாவரையர் உரை வளத்தைப் பெருவளம் செய்யவல்லவர். இலக்கணத்தை இலக்கியமாக்கிச் சுவையூட்டி மகிழ வைப்பார்.

இத்தனைக்கும் "எனக்கென்ன தெரியும் பாருங்கோ ?" என்ற சொற்கள் அவர் வாயிலிருந்து உதிரும். 'பணியுமாம் என்றும் பெருமை' என்ற அருமை வாசகத்தை அறிய வைத்த 'ஆன்றவிந்த டங்கிய சான்றோன்' இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகர். ஐயா ஒரு கலங்கரை விளக்கம். நாம் தாம் கபோதிகளாச்சே !

தில்லைக்கூத்தன் திருவருளால் ஐயா நீடு வாழ வேண்டும். காற்றும் அவர் மேனி தொட்டுத் தமிழ்த் தென்றலாக வீசவேண்டும்.

மதி ஆயிரங் கண்டு மகிழும் மாட்சி!

'சொக்கன்'

மட்டவிழ் மலர்போல் முகத்தொடு மனமும்
மலர்ந்திடக் கற்பவர் மகிழ
எட்டுணை யேனும் அவரிடர்ப் படாமல்
இனியமென் மொழிகொடு தெளிவாய்க்
கட்டுரைத் துயர்நூற் கல்வியை வழங்கிக்
கனிந்தவர் போற்றிட வளமார்
கட்டுவன் நமசி வாயதே சிகரே,
களிப்புடன் நீடுநீர் வாழ்க!

இலக்கணம், தருக்கம், கணிதமென் றின்ன
ஏற்றமார் புலங்களிற் புகுந்து
கலக்கமொன் றின்றித் தெளிந்தவை யாவும்
கருத்தினில் இருத்திமா ணாக்கர்
துலக்கமாய் விளங்கிக் கொண்டிட வைக்கும்
தொன்மர புணர்ந்ததே சிகரே,
.அலக்கணொன் றின்றி இன்றுபோல் என்றும்
ஆனந்த மாகநீர் வாழ்க!

***

தொன்மைமிகு தமிழுக்கு வரம்பு செய்த
தோலாத மேலோர்தொல் காப்பியர்க்கும்
அன்னவரின் வழியிதென வகுத்துக் காட்டி
அரியவழி சார்புநூல் செய்தோ ருக்கும்
பின்னவராய் உரைசெய்த சான்றோ ருக்கும்
பெருந்தொண்ட ராயமைந்து கற்றுத் தேர்ந்து
கன்னலெனச் சுவையுடனே மாணாக் கர்க்குக்
கனிந்தளித்த ஐயாநீர் களித்து வாழ்க !

வள்ளுவத்தி னைப்பரிமே லழகர் தந்த
வளமான உரைகல்லிற் றீட்டிப் பார்த்துத்
தெள்ளியஉம் மதிவலியால் மாணாக் கர்க்குத்
தீற்றியவர் அமுதெனவே சுவைக்க வைத்த
வள்ளல்நம சிவாயதே சிகரே ! நீவிர்
மதியாயி ரங்கண்டு மகிழும் மாட்சி
உள்ளிமனம் உவக்கின்றோம் போற்று கின்றோம்
ஒருநூறு வயதுநீர் உவந்து வாழ்க!

***

சுன்னைக் குமார சுவாமியெனும்
துகடீர் புலவர் கணேசையர்
இன்ன வித்துவ பரம்பரையின்
இறுதிக் கொழுந்தென உமைஎண்ணி
நன்மை தமிழ்க்குத் தரநீரும்
நலமாய் வாழ வேண்டுமெனப்
பன்னற் கரிய அருளாளன்
பரமன் தாளிணை பணிவோமே.

யான் கண்ட 'வித்தகர்'

திரு கே. கே. சோமசுந்தரம்

இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகர் அவர்களை எனது மாணவப் பருவம்தொட்டே அறிந்துகொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருந்தது. எனினும், இலக்கிய இலக் கணங்களையும் பழந்தமிழ் தரும் பொருள்நுணுக்கங்களையும் அவரிடம் நேரடி மாணவனாக அமைந்து, ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தின்புறும் அரிய பேற்றினை யான் பெறமுடிந்ததில்லை. இது பற்றி எண்ணுந்தோறும் என் மனம் இன்றுகூடச் சோர் வடைகிறது.

எழுபதாம் அகவையினைத் தாண்டிய நிலையில் எனது வாழ்க்கையினைப் பின்னோக்கிப் புரட்டிப்பார்க்கிறேன். எனது வாழ்வின் இயக்கத்திற்கும் அது சென்ற பாதைக்கும், இறை நியதியின் பிரகாரம் வழிவகுத்து நின்ற மூவர்களில் எமது பேராசான் தேசிகரும் ஒருவர். ஏனையோர், எனக்கு வடமொழி போதித்துதவிய அந்தணப் பெருமான் 'ஜாத்யா ந து சதாசாரேணைவ' என்பதற்கமைய பிறப்பால் மட்டுமன்றி ஒழுக்கத்தாலும் உயர்ந்து நின்ற வேதாகம பூஷணம் கு. பாலச்சுந்தரக் குருக்களும், எனது தந்தையார் திரு. கந்தப்பு காத்திகேசரும் ஆவர்.

1936ஆம் ஆண்டளவில், தேசிகர் கற்பித்துக் கொண்டிருந்த வீமன்காமம் துவிபாஷா பாடசாலையில் மூன்றாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த யான், பாடசாலையில் நடைபெற்ற நவராத்திரி விழாவின் ஒரு தினத்தன்று பேச்சு ஒன்றினை நிகழ்த்துவதற்குத் தேர்ந் தெடுக்கப்பட்டேன். பல்வகை அறிவுத் துறைகளின் பாடங்களை உள்ளடக்கிய 'தொடர்புறு பாலபாடம்' என்ற மூன்றாம் வகுப்பு நூலில் உள்ள இராமாயணச் சுருக்கம் என்ற பகுதியினை, மனனஞ் செய்வித்து என்னைப் பயிற்றுவித்தவர் தேசிகர். அந்தப்பகுதியில் வரும் 'பாணிகிரகணம்' என்ற வடமொழித் தொடரினை, "பாணி என்பது கை, கிரகணம் என்றால் பிடித்தல் – கைபிடித்தல், இராமர் வில்லை முறித்து, சீதையினை மணந்துகொண்டார்" என்று எமது ஆசான் எனக்கு விளக்கியதும், பெண்ணின் கையினைப் பிடித்தாலே திருமணம் ஆகும் என்ற குழந்தைத்தனமான எண்ணம் எனது மனதில் அப்போது எழுந்ததும் நினைவில் இன்றும் இருக்கிறது.

இந்நிகழ்ச்சிக்கு சில மாதங்களுக்கு முன்னரும் பாடசாலைகளுக் கிடையிலான நாடகப் போட்டியில் எமது பாடசாலையும் கலந்து கொண்ட போது, குமணவள்ளல் என்ற நாடகத்தில் பெருந்தலைச் சாத்தனாராக நடிப்பதற்கு வாய்ப்புத் தரப்பட்டதும், நாடக உரையாடலை எனக்குப் பயிற்றுவித்தவர் எமது ஆசானே என்பதும், 'குமண வள்ளலே தமியன் எனையாள்' என்று யான் பாடிய பாடலையும் மற்று நாடகப்பாடல்களையும், உரையாடலையும் எழுதியுதவியவரும் எமது தேசிகரே என்பதும் எனது நினைவில் பதிந்திருக்கிறது.

இவ்விரண்டு நிகழ்ச்சிகளிலும், பொருளுக்கு ஏற்பச் சொற்களைப் பிரித்துப் பேசுதல் வேண்டும் என்ற பயிற்சியினை எனக்குத் தேசிகர் மனதில் நன்கு

பதியச்செய்திருக்கவேண்டும். ஏனெனில் பின்னர் யான் எனது நாடகங்களில் உரையாடற்பயிற்சியின் போது இத்தகைய பயிற்சியினை முதலில் வலியுறுத்துவது எனது வழக்கமாக இருந்திருக்கிறது.

மேற்சொன்ன இரண்டு தருணங்கள் மூலமே யான் எனது ஆசானுடன் மாணவன் என்ற ரீதியில் தொடர்பு கொண்டு கற்றவை என்பேன். ஆனால் தெய்வ நியதிக்கேற்ப மறைமுகமாக அவர் என்மீது செலுத்திய செல்வாக்கு பலதிறத்ததாகும்.

அக்காலத்தில் வீமன்காமம் துபிபாஷா பாடசாலை, மரப்பலகை மறைப்புக்களால் ஒதுக்கி ஒழுங்கு செய்யப்பட்ட வகுப்பறைகள் கொண்டதாக அமைந்திருந்தது. வகுப்பொன்றில் கற்பிக்கும் ஆசிரியரின் பேச்சை அடுத்த வகுப்பறையில் உள்ள மாணவர் இலகுவில் உற்றுக் கேட்கக்கூடியதாக இருக்கும். இத்தகைய சூழலில், ஒரு நாள் இலக்கிய இரசனையின்பால் எனக்கு விழிப்புணர்வினை ஊட்டிய சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. அடுத்த வகுப்பறையில் தேசிகர் அவர்கள் தமக்குரிய காத்திரமான தெளிவான, ஆனால் அடக்கமான குரலில் மூதுரையில் உள்ள

"ஆற்றங்கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே"

என்ற வெண்பாவை விளக்கிக் கொண்டிருந்தார்.

எமது வகுப்பில் என்ன நிகழ்ந்து கொண்டிருந்தது என்று எனக்கு ஞாபகம் இல்லை. என் மனம் தேசிகர் அவர்களின் செய்யுள் விளக்கத்தினை உற்றுக் கேட்கவே சென்றது. பெழிப்புரையினை முடித்தபின், "ஆற்றின் நீரால் மரம் வளர்கிறது. பின்னர் ஆற்று நீரின் வேகத்தினால் வேர் அரிக்கப்பட்டு அம்மரம் சாய்ந்து வீழ்கிறது. அது போல, அரசனால்வளர்த்தெடுக்கப்பட்ட செல்வர்களும் அவனால் ஒருகால் தண்டிக்கப்பட்டு வீழ்ச்சியுறுவர்" என்று தெளிவுரை கூறி விளக்கினார். அன்றேதான் எனக்குள் ஒரு புத்துலகம் பிறந்தது போன்ற உணர்வு ஏற்பட்டது. செய்யுள்களின் பொழிப்புரைக்கு அப்பால் சென்றால்தான் அவற்றின் நயம், எமது உள்ளத்தினைக் கிளர்ச்சியுறச் செய்யும் என்ற எண்ணம் கருக்கொள்ளத் துவங்கியது.

இது போல், இன்னுமொரு சந்தர்ப்பம்: அடுத்தவருடம் என எண்ணுகிறேன் எமது பேராசான் அவர்கள் அடுத்த வகுப்பில், சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் ஆற்றொழுக்குப் போன்ற கவிநடையில், வடமொழியிலிருந்து மொழிபெயர்த்து யாத்த இராமோதந்தத்தில்,

"உலக மேத்திய விச்சிர வசுவென வோதும்
தலைமை சேர்முனி தந்திடுஞ் சிறுவர் களாகி" என்ற செய்யுளை விளக்கம் செய்து கொண்டிருந்தார் இராவணாதியர் பிறப்பினைக் கூறுவது இது.

இராவணாதியரின் தந்தையாகிய விச்சிரவசு முனிவனை உலகம் புகழ்ந்தது; அவரைத் தலைவனாகக் கொண்டது; அவர் தந்த புத்திரர்களுக்கு, தந்தை வழியாக, கீர்த்தி, தலைமை ஆகிய சிறப்பம்சங்கள் தாமாக வந்து சேர்ந்தன. எனினும், பின்னர், தமது துர்க்குணங்கள் காரணமாக அச்சிறப்பினையெல்லாம் இராவணாதியர் நாசமாக்கிவிட்டனர். என்று குறிப்புப் பொருள் தொனிக்க ஆசான் விளக்கியது அடுத்த வகுப்பிலிருந்து 'ஒற்றுக் கேட்ட' என் அடி மனதில் நன்கு பதிந்து இன்றும் நிலைத்திருக்கிறது.

மேலும் சில ஆண்டுகளுக்குப் பின்னர், இராவணனின் பிறப்புப் பற்றி ஒட்டக்கூத்தர் பாடிய 'பாம்புக்குப் பால் வார்த்து வளர்த்தவிடத்தும் விஷமே வளருவதைப் போல் தசக்கிரீவனுக்கு இயற்கையாக இருந்த நல்ஞானமும் கெட்டு அஞ்ஞானம் ஓங்கிவளரத் தொடங்கியது' எனப் பொருள் தரும்,

"பாதமறை வெவ்வரவினுக்குப்
பாலும் நெய்யும் புகட்டினும்
உபாதை பண்ணும் வல்விடமே
வளருமாப் போல்"

என்ற ஒட்டக்கூத்த இராமாயணச் செய்யுளை எனது தந்தையார் கூறியபோது, எமது ஆசான் கூறிய இராமோதந்த விளக்கமே என் மனதில் பளிச்சிட்டது ஒட்டக்கூத்தரின் உவமைப் பாங்கிலும் பார்க்க

சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின், குறிப்புப் பொருள் தந்து நிற்கும் 'உலகமேத்திய' 'தலைமை சேர்' என்ற இரண்டு சொற்றொடர்களும் எத்துணைச் சிறப்புடையவை என்பதை நோக்கி, இன்றும் கூட யான் உவப்பதுண்டு.

இலக்கண வித்தகரிடம் இன்னொரு கற்பித்தல் அணுகு முறையும் உண்டு. இதனையும் யான் மேற்சொன்ன 'ஒற்றுக் கேட்டல்' முறை மூலமே அடுத்த வகுப்பிலிருந்து அவதானித்திருக்கிறேன். சொற்பொருட்களை விளக்குவதற்கு சொல் ஆக்கத்திற்குச் செல்லுதல் அவரது அணுகுமுறை.

"உடலின் அரைப்பங்கு 'அரை', அதன் காற்பங்கு 'கால்', கவிந்திருக்கின்ற படியால் 'கவிகை', பட்டது 'பாடு', கெட்டது 'கேடு', ஒழுக்கம் – ஒழுகுதல் மேலிருந்து ஒழுகுதல் – எனவே உயந்தோரிடமிருந்து ஏனையோர்க்கும் தந்தையிடமிருந்து தனயனுக்கும் ஆசானிடமிருந்து மாணவனுக்கும் ஒழுகி வருவது" என விளக்கி நிற்பார்.

இந்த விதமாகப் பொழிப்புரைக்கு அப்பாலும் சென்று புலவனின் உள்ளக்கிடக்கையினை உற்றுணரும் பாங்கு, ஒரு புலவனை ஏனைப் புலவர்களோடு ஒப்பீடு செய்யத் தூண்டும் குறிப்புப் பொருள் கூறல், சொற்பொருள் அறிவதற்கு சொல்லாக்கத்திற்குச் செல்லுதல் ஆகிய எமது ஆசானின் அணுகுமுறைகள், தமிழ்மேல் இருந்த எனது ஆவலையும் ஆர்வத்தினையும் தூண்டியதோடல்லாது ஆங்கில இலக்கிய உலகினை அறிவதற்கும் துணையாக அமைந்தன.

இதுவே, பின்னர் யான் தனிப்பட்ட பரீட்சார்த்தியாக இலண்டன் கலைமானிப் பட்டப் பரீட்சைக்கு ஆங்கில இலக்கியம், மற்றும் வடமொழி ஆகிய பாடங்களுக்கு தோற்றுவதற்கு ஓர் அசட்டுத் தைரியத்தையும் நல்கியது என்பதை, இப்போது உணர முடிகிறது.

ஆசிரியனிடம் பாடம் படிக்காதே, ஆசிரியனைப்படி; அதாவது ஆசிரியனின் பாட அணுகுமுறைகளை அவதானித்து அறிதல் சால நன்மை பயக்கும் என ஓர் அறிஞர் ஏதோ ஒரு பழந்தமிழ்நூலினை ஆதாரங்காட்டிப் பேசக் கேட்டிருக்கிறேன். யானும் எமது ஆசானிடம் இலக்கிய இலக்கணங்களைப் பாடங் கேட்கும் பேற்றினைப் பெறாதிருந்தும் அவரது பாட அணுகு முறைகளிற் சிலவற்றை அறிவதன் மூலம் பெரும் பயன் அடைந்திருக்கிறேன்.

4 ஆம் வகுப்பில் சித்தியடைந்த பின் யூனியன் கல்லூரியில் யான் சேர்க்கப்பட்டேன். அதன் பின் எமது பேராசானைக் காண்பது அபூர்வமாக இருந்தது. எனினும் அவர் பற்றிய செய்திகளை அறிய யான் ஆவலாக இருந்தேன். 1943 ஆம் ஆண்டு யான் 3ஆம் பாரம் படித்துக் கொண்டிருந்த காலம். எமது பேராசானின் குருவாகிய மகாவித்துவான் கணேசையர் ஒரு சங்கநூலுக்கு விருத்தியுரை எழுதுகிறார். மகாவித்துவான் சொல்லச் சொல்ல, அவரின் மாணாக்கர்களில் ஒருவராகிய பண்டிதர் அம்பலவாணர் கந்தையா அவ்வுரையினை எழுதுகிறார். அற்றைப் பொழுது எழுதியபின் ஒருதரம் அதனை வாசிக்கச் சொன்ன மகாவித்துவான் அவர்கள் "நமசிவாயம் வரட்டும்; அவன்பார்த்த பின் அச்சுக்கு அனுப்புவோம்" என்றாராம். இச்சம்பவத்தினை தமது நண்பனாகிய ஆசிரியர் ஒருவருக்கு பண்டிதர் கந்தையா கூறியதை யான் அருகில் இருந்து செவிமடுத்தேன். தேசிகரே மகாவித்துவானின் முதல்தரபிரிய மாணவன் என்பதை அப்பொழுதறிய, தேசிகர்பால் மேலும் எனக்கு அபிமானம் ஏற்பட்டது. மகாவித்துவான் சிவபதம் அடைந்தபோது, அப் பெரியாரது ஈமச் சடங்கில், சிரேஷ்ட மாணவன் என்ற ரீதியில் தேசிகர் அவர்களே தமது குருவுக்காய நன்றிக்கடனைச் செலுத்துமுகமாக அன்னாருக்கு இரங்கலுரையும் நிகழ்த்தியிருந்தார்.

1994 ஆம் ஆண்டளவில் வீமன்காமம் துவிபாஷா பாடசாலையில் ஆங்கிலபாட ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவே, பேராசானுடன் பழகி, பற்பல விடயங்கள் பற்றி உரையாடவும் முடிந்தது. இக்காலப்பகுதியில் அன்னாரின் இலக்கிய இலக்கண வகுப்புக்களை 'ஒற்றுக்கேட்டு' அவதானிக்கும் அரிய பேறு மீண்டும் கிட்டியது.

ஒரு முறை 7ஆம் வகுப்பில் பேராசான் ஆகுபெயர் கற்பித்துக் கொண்டிருந்தார். எடுத்த எடுப்பிலேயே, சூத்திரம் சார்ந்த வரைவிலக் கணங்களை எள்ளனவேனும் கூறாது சாதாரண உதாரணங்கள் மூலம் ஒவ்வொரு வகை ஆகுபெயரினையும் 'விதி வரு முறையில்' விளக்கிய சிறப்பினை அவதானித்து வியந்தேன்.

அன்னார் இலக்கணம் கற்பிக்கும் தனி ஆற்றலையும் அவரிடம் தமிழிலக்கண பாடங்கேட்ட ஆசிரியர்கள் விரிவுரையாளர்கள் பலர் இத்துறையில் வல்லுநராய் விளங்குவதையும் கண்ட யாழ். பல்கலைக்கழகத்தினரும் பேராசானுக்கு இலக்கணவித்தகர் என்ற பட்டத்தினை அளித்து தமக்குப் பெருமை சேர்த்துக் கொண்டனர்.

இனிமேல் ஆசானின் ஆளுமையின் முக்கிய பண்புகள் சிலபற்றிச் சிந்திப்போம்.

'நுண்மாண் நுழைபுலம்' பொருந்தி நுண்ணிதாகிய கல்வி கேள்வியை உடையராதலால், என்றுமே தம்மை வியந்து கூறுதலைத் தவிர்த்து, பணிந்து சொல்லாடல் செய்வது இவருடைய பெரும் பண்பாகும். தமக்குத் தெரியாததொன்றினை இவர் என்றுமே பேசியது கிடையாது. தமக்கு "இத்துணையே தெரியும், இதன்மேல் தெரியாது' என்ற கோட்பாடு உடையவராதலால் அவரிடம் 'பெருமிதம்' என்ற வீண் கர்வம் கிடையாது. எனவே, அவரிடம் ஓர் ஐயத்தினை ஒருவர் உசாவும் போது, தமக்கு அது பற்றி நன்கு தெரிந்தவிடத்து ஆணித்தரமாகத் தெளிவான விளக்கம் அளிப்பார். அல்லாவிடின் 'இது சிந்திக்கப் படவேண்டியது' என்று கூறி அமைந்து விடுவார். கற்றோரிற் சிலரிடத்துப் போல் 'மழுப்பலும் வழுப்பலும்' ஆகிய, ஒருவரது ஆளுமைக்குறைபாட்டால் எழும் இயல்பு அவரிடம் இம்மியும் கிடையாது. சிந்தனை நேர்மைத்திறன் (Intellectual honesty) என்பது அவருடன் கூடிப்பிறந்த பண்பாகும். இதன் காரணமாக போலித்தன்மையான புகழுரையையும் முகஸ்துதியையும் கண்டு தமக்குள் வெள்கி நாணுபவர். சில விழா மேடைகளில் இதனை யான் கண்ணுற்றிருக்கின்றேன்.

இவரது சிந்தனைத்திறன் பற்றி மேலும் ஒரு குறிப்பு: எப்பொழுதும், அவர் பேசுபவை கற்பனை ரீதியிலன்றி யதார்த்த ரீதியாகவே அமைந்திருக்கும். நூல்களுக்கு உரைவகுத்தவர்கள் பற்றிக் கூறுங்கால் பழைய உரையாசிரியர்கள் பொருளிலிருந்து சொல்லுக்கு வருவர், அதாவது பொருளினை நன்கு விளக்கிய பின்னரே சொல்லிற்கு அர்த்தம் கூறுவர். எடுத்துக் காட்டாக 'துறவு பூண்டு' என்ற சொற்றொடரின் யதார்த்தமான கருத்து 'எல்லா ஆசைகளையும் விட்டு ஒழுகுபவனாய்' என்பதாம். இதற்கு மாறாக, 'சந்நியாசத்தினை மேற்கொண்டு' எனக் கூறுதல் வெறும் சொல்லுக்குப் பொருள் வகுத்தலாகும். இதை ஆசானிடம் அண்மைக் காலத்தில் பாடங்கேட்கும் பேறு பெற்ற கம்பவாரிதி அவர்களே என்னிடம் சொல்லியிருக்கிறார்.

கற்றோரும் கற்கவிழைவோரும் எமது ஆசானிடம் ஈர்க்கப்படுவதற்கு முக்கிய காரணம், அன்னாரின் அறிவு 'கொளுத்தும், திறனாகும். இது மிக அருமையாக மேதைகளிடமே காணப்படும் பண்பு என்பர். ஒருமுறை உலகம் போற்றும். விஞ்ஞான மாமேதை ஐன்ஸ்ரீனிடம் ஒரு இளைஞன் அணுகி, தனக்கு அவரின் 'சார்புக் கொள்கையின்' அடிப்படைத் தத்துவத்தினை விளக்குமாறு கேட்டானாம். அவர் "நும் காதலியோடு நீவிர் சல்லாபஞ்செய்யுங்கால் ஒரு மணி நேரம் 5 நிமிடம் போல் தோன்ற, கொழுந்து விட்டெரியும் நெருப்பண்டை, நீவிர் இருக்கும் 5 நிமிட நேரம் ஒரு மணித்தியாலம் போல் தோன்றுமல்லவா?" என அவன் உள்ளம் ஏற்கக்கூடிய விதத்தில் பதில் கூறி அனுப்பி வைத்தாராம்.

வள்ளுவன் சொல்வான் அறிவுடைமைக்கு ஓர் அருமையான வரைவிலக்கணம். தான் சொல்ல வேண்டிய விடயம், எளிதில் விளங்குவதற்கு அரிய பொருளையுடைத்தாக இருப்பினும், கேட்போர் எளிதில் இனிது விளங்கக் கூடிய வண்ணம் எடுத்துச் சொல்பவனே அறிவுடையான் ஆவான். மறு கரையில், பிறர்கூறும் சொற்களில் நுண்ணிய பொருளைக் காண்பது அரிதாக இருப்பினும், அவ்விடத்தில் ஆழமான பொருளைக் காணுதல் அறிவுடையோர் செயலாகும்.

"எண் பொருளவாகச் செலச்சொல்லித் தான் பிறர் வாய்
நுண் பொருள் காண்ப தறிவு"

என்பது குறள். இத்தகைய சிறப்பான பண்பினை, எமது பேராசானிடம் எப்போதும் எவ்விடத்தும் கண்டிருக்கிறேன். தாம் பேச எடுத்துக் கொண்ட விடயம் சாதாரணமாக, விளங்குவதற்குக் கடினமாக இருந்தாலும், அதனை மற்றவர் எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய விதத்தில் அழகாகவும் தெளிவாகவும் கூறுவதில் வல்லவர். அத்தோடு மற்றவர் கூறுவது தெளிவற்றதாக இருப்பினும், தமது சிந்தனையினை அவர் கூற்றின்பாற் செலுத்தி, அதன் தாற்பரியத்தைக் கிரகிக்கவும் வல்லவர். மேலும்

"விரையான் வெகுளான் விரும்பி
முகம் மலர்ந்து
கொள்வோன் கொள்வகை அறிந்து,
அவன் உளங்கொளக்
கோட்டமில் மனத்தில் நூல் கொடுத்தல்"

என நானூலார் சொல்லும் 'ஆசான் பாடம் கூறும்' வரைவிலக்கணத்திற்கு அமைய, ஆசான் அவர்கள் ஒன்றினை விளக்கும் போது, கேட்பவன் தகைமை அறிந்தவராய் உணர்வு பேதமற்ற நிலையிலிருந்து கேட்பவனது உள்ளம் ஏற்றுக் கொள்ளும் வண்ணம், ஒன்றினைக் கற்பிக்கும் சிறப்பான ஆற்றல் உடையவர்.

முடிவாக, எமது பேராசானின் ஆளுமையின்தனிமனிதப் பண்பொன்றினையும், இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

இற்றைக்கு ஏறக்குறைய ஐம்பது வருடங்களுக்கு முன்னமேயே, அவரோடு சகவாசிரியனாக அமைந்து படிப்பிக்குங்கால் தமிழிலக்கிய விடயங்கள் பற்றிமட்டுமன்றி, ஆத்மீக விடயங்கள் பற்றியும் அவரோடு உரையாடுதல் எனது வழக்கம். குறிப்பாக சமய சாஸ்திர சம்பந்தமான பற்பல ஐயங்களை எழுப்பி வாதிடுவதுண்டு. அவற்றில் ஒன்று சைவ சித்தாந்தத்தில் வரும் முப்பொருள் உண்மை பற்றியது. அது பற்றி பின்வருமாறு என் வாதத்தினை முன்வைத்தேன்: "முப்பொருள் மூன்றெனவும் அவை என்றுமே உள்பொருள் எனவும் சைவசித்தாந்தம் பேசும். சிறிது சிந்திப்பின் என்றும் உள்பொருளாம் தன்மை பரிபூரணப் பொருளுக்கே உரியது ஆயின் பரிபூரணப் பொருள் மூன்று சமகாலத்தில் இருக்க முடியாது. ஏனெனில் ஒன்றினது பரிபூரணத்துவம் மற்றொன்றினது பரிபூரணத்தினைப் பாதித்து நிற்குமல்லவா. எனவே பொருள் மூன்று என்பது பொருந்தாது" என்றேன். இதற்கு தேசிகர் அவர்கள் நன்கு சிந்தித்து விட்டுச்சொன்ன விடை "ஆப்த வசனத்தினை யாம் ஏற்றுக் கொள்வதைத்தவிர வேறுவழியில்லை" என்பதாம்.

இது போல் இன்னொரு முறை, சமயசாஸ்திரங்களில் கூறப்படும் அநுமானப் பிரமாணம் பற்றிப் பிரஸ்தாபித்து, "அநுமானப் பிரமாணம் பெரிதும் உபமான அம்சத்தினை அடிப்படையாகக் கொண்டது. உபமானம் மூலம் இரு விடயங்களின் ஒப்புமை பற்றிக் கூறலாமேயன்றி ஒரு பொருளின் உண்மை நிலையினை நிரூபிக்கமுடியாது" என்று கூறினேன்.

இதற்கு, எமது பேராசான் அத்தருணம் சிந்தனை விரவிய மௌனம்சாதித்துநின்றமை இன்றும் எனது ஞாபகத்திலிருக்கிறது. அத்துடன் இவ்விடயம் அவர் மனதில் ஆழமாகப் பதிந்திருக்க வேண்டும். ஏனெனில் கடந்த வருடம் அதாவது ஏறக்குறைய ஐம்பது வருடகால எல்லைக்குப் பின்னரும், கொழும்பில் அவருடன் உரையாடும் போது, அவர் இதே சந்தர்ப்பத்தினைக் குறிப்பிட்டு, "உபமானம் மூலம் எப்பொருளினது உண்மை நிலையினையும் விளக்கி நிரூபிக்க முடியாது என்று அன்றைக்கு நீர் தானே கூறினீர்" எனச் சொன்னார்.

பேராசான் அவர்கள் எக்காலத்திலும் கல்விச்சிறப்பு சமயசாஸ்திரவித்வத்வம் பெரியதோர் சாதனைக்குரிய விடயங்கள் எனும் எண்ணங்கொண்டு வீண் பெருமிதம் அடைந்தவர் அல்லர். கல்வி கேள்விகளிலும் பார்க்கச் சிந்தனைத்திறன் மிக்கவர். அவர் ஒரு தேடுதல் மானிடன்.

தர்க்கரீதியான சிந்தனை அவரிடம் முதன்மையுற்று நிற்பினும், சிந்தனைக்கு அப்பாலேதான் உண்மை நிலவுகிறது என்பதனை அறிந்து, உணர்வில் அவ்வுண்மையினை நாடும் ஆத்மவிசார நிலையில் நிற்பவர் போல் எனக்குத் தென்படுகிறார். இக்கருத்தினை கற்றோர் பலர் கூட மறுத்து நகைசெய்யலாம். ஏனெனில், கல்விச் சிறப்பே ஆன்மிகம், வித்துவத்தன்மை யுடையோனே சமயஉணர்வு மிக்கவன், பிரசங்கிக்கும் ஆற்றலை ஆன்மீக உணர்வோடு சமன் படுத்தல் போன்ற தவறான எண்ணங்கள் எமது பண்பாட்டில் புரையோடி, அக வாழ்வினைச் சீர்குலைக்கும் காலமல்லவா இது.

'பிரசங்கங்கள் கேட்பதன் மூலமோ, பரந்த பல்வேறு கல்வி கேள்வியறிவு மூலமோ அல்லது தனது சொந்த சீரிய சிந்தனைத்திறத்தாலோ ஒருவன் இந்தப் பேராத்மாவை அடையமுடியாது'

'அயமாத்மா பிரவசனேன லப்ய ந ஸ்வமேதயா ந பஹ்தாசுருதேன' என கடோபநிஷத் முழங்குவதையும், 'கல்வி எனும் பல்கடல் பிழைத்தும்' என மணிவாசகர் பிரலாபித்ததையும் உற்று நோக்கின். யான் தேசிகர் பற்றிக் கூறிய இக் கூற்றினை ஏற்றமைவர் என நினைக்கிறேன். தெய்வம் என்பதோர் சித்தமுண்டாகும் படிநிலை, கல்விகேள்வியால் வரும் மேன்மை யினைத் துச்சமெனக் கருதி; அவற்றால் பெருமிதம் அடையாதவர்க்கே கிட்டும் ஒன்றாகும்.

முதுபெரும் புலவர் வை. க. சிற்றம்பலம்.

தென்மயிலைச் சிறப்பு

கற்பகஞ் சிந்தா மணியெலா மொன்றாய்க் கலந்திருந்தே
அற்புதங் காட்ட அருள்மிகு கோயி லதியுயர்ந்து
வெற்பெனக் காட்ட விரும்பிவாழ் விண்ணோ ரெனப்புலவோர்
உற்றது காட்ட உயர்தென் மயிலையா மூர்நின்றதே.

நமச்சிவாயம் உதித்தார்

ஒருமையாய்த் தென்மயி லைசே ரிராம சுவாமியந்நாள்
உரிமைசேர் பர்வதத் தம்மாளை யூழி னுறமணந்து
பெருமையாய்ப் பெற்ற பிள்ளைக ளுள்ளே பிறங்கிநின்ற
அருமையில் வந்த நமசிவா யம்புள்ளி யாகினனே.

முதற்குரு வித்துவான் கணேசையர்

கடிசூத் திரமுதற் காப்பிடல் கல்வி கடவுள்வழி
முடிசூடி நீதி முதனூல்கள் யாவினு மூத்துயரக்
குடிசாருந் தீட்சை குலாசாரம் யாவும் குருவெனவே
அடிசார்ந்து வித்வ கணேசையர் தானே யருளிநின்றார்.

ஆசிரியரானார்

சைவா சிரிய கலாசா லையிலுயர் சான்றுபெற்றுத்
தெய்வா சிரிய னெனவீமன் காமத்திற் சேர்ந்ததன்கண்
மெய்யாய் மகாவித்தி யாலயப் பண்டித ராகிமுன்னே
உய்வா னுயர்தமி ழோங்கிடக் கற்பித்தே யோய்ந்தனரே.

தொல்காப்பிய உரைக்குரை

பொன்னார் பொதியி லகத்தியன் காப்பியன் போற்றிவைத்த
தன்னே ரிலாத தமிழி னிலக்கணந் தன்னையன்றே
அன்னே வருக வெனப்பவ ணந்தி யமைத்தநன்னூல்
பின்னே கணேசைய ரேற்றார் நமசிவா யத்துடனே.

இலக்கண வித்தகர் பட்டம்

முன்னாள் துணைவேந்தர் வித்தியா னந்தன் முறைமையினால்
தொன்னாள் விளங்குந் தமிழ்த்துறைப் பண்டிதத் தோன்றலென்று
தன்னே ரிலாத நமச்சிவா யத்தனைத் தானழைத்தே
பொன்னே ரிலக்கண வித்தகர்ப் பட்டம் புனைந்தனனே.

குவலயம் போற்றும்

ஆனை முகனி னடிதொழு தேத்துநல் லன்பினரை
வானைத் தொடும்புகழ் வள்ளலை வையம் வணங்கநின்ற
தேனை யிலக்கண வித்தக ரென்றுயர் தெய்வத்தினைக்
கோனை நமசிவா யத்தினைப் போற்றுங் குவலயமே.

பண்டிதமாணவர்

பஞ்ச விலக்கணம் பண்புறக் கற்ற பயனதனால்
வஞ்சக மின்றியே வந்தடைந் தேகற்ற மாணவரை
நெஞ்சுறக் கற்று நிறைவுறப் பண்டித ராக்கியதால்
விஞ்சுறு கின்றமா வித்துவா னாகி விளங்கினரே.

தேசிகர்ப் பட்டம்

இம்மா நிலத்தி னிலக்கண வித்தகர் போலொருவர்
எம்மா நிலத்திலு மில்லையிங் கென்றுநன் றேயழைத்துக்
கைம்மா வுடைய கடவுளைப் போற்றிக் கணேசையரும்
தம்மா ணவர்க்கருந் தேசிகர்ப் பட்டத்தைச் சாற்றினரே.

இயற்றிய நூல்கள்

பற்றுடன் போற்றும் நகுலேச ரந்தாதி பல்பதிகம்
மற்றுய ரன்னை யிரட்டை மணிமாலை யோடுவைவேல்
பெற்றநற் சந்நிதி யானின் சதகமும் பேணிமென்மேல்
பற்பல ஊஞ்சல் பிரபந்த நூல்களும் பாடினரே.

வாழ்த்து

பரோர் புகழு மிலக்கண வித்தகர் பண்புடனே
நேரா ருரிமை கமலாம் பிகையுடன் நித்தநித்தம்
பேரார் குடும்பத் துடனென்றும் வாழப் பிரியமுடன்
தாரார் சதாபிஷேக கத்தினிற் பல்லாண்டு சாற்றினனே.

மெய்ப் பொருளை நாடி நிற்கும் வித்துவ பரம்பரை

திரு ச. விநாயகமூர்த்தி
சிரேஷ்ட போதனாசிரியர்,
ஆங்கிலத் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

கல்வியை வெறும் பொழுது போக்காகவோ அல்லது ஜீவனோபாயமாகவோ கருதாது, அதனை மெய்ப்பொருளைக் காட்டும் ஒரு திறவுகோலாகக் கொண்டு பயின்றதொரு வித்துவ பரம்பரையைச் சார்ந்தவர், இலக்கண வித்தகர் நமசிவாய தேசிர் அவர்கள். அப்பரைம்பரையைப் பொறுத்தவரை கல்வி மெய்ப் பொருளாகிய செம்பொருளை உணர்த்தற்குக் கருவியாக உள்ள ஒரு விழுமியமாகவே இருந்து வந்துள்ளது.

தேசிகர் அவர்களைப் பற்றிச் சிந்திப்போர் எவரும் அவரது குருநாதராகிய வித்துவசிரோமணி கணேசையர் அவர்களை நினையாதிருக்க முடியாது. வர்த்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலயத்தோடு ஒட்டியமைந்ததொரு 'பர்ணசாலையில்' இதிகாச புராண காலத்தைச் சேர்ந்ததொரு தவமுனிவரை நினைவூட்டும் திருக்கோலத்தோடு வாழ்ந்தவர் வித்துவசிரோமணி ஐயர் அவர்கள். அந்தத் தவச்சுடரை மிக இளவயதிலேயே அணுகி 'அகலாது அணுகாது தீக்காய்வார் போல' பாடங் கேட்டவர் தேசிகர் அவர்கள். பிற்காலத்தில் ஆசிரிய கலாசாலையில் இலக்கியகலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை, உப அதிபர் பொ. கைலாசபதி போன்ற பெரியோர்களிடம் கல்வி பயிலக் கூடிய வாய்ப்பும் தேசிகர் அவர்களுக்குக் கிட்டியது. குறிப்பாக, பண்டிதமணி அவர்களால் பெரிதும் மதிக்கப்பட்டவரும், சமய சாதனாமார்க்கத்தில் நின்று வாழ்ந்தவருமாகிய கைலாசபதி அவர்களது தொடர்பு தேசிகர் அவர்களிடத்தில் ஓர் ஆழ்ந்த மனப்பதிவை ஏற்படுத்தியது என்பது மிகையல்ல.

வித்துவசிரோமணி ஐயர் அவர்களது ஆழ்ந்து அகன்ற அறிவும், அப்பழுக்கற்ற தவவாழ்வின் சிறப்பும் தேசிகர் அவர்களைப் பெரிதும் கவர்ந்திருந்தன. அதனால், அவர்களை முதலில் தரிசித்து, பாடங்கேட்ட நாள் தொட்டு, அவர்கள் இறையடியெய்தும் வரை அவர்களையே குருநாதராகக் கொண்டு வாழ்ந்தவர் தேசிகர் அவர்கள். வித்துவசிரோமணி ஐயர் அவர்களோடு கொண்டிருந்த இத்தகைய தொடர்பின் காரணமாக, அவர்களோடு சேர்ந்தும், அவர்களது வழிகாட்டலிலும், பல மாணவர்களைக் கற்பித்துப் பாலபண்டிதர்களாகவும், பண்டிதர்களாகவும், சைவப்புலவர்களாகவும் இந்நாட்டில் திகழ வைத்துள்ளார்கள். இவர்களை விட, பரீட்சைகள் எழுதுவதையோ, பட்டங்கள் பெறுவதையோ நோக்கங்களாகக் கொள்ளாது, அறிவுப்பசி தீர்ப்பதிலும், ஆன்மீக வளர்ச்சியிலுமே குறியாக இருக்கும் பலருக்கு வழிகாட்டியாகவும் விளங்கி வருபவர்.

ஆலயங்களில் புராணபடன பாரம்பரியத்தைப் பேணி வழிநடத்துதல், சமயப்பிரசங்கங்கள் செய்தல் போன்றவற்றிலும் ஈடுபட்டு வருபவர். கீரிமலைச் சிவநெறிக்கழகம் போன்ற சமய நிறுவனங்களின் புரவலராகவும், தலைவராகவும், வழிகாட்டியாகவும் தொண்டு செய்பவர். குறிப்பாக அந்நிறுவனங்கள் காலத்துக்குக்காலம் நடத்தும் அறிவரங்குகளுக்குத் தலைமை தாங்கி, அறிஞர்கள் எழுப்பும் ஐயங்களைத் தீர்த்து வைக்கும் பெருங்குரவராகத் திகழ்பவர்.

தேசிகர் அவர்களுடைய ஆன்றமைந்த அறிவினை அங்கீகரிக்கும் வகையில், யாழ். பல்கலைக்கழகம், அவர்களுக்கு 'இலக்கண வித்தகர்' என்ற பட்டத்தினை வழங்கித் தனக்குப் பெருமை சேர்த்துள்ளது. தமிழ்த்துறையினர் அவர்களை அழைத்து, அரிய இலக்கண விரிவுரைகளை அவர்களைக் கொண்டு செய்வித்து மாணவர்களைப் பெரும்பயன் பெறச் செய்துள்ளனர்.

முதுமையிலும், தம்மை அண்டிவருவோரின் ஐயங்களைத் தமக்கேயுரிய முறையில் நகைச்சுவையோடு உலகியல் உதாரணங்களைக் காட்டி எளிதாகத் தீர்த்து வைக்கும் தனிச்சிறப்பு அவர்களிடம் இருப்பதைப் பலர் அறிவர்.

தேசிகர் அவர்கள் மேலும் பல்லாண்டு காலம் நம்மிடையே வாழ்ந்து தமது பணியினைத் தொடர வேண்டுமென இறையருளை வேண்டி நிற்போமாக.

எண்டிசையும் புகழ் நிலவு எழில் மதியம்

புலவர்மணி அ. ஆறுமுகம்
பண்ணாகம்.

திருநீறு பொட்டிலங்கும் நெற்றி; யுள்ளத்
தெளிவு சொலும் முகம்; நல்ல குணங்காட் டுங்கண்;
சரிநீதி பகரும்வாய்; நீல மேனி;
தமிழ்ப் பண்பு காட்டுமுடை; சாந்தம் தேங்கும்
உருவார்ந்த சீராளா! அறிவு கொள்கை
ஒழுக்கத்தால் உயர்நமசி வாய நல்லாய்;
குருதேவா எனக்கற்றோர் போற்றிக் கைகள்
கூப்பிவழி பாடுசெயும் கோனே வாழ்க.

எழுத்துச்சொல் பொருளென்னும் இலக்க ணங்கள்
எழுத்தெழுத்தாய்க் கற்றுணர்ந்த பெரிய மேதை;
விழுப்பமுறும் இலக்கியங்கள் சமயம் தர்க்கம்
மிகநுணுகிப் படித்தாழம் கண்ட அண்ணல்;
பழுத்தபுலக் கணேசைய வித்து வானார்
பாதநிழ லிருந்திவற்றைக் குருகு லத்தின்
வழுத்துமுறை யினிற்கற்ற நமசி வாய
வரதரிந்த ஈழத்தின் வயங்கும் செல்வம்.

அரியமனி தப்பிறவி எடுத்தோம்; வேதம்
ஆகமங்கள் வழங்குசிவ பூமி வந்தோம்;
பெரியசைவ சித்தாந்தம் கற்று மேலாம்
பெருமானார் பரமசிவன் என்றே தேர்ந்தோம்;
திருவருளே திருமேனி யாகக் கொண்ட
சிவனடியே சேர்வதுநம் இலக்காய்க் கொள்வோம்;
குருநமசி வாயதே சிகரைப் போற்றிக்
குதுகலிப்போம் பிறவிபெற்ற பயனு மாமே.

ஆசிரியர் அதிபரெனச் சேவை யாற்றி
ஆறுதல்பெற் றெண்பத்து நான்காம் ஆண்டு
மாசின்றி அருள்வழியில் வாழ்வ தோடு
மாணவரா சிரியருக்குப் பாடஞ் சொல்லி
பேசுபுகழ்ப் பண்டிதர்க்கும் வகுப்பு வைத்தெம்
பெருமானின் பூசையொடும் அனுட்டா னங்கள்
நேசமுடன் நியமமாய்ச் செய்து வாழ்வில்
நிறைவுகண்ட தேசிகரே நெடிது வாழ்க.

பண்டிதராய் இலக்கணவித் தகராய்ச் சான்றோர்
பாராட்டும் மகாவித்து வானு மாகித்
தொண்டராய், அருள்நூல்கள் ஆக்கி யோராய்ச்,
சொல்லில்விற் பனமுடைய நாவல் லோராய்,
கண்டெனலாம் கட்டுரைகள் வரைவோ ராகிக்,
கற்றுணர்ந்தோர் அவையினிலே முன்வைத் தேத்தும்
எண்டிசையும் பரந்தபுகழ் நிலவு காலும்
எழில் மதியம் எனவொளிரும் இனிய ஐயா.

பல்லாண்டு தேகசுகத் தோடு முள்ளப்
பரிமளிப்பு முடையீராய் வாழ்க வாழ்க
நல்லாரைக் காண்பதுவும் நல்லார் வாய்ச் சொல்
நயந்தினிது கேட்பதுவும் நல்லார் பண்பு
பல்காலும் பகர்வதுவும் நன்றே நுந்தம்
பாரியா ருடன்மக்கள் சுற்றம் சூழ
சொல்லாலும் எழுத்தாலும் சைவ நீதி
துலங்கநின் தொண்டுதொடர்ந் திடுவ தாக.

நெஞ்சுக்கு நெருக்கமாக நிலைத்து நிற்பவர்

பேராசிரியர் நா. சுப்பிரமணியன்
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

நாம் நமது குடும்ப வட்டத்துக்கு வெளியே வந்து சமூக மயப்படும்போது பல்வேறு வகையினருடன் தொடர்பு கொள்கிறோம். அவர்களுட் சிலர் நமது நட்பு வட்டத்துள் வருவதோடு வாழ்க்கைப் பயணத்திலும் நம்மோடு இணைந்து நடை பயில்கின்றார்கள். இத்தகையவர்களில் மிகச் சிலர் மட்டும் நமது நெஞ்சுக்கு மிக நெருக்கமாக வந்து நிலைபெற்று விடுகிறார்கள். அத்தகையவர்களிடம் நாம் நமது அந்தரங்கங்களைப் பகிர்ந்து கொள்ளக் கூடிய அளவுக்கு நம்பிக்கை வைத்து விடுகிறோம். அவர்களின் தொடர்பால் நமது ஆளுமையில் புதிய பரிமாணங்களும் நிகழ்கின்றன. இவ்வாறு எனது நெஞ்சுக்கு நெருக்கமாக வந்து நிலைபெற்று நிற்கும் மிகச் சிலருள் ஒருவர் பண்டிதர் இலக்கணவித்தகர் மகாவித்துவான் இ. நமசிவாய தேசிகர் ஐயா அவர்கள். எனக்கு அவர் 'நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய்' பல தளங்களில் காட்சி தருபவர். உறவு நிலையில் வைத்துப் பேசுவதானல் அவரை நான் எனது பெரிய தந்தை அல்லது பாட்டனார் என்ற பீடத்தில் வைத்துத் தரிசித்து வருகிறேன்.

இவ்வாறு தேசிகர் ஐயாவுடன் நெஞ்சுக்கு மிக நெருக்கமாக உறவு கொண்டுள்ளமையால் அவரைப்பற்றி எதனையும் எழுத்தில் வடித்துவிட முடியாத மனத்தடை எனக்குள் இருந்தது. அவசர கதியில் எதையாவது எழுதப்போய் அது தேசிகர் ஐயா அவர்களைப்பற்றிய என் மனச்சித்திரத்தை உரியவாறு இனங்காட்டத் தவறி விட்டால்..... என்ற தயக்கம் ஒருபுறம். அவருக்கும் எனக்குமிடையிலான நெருக்கம் காரணமாக, நான் எழுதுவன 'பாராட்டுரைகள்' ஆகக் கணிக்கப்பட்டு விட்டால் ..... என்ற அச்சம் மறுபுறம். மனத்தடையின் அடிப்படைகள் இவைதான்.

இனியும் தாமதிப்பதற்கில்லை என்ற கட்டத்தில் மேற்படி தயக்கம், அச்சம் என்பவற்றைத்தாண்டி என் நினைவேட்டிலிருந்து சில பக்கங்களைத் திருப்பி உங்கள் பார்வைக்கு முன்வைக்கிறேன். இவற்றை மதிப்பீடுகளாகவோ அல்லது பாராட்டுரைகளாகவோ இவையிரண்டுக்கும் அப்பால் சுயபுராணமாகவோ கொள்வது வாசகர்களைப் பொறுத்த விடயங்கள். என்னைப் பொறுத்தவரையில் இவை என் மனப்பதிவுகள் மட்டும்தான்.

தேசிகர் ஐயா பற்றிய எனது முதலாவது மனப்பதிவு 1967 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. அப்பொழுது, நான் பேராதனையில் உள்ள இலங்கைப் பல்கலைக்கழகத்தில் 'தமிழ் சிறப்பு' முதல்வருட மாணவனாகப் பயின்று கொண்டிருந்தேன். நன்னூல் விருத்தியுரை எமக்கு ஒரு பாடப் பகுதியாக அமைந்திருந்தது. அதனைக் கற்பித்தவர் கலாநிதி பொ. பூலோகசிங்கம் அவர்கள். அவர் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப்பட்ட ஆய்வை நிறைவு செய்து 1965இல்தான் இலங்கைக்குத் திரும்பியிருந்தார். நன்னூல் விருத்தியுரையைக் கற்பிக்கும்போது தொல்காப்பியம் சேனாவரையத்தையும் அருகே வைத்து ஒப்பு நோக்கி விளக்கங்கள் தரும் முறைமையை அவர் மேற்கொண்டிருந்தார். அக்காலப் பகுதியில் (முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் எனக்குத் தமிழ் கற்பித்த ஆசிரியப் பெருந்தகை) வித்துவான் த. செல்லத்துரை அவர்கள் பேராதனைக்கு வந்திருந்தார். அவர் என்னையும் அழைத்துக்கொண்டு கலாநிதி பூலோகசிங்கம் அவர்களைச் சந்திப்பதற்கு அவரது இல்லம்

சென்றார். அங்கு பூலோகசிங்கம் அவர்கள் வித்துவானிடம் எழுப்பிய முதல்வினா :–

"இலங்கையில் இப்பொழுது தொல்காப்பியம் சேனாவரையருரையைத் தெளிவுறக் கற்பிக்கவல்ல பண்டிதர்கள் யாரேனும் உள்ளார்களா?"

இதற்கு வித்துவானின் பதில் :–

"எனக்குத் தெரிந்தவரையில் யாழ்ப்பாணத்தில் கட்டுவனில் நமசிவாய தேசிகர் என்றொருவர் இருக்கிறார். அவர் மகாவித்துவான் கணேசையாவின் தலைமாணாக்கர்."

"அவரிடம் நான் பாடம் கேட்க வேண்டும்"

இது கலாநிதியின் கூற்று.

இந்த உரையாடலில்தான் தேசிகர் ஐயா அவர்கள் எனது இதயத்துக்கு முதலில் அறிமுகமானார். 'ஒக்ஸ்போர்ட்டில் கலாநிதிப் பட்டம் பெற்ற ஒருவர் இந்தப் பண்டிதரிடம் பாடம் கேட்க வேண்டும் என்கிறாரே! அப்படியானால் நான் இன்னும் எவ்வளவு படிக்க வேண்டும்!' இது அன்று என்னுள் எழுந்த மலைப்புணர்வு. 'தேசிகர் ஐயாவிடம் நானும் கற்க வாய்ப்புக்கிட்டுமா?' இது அன்று எழுந்த ஏக்கம் கலந்த வினா.

கலாநிதி பூலோகசிங்கமவர்கள் தேசிகர் ஐயாவிடம் சென்றாரா? பாடம் கேட்டுத் தெளிந்து கொண்டாரா? இவைபற்றி எனக்கு எவ்வித தகவலும் இல்லை. ஆனால் தேசிகர் ஐயா பற்றிப் பின்னர் பலமுறை பேராசிரியர் சு. வித்தியாநந்தன் அவர்கள் எமது பாடவகுப்புகளில் விதந்து பேசக் கேட்டிருக்கிறேன். இவற்றால் தேசிகர் ஐயா அவர்களைப் பற்றிய எனது மனப்படிமம் படிப்படியாகப் பரிணாமம் பெற்று வந்தது.

1970களில் நான் தெல்லிப்பழையை வதிவிடமாகக் கொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டபோது தேசிகர் ஐயா பற்றிய எனது இரண்டாவது மனப்பதிவு நிகழ்ந்தது. 1976இல் என்று நினைவு. அக்கால கட்டத்தில் மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் மஹாராஜ ஸ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்களின் விருப்பப்படி வெள்ளிதோறும் நான் கந்தபுராண விரிவுரை நிகழ்த்தி வந்தேன். அவ்வாறான ஒரு வெள்ளி நாளில், நான் விரிவுரை நிகழ்த்தி முடித்த பின்னர், நண்பர் கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை அவர்கள், சபையில் ஒரு பெரியவரைச் சுட்டிக் காட்டி, "இவர் எங்கள் பண்டிதர் தேசிகர் ஐயா; கணேசையாவின் மாணவர்" என்றார். எனக்குள் ஒரு அதிர்ச்சி, "இந்தப் பேரறிஞருக்கு முன்னாலேயா நான் உரையாற்றியிருக்கிறேன். என்னென்ன தவறுகள் விட்டிருப்பேனோ?" என்று. ஆனால் அதேவேளை நீண்ட நாட்களாக நினைவில் மட்டும் இருந்த ஒருவர் நேரில் தரிசனம் தருகிறாரே என்ற மனநிறைவும் ஏற்பட்டது. அவர் இயல்பாக என் அருகில் வந்து கையைப் பற்றி, "கந்த புராணத்தை நீங்கள் படிச்சிருக்கிறியள் எண்டு தெரியுது" என்றார் சிரித்துக் கொண்டே. அது முகமன் வார்த்தையா? அல்லது மனநிறைவின் வெளிப்பாடா? என்ற ஐயம் எனக்குள் ஏற்பட்டது. ஆனால் அதனை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நான் நன்றி கலந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டேன். பின்னர் அவருடன் நெருக்கமாகப் பழக வாய்ப்புக்கள் ஏற்பட்டபோது நான் தெரிந்து கொண்டது, 'அவர் தனது மனப் பதிவுக்கு முரணாக முகமன் என்ற நிலையில் சம்பிரதாய வார்த்தைகள் பேசுபவர் அல்லர்' என்பது. அவரது இப்பண்பை நானும் இயன்றவரை பேணிக்கொள்ள முயன்று வருகிறேன். இவ்வகையில் தேசிகர் ஐயா அவர்கள் எனக்கு ஒரு 'ஆதர்ச' மாகத் திகழ்கிறார்.

மாவிட்டபுரம் கோவிலில் நிகழ்ந்த நேர்முகத்தின் பின்னர் தேசிகர் ஐயா அவர்களை அடிக்கடி சந்திக்கவும் விரிவாக உரையாடவும் வாய்ப்புக்கள் கிட்டின. தெல்லிப்பழையில் எனது இல்லம் இருந்த மாரியம்மன் கோவிலடிக்கும் தேசிகர் ஐயாவின் கட்டுவன் சந்தி இல்லத்துக்கும் இடைத் தூரம் இரண்டு கிலோமீற்றர் என்பதால் தினமும் சந்திக்கவல்ல சூழலும் அமைந்திருந்தது. இவ்வாறான சந்திப்புக்களில் தமிழின் 'இலக்கண – இலக்கிய' நூட்பங்கள் பற்றி அவர் விளக்கியுரைப்பார். முக்கியமாகத் தொல்காப்பியரும் நன்னூலாரும் வள்ளுவரும் கம்பரும் அவரது நாவில் நடமிடுவார்கள். பரிமேலழகர், சேனாவரையர், சிவஞானமுனிவர் முதலியவர்களின் உரைத்திறன்களை அவர் விவரிக்கும் வேளைகளில் அவர்களே தேசிகர் ஐயா வடிவில் நேரில் வந்து நிற்கிறார்களோ என்ற எண்ணம் எனக்கு எழுவதுண்டு.

கட்டுவன் கிராமத்தை மையப்படுத்தி தேசிகர் ஐயாவோடு நான் கொண்டிருந்த தொடர்பிலே எப்பொழுதும் 'இலக்கிய – இலக்கண' உரையாடல்களில் தான் நாங்கள் ஈடுபட்டிருந்தோம் எனக் கூறமுடியாது. பல நாட்கள் அவருக்கும் எனக்கும் மிக விருப்பமான கடதாசி விளையாட்டிலும் ஈடுபட்டோம். அவ்விளையாட்டில் அவர் ஒரு 'விண்ணன்'. கடதாசி விளையாட்டில் மாத்திரமன்றி கரப்பந்தாட்டத்திலும் கூட அவர் 'விண்ணன்' என்பதைக் கட்டுவன் சந்திக்கயலில் இருந்த விளையாட்டுத் திடலில் நான் தரிசித்துள்ளேன். எண்பது வயதுக்கு

மேலும் அவர் திடகாத்திர உடலுடன் திகழ்வதற்கு அவரது இந்த உடற்பயிற்சி சார் விளையாட்டு ஈடுபாடு ஒரு முக்கிய காரணம் எனலாம்.

தேசிகர் ஐயா கட்டுவனில் வாழ்ந்த காலப்பகுதியில் நான் தனிப்பட்ட முறையில் அவருடன் தொடர்பு கொண்டதோடு அமையாமல் பல்வேறு நிறுவன நிகழ்வுகளிலும் அவருடன் இணைந்து செயற்பட்டுள்ளேன். பல கருத்தரங்குகளிலும் விவாத அரங்குகளிலும் அவரது தலைமையின் கீழ் உரைநிகழ்த்தும் வாய்ப்புக்கள் எனக்குக் கிடைத்தன. அவைக்குத் தலைமை வகிப்பவர்கள் எத்தகைய பொறுப்புணர்வுடனும் சொற்சிக்கனத்துடனும் தர்க்க வாதத்திறனுடனும் திகழ வேண்டும் என்பதற்கு தேசிகர் ஐயா ஒரு தலையாய உதாரண புருஷராகக் கொள்ளத்தக்கவர். அவருக்கு முன்னால் நாம் உரையாற்றும் பொழுது ஒவ்வொரு சொல்லையும் அளந்து பேச வேண்டியவர்களாக இருந்தோம். ஒரு வார்த்தை மிகையாகப் பேசினாலும் நாம் மையப் பொருளிலிருந்து விலகி விடுவதைத் துல்லியமாகச் சுட்டிக் காட்டி எச்சரிக்கும் முறைமையை அவர் கடைப்பிடித்து வந்தமையே அதற்குக் காரணம். இவ்வகையில் அவர் தலைமை தாங்கும் இலக்கிய அரங்குகள் எனக்குப் புதிய அனுபவங்களைத் தருவனவாக அமைந்தன.

தேசிகர் ஐயா அவர்கள் மீது நான் கொண்டிருந்த பெருமதிப்பை வெளிப்படுத்தக் கூடிய வகையில் சில வாய்ப்புக்கள் எனக்குக் கிடைத்தன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவருக்கு 'இலக்கண வித்தகர்' என்ற உயர் விருதினை வழங்கிய சந்தர்ப்பத்தில் அவரைப் பாராட்டிக் கட்டுவனூர்ப் பெருமக்கள் ஒரு விழா எடுத்தனர். அவ்விழாவில் ஐயா அவர்களைப் பற்றிய எனது மனப்பதிவுகளை வெளிப்படுத்த ஒரு வாய்ப்புக் கிட்டியது.

எனது பிறந்த தினம் ஒன்றிலே (25– 12 – 1989) அறிஞர்களும் மாணவமணிகளும் இணைந்த கலந்தரையாடல் நிகழ்வொன்றை என் இல்லத்தில் நிகழ்த்த விழைந்தேன். சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதர் க. சச்சிதானந்தன், மயிலங்கூடலூர் பி. நடராசன், புலவர் ஈழத்துச் சிவானந்தன், கம்பன் கழகம் இ. ஜெயராஜ், கோகிலா மகேந்திரன் முதலிய பலரும் கலந்து கொண்ட அந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக அமைந்து சிறப்பித்தவர் தேசிகர் ஐயா அவர்கள். அவர் அன்று அளித்த சிந்தனை விருந்து இன்றும் என் நினைவில் பசுமையாக உள்ளது. பின்னர் கலை இலக்கியக்களம் சார்பில் தெல்லிப்பழையில் 10. 02. 1990 இல் நிகழ்த்தப்பட்ட கலந்துரையாடலிலும் தேசிகர் ஐயா அவர்கள் முதன்மை விருந்தினராக வருகை தந்து உரையாற்றிச் சிறப்பித்தார். அவரது உரையைக் கையெழுத்துப் படியாகத் தயாரித்துப் பேணிக் கொண்டோம்; ஒலிநாடாவிலும் பதிவு செய்து கொண்டோம் (இவை பின்னர் புலம்பெயர் அவலச் சூழலில் முற்றாகத் தவறிப் போனமை மகத்தான சோகம்)

1990 நடுப்பகுதில் உருவான யுத்தச்சூழலில் வலிகாமம் வடக்கிலிருந்து பலரும் புலம் பெயர நேர்ந்த போது தேசிகர் ஐயாவுக்கும் எனக்கும் சந்திப்பு நிகழ்வதற்கான வாய்ப்புக்கள் அருகின. எனது குடும்பத்தளம் தமிழகத்தை நோக்கி நகர்ந்தது. சில ஆண்டுகள் இடைவெளி.....

1994 இலேயே மீண்டும் ஐயா அவர்களைத் தரிசிக்க முடிந்தது. தமிழகத்திலிருந்த போது நானும் எனது துணைவியும் இணைந்து எழுதிய 'இந்தியச் சிந்தனைமரபு' என்ற நூலை யாழ்ப்பாணத்தில் கலை இலக்கியக் களத்தின் சார்பில் அறிமுகம் செய்ய விழைந்தேன். அந்நிகழ்வில் அந்நூலின் முதற்பிரதிகளை யாருக்கு அன்பளிப்பாக வழங்கலாம் என நினைத்தவேளை என் நினைவில் முன்னணியில் நின்றவர்கள் இருவர். ஒருவர் தேசிகர் ஐயா அவர்கள். இன்னொருவர் சமஸ்கிருத பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மா அவர்கள். 1994 மார்ச்சில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நிகழ்ந்த மேற்படி நிகழ்ச்சியில் தேசிகர் ஐயா அவர்கள் கலந்து கொண்டு என்னைக் கௌரவித்த காட்சி என் நெஞ்சில் இன்றும் நிழலாடுகின்றது.

முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்தினர் 24. 06. 1998இல் யாப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒரு கருத்தரங்கை நிகழ்த்த விழைந்தனர். அதன் சிறப்புரையாளராக யாரை அழைக்கலாம் என்ற வினா எழுந்தபோது கழகத்தினர்அனைவரின் சிந்தனையிலும் முதல்வராக நின்றவர் தேசிகர் ஐயா அவர்களே. அவர்கள் கழகத்தின் அழைப்பை ஏற்று வருகைதந்து 'சேனாவரையர் உரைத்திறன்' என்ற தலைப்பில் பேருரையாற்றினார். தமிழறிஞர் பெருமக்களும் மாணவ மணிகளும் நிறைந்திருந்த அந்தப் பேரவைக்குத் தலைமையேற்று வழிநடத்தும் பொறுப்பு கழகச் செயலாளராகிய என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. என் வாழ்நாளில் எனக்குக் கிடைத்த பெரும் பேறாக அதனைக் கருதுகின்றேன். அன்று ஐயா அவர்கள் ஆற்றிய உரை மரபுசார் அறிவின் செழுமையை நமது அடுத்த தலைமுறை உரியவாறு இனங்கண்டு கொள்வதற்குத் தக்கதொரு சான்றாக அமைந்தது.

தேசிகர் ஐயாவிடம் நிறைந்திருக்கும் அறிவுச் செல்வம் நமது அடுத்த தலைமுறைக்கு உரியவாறு கையளிக்கப்பட வேண்டும் என்பது எனது பெருவிருப்பம்; நீண்ட நாளைய ஆவல். என் விருப்பம், ஆர்வம் என்பவை நினைத்தபடி சீக்கிரத்தில் நிறைவுறுவதில்லை என்பது எனது 'ஜாதக விஷேஷம்' பல இடையூறுகளின் பின்னர் மனம் சலிப்படையப் போகின்ற சூழ் நிலையில்தான் வெற்றி கதவைத் தட்டுவதுண்டு. இதுவும் அப்படித்தான் போலும்.

1980களில் தேசிகர் ஐயா 'இலக்கண வித்தகர்' என்ற கௌரவ விருதைப் பெற்றிருந்த சூழலில் அவரைத் தமிழ்த்துறைக்கு அழைத்துத் தமிழ் மாணவர்களுக்கு அவர் மூலம் இலக்கணம், உரைமரபு என்பவற்றைக் கற்பிக்க வேண்டும் என அன்றைய தமிழ்த்துறைத் தலைவராகத் திகழ்ந்த பேராசிரியர் கா. சிவத்தம்பி விழைந்தார். அதுபற்றி என்னிடமும் தெரிவித்தார். இத்தொடர்பில் தேசிகர் ஐயாவுடன் நான் உரையாடியதும் எனக்கு நினைவில் உள்ளது. ஆனால் அன்று அவ்வெண்ணம் செயல்வடிவம் பெறவில்லை.

பின்னர், கடந்த ஐந்தாறு ஆண்டுகளில் இது தொடர்பாக நான் பலமுறை செயற்பட முனைந்தேன். நண்பர்களும் தேசிகர் ஐயாவின் மீது பெருமதிப்புக் கொண்டவர்களுமான பண்டிதர் சி. அப்புத்துரை, மயிலங்கூடலூர் பி. நடராசன், பண்டிதர் ந. கடம்பேசுவரன், க. உமாமகேசுவரன், கவிஞர் சோ. பத்மநாதன், வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்) விரிவுரையாளர் க. இரகுபரன் முதலிய பலர் இத்தொடர்பில் என்னைப் பலமுறை தூண்டி நின்றனர். யாழ். பல்கலைக்கழகத்தில் 'சேனாவரையர் உரைத்திறன்' பற்றித் தேசிகர் ஐயா நிகழ்த்திய (முற்சுட்டிய) உரையின் போதும் பலராலும் இவ்விடயம் பேசப்பட்டது. பின்னர் 1998 ஜூனில் நண்பர் கலாநிதி சி. சிவலிங்கராஜா அவர்களும் நானும் தேசிகர் ஐயாவின் இல்லம் சென்று இத்தொடர்பில் எம் விருப்பத்தை வெளியிட்டோம். அவரும் ஒப்புக் கொண்டார். ஆனால் இன்றுவரை எம் விருப்பம் செயல்வடிவம் எய்தவில்லை. தேசிகர் ஐயா அவர்கள் எம்முடன் இன்னும் பல்லாண்டுகள் வாழ்வார் என்பது எம்முடைய முழுமையான நம்பிக்கை. எனவே எனது ஜாதக விஷேப்படி இனியும்கூட எமது விருப்பம் நிறைவுற வாய்ப்பு உள்ளது.

தேசிகர் ஐயா அவர்களுடைய கூட்டுறவால் நான் எய்திய நலன்கள் பல. 'இலக்கிய – இலக்கண' மரபுகள் தொடர்பாக எழுந்த பல்வேறு ஐயங்களை அவர் எனக்குத் தீர்த்துள்ளார். நான் யாப்பியலிலே தனிக்கவனம் செலுத்திக் கலாநிதிப் பட்டத்துக்கான ஆய்வில் ஈடுபட்டிருந்த காலப்பகுதியில் (1981–85) அடிக்கடி அவரைச் சந்தித்து ஐயங்களைத் தீர்த்துக் கொண்டேன், சில புதிய விளக்கங்களையும் பெற்றேன். அவ்வகையில் ஒரு குருநாதருக்குரிய வணக்கத்தையும் நன்றியையும் அவருக்கு நான் செலுத்தி வருகின்றேன்.

தேசிகர் ஐயா அவர்களது தொடர்பு எனக்கு ஒரு மாபெரும் தன்நம்பிக்கையை வழங்கியுள்ளது. முள்ளியவளைக் கிராமச் சூழலின் புராண படன மரபு எனக்கு இளம் வயதில் 'இலக்கிய–இலக்கண' ஈடுபாட்டைத் தோற்றுவித்து வளர்த்தது. பல்கலைக்கழகத்தில் ஆய்வுமுறைக்கான ஒரு பார்வை (Vision) கிடைத்தது. யாழ்ப்பாணப் பிரதேசச் சூழலில் தேசிகர் ஐயாவுடன் நெருங்கிப் பழகக் கிடைத்த வாய்ப்பு எனக்குத் தெளிவையும் தன்னம்பிக்கையையும் தந்தது. (வேறு சில சான்றோர்களின் தொடர்பும் என் ஆளுமை விருத்திக்குத் துணை நின்றுள்ளன. அவர்களைப் பற்றிப் பிறிதொரு சந்தர்ப்பத்தில் எழுதலாம் என எண்ணியுள்ளேன்.)

தேசிகர் ஐயா அவர்களைப் பற்றிய என் இம்மனப் பதிவுக்குறிப்பை நிறைவு செய்யுமுன் ஒரு முக்கிய குறிப்பை மட்டும் முன்வைக்க விழைகின்றேன்.

தேசிகர் ஐயா அவர்களின் பார்வையும் எனது பார்வையும் ஒன்றல்ல; வெவ்வேறானவை; முரண்பட்டவையுங்கூட. அவர் மரபில் வலுவாகக் காலூன்றி நிற்பவர்; அதன் உயிர்ப்பான கூறுகளைத் திடமாகப் பற்றி நிற்பவர்; பண்டைச் சான்றோரை மெத்தப் படித்தவர்கள் எனச் சுட்டிப் போற்றும் பண்பினர். மரபிலே எனக்கும் நிறைய ஈடுபாடுள்ளது. மரபுக்கு உரிய மரியாதையை நானும் தருகிறேன். எனினும் மரபை விமர்சிப்பதன் ஊடாகவே அதற்கு உரிய மதிப்பை வழங்கலாம் என்பது எனது பார்வைத்தளம். மரபு என்ற பெயரில் எமது தலைமுறையிடம் வழங்கப்பட்டவை உண்மையிலே முழுமையுடையவைதானா என்பதும் அவற்றில் எந்த அளவுக்கு 'மனிதம்' நிறைவாக உள்ளது என்பதும் எனது பார்வையினூடாக முன்வைக்கப்படும் வினாக்கள். இவ்வினாக்களின் அடிப்படையில் விசாரணைகள் மேற்கொண்டு மாணவர்களை வழிநடத்துவது எனது கல்விசார் பணியாகிறது. இவ்வாறான அடிப்படைகளில் நாம் இருவரும் வேறுபடுகிறோம். இதனை நான் அறிவேன்; அவரும் அறிவார். ஆயினும் நாம் இருவரும் நெஞ்சுக்கு நெருக்கமாகவே உள்ளோம்.

எமது இந்நெருக்கத்தின் அடிப்படை நமது நிலைப்பாடுகளில் நாம் கொண்டுள்ள பற்றுறுதியாகும். எத்தகைய சூழ்நிலைகளிலும் நம் கொள்கைக்கு முரண்பட்டவற்றோடு சமரசம் செய்து கொள்ள முற்படாதவர்கள் நாம் இருவரும். தேசிகர் ஐயா அவர்கள் தமது அறிவையும் மனச்சான்றையும் தவிரப் பிற எதனையும் பெரிதாக மதிக்காத பண்பினர். தேசிகர் ஐயாவுடனும் அவரைப் போன்ற வேறுசில சான்றோர்களோடும் கொண்டுள்ள கூட்டுறவால் நானும் மேற்படி பண்பைப் பேணி வருகின்றேன். எனவேதான் நாம் இருவருமே நெஞ்சுக்கு நெருக்கமாகப் பழக முடிந்தது; முடிகின்றது. என் நெஞ்சுக்கு நெருக்கமாகத் தேசிகர் ஐயா அவர்கள் நிலைத்து நிற்பதன் அடிப்படை இதுவே.

சோதிடக் கண்ணாடியில் எங்கள் தேசிகர் ஐயா

சோதிடப் புலவர் ச. அழகரத்தினம்
பணிப்புலம், பண்டத்தரிப்பு.

இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகர் ஐயா அவர்களின் சதாபிஷேகம் குறித்து எமது நெஞ்சில் எழுகின்ற நினைவு அலைகளை அவர்தம் அன்பர்களும் இரசிகர்களும் அலசுமாறு இங்கு பரிமாறத் திருவருள் கூடியுள்ளது ஒரு நல்ல வாய்ப்பாகும்.

ஐயா அவர்கள் ஒரு பெரும் அறிவுச்சுடர், இச்சுடரில் ஒரு நெருப்புக் குச்சியைப் பற்ற வைத்து அதன் சுவாலையை வியாபிக்க முயல்வது போன்று இருக்கும் எம் முயற்சி. ஆகவே இந்தக் கைங்கர்யத்தின் பெரும் பகுதியை அவர்தம் மாணாக்கர்களாகிய இன்றைய அறிவறிந்த பெரியார்கள் செய்வார்களாக! இதில் எனது முயற்சி ஒரு புறனடையாக அமைவதே சாலவும் சிறப்பு.

எங்கள் தேசிகர் பெருந்தகைக்கு இறைவனின் தர்மக்ஷேத்திர அரங்கில் வழங்கப்பட்ட பாத்திரம் என்ன என்பதைச் சோதிடரீதியாக ஆய்வதே எமது முக்கிய கடன். ஏனெனில் யாம் எமது சோதிடப் பயிற்சியின் மூலமே ஐயா அவர்களின் தரிசனத்தைப் பெற்று அதன் பயனாகவே அவரிடம் சிவஞானபோதப் பேருரையின் விளக்கங்களை ஐயம் திரிபற ஓரளவு அறியப்பெற்று ஆனந்தித்தோம்.

தேசிகர் ஐயா 1915ம் ஆண்டு நவம்பர் மாதம் 10/11ம் திகதி புதன்கிழமை பின்னிரவு சிங்க லக்கினத்தில் தனுர் ராசியில் சந்திரன் பூராட நட்சத்தித்தில் கோசரிக்கும் வேளையில் ஆதிசைவக் குரு பரம்பரையில் அவதரித்தனர்.

இராசிகளில் சிங்க இராசி முதன்மையானதும் கௌரவம் மிக்கதுமாகிய ஒன்றாகும். கிரகங்களில் அதிமங்களகரமான சுபக்கிரகம் என்று அபி மானிக்கப்படுகின்ற குரு பூரண கும்பத்தைக் குறிக்கும் கும்ப ராசியில் நட்பாக இருந்து இலக்கினத்தையும் லக்கினாதிபதி சூரியனையும் தனது இருப்பு இராசியதிபதி சனியையும் திருஷ்டி செய்கிறார். குரு பார்வை கோடி பாப நிவாரணம் என்பர் சோதிட வல்லுநர். இங்கு குரு ஞான வெளிச்சத்தைச் சாதகருக்கு அள்ளி வழங்கி யுள்ளமை நோக்கற்பாலது.

தேனினும் இனிய தமிழ்மொழிக்கும் மனசுக்கும் காரகனாம் சந்திரன் குருவின் இராசியாகிய தனுவில் விவேகம், காதல், பூர்வ புண்ணியம் ஆகிய அம்சங்களைக் குறிக்கும் ஐந்தாம் பாவத்தில் நட்பாய் அமர்ந்திருப்பது இவருக்கு தமிழில் உள்ள காதலையும் அறிவில் விவேகத்தையும் இவை பூர்வ புண்ணியவசமாக வந்தமையையும் குறிக்கின்றது.

மோட்ச காரகன் கேது மோட்ச பாவமாகிய பன்னிரண்டாம் இராசியில் பாக்கியாதிபதி செவ்வாயுடன் இருப்பது இவருக்கு மேலும் பிறவியில்லா அமரத்துவத்தைக் காட்டுகிறது. நான்காம் இடத்தில் சுக்கிரன் திக்குப்பலம் பெற்றிருப்பது சாதகரின் இருதய பக்குவத்தை நன்கு காட்டுகிறது. இவர் குழந்தை உள்ளம் படைத்தவர் என்பது தெரிகிறது.

மூன்றாம் பாவத்தில் இரவிபுத யோகம் இருப்பதே இவரின் இலக்கண இலக்கிய வித்தகத்தின் சாட்சியாம்.

பதினொராம் பாவத்தில் சனி நட்பாய் அமர்ந்திருப்பது இவர் நல்லவர் தீயவர் பெரியவர் சிறியவர் என்ற பேதமை பாராது தன்மனசுக்கு விரோதமாக இல்லாதிருப்பின் யாருடனும் மிக சல்லாபமாகப் பழகும் பெற்றியையுடையவர் என்பதைப் புலப்படுத்துகிறது.

ஆறாம் இடத்து இராகு சட்ட இராகு; போட்டி போட்டு யாரும் இவரை வெற்றி கொள்ள முடியாது. இதுவே ஐயா அவர்களின் கிரக சாராம்சம்.

ஐயா அவர்கள் நமக்களித்த விவேகத்தின் பயனாக எல்லோர்க்கும் புதிராக இருக்கும் திருக்குறள் ஒன்றின் ஒரு விளக்கத்தை இங்கு காண்க.

குறள்,

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்"

விளக்கம்:

பொறாமை கொண்ட நெஞ்சம் படைத்தவனின் எழுச்சியும் செம்மையாக இருப்பவனின் கேடும் பற்றி நாம் ஊன்றி (ஆழ) சிந்தித்துப் பார்ப்போமாயின் இவை (குறிப்பிட்ட ஆக்கமும் கேடும்) சூன்யமாகும். (It is illusory. It comes to naught.) நினைக்க = சிந்தித்துப் பார்க்கின்; படும் = இல்லாமற் போய் விடும்.

மேலும் உலகத்தில் நடக்கும் கேடு கெடுமத திகளுக்கெல்லாம் அன்பும் அறமுமே துணையென்பதை பின்வரும் இரு குறள்களால் அறிந்து கொள்க.

1. *அறத்திற்கே அன்பு சார்பென்பர் அறியார்*
மறத்திற்கும் அஃதே துணை.
2. *மறந்தும் பிறன் கேடு சூழற்க சூழின்*
அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு.

உலகத்தில் அனுபவிக்கப்படுகின்ற கேடு கெடுமதிகள் எங்களுக்கு எங்கள் ஆணவ நோய் குணப்படுமாறு இறைவன் தருகின்ற மருந்துகள் எனக்கொள்வோமாக!

எங்கள் தமிழ்த் தாயின் தவப்புதல்வர் தேசிகர் ஐயா அவர்கள் நீடு வாழ்ந்து நாங்கள் எல்லோரும் நெறிப்பட்டு வாழும் வண்ணம் எங்களுக்கெல்லாம் மேலும் மேலும் அறிவு வெளிச்சத்தை வழங்குவாராக!

<table>
<tr><td>8</td><td>9</td><td>10</td><td>சனி</td></tr>
<tr><td>குரு</td><td colspan="2" rowspan="2">1915 – 11– 10, 11 ம் திகதி
புதன்கிழமை பின்னிரவு
பூராடம் 3ம் பாதம்
சிங்கலக்கினம்</td><td>கேது
செவ்</td></tr>
<tr><td>ராகு</td><td>லக்</td></tr>
<tr><td>சந்</td><td>சுக்</td><td>புத
சூரி</td><td>2</td></tr>
</table>

சீந்தனையால் மீக உயர்ந்தோய் வாழிய நீன் நாமம்!

புலவர் ம. பார்பதிநாதசிவம்

சிந்தனையால் மிகஉயர்ந்தோய் வாழியநின் நாமம்
சிறப்பனைத்தும் பொலிந்திடுவோய் வாழியநின் நாமம்
வந்தனைக்கே உரியகணே சையர்பாற் கற்ற
மாண்புடையோய் தவமுடையோய் வாழியநின் நாமம்

நமசிவாய தேசிகரே நமக்கருளும் குருவே
நற்றமிழின் பரப்புணர்ந்த வித்தகரே வாழ்க
எமதினிய தமிழ்த்தாய்க்குப் புரிந்தபணி யாலே
இவ்வுலகோர் புகழ்கின்ற சிறப்புடையோய் வாழி.

தொல்காப்பி யம்முதலாம் இலக்கணநூல் தெளிந்தோய்
தூயசங்கத் தமிழ்ப்பாட்டின் சிறப்பனைத்தும் அறிந்தோய்
பல்காப்பி யம்கற்றே நயம்உரைக்கும் திறத்தோய்
பண்புடையோய் அன்புடையோய் நமக்கருளும் குருவே

காலத்தை வென்றெழுந்தே கடற்பரப்பைக் கடந்தே
கற்றோரின் சிந்தனையில் நிலைத்தஇடம் பெற்றே
ஞாலத்தோர் தொழும்குறளை நன்காய்ந்து கற்றே
நமக்கெல்லாம் நயம்உரைக்கும் குருமணியே வாழ்க

அக்கால இலக்கியத்தும் ஆழ்ந்தபெரும் புலமை
அடுத்துவரும் இலக்கியத்தும் ஆழ்ந்தபெரும் புலமை
இக்கால இலக்கியத்தும் ஆழ்ந்தபெரும் புலமை
எய்திஉள்ள குருமணியே வாழியநின் நாமம்

எத்தனையோ மேடைகளில் இலக்கியங்கள் பொழிந்தாய்
எத்தனையோ ஆலயத்திற் சமயமழை பொழிந்தாய்
அத்தனையும் பொருள்உடைத்தாய் நயம்உடைத்தாய் அமைந்த
அற்புதத்தை என்னென்று நாம்வியந்து சொல்வோம்

எண்ணற்ற மாணவர்கள் நின்இடத்துக் கற்றே
எத்தனையோ பதவிகளில் வீற்றிருத்தல் அறிவோம்
திண்ணியநின் நெஞ்சுரத்தை நின்னிடத்தே கற்ற
நேர்மையினார் தம்மிடத்தும் சிறப்பாகக் கண்டோம்

புவிவியக்கும் திறமையினாய் போற்றும்உயர் குணத்தாய்
பொருள்விளங்கக் கற்பிக்கும் பேராற்றல் உடையாய்
கவிபடைப்பாய் கவிநயப்பாய் யாவினுமே வல்லோய்
கருதுதற்கும் காண்பதற்கும் கேட்பதற்கும் இனியோய்

பண்டிதனாய் கவிஞனுமாய் சான்றோனு மாகிப்
பாரோர்கள் போற்றுகின்ற ஆற்றல்எலாம் பெற்றோய்
கண்டுவக்கும் இன்சொல்லோய் கலைவல்லோய் வாழி
கற்றோரைக் கவர்கின்ற ஆற்றலினோய் வாழி

இலக்கணத்தில் தெளிவுடையோய் இலக்கியமும் தெளிந்தோய்
இன்சொல்லே மொழிகின்ற நாவுடையோய் வாழி
மலைக்குநிகர் மாண்புடையோய் என்றென்றும் வாழி,
மனத்திருக்கும் தெய்வமே வாழியபல் லாண்டே.

இலக்கண வித்தகர் பண்டிதர் இ. நமசிவாயம்

குரும்பசிட்டிக் கவிஞர் வி. கந்தவனம்
கனடா

பண்டிதர் இ. நமசிவாயம் அவர்கள் புறநானூறு கூறும் 'ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்'. அவரது புலமை அஃகி அகன்றது. அவரது உலகம் பகுத்தறிவு உலகம். அவரது சிந்தனை தனித்துவமானது.

அறிவு விசாரணையில் நான் அலைந்து திரிந்த காலத்தில் எனது சந்தேகங்களைத் தர்க்கரீதியாகத் தீர்த்து வைத்து என்னைத் தன் பக்கம் ஈர்த்தவர். இதனால் அவருடன் 'உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்' ஆகிய உறவு அடிக்கடி தொடரலாயிற்று.

அடிக்கடி தொடர்வதற்கு வேறு பல காரணங்களும் இருந்தன. நான் குரும்பசிட்டி; அவர் கட்டுவன்; அச்சுவேலி – தெல்லிப்பழை வீதியை மல்லாக வீதி தழுவும் இடம் கட்டுவன் சந்தி எனப்படும். அந்தச் சந்திக்கு அழகு செய்வது பண்டிதர் ஐயாவின் மாளிகை வீடு. அதற்கும் எனது வீட்டுக்கும் உள்ள இடைத்தூரத்தைக் கடப்பதற்கு எட்டு நிமிட துவிச்சக்கர வண்டி ஓட்டம் போதுமானது. சமூகப் பணிகள், ஆலோசனைச் சேவை, சொற்பொழிவுத் தொண்டு என்று இருவருமே நேரத்தோடு போராடுகின்றவர்களெனினும் சனி ஞாயிறுகளில் எப்படியாவது சந்தித்துக் கொள்வோம். அவர் வீமன்காமம் மகா வித்தியாலயத்தில் அதிபராக இருந்து ஓய்வு பெற்றதன் பின் சந்திப்புகளில் சிரமம் இருக்கவில்லை.

கண்டதும் முகமலர்ச்சியுடன் வெற்றிலைத் தட்டத்தை நீட்டுவார். எனக்கு வெற்றிலை போடும் பழக்கம் இல்லை. எனினும் அவர் நீட்டுவதை வாங்க வேண்டும் என்னும் மரியாதையில் வாங்கிக் கொண்டு இரண்டொரு பாக்குத்துண்டை எடுத்து வாயில் போட்டுக் கொள்வேன். அவர் வெற்றிலை போடுவது கண்களுக்கு விருந்தாக இருக்கும். வெற்றிலை போட்டபின் அவரது சிந்தனா சக்தி சிறகடிக்கத் தொடங்குவது போலத் தெரியும். அதனை உணர்ந்து கொண்டு நான் பேச்சை ஆரம்பிப்பேன்.

ஒருமுறை 'உண்மையே பேசி, ஒழுக்கத்தில் நின்று நேர்மையாக வாழ்பவர் பொதுவாக வாழ்க்கையில் கஷ்டப்படுவது ஏன்' என்று ஒரு கேள்வியைக் கேட்டேன். கேட்டு முடிந்ததுதான் தாமதம் 'பள்ளிக் கூடத்திலே படிப்பவருக்கத்தான் பரீட்சை வைப்பது வழக்கம்' என்று பதில் அளித்துவிட்டு வெற்றிலை வாயைக் குதப்பினார். கடவுள் தனது பள்ளிக்கூடத்தில் படிப்பவருக்கே சோதனை வைக்கிறார். சோதனை காலத்தில் நிதானம் தவறுகின்றவர் தாமாகவே கடவுளின் பள்ளிக் கூடத்தில் இருந்து விலகிக் கொள்கின்றனர்.

தொடர்ந்து தருமம், பாவ புண்ணிய விளைவுகள் பற்றி அன்று எனக்குக் கிடைத்த விருந்து இன்றும் சுவைத்துக்கொண்டே இருக்கின்றது.

ஒருவர் செய்யும் புண்ணியம் அவருக்கு மட்டுமல்லாது அவரது சந்ததிக்கும் நன்மை செய்யவல்லது. சந்ததிக்குச் சுவறும் அளவுக்குப் புண்ணியம் சக்தி வாய்ந்ததாக இருத்தல் வேண்டும். புண்ணியத்தின் சக்தியை விளக்க ஓர் உதாரணம் சொன்னார்.

ஓர் அறையில் இருந்து கொண்டு சங்கை மெதுவாக ஊதினால் நாதம் அந்த அறையில் மட்டும் கேட்கும். ஊன்றி ஊதினால் வீட்டிலுள்ள ஏனைய அறைகளுக்கும் கேட்கும். இன்னும் பலமாக ஊதினால் அயலட்டைகளுக்கும் கேட்கும். அது போலவே நாம் செய்யும் புண்ணியத்தின் அளவைப் பொறுத்தே அதன் சக்தியும் இருக்கும். சிறிதளவு புண்ணியமாயின் ஒரு சந்ததியுடனேயே இதன் சக்தி தீர்ந்து விடும். சக்தி மிகுந்த புண்ணியமெனின் அடுத்த அடுத்த சந்ததிகளுக்கும் தொடரும். புண்ணியத்தின் சக்தியை பெருஞ் செல்வத்துக்கும் ஒப்பிடலாம். ஒரு சந்ததியில் சேர்க்கும் பொருட் செல்வம் அடுத்த சந்ததிக்குப் பயன்பட வேண்டுமாயின் இரண்டு விடயங்களைச் செய்தல் வேண்டும். ஒன்று செல்வத்தைக் கண்டபடி செலவிடாது கட்டிக் காத்தல். இரண்டு, செலவிட்டால் அந்த அளவுக்கோ அதற்கு அதிகமாகவோ தொடர்ந்து செல்வத்தைத் தேடுதல்.

பொருட் செல்வத்தைப் போலவே புண்ணியமாகிய செல்வத்தையும் கட்டிக் காத்தல் வேண்டும். பாவங்களைச் செய்வதனால் தேடிவைத்த புண்ணியம் செலவாக நேரிடும். தகாத முறையில் நடப்பவர்கள் நல்ல வாழ்க்கை வாழ்வதற்குக் காரணம் அவர்களது முன்னோர் திரட்டி வைத்த புண்ணியமாகும். புண்ணியம் செலவாகியபின் தீவினை செயற்படத் தொடங்கும். நல்ல செய்கைகளின் விளைவே புண்ணியம். அதனால் புண்ணியத்தைத் திரட்ட வேண்டுமாயின் நல்லனவற்றைத் தொடர்ந்து செய்தல் வேண்டும்.

தொல்காப்பியத்துக்குப் பொருள் கண்ட வித்துவான் கணேசையர் அவர்களின் தலை மாணாக்கர் பண்டிதர் நமசிவாயம் அவர்கள். இலக்கண அறிவில் ஈடு இணையற்று விளங்குபவர். இதனை நன்கு உணர்ந்து பிற்காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் 'இலக்கண வித்தகர்' என்னும் பட்டத்தை அளித்து ஐயா அவர்களைக் கௌரவித்தது.

இத்தகைய வித்தகரிடம் ஏறத்தாழ ஒருவருடகாலமாகத் தொல்காப்பியம் பொருள திகாரத்தை நண்பர்கள் புலவர் பார்வதிநாதசிவம், க. உமாமகேஸ்வரன், ஆ. சிவநேசச்செல்வன், மயிலங்கூடலூர் பி. நடராசன் ஆகியோருடன் சேர்ந்து கற்கக் கிடைத்த வாய்ப்பை பெரும் பேறாகவே கருதிவருகின்றேன்.

காலத்தினால் தொன்மையான 'ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியம்' பெருமை வாய்ந்த பேரிலக்கண நூலாகவல்லாது, பழந்தமிழர் நாகரிகத்தின் கருவூலமாகவும் அமைகின்றது. பழந்தமிழர் வாழ்க்கை முறையை வகுத்துக் கூறுவது பொருளதிகாரம். பொருளதிகாரத்தை அரிதின் முயன்று தேடிப்பெற்று முதன் முதலாகப் பதிப்பித்த பெருமை ஈழத்து அறிஞர் ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களைச் சாரும். தமிழர் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் முறையாக அறியவிரும்புவோர் தொல்காப்பியத் தைத் தவறாது கற்றல் வேண்டும் என்பது பண்டிதர் ஐயா அவர்களின் கருத்தாக இருந்தது.

பண்டிதர் ஐயா அவர்கள் ஒரு பிறவி ஆசிரியர். எந்தக் கடும் பொருளையும் மிக எளிதாக்கி விளக்குவதில் வல்லவர். அவரது சொற்பொழிவுகளிலும் ஆசிரியத் தன்மை அதிகம் இருக்கும். அவர் தலைமைதாங்கும் பட்டிமன்றங்களில் நாம் மிகுந்த அவதானத்துடன் பேசுவோம். அவர் கருத்துக்களைக் கவனமாகக் கேட்போம். அவற்றில் நாம் கேட்டிராத புதுமைக் கருத்துக்கள் நிறையவே இருக்கும்.

பெரும் அறிவுக் களஞ்சியமாக விளங்கும் ஐயா அவர்கள் அதிகம் எழுதுவதில்லை. யாராவது கவிதையோ கட்டுரையோ கேட்டால் எழுதிக் கொடுப்பார். அவரது சிந்தனைகள் நிலைபெற வேண்டும் என்னும் பெருநோக்குடன் 'நீங்கள் ஏதாவது நூல் செய்ய வேண்டும்' என்றேன் ஒருநாள். வழக்கமான புன்முறுவலுடன் பதில் வந்தது: 'தமிழில் எல்லாம் இருக்கிறது. புதிதாக எழுத என்ன இருக்கிறது?'

சூரியோதயம் ஒவ்வொருநாளும் புதிது புதிதாகத் தோன்றுகிறது. மாலை அடி வானக் காட்சிகளும் அவ்வாறே. பூமரங்கள் தினமும் புதுப்புதுப் பூக்களைத் தருவதில்லையா? அவ்விதம் ஏதாவது ஆக்க வேண்டியது தானே என்று நினைத்தேனே தவிர அவரிடம் எதையும் கூறவில்லை. கூறியிருந்தால் அவர், 'பூக்கள் காலையில் பூத்து மாலையில் வாடுவன. தமிழில் உள்ளவை என்றுமே வாடாத பூக்கள்' என்று ஏதாவது பதில் சொல்லியிருப்பார். அவரின் விளக்கங்கள் தர்க்கரீதியானவை; கேட்பவருக்கு மனநிறைவை ஏற்படுத்தக்கூடியவை.

இருப்பினும் நான் விடவில்லை.

ஐயா அவர்கள் அசல் முருக பக்தன். கந்தசட்டி விரத காலத்தில் தமது இல்லத்தில் முருகப் பெருமானுக்கு விசேட பூசை செய்து கந்தசட்டி கவசத்தைத் தவறாது நெடுங்காலமாகவே ஓதி வருபவர். ஒருமுறை பூசை முடிவில் தமது கடைசி மகளைக் கந்த சட்டி கவசத்தை ஓதும்படி பணித்தார். மகள் புத்தகத்தை விரித்துப் படித்துச் செல்கையில்.....

வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க....

என்ற இடத்துக்கு வந்ததும் தொடராது நிறுத்திக் கொண்டார். பூசை அறையில் படு அமைதி. மகள் அமைதியை வியப்போசையால் கலைத்தாள்.

'அப்பா!'

'ம்.....'

'புத்தகத்தில் வேல் தெரிகிறது!'

எப்பொழுதோ நடந்த இச் சம்பவத்தை ஐயா அவர்கள் மிகுந்த பயபக்தியுடன் சொன்னதைக் கேட்டபோது உடம்பெல்லாம் புல்லரித்தது. 'முருகனைப் பற்றி நீங்கள் ஒரு நூலாக்க வேண்டும்' என்றேன். மிகக் குறுகிய காலத்துக்குள் 'சந்நிதிக் கந்தர் சதகம்' என்னும் நூலைப் பாடிமுடித்தார். செல்வச் சந்நிதி முருகன் தகுதி வாய்ந்த புலவனைக்கொண்டு பாடல் செய்வித்ததையிட்டு எனக்கு உள்ளார்ந்த மகிழ்ச்சி. நூலின் வெளியீட்டு விழா எனது தலைமையில் கட்டுவனில் நடைபெற்றது. ஞானோதய வித்தியாசாலை அதிபர் திரு . சி. நாகலிங்கம் அவர்கள் தலைமையிலான குழு ஒன்று விழா ஒழுங்குகளைச் சிறப்புறச் செய்திருந்தது.

அதிபர் நாகலிங்கம் அவர்கள் ஒப்பற்ற ஒழுக்க சீலர். பயனில சொல்லாத பண்பாளர். பண்டிதர் ஐயாவுடன் பல பொதுப் பணிகளில் ஈடுபட்டு உழைப்பவர். அவர்மீது பெரு மதிப்பு வைத்திருப்பவர். பண்டிதர் ஐயாவுக்கு சமாதான நீதவான் பதவியை அரசாங்கம் வழங்கியபோது பெரும் பாராட்டு விழா ஒன்றையும் அவருக்கு நடத்திய பெருமை அதிபர் அவர்களைச் சாரும்.

பாராட்டுவிழா பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் ஐயாவை நன்கு அறிந்தவர். ஐயா நெடுங்காலமாக ஆசிரியராகவும் பிற்காலத்தில் அதிபராகவும் பணிபுரிந்த வீமன்காமம் மகா வித்தியாலயம், அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்பதற்குமுன், சு . வி . யின் முகாமையில் இருந்தது என்பது குறிப்பிடத் தக்கது.

ஐயாஅவர்கள் பட்டம் பதவிகளை விரும்பாதவர். ஆனால், அவற்றைத் தேடி அலைபவர்களால் சங்கம் சபைகளில் ஏற்படும் போட்டி பூசல்களைத் தீர்த்து, சமாதானங்களை அவர் நிலைநாட்டிய சம்பவங்கள் ஏராளம். 'சமாதான நீதவான்' பட்டம் வருவதற்கு எவ்வளவோ காலத்திற்கு முன்பிருந்தே மக்கள் அவரை நீதவானாகக் கருதி அவர் தீர்ப்புகளுக்கு மதிப்பளித்து வந்திருக்கிறார்கள். அதற்கு முக்கிய காரணம் சமன் செய்து சீர்தூக்கும் அவரது திறமை. நீதி நியாயங்களைக் கண்டறியும் புத்திக் கூர்மை. பாரபட்சங்களைச் சுட்டெரிக்கும் நேர்மை. அவரது அறம் மனத்துக்கண் மாசிலனாய அறம்.

இத்தகைய சான்றோரின் பார்வை என் மீது விழுந்ததும் அவரே எனது ஞானகுருவானதும் யான் செய்த தவப்பயன்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே. (திருமந்திரம்)

என்றென்றும் வாழ்க!

பண்டிதர் சி. அப்புத்துரை

அதுபுலியென் றெண்ணிந ர்க் கம்புலியீ தென்னப்
புதுவழியி லக்கணநூல் போதித் – திதுதானா
வென்றெண்ண வைத்த இலக்கண வித்தகனார்
என்றென்றும் வாழ்க இனிது.

மாவித்து வான்கணேசர் மாண்பிஃதென் றோர்ந்தறிய
நீவித் தகனாகி நின்றனையால் – சேவித்தோம்
தெள்ளுதமிழ் வித்தகனே தேன்தமிழா யெம்மிடையே
கொள்ளையின்பங் கூடிடவாழ் வாய்.

இன்கனிச்சா றாமா றிலக்கணத்தை எம்போல்வார்
துன்பமிலா தேதெளிந்து துய்ப்பதற்கா – முன்வழியில்
ஆர்ந்தின் புறவைத்த அன்புருவாம் வித்தகனே
சார்ந்தெமது சிந்தைநிறைந் தாய்.

மொழித்திறத்து முட்டறுத்து முக்கணன்தாள் மூழ்க
வழிப்படுத்த வித்தகனாம் வள்ளல் – விழிப்புலனாய்
மேன்மையுற வென்சிந்தை மேவி யொளிர்ந்தனனால்
வான்நிறைந்து வாழ்க வளம்.

வாரித் தமிழ்வழங்கும் வண்மைநிறை வித்தகனார்
மாரி யெனச்செழுமை மாண்பொளிரும் – கூரியதாம்
நுண்ணறிவுச் செல்வமலி நூலறிவி னோடிணைந்தெம்
மெண்ணத் தினிக்கின்ற தே.

எந்த னுளத்தை இடமாகக் கொண்டென்றும்
சிந்தைத் தெளிவுதருஞ் சீரியனே – முந்தையுள
நூலறிவைக் கூரியதாம் நுண்ணறிவி னால்விளக்கும்
சீலமென்றும் வாழ்க சிறந்து.

தேசிகர் தந்த திருவந்தாதி

கவிஞர் சோ. பத்மநாதன்

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று சிறப்பும் வாய்க்கப் பெற்றது நகுலேஸ்வரம் என்று புகழ் பெற்ற கீரிமலை; ஈழத்தின் தொன்மைமிக்க ஆலயங்களுள் ஒன்று இங்குள்ளது. அங்கு கோயில் கொண்டருளிய நகுலேசர் மீது இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகர் ஒரு திருவந்தாதி பாடியிருக்கிறார்.

"பாரிற் சிறந்த தலம் நகுலேஸ்வரம் .....'
– இது தலமகிமை.

".....பண்ணமைந்த
"சீரிற் சிறந்த உரு நகுலேசர் திருவுருவே....."
இது மூர்த்தியின் கீர்த்தி.

".....தேரிற் சிறந்த நற் தீர்த்தம் நகுலை திகழருவி....."
– இது தீர்த்தச் சிறப்பு.

இம்மூன்று சிறப்புக்களையும் கண்டார், அநுபவித்தார் எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்.

கீரிமலைக் கேணியில், ஓரிடத்தில், நன்னீர் பளிங்கென ஊறிவரும் அற்புதத்தை அங்கு நீராடியோர் அறிவர். இந்நாள் இளம் பிள்ளைகள் அவ்வருமை அறியார். அவர்கள் கொடுத்து வைத்தது அவ்வளவே ! ஆயின் தேசிகர் கவிதையென்னும் ஊற்றில் குடைந்தாடும் வாய்ப்பு நமக்கெல்லாம் கிடைத்துள்ளது.

" அருவி பளிங்கெனக் கேணியி லூறி அலைகடலிற்
பெருகி இருநீர் மயமாம் இடத்தைப் பெரிதுவந்து
மருவிநீ ராடி நகுலையான் பாத மலர்பணியில்
ஒருவிடும் உள்ளம் உடலுயிர் மேவி உறுதுயரே"

உப்பு நீரும் நன்னீரும் கலக்கும் இடத்தில் நீராடி, நகுலேசர் பாதம் பணிபவர் உள்ளம், உடல், உயிர்– மூன்றையும் பற்றும் துயரங்கள் விலகி யோடும் என்கிறார் வித்தகர்.

உலக வாழ்க்கையில் நமக்கும் பலவிதமான தொடர்புகள் ஏற்படுகின்றன. உற்றார், உறவினர், அயலார் – இவர்கள் ஒருவகை; செல்வத்தினாலும் செல்வாக்காலும், கல்வியாலும் வகிக்கும் பதவிகளாலும் உயர்ந்தவர்கள் இன்னொருவகை; இவர்களுடைய அறிமுகத்தை, பெறுதற்கரிய பேறாகக் கருதிப் பேணுவோம். இவ்வகைத் 'தகுதிகள்' இல்லாதவர்களைத் தவிர்த்து விலகி நடந்து கொள்வோம். ஆராய்ந்து பார்த்தால் நம் நடத்தைக்குள் சுயநலம் இருப்பது காணலாம்.

"உற்றார் அயலார் உறவினர் செல்வத் துயர்ந்தவர்மற் றற்றார்
அதிகா ரிகளஃ திலார்பதத் தாரதற்றார் கற்றார் அறியார்
எனும்வேறு பாடுகள் கண்டலைவோம்..... !"

பேரும் புகழும் பதவியும் பெற்றவர்கள் வழியிற் சென்று நாமும் உயரும் முயற்சிகளில் ஈடுபடுகிறோம். உயர்பதவிகள் கைக்கெட்டியதும் தலைகால் புரியாமல்

நடந்துகொள்கிறோம். பதவி போனபின் யாரும் நம்மைத் திரும்பியும் பாரார் என்ற 'ஞானம்' ஏனோ நமக்கு ஏற்படுவதில்லை. உண்மை ஞானி, இந்த ஆரவாரங்களையும் ஏற்ற இறக்கங்களையும் கண்டு தனக்குள் சிரிக்கிறான் :

"உற்றேம் பெரும்புகழ் கல்விசெல் வத்தால் உயர்பதவி
பெற்றேம் அதிகா ரிகள்நாம் எனும்பெரும் பித்தமுற்றேம்
சற்றே வருகல கத்திவை பொய்யெனும் தன்மை கண்டோம்
எற்றே யுலகவாழ் வென்றுசொல் வோம்நகு லேஸ்வரனே"

அடியார்களுக்கு இறைவனுடைய திருவடியே பற்றுக்கோடு. உலகவாழ்வு வெம்மை மிக்கதொரு பாலை போலவும், அதனூடு நடந்து, களைத்து, அலுத்து வரும் ஒருவனுக்கு ஆறுதல் தரும் நிழல் ஆண்டவனுடைய திருவடி என்றும் உருவகிப்பது வழக்கம். "ஈசன் எந்தை இணையடி நீழல் – வீணை நாதமாய், மாலை மதியமாய்,வீசு தென்றலாய், இளவேனிலாய், பொய்கையாய்க் குளிர்ந்தது" என்பார் அப்பரடிகள். பிறவியைக் கடலாகவும், இறைவன் திருவடியை அக்கடலினின்றும் எம்மைக் கரையேற்றும் புணையாகவும் – தெப்பமாகவும் – உருவகிக்கும் மரபொன்றும் உண்டு.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்"

என்ற குறளுக்கு உரையெழுதிய பரிமேலழகர், "இறைவன் அடியென்னும் புணையைச் சேர்ந்தார் பிறவியாகிய பெரிய கடலை நீந்துவர்" என்றார்.

இம்மரபைப் பின்பற்றும் இலக்கண வித்தகர்,

"வேண்டும் உனதிரு தாட்புணை மேற்பிற விக்கடலைத்
தாண்டுவதற்கும்....."

என்று சொல்லி, ஆராமையால், வேறும் இரு காரணங்களையும் குறிப்பிடுகிறார் : ஒன்று, நிலத்தில் வீழ்ந்து தலையால் தீண்டுவதற்கு. மற்றையது, நம் ஆணவ வேரை அடியோடு அறுப்பதற்கு.

"வேண்டும் உனதிரு தாட்புணை மேற்பிற விக்கடலைத்
தாண்டு வதற்கும் வினையேம் விழுந்து தலையதனாற்
றீண்டு வதற்கும் அடியேம் அகந்தைவேர் தீர்வதற்கும்
தூண்டு விளக்கனை யாய்நகு லேஸ்வரச் சுந்தரனே "

இறைவனை இனிய பொருளாகச் சுவைத்து இன்புறுவது அடியார் இயல்பு. இறைவன் எத்துணை இனியன் எனக் கூறவந்த அப்பர் பெருமான்,

கனியினும் கட்டிபட்ட கரும்பினும்
தனி மலர்க் குழற் பாவை நல்லாரினும்
தனி முடி கவித்தாளும் அரசினும்
இனியன் தன்னடைந்தார்க் கிடைமருதனே

என்றார். வித்தகர் அவர்களோ,

"கண்டாய் அமுதாய்க் கனியாய் மதுவாய்க் கரும்பதுவாய்
கொண்டா தரித்து நிதம்புரி வாருளந் தூயவர்க்கு
தண்டேன் துளிமலர்த் தாளான் நகுலைத் தலத்தனெய்தி
அண்டா வினிப்பன் அவர்க்கினித் துன்பம் அடைகிலதே"

என அவ்வினிமையை விரித்துரைக்கிறார்.

இறைவன் இயல்புகளைச் சொல்லி இன்புறுவது, அவன் அருளில் திளைப்பது, அவன் திருக்கோயில் வலம் வருவது, பாடுவது, ஆடுவது எல்லாம் பக்தர் செயல்கள். இவை ஏதும் செய்யாமல், அவன் நாமங்களை உச்சரித்தே ஈடேற இயலும். பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மான் அவன் அல்லவா? நகுலேஸ்வர திருவந்தாதி நிறைவு நிலையில் இதையே செய்கிறது :

தற்பரா ஈசா பசுபதீ சம்பூ சதாசிவனே
புற்றர வப்பணி பூண்டவா நித்தா புராந்தகனே
கற்றவர் வாங்கிய வீரா பகவா கபாலியெனப்
பொற்பத மேத்த நகுலையான் நல்குவன் பூங்கழலே

நுண்மாண் நுழைபுலத் தரிசனம்

இ. ஜெயராஜ்
கம்பன் கழகம்.

நுண்மாண்நுழைபுலம்
மேடைகளிலும் கட்டுரைகளிலும்,
அறிஞர்களை உயர்த்தப் பயன்படுத்தப்படும்,
வெறும் அலங்காரத் தொடராகவே,
ஆரம்பத்தில் இத் தொடர் எனக்கு அறிமுகமாகியிருந்தது.
பொருள் விளங்காமலே இத்தொடரைப் பாவித்து,
பலரை நான் பாராட்டியிருக்கிறேன்.
நுண்மையான மாட்சிமைப்பட்ட நுழைந்து தேடும் அறிவு என,
இத்தொடருக்கான பொருளை பிற்காலத்தில் அறிந்தபோதும்,
அதன் முழுப்பெறுமதியையும் உணர்ந்திலேன்.
அத்தகு அறிவை நான் சந்திக்காமலே இருந்தது,
அதன் காரணமாக இருக்கலாம்.
பேராசான் இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகர் அவர்களை,
என்று சந்தித்தேனோ,
அன்றுதான் இத்தொடரின் முழுப்பெறுமதியையும் உணர்ந்தேன்.
இத்தொடரின் பெறுமதியை என்பதைவிட,
தமிழின் பெறுமதியை,
அறிவின் பெறுமதியை,
தேடலின் பெறுமதியை,
உணர்ந்தேன் எனல் சாலப்பொருத்தமாம்.

***

எளிமைப்படுத்துவதாகச் சொல்லி,
தமிழை,
மலினப்படுத்தி வரும் இக்காலத்தில்,
சிறுகதைகளும்,
நாவல்களும்,
மேலோட்டமான கட்டுரைகளுமே,
கல்வியாய் முடி சூட்டப்பட்டன.
"கனகா கதறிக்கதறி அழுதாள்" என்று,
எழுதப்படும் இன்றைய தமிழைப்படிக்க,
எவருக்கும் "நுண்மாண்நுழைபுலம்" ஒன்றும் அவசியமில்லை.
பத்திரிகைத் தமிழளவில்,
படிக்குந்தமிழும் வந்துவிட்ட இக்காலத்தில்,
அறிவுலகில்,
நுண்மாண்நுழைபுலம் எனும் தொடர்,
பெரும்பாலும் வழக்கொழிந்த தொடராயிற்று.
மேற்சொன்ன கல்விச் சூழலிலேயே வளர்ந்த எனக்கு,
இத்தொடர்பற்றி விளக்கம் இல்லாமற் போனதில்,
ஆச்சரியம் என்ன?

***

நலிந்து கிடந்த இத்தகு அறிவுச் சூழலில்,
தமிழ் மேல் உள்ள ஆர்வம் மட்டுமே தகுதியாக,
ஒருசில பெரியார்களின் தமிழினால் ஈர்க்கப்பட்டு,
மேடைகளில்,
ஓர் அறிஞன் போல,
நானும் உலாவந்த காலம் அது.
பல மேடைகளிலும் என்னைப் பேச அழைத்ததால்,
புதிது புதிதாய் பேச வேண்டிய தேவை.
அது படிக்கும் தேவையை உணர்த்திற்று.
பதவிகளால் இனங்காணப்பட்டு,
பேரறிஞர்களாக உலாவந்த பலரையும்,
அடிக்கடி மேடைகளில் சந்தித்ததால்,
அவர்களிடம் நான்பெற ஒன்றும் இல்லையென்பது,
தெளிவாகியிருந்தது.
படிக்கும் பசியோடு தக்க குருவைத் தேடித்திரிந்தேன்.
"பண்டிதர்கள் ஆழக்கற்றவர்கள்"
எனும் செய்தி சொல்லப்பட,
பண்டிதர்கள் சிலரைத் தேடிப் படிக்க முயன்றேன்.
அவர்களிடம் கல்வி இருந்தது.
ஆனால் எனக்குத் திருப்தி உண்டாகவில்லை.
காரணம் பெரும்பாலும் அவர்களிடம் இருந்தது,
வெறும் "மனனக்" கல்வியே.
அவர்களும்,
ஓதி இருந்தார்களே தவிர உணர்ந்திருக்கவில்லை.
சரியானதைத் தேடுவதைவிட,
பிழையைக் கண்டுபிடிப்பதிலேயே,
அவர்களுக்கு அதிக அக்கறை.
என் மனப்பசிக்கு அவர்களாலும் சோறிட முடியவில்லை.
என் தேடல் தொடர்ந்தது.

***

இந்நிலையில்,
கோண்டாவிலில் ஒரு கூட்டம்.
பல்கலைக்கழகம் பட்டமளித்த ஒரு பண்டிதருக்குப் பாராட்டு,
- அழைப்பிதழ் சொல்லிற்று.
பல்கலைக்கழகம் பண்டிதரைக் கௌரவிக்கிறதா?
"ஏதோ இருக்கவேண்டும்" என்று என் உணர்வு உந்த,
கூட்டம் சென்றேன்.
பாராட்டப் பெற்றவர் வித்தகர்.
வெள்ளை வேட்டி,
வெள்ளை நஃனல்,
வெள்ளைச் சால்வை,
வழமையான பண்டிதக்கோலம்.
அதே அச்சில் வார்க்கப்பட்டவர்தானோ?
- என் மனதில் ஐயம்.
அன்றைய அவர் பேச்சு,
அவ்வெண்ணத்தைத் தகர்த்தது.
தெளிந்த,
தேடுதலுடன் கூடிய சிந்தனை,
பொருட்டேவையை அளவாய்க் கொண்டு,
சொற்கள் பிறந்தன.

அவர் பேச்சில் வெற்றுச் சொற்கள் ஏதுமில்லை.
என்னையறியாமல் என் உள்ளம் பணிந்தது.
குரு தரிசனம் கிட்டிய சிலிர்ப்பில்,
என்னை மறந்தேன்.
அவரைச் சந்தித்த அவ்விநாடியில்,
என் மனஏக்கம் புரிந்து,
தேவதைகள் வாழ்த்தியிருக்கும் போலும்.
தொடர்ந்து அவரிடம் பாடங்கேட்கும் வாய்ப்புப் பெற்றேன்.
அது ஒரு தனிக் கதை.

***

மேற்சொன்ன சந்திப்பு நடந்து ஐந்து வருடங்களாகியும்,
அவரை அணுகவும், கற்கவும்,
வாய்ப்பில்லாமற் போயிற்று.
படிக்கும் ஆசை உந்த,
எப்படியும் அவரைப் பிடிப்பது என்ற துடிப்போடு,
எனது தேடல் தொடங்கியது.
"குற்றம் பொறுக்க மாட்டார்"
"அவரிடம் படிக்கவே ஆழமான அறிவு வேண்டும்".
"கடுமையான ஆசாரசீலர்".
இப்படிப் பல மிரட்டல்கள்.
இவை எல்லாவற்றையும் விட,
இலக்கணமே தெரியாத உனக்கு,
இலக்கணவித்தகரிடம் கல்வியா?
- கேள்வி மிரட்டியது.
"ஆசை வெட்கமறியாது" என்பது எத்தனை உண்மை!
இத்தனையையும் தாண்டி,
அவரைத் தேடிச் சென்றேன்.

***

மருதனார்மடம்,
கிராமத்தின் உட்புறத்தில் ஒரு வயல்வெளி.
அதை அண்டி ஒரு தென்னந்தோட்டம்.
அதனுள்ளே மிகச் சிறிய வைரவர் கோவில்.
அக்கோவிலின் சிறிய முற்றத்தில்,
ஒரு கிழிசற்பாய்.
அப்பாயில்,
அழுக்கு வேட்டி, நரைத்ததாடியுடன் கூடிய,
ஒரு வயோதிபர்,
இடுங்கிய கண்களால் ஒரு புத்தகத்தைப் படித்தபடி,
படுத்துக் கிடக்கிறார்.
"அதோ வித்தகர்!".
ஊர் கைகாட்ட,
மெல்ல அருகிற் சென்றேன்.
மேடைத் தோற்றத்திற்கும் நேரிற் பார்ப்பதற்கும் நிறைய வித்தியாசம்.
புத்தகங்களில் படித்த,
அறிவாளிகளைச் சூழ்ந்திருப்பதாய்ச் சொல்லப்படும்,
தேஜஸ் ஒன்றும் அப்போது என்கண்களில் பட்டதாய் ஞாபகமில்லை.
கிட்டத்தட்ட ஒரு பிச்சைக்காரத் தோற்றம்.
"இவரிடமா படிக்கப்போகிறாய்?"
பட்டுவேட்டித் தோற்றத்தை அறிஞ இலட்சணமாய்ப் பழகிய,

என் மனம் கேள்வி எழுப்புகிறது.
அவர் பேச்சின் தெளிவு ஞாபகம் வர,
அருகிற் சென்று அமர்கிறேன்.
என்னைக் கண்டதும் எழும்பி வெற்றிலையைத் துப்புகிறார்.
கையிலிருந்த புத்தகத்தை அவர் கீழே வைக்க,
அது,
காற்றில் பறந்து தன் பெயர் "சிவஞானமாபாடியம்" என்கிறது.
புத்தகத்தின் தோற்றத்திலிருந்த பழமையால்,
எனக்கு அதில் கவர்ச்சி இல்லை.
அதை அலட்சியம் செய்து அவர் பாதம் தொடுகிறேன்.
"வாரும் இரும்,
என்ன காரியம்?",
தளர்ந்த குரலில் கேள்வி பிறக்கிறது.
"உங்களிடம் படிக்க வேண்டும்".
நெளிந்தபடி சொல்கிறேன்.
"ஏன் ஏதாவது சோதனை எடுக்கப்போகிறீரோ?"
கேள்வியா, கிண்டலா புரியவில்லை.
"இல்லை படிக்க ஆசையாக இருக்கிறது."
- இது என் பதில்.
கூர்ந்து பார்க்கிறார்.
"இதற்கு முன் என்ன படிச்சிருக்கீறீர்?"
எதைச் சொல்ல,
ஏதாவது சொல்லப்போய், கேள்வி கேட்டாரானால்?
இவருக்குப் பதில் சொல்லுமளவுக்கு என்னிடம் படிப்பில்லை.
வெறுமை உணர்ந்த வெட்கத்தில் தலை குனிகிறது.
சிறிது நேரம் மௌனம்.
"கொஞ்ச நாள்பொறுத்துப் பிறகு பார்ப்போம்."
எனக்குள் எரிச்சல்.
"வேறென்ன?"
புறப்படு என்பதை நாகரிகமாய்ச் சொல்கிறார்.
சிவஞான முனிவருடன் பேசும் அவசரம் அவருக்கு
சோர்வுடன் விடை பெற்றேன்.
ஆனால் விடவில்லை.
இப்படியே தொடர்ந்து மூன்று சந்திப்புக்கள்.
என் பசி கொஞ்சம் புரிந்திருக்கும் போலும்.
மூன்றாம் சந்திப்பில்,
"பஞ்சாங்கத்தைக் கொண்டுவாரும்" என்றார்.
என் நட்சத்திரம் கேட்டு,
படுபட்சி இல்லாத நாட் குறித்து,
வகுப்புக்கு வாரும் என்றார்.
"என்ன படிக்கப்போகிறீர்?"
ஆழப்பார்வையுடன் கேள்வி பிறக்கிறது.
திருக்குறள்,
இராமாயணம்,
சங்கப்பாடல்கள்,
சிலப்பதிகாரம்,
இலக்கணம் என,
என் அறிவுப் பசியைக் காட்டுவதாய் நினைத்து,
பட்டியலை நீட்டுகிறேன்.

"முதலில் ஒன்றைப் படிப்போம்."
கன்னத்தில் அறைந்தாற்போற் பதில்.
என் அறியாமை உணர்ந்து நாணிச் சுருளுகிறேன்.
"திருக்குறளைக் கொண்டுவாரும்,"
குறித்த நாளில்,
திருக்குறளுடன் அவர் முன் உட்காருகிறேன்.
நான் போனபோது காலை எட்டுமணி.
எப்படியும் இன்று பத்து அதிகாரமாவது படித்து முடித்துவிடவேண்டும்,
என்று எனக்குள் எண்ணம்.
"அகர முதல எழுத்தெல்லாம்"
முதற் குறளின் அரையடிக்கு,
விளக்கம் சொல்லத் தொடங்குகிறார்.
திடீரென பசிக்குமாற் போல் ஓர் உணர்வு,
நேரத்தைப் பார்த்தால் மதியம் இரண்டு மணி.
இன்னும் அந்த அரையடிக்கான விளக்கம் முடிந்தபாடில்லை.
மேலோட்டமாகப் படித்துப் பழகிய எனக்கு,
அன்று ஒரு புதிய அனுபவம்.
இனி என்னால் ஏற்க முடியாது என,
மூளை பிடிவாதம் பிடிக்க,
மெல்ல நெளிகிறேன்.
"உமக்குப்பசி வந்திட்டுதுபோல,"
கேள்வியோடு பார்க்கிறார்.
உண்மையைச் சொல்ல முடியாமல் அசடுவழியச் சிரிக்கிறேன்.
"எனக்கு எண்ணங்கள் வந்திட்டுது நிற்பாட்ட முடியவில்லை.
இன்னும் கொஞ்ச நேரம் கேளும்"- தொடர்கிறார்.
ஒரு வழியாக மூன்று மணிக்கு,
அரையடிக்கான விளக்கமும் முடியாத நிலையில்,
வகுப்பு முடிகிறது.
களைப்பு, வியப்பு, பிரமிப்பு, திகைப்பு என,
பல உணர்ச்சிகளும் தாக்க,
அந்த நிமிடம்,
நான் நானாக இல்லை.
"நுண்மாண்நுழைபுலம்" என்ற தொடரின் விளக்கத்தை,
முதன்முதல் உணர்ந்தேன்.
தமிழ் இவ்வளவு ஆழமானதா?
தமிழை இப்படியும் படிக்க முடியுமா?
தமிழை இப்படியும் படித்தவர்கள் இருக்கிறார்களா?
என் மனதில் உளைச்சல்.
தமிழறிவைப் பொறுத்தவரை,
என்னுள்,
பாலமை நீங்கிப்பருவமடைந்த ஓர் உணர்வு.
என் இனத்தின் பெருமை,
என் மொழியின் பெருமை,
என் சந்ததியின் பெருமை,
ஏன் எனது பெருமை கூட
அன்று என்னுள் விசுவரூபம் எடுத்தது.
அதன் பின் மூன்று ஆண்டுகள் அவரிடம்,
படிக்கும் வாய்ப்புக் கிட்டிற்று.
அந்த மகானின் தொடர்பில்,
எனக்கு கிடைத்த தரிசனங்கள் பல,

உபதேசங்கள் பல,
தெளிந்த உண்மைகள் பல,
அறிவின் விஸ்வரூபற்தரிசனம் கிட்டியது.
'நுண்மாண்நுழைபுலம்' எனும் தொடரின் முழுவிளக்கத்தை,
அவர் அறிவிற் கண்டு,
சிலிர்த்தேன்.

***

கட்டுரைத் தலைப்பின்படி,
இந்த இடத்தில் நான் கட்டுரையை முடிக்க வேண்டும்.
ஆனால் இன்னும் சில விடயங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது.
'மற்றொன்று விரித்தல்'
எனும் குற்றம் இருக்கிறது.
ஐயாவே இப்படிச் சொல்லப்போகிறார்.
எனக்குக் கவலையில்லை.
எண்ணங்கள் முடியாமல் கட்டுரை எப்படி முடியும்.
ஆகவே இன்னும் சில சொல்ல வேண்டும்.
வேண்டுமானால் இனிச் சொல்பவற்றை,
கடலைக்காரி சுண்டினால் அளந்த பிறகு,
உபரியாய்ப்போடும்,
ஒரு கைப்பிடிக்கடலைபோல,
ஆய்வாளர்களின் கட்டுரைகளில் வரும்,
பின் இணைப்புச் செய்திகள் போலக் கொண்டு
ஏற்றருள்க.

***

தமிழ்க்கல்வியைப் பொறுத்தவரை,
ஐயாவுக்குச் சில தனி அபிப்பிராயங்கள் உண்டு.
அவற்றுட் சில,

ஒரு நூலைத் தெளிவாய் விளங்கினால்,
பின் எல்லா நூலையும் தானாய் விளங்கலாம்.

அதிகம் படித்தால் பிறகு பேசப்பயப்படவேண்டி வரும்.
புத்தகங்களில் அவாப்படத்தேவையில்லை.

உண்மையாய்ப் படிக்க விரும்பினால்
புத்தகம் தானே கைக்கு வரும்.

தெரிந்தவர் மூலம் அணுகி,
பெரிய நூல்களோடு நட்புண்டாக்க வேண்டும்.

ஒன்றை விளங்குவதற்கு முதல்
கேள்வி கேட்கக்கூடாது.

இவை அவர் எனக்கு உபதேசித்தவை.
ஆரம்பத்தில் இக்கூற்றுக்கள் நகைப்புத் தந்தன.
நாளடைவில் அவற்றின் உண்மையை உணர்ந்து,
வியந்து சிலிர்த்தேன்.
ஏதேனும் கேள்வி கேட்டால்,
கேள்வி கேட்டு வாய்மூடுமுன்,
பதில் சொல்லத் தொடங்குவதுதான்,
அறிவு என்று நினைக்கும் இன்றைய உலகில்,
கேள்வியை உள்வாங்கி,
நிதானித்துப் பதில் சொல்வதும்,
தேவை ஏற்படின்,
"நாளைக்கு வாரும் பதில் சொல்கிறேன்"
என்று சொல்வதும்,
அவரிடம் எனக்கு வியப்பூட்டிய விடயங்கள்.
ஒரு நாள் என் கேள்விக்கு நாளை பதில் கூறுவதாகச் சொல்கிறார்.
அடுத்த நாள் நான் வகுப்புக்குச் செல்ல சிறிது தாமதம்.
ஒழுங்கை தாண்டி வீதியில் வந்து நிற்கிறார்.
என்னைக் கண்டதும் முகத்தில் சூரியன்.
"நீர் இன்றைக்கு வராமல் விட்டுவிடுவீரோ என்று பயந்திட்டன்.
நீர் கேட்ட கேள்விக்கு பதிலை விளங்கிட்டன்.
வாரும்" என்று சொல்லத் தொடங்குகிறார்.
சொல்லி முடித்ததும் அவர் முகத்தில் ஓர் நிம்மதி.
"இனி நீர் போவதென்றால் போகலாம்".
மாணவனின் ஐயம் தீர்த்துவிட்ட திருப்தி அவர் முகத்தில்.
இந்தக்காலத்தில் இப்படியொரு மனிதரா!
வியக்கும் என் நெஞ்சம்.
ஒரு கேள்வியைக் கேட்டால்,
அதற்குப் பதில் காட்டி,
பின் அப்பதிலையே கேள்வியாக்கி,
அதன் பதில் காட்டி,
மீண்டும் அதனைக் கேள்வியாக்கி.....
இப்படியே உள்நுழைந்து செல்லும் அவர் அறிவு கண்டு,
நான் கொண்ட திகைப்பை,
வார்த்தைகளுள் அடக்கமுடியாது.
பொருள் பற்றிய சிந்தனையே இன்றி,
அறிவே வாழ்வாக,
அறிவே தேவையாக,
அறிவே உணவாக,
அறிவே சுவாசமாக வாழும்,
மனிதருள் மனிதரல்லாத மனிதர் அவர்.
'திருவேறு தெள்ளியராதல்வேறு' எனும் குறளடிக்கு,
தன் வாழ்வால் விளக்கம் தந்தார்.
உலகத்தில் ஒட்டாத வாழ்வு.
இ.ந்து எங்ஙனம் சாத்தியம்?
கேள்வி பிறக்கும்.
தமிழ் தந்த தெளிவு.
கூடவே பதிலும் பிறக்கும்.
இப்படி ஒருசிலரேனும் வாழப்பழகினால்தான்,
அறிவுலகம் நிலைக்கும்.
இன்றைய பொருளுலகிற்கு,
ஐயா ஒரு அருங்காட்சிப்பொருள்.

தமிழைப்போலவே ஐயாவையும்,
விளங்க விளங்க,
விளங்காமையின் விரிவே விளங்குகிறது.
கல்வி உலகில் கால் வைக்க விரும்பும் இளைஞர்க்கு,
அவர் வாழ்வே ஒரு செய்தி,
விதியால் வந்த அறிவு.
அறிவால் வந்த அடக்கம்.
அடக்கத்தால் வாய்த்த குரு.
குருமேல் கொண்ட பக்தி,
இறை நம்பிக்கை,
இவை விரிந்த இவர் அறிவின் வேர்கள்.
ஐயா, ஐயா என,
தன் குருவான கணேசையர் மீது அவர் காட்டும் பக்தி அளப்பரியது.
'ஐயாவின் அறிவோடு ஒப்பிடும்போது,
எங்கள் அறிவு ஒரு துரும்பு" என,
அவர் சொல்லும்போது,
நான் என் அறிவுநிலை எண்ணி நாணுவேன்.
என்னுடைய,
அறிவின்மை கண்டபின்னும்,
'என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி,
வண்ணப்பணித்து என்னை வா என்ற வான் கருணை',
எண்ணி வியப்பேன்.
பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டுக்கிடக்கையிலும்,
கொழும்பில் இருந்து நான் தொலைபேசியில் கேட்ட கேள்விக்கு,
பதில் கூறிப் பத்துக்கடிதங்கள்,
அவரிடமிருந்து அடுத்தடுத்து வருகின்றன.
இவரது கடவுள் நம்பிக்கை புதுமையானது,
அன்றாடம் 'மானதபூஜை.'
"பண்டிதர் கோயில்களுக்கு அதிகம் போவதில்லை"
மற்றவர்களின் இத்தகு கூற்றுக்குச் சிரிப்பே பதிலாகும்.
சாதாரண தோட்டக்காரனோடும்,
அவன் நிலையில் நின்று,
அவர் பேசுவது கண்டு வியப்பேன்.
அப்பேச்சிலும் உண்மை இருக்கும்.
'நான்' எனும் தருக்கு அவர் வார்தைகளில் என்றும் இராது.
விநயம் சம்பந்தமான வித்தை.
இவரிடமிருந்து என்னால் பெறமுடியாமல் போனவற்றுள் இதுவும் ஒன்று.
மொத்தத்தில்,
என் அறிவு கடந்து நிற்கும் அற்புதர் இவர்.
இப்பொழுது என் வேண்டுதல் எல்லாம்,
"அடுத்த பிறவியிலாவது,
இவரிடம் இருக்கும் அறிவு முழுவதையும்,
அறியும் அறிவோடு என்னைப் படைத்துவிடு" என்பதே.
எண்ணங்கள் தொடர்கின்றன.
விரிவஞ்சி விடுகிறேன்.
முடிவுரையாய்,
இவரைச் சந்தித்ததால்,
இவர்மேல் கொண்ட பக்தியைவிட,
தமிழ் இலக்கியங்கள் மேலும்,
தமிழ்ப் புலவர்கள் மேலும்,
தமிழின் மேலும்,
உண்டான பக்தி அதிகமாயிற்று.
அவர் இட்ட அறிவுப் பிச்சையால்,
அறிவுலகில்,
இன்று நானும் ஒரு செல்வன் போல்.....

***

புகலிடம் பிறிது தேரோம்!

கரவைக் கவிஞன் மன்னவன் மு. கந்தப்பு

1. இன்றுள்ள நிலையில் தேர்ந்த இலக்கண அறிவு வேண்டின்
சென்றிடு நமசி வாய தேசிகன் ஐந்தெ ழுத்தன்
பொன்றிகழ் அறிஞன் பக்கம் புகலிடம் பிறிது தேரோம்
சென்றிடின் உயர்வே சேர்ப்பன் சேவடி பரவு வோமே.

2. கம்பனின் கழகத் தோர்கள் கல்வியில் தாகம் கொண்டு
உம்பரின் ஒழுக்கம் கல்வி உயரறி வாளன் என்ற
இம்பரில் இற்றை நாளில் இலக்கணம் முழுமை பெற்ற
எம்பெருந் தவத்தன் பாதம் எய்தினர் எழுச்சி பெற்றார்.

3. சுட்டபால் பருகு பூனை தொடர்ந்துபால் காணின் அஞ்சி
எட்டியே ஓடு மாபோல் எங்களிற் பலபேர் செம்மைச்
சட்டமா மிலக்க ணத்தைக் கற்றிடத் தயங்கு கின்றோம்
கிட்டினால் ஐயன் தன்னைக் கிடைக்குமஃ தமுத மாக.

4. எழுத்துமுன் னாய பஞ்ச லக்கணத் தெய்தி நின்ற
விழுப்பொரு ளுணர வேண்டின் விழைந்தளி கருணை யாளன்
தொழத்தகு தோற்றத் தன்பால் சுவைதரு தேன்க லந்த
பழத்தையே ஊட்டு வானப் பண்பன்பல் லாண்டு வாழ்க.

5. அன்பொடு பொறுமை சாந்தம் அமைந்தொரு வடிவ மான
இன்புரு நமசி வாய எம்குரு பல்லாண் டிங்ஙன்
தன்பணி செய்ய ஈசன் தண்ணரு ளீக என்ன
அன்னவன் பதம்ப ணிந்தோம் அகிலமும் வாழ்க வாழ்க.

சோதிபோற் சுடர்

கல்வயல் வே. குமாரசாமி

'வித்தகர் ஐயா' என்று
விரும்பிவாய் நிறையச் சொல்லும்
தத்துவ ஞானி எங்கள்
தலைமுறை நிமிர வைத்த
சத்திய புருஷர், சங்கத்
தமிழ்தொல்காப் பியத்தைக் கற்க
வைத்தவர் நமசி வாய
தேசிகர் பச்சை உண்மை.

❖❖❖

நெறிநின்ற சான்றோருள் நிறைஞான
வளர்பிறையாய் அறிவின் ஊற்றாய்
பெறுகின்ற அரியதவப் பெரும்பேறாய்ப்
பேணருள்சேர் வைதீ கத்தின்
செறிவொன்றிச் சிந்தனைப்பூ மணங்கமழும்
செழுமைமிகு சீர்சால் செம்மை
உறைகின்ற வித்தகர்இ நமசிவாய
தேசிகனார் ஒளிவி ளக்காம்.

❖❖❖

சாந்தி தவழும் இனியமுகம்
தரும்புன் சிரிப்பும் அன்பினையே
ஏந்தி நிற்கும் ஞானத்தின்
இணையில் ஒளியை இருவிழியின்
காந்தி காட்டும் திருநீறு
கனிய வைக்கும் நுதலில்அருள்
சோந்தை கொள்ளும் எம்செல்வம்
நமசி வாய தேசிகனார்.

❖❖❖

குருமணியாய் மணிக் குருவாய்க் குணத்தின் குன்றாய்
குலம் பிறப்பின் சிறப்பனைத்தும் ஒருங்கு பெற்று
வருமணியாய் யாம்வாழ ஒளிநி றைந்து
வளர்மொழியின் எழில்விழுதாய்த், தமிழாய் எங்கள்
திருமணியாய் உள்ளத்தே தெளிவாய் நிற்கும்

தேனனைய நகராதி ஐந்தாய் அன்புக்
கொருமணியாய் நடுநிற்கும் ஐயா வாழ
உமைபாகன் அருட்பாதம் நெஞ்சில் வைப்போம்.

❖❖❖

நாடிய பொருளை நன்னெறி முறையில்
நலஞ் செயும் வண்ணமாய் நமக்குக்
கூடிய வரையில் கொடுத்திடுங் கீர்த்தி
கொள்கையில் கொண்டுள உறைப்பு
நாடிய நமக்கும் நல்கிட உயர்ந்தோம்
நயமெலாம் மலிந்திட ஐயா
ஆடிய பாதன் ஆனைமா முகவன்
அருளொடும் வாழிபல் லாண்டே.

❖❖❖

நுணுகி ஆயும் நுண்ணறிவும்
நுட்பம் விளைக்கும் நூலறிவும்
அணுகி னோர்க்கோ உற்றபெரும்
ஆன்ம நேய மேலறிவும்
பணியும், இனிய பண்புகளும்
பல்கிக் கலந்த பலசீர்த்தி
அணியும் எழில்சேர் மணிவிளக்காம்
ஐயா நமசி வாயம்அறி.

❖❖❖

ஞான விழியும் நயந்த மொழியும் நலன்பயக்கும்
தேனை யனைய சுவையும் தெளிவிற் தினகரனாய்
ஆன வரைக்கும் அருளும் அறனும் அனைவருக்கும்
வானே நிகர்க்க வழங்கும் வித்தகர் வாழியவே.

❖❖❖

ஆழ அகலம் அறிய முடியாத
நீழல் நமசிவாயம் ஐயாஆம் வாழுகிற
தத்துவத்தை வாழ்ந்து தலைநிற்கும் மேதைஇவ்
வித்தகர் எங்கள் விழி!

❖❖❖

சொல்லெ டுத்துத் தொடுக்கும் அழகிடைத்
தோய்ந்த உட்பொருள் தோற்ற மனைத்தையும்
நல்ல வாறொரு தாயினைப் போலவே
நயம்ப லப்பெற ; ஞாலம் நுகர்ந்திடச்
சொல்ல வல்லநற் றூமொழி யாளர், சொல்
சோதி போற்சுடர் வீசிடும் ; அத்திறன்
எல்லை காண முடிந்திடு மோ ; இதை
ஏழை யேனும் இயம்பிடல் ஆவதோ !

❖❖❖

தமிழ் வாழத் தான் வாழ்பவர்

மாவை. சோ. சேனாதிராசா (பா. உ)

பண்டிதர் நமசிவாயம் ஐயா அவர்களுக்குத் தமிழ்நிலத்தில் பாராட்டு நிகழ்ச்சி என்றறிந்து மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன்.

நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம், தெல்லிப்பளை வீமன்காமம் ஆங்கில பாடசாலையில் தமிழ் ஆசிரியராயிருந்து பணிபுரிந்த பண்டிதர் ஐயாவிடம் 8ஆம் வகுப்பிலிருந்து தமிழ் கற்றதனால் அவரின் மாணவனாக இருந்திருக்கிறேன் என்பதிலும் அளவற்ற மகிழ்ச்சி.

வீமன்காமம் ஆங்கிலப் பாடசாலை, இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து கல்விக்குப் பெருந்தொண்டாற்றிய திரு. சுப்பிரமணியம் அவர்களின் கல்வி நிறுவனங்களில் ஒன்றாக விளங்கியது. அதன் முகாமையாளராக அன்னார் மகன் யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களே நீண்டகாலம் இருந்து நிர்வாகித்து வந்தார்.

இப்பாடசாலையில் இருபத்தைந்து ஆண்டுகள் தமிழ்ப்பணி புரிந்தமைக்காகப் பண்டிதர் ஐயா அவர்களுக்கு வெள்ளிவிழா எடுத்துச் சிறப்பித்தமை நினைவுக்கு வருகிறது. அவ்விழாவில் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களும் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களும் சிறப்புரை ஆற்றினார்கள். நானும் அவ்விழாவில் உரையாற்றினேன். பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் பண்டிதர் ஐயாவிடம் இலக்கணப் பாடம் கற்றதாக அந்நிகழ்ச்சியில் குறிப்பிட்டமையும் அவ்விழா நிகழ்ச்சியும் பசுமையாக நெஞ்சில் நிற்கிறது.

அந்நாளில் குருவிடம் மாணவர் சென்று கல்வி கற்றனர். பின்னர் பள்ளிக்கூடங்களுக்கு ஆசிரியர்கள் சென்று கல்வி கற்பித்தனர். நமசிவாயம் ஐயா அவர்களும் ஆசிரியராய் இருந்த காலத்திலேயே, அக்காலத்தில் இலக்கிய இலக்கண வித்தகராயிருந்த மகாவித்துவான் கணேசையரிடம் சென்று கல்விகற்றுப் பண்டிதர் பட்டம் பெற்றார் என அறிந்தேன்.

பண்டிதர் ஐயா அவர்கள் வீமன்காமம் பாடசாலையில் எமக்குத் தமிழ் ஆசிரியராயிருந்தார். கம்பராமாயணத்தின் சில பகுதிகள், நளவெண்பாவுடன் இலக்கணமும் எமக்குப் பாடங்களாக இருந்தன. வெள்ளை வேட்டி, வெள்ளை 'நஷனல்' மேலாடை, வெள்ளைச் சால்வை, நெற்றியில் விபூதி, சந்தனப்பொட்டு, கறுத்த அடர்த்தியான கட்டைமுடி, வாய் நிறைய பாக்குவெற்றிலைச் சுவையினால் சிவந்த உதடுகள், ஒளிபாயும் விழிகளாய் அன்றாடம் அலங்காரமாய் இருப்பார்

பண்டிதர் ஐயா. காலில் செருப்போ, கையில் மணிக்கூடோ இருந்ததைப் பார்த்ததில்லை. ஆனால் ஒவ்வொரு நாளும் நேரகாலத்திற்குத் துவிச்சக்கர வண்டியில் பள்ளிக்கூடம் வந்து சேர்ந்துவிடுவார்.

தமிழ் அறிவின் மிடுக்கும் ஆனால் அடக்கமும், நிறைவும் அவரிடமிருந்தன. தமிழ்ப் பற்றுடன் சைவப் பண்பும், தமிழினப்பற்றும் மிகுந்திருந்தன என்று கூறுவேன்.

பண்டிதர் ஐயா அவர்கள் கற்பிக்க வகுப்புக்கு வந்துவிட்டால், மாணவரிடம் அமைதி தவழும். பாடம் கற்பிக்கத் தொடங்கிவிட்டால் வகுப்புக் கலகலப்பாகிவிடும். பண்டிதர் ஐயாவிடம் இலக்கியப்பாடம் படித்த மாண்பு இப்பொழுதும் மனதில் திரைப்படமாய்க் காட்சி தருகிறது. கம்பராமாயணப் பாடல்களைப் பாடுவார் – இசை படப்பாடுவார். பொருள் புரியும்படி பாடல் வரிகளைப் பிரித்துப் படிப்பார் இலக்கண விளக்கங்களையும் விபரிப்பார். இராமாயண கதாபாத்திரங்களாகவே மாறி அத்தனை அபிநயத்தோடும் ஆலாபரணமாக விளக்கி வைப்பார். இவர் கற்பித்தலில் நயம், சுவை, தெளிவு இருக்கும். மாணவர் மனதில் பாடம் பதியும். பாடம் கற்பிக்கத் தொடங்கிவிட்டால் நாடகமொன்றின் காட்சிகளை உயிரோவியமாய்க் காண்பதுபோன்ற உணர்வுபூர்வமான அனுபவத்தை எட்டிவிடும்படி வகுப்பை ஆக்கிவிடுவார். அப்பொழுது அவர்தான் பிரதான கதாபாத்திரமாயிருப்பார்.

கற்பிப்பதில் நேர்மை, தூய்மை, அர்ப்பணம், ஆளுமை, பொறுமை அவரிடமிருந்தன. அந்நாளில் ஒரு தமிழ்ச் சங்கமாய் விளக்கினார் எனலாம்.

1970களில் கட்டுவன் சந்திப்பபக்கமாய் இருந்த பண்டிதர் ஐயாவின் இல்லத்திற்கும் நான் செல்வதுண்டு. இன்று அவர் இல்லமென்ன, தம்மனையெல்லாம் இழந்து, ஊர் இழந்து அகதிகளாய் அழிவின் எல்லையிலும், மரணத்தின் பிடியிலும் எங்கெங்கோ அலையும் அவலநிலையில் தமிழினம்; பண்டிதர் ஐயாவும் இதற்கு விதிவிலக்கல்லவே.

பண்டிதர் ஐயா, தந்தை செல்வநாயகம் அவர்களிடம் மிகுந்த அன்பும் அபிமானமும் கொண்டிருந்தார். அவர் வாழ்ந்த ஊர் மக்களும் அவ்வாறேயிருந்தனர். 1972இல் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்திற்கு அன்றைய அரசு இயக்குநர் அவையை அறிவித்தது. அந்த அவைக்கு ஐவர் இயக்குநர்களாக மக்களால் தெரிவு செய்யப்படவேண்டி இருந்தது. அந்த ஐவரும் எமது அணியினராகவே தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அந்த ஐவரில் பண்டிதர் ஐயாவும் ஒரு மூத்த உறுப்பினராய், நான் அவர் மாணவனாய் இளவலாய் இருந்த பொழுதும் என் முதன்மைப் பணிகளுக்கு மிகுந்த ஆதரவும், ஊக்கமும் வழங்கி தம் பணி புரிந்தார். ஆனால் 1973 மார்ச் திங்கள் 09 ஆம் நாள் அன்றைய அரசின் அரசியலமைப்புக்கு எதிரான கிளர்ச்சியில் நான் கைது செய்யப்பட்டு நீண்டகாலம் சிறையில் தள்ளப்பட்டதால் பண்டிதர் ஐயாவுடன் தொடர்ந்தும் பணியாற்ற முடியாமற் போய்விட்டது. அதன் பின் 1980களில் ஓரிருமுறை சந்தித்ததுண்டு. அவ்வேளைகளில் வாழ்த்தி, ஆசிகூறி விடைதருவார்.

அந்நாளில் குருவுக்கு, ஆசிரியருக்கு மாணவர்களும் மக்களும் மிகுந்த மதிப்பளித்தனர். அதிலும் பண்டிதர் ஐயாவுக்குப் பாராட்டு நிகழ்ச்சியினை எடுத்து வாழ்த்தும் நன்றி மறவாப் பண்புடை மக்கள் இன்றும் வாழ்வதால் ஐயா மாண்புறும் நிலையை நிலைநாட்டிவிட்டனர். இந்நிகழ்ச்சி மிகுந்த உவகை தருகின்றது.

தமிழ் வாழ, தமிழ் ஆள, தமிழ் நிலத்தில் தமிழன் தன்னாட்சி செய்ய, பண்டிதர் ஐயாவின் தமிழ்த் தொண்டும் உயிராய்,உணவாய், உரமாய் அவர்தம் மாணவரிடத்திலும், மக்களிடத்திலும் வாழ்கின்றது. தன்முதுமையிலும் தமிழ் வாழத்தான் பண்டிதர் ஐயாவும் வாழ்கின்றார். என் இதயம் நிறைந்த வாழ்த்துக்களை அவர் பாதத்தில் சமர்ப்பிக்கின்றேன். அவர் வாழும் பொழுதே வாழ்த்துவதும், தமிழைப் போற்றுவதும் தமிழர் கடமை எனச் சிந்தித்த பண்பார் பெரியோரையும் வாழ்க என வாழ்த்துகின்றேன்.

எங்களது ஊரும் பண்டிதர் ஐயாவும்

கலாநிதி என். சண்முகலிங்கன்,
தலைவர், அரசஅறிவியல் – சமூகவியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

'பண்டிதர் ஐயாவுக்குப் பாராட்டு' என்றதும் நெஞ்சிலே எல்லையற்ற மகிழ்ச்சி. எங்கள் ஊருக்கு மீள்வது போன்ற ஓர் எழுச்சி.

> 'கட்டுவன் சந்தியை மையமாகக் கொண்டு அதைச் சூழ்ந்திருக்கின்ற, மயிலிட்டி தெற்கில் குரும்பசிட்டி தவிர்ந்த பகுதியும், கட்குவன் வடபகுதியும், வர்த்தலை விளானும் இன சனக் கலப்பு முதலிய ஏதுக்களால் ஓர் ஊராகவே கருதப்பட்டு வருவன'

'என் அப்பாவின் கதை' தொடக்கவுரையில் எங்கள் ஊருக்கு பண்டிதர் ஐயா தந்த வரையறை அது.

கட்டுவன் சந்தியை அண்டிய சைவமடம். அங்கேதான் ஐயாவின் வீடு – 'கமலாசனம்'. பக்கலில் தான் எங்கள் 'நகுலகிரி'; பக்கலில் என்றால் ஒரேவேலி. அந்தக் கிளுவம் வேலி குறுவழி ஊடாகத்தான் எங்கள் உறவின் தொடக்கம்.

ஐயாவின் 'நாச்சார் வீட்டு' முற்றத்தில் பரப்பிய மணலில் பாலச்சந்திரனும் (ஐயாவின் மூத்த மகன்) நானும் ஆனா ஆவன்னா எழுதத் தொடங்கியது முதல், பின் ஐயா எழுதித்தந்த பேச்சுக்களை மனனம் செய்து மேடைகளில் பரிசுகள் பெற்றதுஎன ஐயாவுடனான என் உறவுக்களங்கள் விரியும்.

என் இளமைப் பருவ சமூக மயமாக்கலில் ஐயாவின் ஆளுமைவீச்சு அதிகமாகவே என்னில் விழுந்ததனை இன்று மீளத் திரும்பிப்பார்க்கையில் நான் உணர்வதுண்டு. 'நானும் ஒரு பண்டிதனாக வேண்டும்; நல்ல அவைக்கு தலைமை தாங்க வேண்டும்' என்றெல்லாம் அன்றே எனக்குள் முளைவிடும் ஆசைகள்.

சைவ மடத்தில் நான் வளர்ந்த அந்த நாள் நினைவுகளிடை அதே புலத்தில் எங்கள் ஊர் வளர்ந்த கதை எல்லாம் மீள உயிர்க்கும்.

1922 நவம்பர் 23ஆம் திகதி, இந்தச் சைவ மட புறச்சாரில் கூடிய 'பாலர் ஞானோதய சங்கம்' என்ற இளைஞர் அமைப்பே பின்னாளில் எங்கள் ஊர்கண்ட வளர்ச்சிகளுக்கும் எழுச்சிகளுக்கும் நிலைக் களனாகும். ஆளுக்கு மூன்று வீதம் உறுப்புரிமைப் பணம் கொடுத்தும், வீடு தோறும் பனங்கட்டிக் குட்டான்களில் பிடியரிசி சேகரித்தும் சங்கம் வளர்த்த – சங்கத்தினால் வளர்ந்த எங்கள் ஊரின் கதை இன்று வரலாறாகும்; தொல்லியலுமாகலாம்.

இந்தச் சங்கம் தொடங்கியவேளை எட்டு ஒன்பது வயதுச் சிறுவனாக ஆர்வமுடன் அதன் செயற்பாடுகளை அருகிருந்து அவதானித்த நினைவுகளை மீளவும் என் அப்பாவின் கதையில் பண்டிதர் ஐயா பதிந்து நிற்பார்.

ஊர் வளர்ந்தது, அந்தச் சிறுவனும் வளர்ந்தான்.

ஓரிரு சங்கங்கள்தவிர ஊரின் சங்கங்களுக்கெல்லாம் தலைவராக பண்டிதர் இ. நமசிவாயம் ஐயா; எங்களது காலத்துத் தரிசனமாய் வாய்க்கும். மிஞ்சிய சங்கங்களின் தலைவராக, அனைத்தினதும் காரியதரிசி அல்லது தனாதிகாரியாக ஐயாவுடன் எப் பொழுதும் என் அப்பா இணைந்திருப்பார். இவர்களின் சமூக வாழ்வின் கனிகளை அருகிருந்து காணவும் சுவைக்கவும் கிடைத்தது ஒரு பாக்கியமே.

இந்த இடத்தில் பாலர் ஞானோதய சங்கத்தின் முதல் தலைவராக மட்டுமன்றி, எங்கள் ஊரின் தலைமைச் சான்றோனாக சமூக வாழ்வுக்கு வழிகாட்டிய, என் பெரிய தந்தையார் (ஐயா என்றுதான் நாங்கள்அழைப்போம்.) அமரர் க. பொன்னம்பலம் அவர்களும் அவரோடு இசைந்த ஊர்ப் பெருமக்களும் எனக்குள் விஸ்வரூப தரிசனமாய்.....

எங்கள் ஊர் உறங்கியதே கிடையாது என்பேன். அலவத்தை வீரபத்திரசுவாமி, துறட்டையிட்டி வைரவர், மாவடி வைரவர், வளமாரி வைரவர், தண்ணித்தாழ்வு வைரவர், கறண்டகுளம் ஐயனார், மருதடி கம்மில் குளம் விநாயகர், காசி அம்மன் என ஊர் நிறைந்த ஆலயங்களின் மணி ஓசை..... திருவிழாக்காலம், கலைமலி காலம். எல்லாக் கோயில்களிலும் பெரும்பாலும் முதல் திருவிழாச் சொற்பொழிவு எங்கள் பண்டிதர் ஐயாவின தாகத்தானிருக்கும்.

திருவள்ளுவர் விழா, பாரதி விழா, கணேசையர் விழா என சான்றோர்க்கு ஊரெடுக்கும் விழாக்களில் எல்லாம் ஐயாதான் நிரந்தரத் தலைமை. இந்த விழாக்களின் கருத்தரங்குகள், விவதா மேடைகள் அனைத்தும் அவரின் ஆழமான, நிதானமான புலமையில், தலைமையில் ஒளிவிடும்.

தேசத்தின் புலமையாளர்கள் எல்லோரும் அழைத்துக் கௌரவிக்கப்படுவார்கள்; கலைஞர்கள் எல்லோருக்கும் களம் அமைத்துத் தரப்படும். வீரபத்திரர் கோயில் செம்பாட்டு மணற்பரப்பில் இருந்தபடி தட்சணாமூர்த்தியின் மேளச் சமாவிலிருந்து எங்களூர் வசந்தன் நாடகம் வரை விடியவிடிய அலைத்த அந்த நாட்கள் நினைவுகளில் கனக்கும்.

நேற்றொரு பொழுதில், பாரம்பரிய கலைகளை பேணும் ஒரு மேடையில் எங்கள் ஊர் வசந்தனைக் காணும் பாக்கியம் கிடைக்கும்.

செக்காஞ் சடை குலுங்க திரிசூல வேலிலங்க
செகசோதி தேரில் வாற தாரண்ணே
முக்கணாதி கற்பகப் பேர் முதல்வன் முன்னாகவர
மூர்த்தி வீரபத்ரன் வாறார் காண்மினே.

என வடமராட்சி கலை அமைப்பு ஒன்று எங்கள் விசுவப் புலவரின் வசந்தனை ஆடும். இன்று சங்கீத பாடநூலில் இடம் பிடித்து எங்கள் வசந்தன் தேசிய சொத்தான சங்கதி தெரிய வரும். ஏற்கனவே அண்ணன் என். கே. பரராஜசிங்கத்துடன் இணைந்து வானொலி வழி உலகுக்கு நாம் அதனைத் தந்ததும் நினைவு வரும்.

வசந்தன் மட்டுமா, இப்ப எங்கள் ஊரும் தேசியமாய், சர்வதேசியமாய், எங்கும் வியாபகமாய்....

எங்கள் ஊர் என்பது வெறுமனே இழப்பீட்டுத் தொகைக் கணக்குக்கான 'இத்தனை சதுரமைல்' பரப்பல்ல; எத்தனையோ வேர்களும் விழுதுகளும் நிறைந்த பண்பட்ட பிரதேசம்; பண்பாட்டின் பிரதேசம்.

இந்தப் பண்பாட்டின் உயர்தனி ஆளுமையாய் எங்களுக்கு வாய்த்த பண்டிதர் ஐயாவுக்குத்தான் இன்று பாராட்டு விழா.

இன்னமும் காக்கப்பட்டுள்ள எங்கள் ஊர் ஆத்மாவுக்கு சாட்சியாக இந்த விழா அமையும். இந்த விழாவோடு,

வசந்தத்தை வரவேற்கும்
எங்களூர் வசந்தன்
வளம் சொல்லி
நாளை தொடங்கும்;
பனை மரமாய் நெஞ்சம்
பெருமையில் நிமிரும்;
பண்பாட்டின் அர்த்தங்கள் புரியும்.

இலக்கணவித்தகர் இ. நமசிவாயதேசிகர் வரலாறு

க. கதிர்காமர்
வருத்தலைவிளான்

இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன் பின்னாக, சுழிபுரம் செட்டிகளுட்சிலர் தீட்சையால் உயர்ந்து சைவமரபினராக, ஆலய பூசையின் பொருட்டு, திருநெல்வேலி, கட்டுவன், குரும்பசிட்டி, அல்வாய் வடக்கு, மந்திகை முதலிய இடங்களிற் குடியேறினர். கட்டுவனில் ஐயனார் கோயிலடியே, அவர்கள் குடியேறிய இடம். காலப்போக்கில், அவர்களில், வீ. அப்பாக்குட்டி ஐயர் என்பவர், மயிலிட்டி தெற்கில் குடியேறினார். அவ்வூர்கள் இரண்டையும் பிரிப்பது தெல்லிப்பழை அச்சுவேலித் தெருவே. குடியேறிய இடம் மயிலிட்டிக் கோயிற்பற்று, வருத்தலை விழான் இறை, துறட்டையிட்டி எனப்படும். அப்பாக்குட்டி ஐயரின் மூத்தமகன் தாமோதரம்பிள்ளை ஐயர் எட்டுத் தொட்டில் வைத்துக் கமஞ் செய்வித்தவர். உப்புக்குத்தகை எடுத்து வியாபாரஞ் செய்தவர். செல்வம், செல்வாக்குகளோடு வாழ்ந்தவர். தாமையரென்று அழைக்கப்பட்டவர். அவர், கட்டுவன் சந்தியை ஒட்டி வடக்காக நாற்பது பரப்புக்குமேல் காணி வாங்கி, கல்வீடுகளைக்காணவரிய, நூற்றைம்பது வருடங்களுக்கு முற்பிற்பட்டதாகிய அக்காலத்து, ஒன்பது அறைகளும் இரு விறாந்தைகளும் கொண்ட கல்வீடும், அதனருகே சமயலுபயோகத்துக்காக ஆறு அறைகள் கொண்ட மண்வீடும் அமைத்து, வசதியாக வாழ்ந்தவர். அவ் வீட்டுச் சுற்றாடல் உப்புமடம், சைவமடம் என்று அழைக்கப்பட்டது. அவ்வீடு இன்று யுத்தத்தால் தரைமட்டமாகியுள்ளது.

தாமையருக்கு நான்கு ஆண்பிள்ளைகள் பிறந்தனர். அந்நால்வரும் அவ்வொரு வீட்டையே பாகம் பிரித்து வாழிடமாகச் கொண்டனர். அவர்களில் மூத்தவர் இராமையர் எனப்படும் இராமசாமி ஐயர். அவர் ஆரம்பத்தில் மயிலிட்டி வேலுப்பிள்ளைச் சட்டம்பியாரிடம் கற்றனர். பின் வித்துவசிரோமணி கணேசையரின் ஒன்று விட்டதமயன் கதிர்காமையரிடம், புன்னாலைக் கட்டுவனில் அக்கதிர்காமையரின் தம்பியாருடனும், காசிவாசி செந்தினாதையரின் தம்பியார் சிவசம்புநாதையர் என்பவருடனும் சேர்ந்து கற்றனர். இனிமையான குரலும், பல இராகப் பயிற்சியும் உடைய இவர் புராணபடனம் வல்லவர். செய்த தொழில், கமமும் வியாபாரமுமே. மங்கல, அமங்கல நிகழ்வுகளில் அருட்பா ஓதல், வேண்டும் உதவிகள் செய்தல், மக்களிட துப் பிணக்குக்களைத் தீர்த்து வைத்தல், விவாகம் பொருத்தல், வேண்டின் தானே விவாகக் கிரியைகளை நடத்தி வைத்தல், ஆசாரம் கடைப்பிடித்தல் முதலியவற்றால் ஊராரின் அன்பையும் மதிப்பையும் பெற்றவர்.

இவர், மந்திகை அம்மன் கோயில் உரிமையாளரும் குருக்களுமாகிய சபாபதிக் குருக்களுக்கு, அவர்தம்மனைவி பூரணம்மா வயிற்றிற் பிறந்த மூத்தமகளாகிய பருவதம்மாவை விவாகஞ் செய்தனர். இவர்களுக்கு மூவர் பெண்களும் இருவர் ஆண்களுமாக ஐவர் மக்கள் பிறந்தனர். இந்த ஐவரில் இளையவரே இவ்வரலாற்றுக்குரிய நமசிவாயம்ஐயர் ஆவர். மூத்தவராகிய தாமோரம்பிள்ளை ஐயர், அரசாங்க பாடசாலைகள் பலவற்றில் தலைமையாசிரியராகச் சேவை செய்து, இளைப்பாறி அமரராகி விட்டார்.

வித்தகர் அவர்கள் ஆங்கிலத் திகதி 12. 11.1915க்குச் சரியான, இராட்சத வருடம், ஐப்பசி மாதம், இருபத்தாறாந்திகதி, வியாழக்கிழமை இரவு, கார்த்திகை நட்சத்திரம் மதியந்திரும்பிய வேளையில், அதாவது 1.30 மணியளவில், சிங்க இலக்கினத்தில், பூராடம் 4ம் காலில், சுக்கிர தசையில், இன்னும் 3 வருடம் 12 நாள் நிற்கப் பிறந்தனர். நோய் நொடியற்ற பலமான பூரித்த தேகமும் மன உற்சாகமும் உடைய இவர், தாய், தந்தை, சகோதரர், சிறியதாய்தந்தையர், ஒன்று விட்ட அண்ணன் தம்பியர், அக்கையர் சூழலில் ஓடியாடி விளையாடிக் குழப்படி செய்து மகிழ்வாக வாழ்ந்தனர். இனத்தவர்களும், அயலவர்களும் இவரிடத்தில் விருப்பமுள்ளவர்களாக இருந்தனர்.

ஐந்து வயதானபோது இவர் குரும்பசிட்டி விநாயகர் ஆலயத்தில், மகாதேவ வித்தியாசாலைத் தலைமையாசிரியர் பொன் பரமானந்தர் உடனிருக்க, வேதாரணியம் சொக்கநாதக் குருக்களால் வித்தியாரம்பஞ் செய்து வைக்கப்பட்டனர். உடனே அருகிலுள்ள மகாதேவ வித்தியாசாலையில் சேர்க்கப்பட்டனர். அவ்வித்தியாசாலை இப்போது பொன். பரமானந்த வித்தியாசாலை என வழங்குகின்றது. அவ்வித்தியாசாலை வித்தகர் அவர்களின் வீட்டிலிருந்து ஒன்றரை மைல் தூரத்திலுள்ளது. பாடசாலை போகும் வழி, பெரும்பாலும் வடலியும் பனையும் நிறைந்தது. தொடக்கத்திற் பாடசாலைக்கு உற்சாகமாக, பலமாணக்கருடன் சேர்ந்து போய் வந்த வித்தகருக்கு, நடைக்கஷ்டம், ஓடியாடி விளையாடும் சுதந்தரமின்மை, பாடசாலையில் நடக்கும் தண்டனை மிகுதி முதலியவற்றாற் பாடசாலை செல்வதில் வெறுப்பு உண்டாகி விட்டது. ஒருநாள் இவரின் அண்ணன் முறையினர் ஒருவரே, இவரை வடலிக் கூடல் மருங்கிலுள்ள ஒரு இலந்தை மரநிழலிற் கூட்டிச் சென்று, "இந்தப் பழங்களைப் பொறுக்கிச் சாப்பிட்டு விளையாடிவிட்டுப், பள்ளிப்பிள்ளைகள் வீடுபோகும் போது கூடிக் கொண்டு வீடுபோ" என்று விட்டுவிட்டுத் தான் பாடசாலை சென்று விட்டார். இந்த விளையாட்டுத் தொடர்ந்தது. இது வித்தகர் அவர்களின் பெற்றோருக்கும் பாடசாலை ஆசிரியர்களுக்கும் தெரிந்து விட்டது. வீட்டார் கூட்டிச் சென்று விட்டும், பாடசாலையார் மாணாக்கர்களை விட்டுக் கூப்பிடுவித்தும் படிப்பும் நடந்தது. பாடசாலைக்குப் போகாமை, அதற்குத் தண்டனை, தண்டனைக்குப் பயந்து பாடசாலைக்குப் போகாமை என்பன, தொடர்ந்தன.

பாடசாலைக்குப் போகாது மறைந்து ஒரிடத்தில் இருத்தலை வெறுத்த வித்தகர் அவர்கள், இயற்கையைப் படிக்க, அணில், கிளி முதலிய பிராணிகளைத் தேடல், வெளியிடம், கடற்கரை, ஆலயம் முதலியவற்றைத் தரிசித்தல், உயரப்பாய்ச்சலாக வடலிபாய்தல், நீளப்பாய்ச்சலாக பற்றை பாய்தல், தோட்டக் கிணறு பாய்தல், தோட்டப் பயனில், பச்சையாக எவை உண்ணத்தக்கன எனக் கண்டறிதல் என்பன முதலியவாகப் பாடத்திட்டத்தை வரவரக் கூட்டினார். ஆனால் பாடசாலை வகுப்பேற்றச் சோதனைகளுக்குத் தவறாது சென்று விடுவார். சித்தியும் அடைந்து விடுவார். பரீட்சையில் தவறியதுகிடையாது. இடையில் வித்துவ சிரோமணி கணேசையர் மனைவி அன்னலட்சுமி அம்மாவிடம் சம்ஸ்கிருதம் படித்திருக்கின்றார். எப்படியோ 5ம் வகுப்புச் சித்தியெய்தியதும் மேல் வகுப்புக்களின் தண்டனை மிகுதி நோக்கி ஒரு நாளும் பாடசாலை போக மாட்டேன் என்று எதிர்த்து நின்று கொண்டார். தந்தையார் இவரின் கடும் எதிர்ப்பைக் கண்டு, கோபங் கொண்டு, குடநீரால் அபிஷேகஞ் செய்து, "இனி நீ படிக்க வேண்டாம். எனக்குக் கமத்தில் உதவியாயிரு" என்று கூறி விட்டுவிட்டார். வித்தகருக்கு மெத்த மகிழ்ச்சி, இரண்டு வருடம் நான்கு மாதம் இங்ஙனம் சென்றது.

இந்த இடைக்காலத்தில் தந்தையார் கேள்விப்படி சுன்னாகம் பிராசீன பாடசாலையில் சம்ஸ்கிருதம் படிக்க உடன்பட்டு, அங்கே ஆறுமாதம் சென்றார். அப்பாடசாலைக்குத் தலைமையாசிரியர் வித்துவ சிரோமணி சி. கணேசையர் அவர்கள். வித்தகர் அவர்கள் அங்கே சம்ஸ்கிருதம் கற்றுக் கொண்டாரோ இல்லையோ புகையிரத நிலையம், சந்தை முதலியனபற்றி அறிந்து கொண்டார். மூன்றரை மைல் நடந்து போய் வருவதில் களைப்பெய்தி அங்கும் போவதை விட்டு விட்டார். இடையில் சிறிது காலம் தன் தந்தையிடம் நிகண்டு சிறிது படித்திருக்கிறார்.

மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாசாலை ஆரம்பமானது. அப்பாடசாலையில் அரிவரி வகுப்பு, குப்பிளான் இராமு உபாத்தியாயரால் படிப்பிக்கப்பட்டது. அவர்தான் வித்தகருக்கு 2ம் வகுப்புப் படிப்பித்த

உபாத்தியார். அந்தத் தொடர்பில் வித்தகரைச் சட்டாம்பிள்ளை ஆக்கிக் கொண்டார். அவ்வித்தியாசாலையில் படிப்படியாக வகுப்புக்கள் உயர்தப்பட்டன. 6ம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டபோது, வித்தகரும் அவ்வகுப்பில் சேர்ந்து கொண்டார். ஏனோ அதுவும் நீடிக்கவில்லை. அங்கு 6ம் வகுப்பிற் படிக்கும்போது ஆசிரியராயிருந்தவர் இராசா உபத்தியார் என வழங்கும் அப்பாக்குட்டி வாத்தியார். அவர் நடக்க இயலாதவர். படிப்பிற் கெட்டிக்காரர். அவர் கற்பித்தலில் வித்தகருக்கு விருப்பு ஏற்பட்டிருந்தது. அதுவும் கணக்கில். அக்காலத்து 6ம் வகுப்புக் கணக்குப் புத்தகம் கடுமையான பலவித கணக்குக்களைக் கொண்டிருந்தது. பாடசாலை செல்லாது விட்டபோதும், வித்தகர் அக்கணக்குக்கள் எல்லாவற்றையும் செய்து முடிக்க வேண்டுமென்று விருப்பப்பட்டார். இராசாவாத்தியார் வீடு வித்தகரின் வீட்டுக்கு மூன்றாவது வீடு. அவரின் உதவிபெற்று இவர் கணிதப்பயிற்சியில் ஈடுபட்டார். ஆசிரியர் கடியன என்று விட்ட கணக்குக்களையும் இவர் விடாது பல நாள் முயன்று செய்து காட்டி வந்தார். அதனாற் கெட்டிக்காரனென்று அவ்வாசிரியரினால் புகழப்பட்டார். அக்காலத்தில் ஊரிற் கடின கணக்குக்களை முடியுமானால் செய்து காட்டும்படி கூறினார். வித்தகர் எக் கணக்குக்களையும் செய்து காட்டி விடுவார். அதனால் ஊரிலும் கெட்டிக்காரர் என்று இவர் மதிக்கப்பட்டார்.

இராசாவாத்தியார் போலவே அவர் தமயன் சரவணமுத்துவும் நடக்க இயலாதவர். குந்தி இருந்து அரக்குபவர்; சாதுரியமானவர். இருவரும் விதவைச் சகோதரி ஒருவரின் ஆதரவுடன் ஒரே வீட்டில் வசித்தனர். அவர்கள் உதவிக்காகவும், மன ஆறுதலுக்காகவும் ஊரார் தங்கள் வீட்டில் வந்திருந்து தங்கிச் செல்வதை விரும்பினர். அதனால் அவ்வீட்டில் கதை வாசிப்பு, புதினம் பேசல், கணக்கு நொடி கேட்டல், கடதாசி விளையாடல் முதலியன நடக்க இடங் கொடுத்திருந்தனர். வித்தகர் பாடசாலைக்குச் செல்லாது விட்டாலும் இக்கல்லூரிக்குப் போவதை ஒரு நாளும் கைவிட்டதில்லை. பாரதக்கட்டு, இராமாயணம், நளன் கதை என்பன வாசித்தல், கேட்டல், மறுமொழி சொல்லல் என்பனவற்றிற் பயிற்சி பெற்றார். கடதாசி விளையாட்டிலும் பல விளையாட்டுக்களையும் அறிந்திருந்தார். அக்கல்லூரியில் வித்தகருக்கு மதிப்பிருந்தது.

ஒருநாள் நல்ல மழைபெய்தது. அன்று அவ்வீட்டுக்கு வந்தவர் அநேகர். வித்தகரின் தந்தையாரும் வந்திருந்தார். தெல்லிப்பழை அமெரிக்க மிஷன் ஆங்கில பாடசாலை ஆசிரியர் வருத்தலை விழான் க. சரவணமுத்துவும் வந்திருந்தார். அவர் ஒரு புலவருமாவார். அவர் வித்தகரின் கெட்டித்தனமான செயற்பாடுகளைக் கவனித்துவிட்டு, "இவர் எந்த வகுப்பில் படிக்கிறார்? எங்கே படிக்கிறார்?" என்று வித்தகரின் தந்தையிடம் வினாவினார். தந்தை, "அவர் படிப்புக்கு முழுக்குப் போட்டு விட்டு சும்மா இருக்கிறார்" என்று கூற, ஆசிரியர், "இவர் நல்ல கெட்டிக்காரராக இருக்கிறார். விரும்பினால் இவரைத் தெல்லிப்பழை உட்பள்ளிக் கூடத்தில் சேர்த்து விடுகிறேன், நல்லாய் வருவார்," என்றார். (உட்பள்ளிக் கூடமென்பது தெல்லிப்பழையில் அமெரிக்கமிஷனால் நடத்தப்படும், விடுதி வசதியுள்ள ஒரு துவிபாஷா பாடசாலை. பின்னாள்களில் அதுவும் ஆங்கிலப் பாடசாலையும் சேர்க்கப்பட்டு யூனியன் கல்லூரியானது. அவ்வுட் பள்ளிக் கூடம் அந்தக் காலத்தில் இலங்கையில் தமிழுக்குப் பெரிய பள்ளிக்கூடம் என்று சொல்லத்தக்க அளவில் இருந்தது. யாழ்ப்பாணத்துப் பல ஊர்கள், வன்னி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கண்டி முதலிய இடங்களிலிருந்து ஐந்தாம் வகுப்புக்கு மேற்பட்ட கெட்டிக்காரப் பிள்ளைகள் வந்து படிக்குமிடமாக இருந்தது. பண்டிதர் K.P. இரத்தினம், வித்துவான் F.X.C. நடராசா முதலிய பலரும் மேல் வகுப்பு இங்குதான் படித்தனர்) தந்தையார், "நீங்கள் அவனைக் கேட்டு அவன் விரும்பினாற் சேர்த்து விடுங்கள்" என்றார். அப்பள்ளிக்கூடம், பெரியது; சுத்தமானது; விளையாட்டு வசதியுள்ளது; தவணைக் கொருமுறை விடுதலை விடுவது; தண்டனை குறைந்தது; தன் சிநேகிதர் பலர் படிப்பது என்றறிந்த வித்தகர் அங்கு படிக்கப் போவதில் விருப்பம் காட்டினார்.

1928ம் ஆண்டு கார்த்திகையில் வித்தகர், தெல்லிப்பழைத்துவிபாஷா பாடசாலையிலே ஆறாம் வகுப்பு மாணவனாகச் சேர்க்கப்பட்டார். 36 மாணவர்கள் – பல ஊரார் – அவ்வகுப்பிற் கற்றனர். வித்தகர் சேர்ந்து சிலநாள்களின் பின் தவணைப் பரீட்சை நடந்தது. அப் பரீட்சையில் வித்தகர் 9ம் ஆளாகத் தேறினார். விடுதலை விடும் அன்று தலைமையாசிரியர் மாணாக்கர்களைக் கூட்டி, தவணைப் பரீட்சைப்

பெறுபேற்றை விளக்க, வித்தகரை மேலிடத்தில் ஏற்றி "இவர் பாடசலையில் சேர்ந்து சில நாளாயினும் நல்ல பெறுபேறு காட்டியிருக்கிறார்" என்று புகழ்ந்தார். இது வித்தகருக்கு ஒரு புது உற்சாகத்தை ஊட்டியது. படிப்பில் கரிசனை கொண்டார். 2ம் தவணைப் பரீட்சையில் 3ம் ஆளாகவும், 3ம் தவணைப் பரீட்சையில் 1ம் ஆளாகவும் தேறினார். கணக்கிற் கெட்டிக்காரன் என்பது பாடசாலை முழுவதும், பாடசாலை வளவில் நடந்த ஆசிரிய கலாசாலை முழுவதும் தெரிந்தது. பல நூல்கள் வாசித்திருந்ததனாற் போலும் வித்தகருக்குக் கட்டுரைகளைப் பிழையின்றி எழுதவும், பிறர் கட்டுரைகளில் வந்த பிழைகளை எடுத்துக் காட்டவும் கூடிய வல்லமை இயல்பாய் அமைந்திருந்தது. ஒரு நாள் ஆசிரியமணி உடுப்பிட்டி வைத்திலிங்கம் அவர்கள் இவரைத் தமிழிலும் வல்லவர் என்று புகழ்ந்தார். இவற்றாலும், ஊர்ப்பாடசாலைகளில் கற்பிக்கத் தொடங்காதிருந்து இப்பாடசாலையில் தொடங்கப்பட்டுக் கற்பிக்கப்பட்டுவந்த அட் சரகணிதம், கேத்திர கணிதம், நாட்டுச் சீவன சாஸ்திரம் (General Science) என்பவற்றை இவர் புதுமை நோக்கிக் கரிசனை கொண்டு கற்று, அவற்றிலும் திறமை காட்டியதனாலும், விளையாட்டுக்கள் –அவை உள்ளூர் விளை யாட்டுக்கள் வெளியூர் விளையாட்டுக்கள் என்ற பேதமின்றி– யாவற்றிலும் திறமை காட்டியதனாலும், மாணக்கர்களோடு நட்பாகப் பழகுவதனாலும் ஒரு பிரசித்தியுள்ள மாணாக்கரானார்.

1931ம் ஆண்டு ஆடியில் V.S.L.C பரீட்சை எடுத்து மறுமொழி வரும் வரை இப்பாடசாலையில் மதிப்பாகக் கற்ற இவர் பிறிலிம் வகுப்பிற் கற்க அளவெட்டி வடக்கு சீனன் கலட்டிப் பாடசாலையிற் சேர்ந்தார். பாடசாலை மாற்றத்தாற் போலும் வித்தகர் அங்கு ஒரு சாதாரண மாணவனாகவே கணிக்கப்பட்டார். ஒரு முறை அவருக்குத் தமிழுக்கு பன்னிரண்டு புள்ளியே கிடைத்தது. அதனால் இவர் தன்னம்பிக்கை குறையவில்லை. நன்கு படித்து 1932ம் ஆண்டு பங்குனியில் நடந்த பிறிலிம் பரீட்சையில் சித்தியெய்தினார்.

பின் என்ன படிப்பது என்று யோசித்து, பிரவேச பண்டிதர் வகுப்பு என ஒன்று உண்டென அறிந்து வித்துவசிரோமணி கணேசையரின் உதவியுடன் அதற்குரிய நூல்களைக் கற்றார். அக்காலத்தில் லண்டன் மற்றிக்குலேசன், கேம்பிரிஜ்சீனியர் வகுப்புக்களில் படித்த ஊர் மாணவர்களோடு சேர்ந்து அட்சரகணிதம் கேத்திரகணிதம் என்பனவும் கற்றார். அக்காலத்தில் அக்கணிதங்களுக்குத் தமிழில் நூல்கள் இருக்கவில்லை. அவற்றிலும் வல்லவரென்று அம்மாணவர்களாற் கணிக்கப்பட்டார்.

வித்தகர் அவர்கள் 1932ம் ஆண்டு ஆவணியில் ஆசிரிய தராதரப் பத்திரப் பரீட்சை எடுத்து முதலாம் பகுதியிற் சித்தியெய்தினார். திருநெல்வேலி ஆசிரியகலாசாலையிற் சேர்வதற்காக அவர்கள் குறித்த, இலக்கண, இலக்கிய நூல்களைக் கற்றுப் பரீட்சை எடுத்து, ஏறக்குறைய 800 மாணவர்களில் 2ம் ஆளாக வந்தார். ஆனால் இவருக்கும் 1ம் ஆளாக வந்தவருக்கும் வயது போதாமையால் தெரிவு செய்யப்படவில்லை. 1932ம் ஆண்டு கார்த்திகையில் சுகவீனமுற்ற, மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாசாலை ஆசிரியர் ஒருவருக்காக, பதிலாசிரியராகக் கடமை ஏற்றார். அவ்வாசிரியர் இறந்து விட்டதால் நியமன ஆசிரியரானார். அப்பாடசாலையில் உயர்ந்த வகுப்பு ஆறாம் வகுப்பு. அவ்வகுப்புக்கு அட்சரகணிதம், கேத்திரகணிதம், நாட்டுச் சீவன சாஸ்திரம் கற்பிக்க வேண்டியிருந்ததால், அப்பாடங்கள் கல்லாத பயிற்றப்பட்ட ஆசிரியர் பலர் அங்கிருந்தும், வித்தகரே அவ்வகுப்பாசிரியராக்கப்பட்டார். இவர் கற்பித்தலிலும் வல்லவராக எண்ணப்பட்டார். சிறிது காலத்தின் முன் நில அளவையாளர் க. சின்னப்பு அவர்களால் படிக்கும் இளைஞர்களின் கல்விவிருத்திக்காக, அவர்களை ஒன்று கூட்டி அமைக்கப்பட்ட 'செந்தமிழ்த் தேர்ச்சிக் கழக'த்துக்கு ஆரம்பகாலத்தில் வித்தகர் காரியதரிசிகளில் ஒருவராகவும், பின் தலைவராகவும் இருந்து தொண்டாற்றினார்.

வித்தகர் அவர்கள் 1933ம் ஆண்டு வைகாசியில் பிரவேச பண்டித பரீட்சை எடுத்துச் சித்தியெய்தினார். பின் சென்ற ஆண்டுபோலவே நீண்ட பாடத்திட்டத்தைக் கொண்ட திருநெல்வேலி ஆசிரிய கலாசாலைப் பிரவேச பரீட்சைக்குத் தோன்றி இம்முறையும் 2ம் ஆளாகத் தேறினார். 1933 ஆவணியில் ஆசிரிய கலாசாலையில் சேர்க்கப்பட்டார். ஆசிரிய கலாசாலையில் பயின்று கொண்டிருந்தவர்களும், இப்போது பயிலச் சேர்க்கப்பட்டவர்களுமாகிய மாணாக்கர்களால், சோதனைப்

பெறுபேறுகள் கொண்டு அறியப்பட்டிருந்த இவர் அன்பாகவும் மரியாதையாகவும் வரவேற்கப்பட்டார். வித்தகர் விவாகஞ் செய்து விட்டார் என்று கேள்விப்பட்டிருந்த மாணாக்கர்கள் அவரை வினவ அவர் கூச்சத்தோடு மறுத்ததனால், அவர்கள் வித்தகர் விவாகம் செய்து விட்டார் என்றே நம்பிவிட்டனர். இது ஆசிரிய சமூகத்துக்கும் எட்டியிருந்தது. இது கலாசாலையில் இவரது சுதந்தர வாழ்வுக்கு ஓரளவில் உதவியது. கலாசாலைக் கட்டுப்பாட்டு வாழ்க்கையை விட்டு விலகவும் எண்ணினார். அடிக்கடி வீடு போயும், சிலநாள் தங்கி நின்று வந்தும், கலாசாலையில் நிற்கும் நாள்களில் விளையாட்டுக்களிலும், உலாவித்திரிந்தும் நேரம் கழித்து ஓரளவில் சமாளித்துக் கொண்டார். கலாசாலைக் கல்வி பாரமாக இவருக்குக் தெரியவில்லை. கல்லாது திரிந்தாலும் தவணைப்பரீட்சை கிட்ட, தவணைக்குரிய பாடங்களை ஏனைய மாணவரோடு சேர்ந்து மீட்டுக் கொள்வார். பரீட்சையில் நல்ல பெறுபேறு பெறுவார். இந்தப் போக்குக் கலாசாலையில் எல்லாருக்கும் தெரிந்திருந்தது. கலாசாலையை விட்டு நீங்கும் போது மாணாக்கர் சேர்ந்து நின்று எடுக்கும் நிழற் படத்தில் வித்தகரது படம் இல்லை. இது பற்றி இவர் விசாரிக்கப்படவுமில்லை. இதற்குக் காரணம் இவர் விவாகம் செய்தவர் என்று நம்பியதும், இவரது கெட்டித்தனமுமாயிருக்கலாம்.

வித்தகர், இடையிடை, "நான் ஆசிரியகலாசாலையில் படித்துக் கொண்டது கொஞ்சம். அதிபர் மயிலிட்டி சி. சுவாமிநாதன். உப அதிபர் அதி மேதை அளவெட்டி பொ. கைலாசபதி, பண்டிதமணி மட்டுவில் சி. கணபதிப்பிள்ளை, மட்டுவில் ந. கந்தசாமி ஐயர் என்ற பேராசிரியர்களைக் கண்டதாலும் இரண்டு வருடம் அவர்களோடு பழகியதாலும் அவர்கள் சொற்களைக் கேட்டதாலும் பெற்றுக் கொண்ட அறிவே அதிகம்" என்று சொல்லுவார்.

பண்டிதமணி அவர்கள் வித்தகரது 1ம்ஆண்டுப் பயிற்சிக் காலத்தில் ஆசிரிய பிரவேசப் பரீட்சைப் பெறுபேற்றினால், போதிய தமிழறிவு உடையவர் என்று கருதிய இவருள்ளிட்ட நால்வரை, "நீங்கள் இலக்கண பாட வகுப்புக்கு வரத்தேவையில்லை, அந்த நேரத்தில் பால பண்டித பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துங்கள். சனி, ஞாயிற்றில், வித்துவான் ந. சுப்பையபிள்ளை, வித்துவசிரோமணி சி. கணேசையர் என்பவர் தனித்தனி நடத்தும் பாலபண்டித வகுப்புக்களிலும் சென்று படியுங்கள்" என்று வழிகாட்டினர். வித்தகர் பண்டிதமணியின் இனிமையான கற்பித்தலைக் கேட்டலையும் தவற விடாது, சுன்னாகம் பிராசீன பாடசாலையில் கணேசையரின் பால பண்டித வகுப்பில் சேர்ந்து கற்றலையும் தவற விடாது மேற் கொண்டார். முன்னறிவுள்ள வித்தகருக்கு அவ்வகுப்புப் படிப்புப் பாரமாக இருக்கவில்லை. 1933ம் ஆண்டில் பாலபண்டித பரீட்சையிலும் சித்திபெற்றார். அதனையடுத்து சித்திர ஆசிரிய தராதரப் பத்திரப் பரீட்சை எடுத்து அதிலும் சித்தி பெற்றார். ஆசிரியகலாசாலையில் சைவப் பெரியார் புலோலி சு. சிவபாதசுந்தரம் B.A. அவர்கள், சனி, ஞாயிறு நாள்களில் நடாத்திய சித்தாந்த வகுப்பிலும் ஒரு நாள் பாடங் கேட்டு "நான் ஒருநாள் குருவிடம் பாடங்கேட்டு விட்டேன்" என்று சந்தோஷப்பட்டார்.

இப்படியாக ஓராண்டுப் பயிற்சி முடிந்து இரண்டாம் ஆண்டுப் பயிற்சி 1934 ஆவணியில் ஆரம்பமானது. பண்டிதமணி பாலபண்டிதம் சித்தியெய்தியவர்களை அழைத்து, "இனிநீங்கள் ஆசிரியப் பயிற்சிக்குரிய இலக்கியங்களைப் படியுங்கள். பயிற்சி முடிந்து, பண்டிதம் படிக்கலாம்" என்று கூறி விட்டார். இப்பொழுதுதான் வித்தகருக்குத் தான் இங்கு வந்தது ஆசிரியப் பயிற்சிக்கு என்ற எண்ணம் வந்தது. ஓரிடத்திலிருந்து அமைதியாகப் படித்தலை யறியாத இவருக்கு நீண்ட நேரமிருந்து படிக்க வேண்டிய சரித்திரம், கல்வி பயிற்றல் முதலிய பாடங்களில் விருப்பில்லை. அறிவும் குறைவு, மற்றவர்களெல்லாம் இராப்பகலாகப் படித்துப் பரீட்சைக்கு ஆயத்தமாக இருக்க, தான் விளையாடித்திரிந்ததை எண்ணி வருந்தி, பரீட்சையில் தவறி விடுவேனோ என்றும் பயந்தார். ஏதோ படித்துப் பார்ப்போம் என்று முயன்றவருக்கு அந்த இரண்டு பாடமும் அடங்கவில்லை. சோதனை வந்தது. தன்நம்பிக்கை இழந்த இவருக்குக் கணக்குப் பாடமும் மிகக் கடுமையாக வந்தது நம்பிக்கை இழக்கச் செய்தது. தனக்குரியபாடமே தனக்குக் குறைந்த சித்தியைத் தந்தபோது மேல் பரீட்சை எடுப்பதில் பயனிராது என்று சோர்ந்திருந்த வித்தகருக்கு ஏனைய மாணாக்கர் தாங்கள் கணக்கில் சித்தியடையவே முடியாது என்று கதைத்தது, தன்னைப் பகிடி பண்ணுவதாகவேபட்டது. பின் அது உண்மையென்றறிந்து மனம்மாறி பரீட்சையைத் தொடர்ந்து எடுத்தவருக்கு, பயிற்றல் பாடவினாக்கள் முன்போலல்லாது விவேகப்பரீட்சை வினாக்கள் போல வந்தது மகிழ்வைத்தந்தது. அந்த வருடத்தில் அரைப்பங்குக்கு அண்மையான மாணவரே முறையான சித்தியெய்தினர். அவருள் இவரும் ஒருவர். சரித்திரபாடம் சித்திதரவில்லை. இவர் பெரியதொரு தத்திலிருந்து தப்பியவர் போல் மகிழ்ந்தார்.

பயிற்சி பெற்ற ஆசிரியரானதும் அதைத் தொடர்ந்து, வீமன்காமம் கலவன் பாடசாலையில் தலைமையாசிரியராக இருந்த இவர் தமயன் இ.தாமோதரம்பிள்ளை ஆசிரியருக்கு அவர்தம் கடமையில் உதவும் பொருட்டு, அப்பாடசாலையில் சம்பளமற்ற ஆசிரியராகச் சேர்ந்தார். 1935ம் ஆண்டு கார்த்திகை முதல் வித்தகருக்கு அங்கு நிரந்தர நியமனம் கிடைத்தது. பாடசாலை மாவிட்டபுரக் கந்தசாமி கோயிலுக்கு முன்புறம் இடமாற்றம் பெற்றது. வித்தகர் அங்கு திறமையாகக் கடமைபுரிந்தார். 5ம் வகுப்புவரை இதுவரை நடந்து வந்த பாடசாலை வருடந்தோறும் வளர்ந்து துவிபாஷா பாடசாலையாக உயர்ந்தது. தூர இடங்களிலிருந்தும் மாணவர் வந்து சேரத் தொடங்கினர். வருடந்தோறும் வித்தகர் அதி உயர்ந்த வகுப்புகளுக்கு கணிதம், தமிழ், இலக்கியம், சமயம், நாட்டுச் சீவனசாஸ்திரம், சித்திரம் என்பன கற்பித்து வந்தார். பரீட்சைப் பெறுபேறு நன்றாக இருந்தது. 1951 ஆனிவரை உதவியாசிரியராக இருந்த வித்தகர் ஆடியிலிருந்து கனிஷ்ட அதிபரானார். கனிஷ்ட அதிபர் என்பது அக்கால முதலாந்தரத் தலைமையாசிரியருக்கு நிகரானது. பலபாட ஆசிரியர்கள் வந்து சேர்ந்ததனாலும் இவர் கனிஷ்ட அதிபர் ஆக்கப்பட்டதனால் கீழ் வகுப்புக்களில் படிப்பிக்க வேண்டியிருந்ததனாலும் இவர் மேல் வகுப்பில் தமிழ், இலக்கியம், சமயம் என்பன மாத்திரம் படிப்பித்துக் கொண்டு, மிகுதி பெரும்பாலும் 5ம் வகுப்புக் கணிதம், தமிழ் என்பன கற்பித்தார். பாடசாலை மகா வித்தியாலயமானது. A/L. வகுப்பும் வைக்கப்பட்டது. இங்ஙனம் பாடசாலை உயரும் வரை அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றார் யாவருடனும் அன்புடன் ஒத்துழைத்துக் கடமையாற்றிய இவர் 1971 மார்கழி முடிவுடன் சேவையிலிருந்து இளைப்பாறினார். பாடசாலையிலே 1960ல் வெள்ளி விழாவும், 1971 மார்கழியிலே பிரியாவிடை விழாவும் விமரிசையாக வைத்து வித்தகரைக் கௌரவித்தனர்.

வித்தகர் அவர்கள் 1938 வைகாசியில் சங்கானை அரசடி வைரவர் கோயில் உரிமையாளரும் குருக்களுமாகிய பொ. அப்பாத்துரை ஐயருக்கு அவர் மனைவி நாகம்மா வயிற்றிலுதித்த ஏகபுத்திரி கமலாம்பிகையம்மையை மணந்து, இல்லற வாழ்க்கையை மேற் கொண்டார். இல்லறப்பயனாக இவர்களுக்குப் பெண்கள் ஐவரும், ஆண்கள் அறுவருமாகப் பிள்ளைகள் பதினொருவர் உளர்.

படிப்பிக்கத் தொடங்கிய காலத்திலிருந்து வித்தகர் ஆசிரியர் வ. முத்துக்குமாருவுடன் சேர்ந்து மகாவித்துவான் கணேசையர் வீட்டுக்கு இரவிற் சென்று தொல்காப்பியம், புறநானூறு, அகநானூறு முதலிய உயரிலக்கண இலக்கியங்களை முறையாகக் கற்றார். சனி, ஞாயிறுதினங்களில் மருதடி விநாயகர் ஆலய ஆலமரநிழலே படிப்பிடமானது. பண்டிதராகி விடவேண்டும் என்று ஆசைப்பட்ட இவர் 1938 பங்குனியில் மதுரைப் பண்டித பரீட்சையிலே சித்தி எய்தினார். எய்தியதும் வித்துவான் கணேசையரின் பாலபண்டித வகுப்பைப் பொறுப்பேற்று நடத்தி வந்தார். இவ்வகுப்பில், அராலி, சாவகச்சேரி, இடைக்காடு, அச்சுவேலி முதலிய பல இடங்களிலிருந்து மாணவர் வந்து கற்றனர். ஆசிய கலாசாலைப் பிரவேச பரீட்சை எடுப்போருக்கும் வகுப்பு வைத்து நடத்தினார். மல்லாகத்தில் நடந்த பண்டித வகுப்பிலும் படிப்பித்தார். ஏழாலை மடம், வீமன்காமம் பாடசாலை, மகாஜனக் கல்லூரி முதலியவற்றிலும் உயர்தர இலக்கண இலக்கிய வகுப்புக்களில் படிப்பித்தார். பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் வைத்து ஆறாம் வகுப்புக்குத் தமிழ்ப் பாடநூல் எழுதத் தொடங்கிய ஆரம்ப காலத்தில் கையெழுத்துப் பிரதிகளைத்திருத்தி உதவினார்.

ஊரிற் பலசேவைகளைச் செய்த, பாலர் ஞானோதயசங்கம், அதனால் தோற்றிவிக்கப்பட்ட சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மத்தியத்தர் சபை, இந்து சமயவிருத்திச்சங்கம், அந்தியகால சகாய நிதிச் சங்கம் முதலியவற்றுக்கும், ஐக்கிய பண்டசாலைச்சங்கம், கணேசையர் நினைவுச்சங்கம் என்பவற்றுக்கும் தலைவராயிருந்து உதவினார். கீரிமலைச் சிவநெறிக்கழகத்திலே நிருவாகத் தலைவராயிருந்தார். தெல்லிப்பழைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இயக்குநர்சபை உறுப்பினராயிருந்தார். மயிலிட்டியில் அதிகார முடையதாக அரசினரால் அமைக்கப்பட்ட நீதிமன்றிலும் உறுப்பினராக இருந்தார். இத் தொண்டு களுக்கிடையில் விளையாடல், அத்துறையை ஊக்கல் என்பவற்றைக் கைவிடமாட்டார். என்னவேலை இருந்தாலும் விளையாட்டு நேரம் விளையாடப்போயே விடுவார்.

இவற்றுக்கிடையில் ஊரிலும் அயலிலும் சமய இலக்கியப் பிரசங்கம் செய்தல், பட்டிமண்டபம், வழக்காடு மன்றங்கள், பொதுக் கூட்டங்களுக்குத் தலைமை வகித்தல், மத்தியத்தம் செய்தல் என்பவற்றிலும் ஈடுபடுவார். இவருடைய தீர்ப்புரைகள் தருக்கரீதியானவையாக யாரும் ஏற்றுக் கொள்வனவாக இருக்கும். இந்த உரைகளைக் கேட்பதற்காகக் கூட்டங்களுக்கு வருபவரும் உண்டு.

படித்தவர்களும் சபைகளும் வித்தகரை ஏதாவது நூல் எழுத வேண்டுமென்று கேட்துண்டு. மறுத்து விடுவார். "தமிழில் என்ன இல்லை. எழுத என்ன இருக்கிறது. இருக்கிற நூல்கள் படிக்கப்படுகின்றனவா? எழுத எனக்கு அறிவிருக்கிறதா? இருக்கும் அறிவு என்னறிவா? நூல்களாலும் பெரியோராலும் வந்ததல்லவா? இருக்கும் அறிவு உனக்கு இன்னும் அறியாமை இருக்கிறதென்று சொல்லுகிறது. அறிவும் அறியாமைமிகுதியும் உடைய ஒருவன் ஒன்றெழுதின் அறியாததை அறிந்ததாகப் பொய்பட எழுத வருமே. நான் எனக்குத் தெரிந்ததை வஞ்சகமின்றிப் படிப்பிக்கின்றேன். எல்லாருக்கும் சொல்கின்றேன். அதில் சரியை ஏற்கலாம் பிழையை விடலாம். எனக்கு அறிஞர் பலர் ஏன் நூல் எழுத முனையவில்லை என்று தெரிகிறது" என்று பலவும் சொல்வார். எனினும் வேண்டியவர்களின் சொல்லை மறுக்க முடியாது பத்திரிகை, சஞ்சிகைகளுக்கு எழுதிக் கொடுத்ததுண்டு. தம்முடைய மனத்திருத்திக்குக் கடவுள்மேல் பாடியதுண்டு. குரும்பசிட்டிப் பண்டிதர் வ. நடராசன் கேட்டதற் கிணங்க அவரோடு சேர்ந்து கும்பகர்ணன் வதைப்படலத்துக்கு உரை எழுதியிருக்கிறார். இறந்த பெரியார்கள் பற்றி எழுதியிருக்கிறார். பாடியிருக்கிறார். களுத்துறை முருகன், அற்றன் விநாயகர், திருக்கோணமலை ஆலடிப்பிள்ளையார், மாங்குளம் தச்சகடம்பன் பிள்ளையார், நெல்லண்டைப் பத்திரகாளி, மயிலிட்டி கொளுவியங் கலட்டிப்பிள்ளையார், கட்டுவன் ஐயனார், முத்துமாரியம்மன், வருத்தலை பிடாரத்தனை அம்மன், யூனியன் கல்லூரி அம்மன், அளவெட்டி குருக்கள் கிணற்றடி முருகன், பண்ணாகம் பணிப்புலம் வயிரவர் முதலிய ஆலயங்களுக்கு ஊஞ்சல் பாடியிருக்கிறார். மயிலிட்டி தெற்கு வயிரவர் வீரபத்திரர், கட்டுவன் ஐயனார், வர்த்தலை மருதடி விநாயகர் மாவை முருகன், கீரிமலை நகுலேஸ்வரர், வல்லிபுரம் ஆழ்வார், சங்கானை அரசடி வைரவர் முதலிய தெய்வங்கள் மீது பதிகம் (பத்து) பாடியிருக்கிறார். சந்நிதிக் கந்தர் சதகம், நகுலேசர் திருவந்தாதி, கட்டுவன் முத்துமாரிம்மன் திருப்பள்ளி எழுச்சி, பண்ணாகம் பணிப்புலம் அம்மன் இரட்டை மணிமாலை முதலியனவும் பாடியிருக்கிறார். ஆனால் இவற்றை வித்தகர் சேகரித்து வைத்திருக்கவில்லை. ஒவ்வொரு சிறிய பிழைகளைத் திருத்தி வெவ்வேறாக எழுதிய சில சிறிய கட்டுரைகளும் உள. இக்கால நிலைமையில் இவற்றைத் தேடிப் பெற முடியவில்லை. தேடியதில் கிடைத்தன சில. அவற்றுள் சில வித்தகர் எழுதியதாக ஞாபகத்தில் இல்லாதன.

வித்தகருக்கு யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தால் பிரவேச பண்டித, பாலபண்டித பட்டங்களும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தால் பண்டித பட்டமும், நல்லூர் ஆதீனத்தால் செந்தமிழ்த் திலகம் என்ற பட்டமும், யாழ்ப்பாணம் ஆரிய திராவிடபாஷாபிவிருத்திச் சங்கத்தால் மீள மகா வித்துவான் என்னும் சிறப்புப் பட்டமும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தால் இலக்கண வித்தகர் என்ற சிறப்புப் பட்டமும், இலங்கை அரசினால் சமாதான நீதவான் பட்டமும், வித்துவ சிரோமணி கணேசையரால் தேசிகர்ப் பட்டமும் வழங்கப்பட்டன. சில பெரியார்களும் சபைகளும் பேராசான், பண்டிதாசான், சான்றோன், ஆசிரியப் பிரான் என அழைப்பதும் உண்டு.

பட்டங்களைத் தேடிக் களைக்காது அவற்றால் தலை நிமிர்ந்து அறிவு குறையாது, எவரும் எங்கும் என்றும் நன்றே வாழ்க என்று யாரொடும் அன்பாகவும் பழகும் வித்தகர் வயது சென்று சுகவீனமான இன்றும் முன்னைய மனநிலையிலேயே வாழ்கின்றார். அவர், மனைவி, மக்கள், பேரன், பேர்த்தியர் முதலிய சுற்றத்தாரோடு இன்றுபோல் பல்லாண்டு நன்று வாழ, வேண்டுவார் வேண்டுவதை ஈயும் இறைவன் இணையடி பணிந்து வேண்டுகின்றோம். வாழ்க. சுபம்.

தேசிக மாமணி வாழ்க!

திரு. க. உமாமகேசுவரன்

செந்தமிழ் மொழியின் செழுமையைச் சுவையைத்
திரட்டிநற் பாகெனச் செய்தே
என்றனுக் கன்போ டெடுத்தெடுத் தூட்டி
இலக்கண அம்புலி காட்டிச்
சிந்தையில் இன்பஞ் செழிதிடச் செய்த
தேசிக மாமணிச் செவிலி
கந்தவேள் அருளால் இசைபட வாழ்க
காலமெ லாந்தமிழ் வளர்த்தே.

அறிவியல்

தமிழ் இலக்கணத்தில் ஐயப்படுத்தல்கள் சில

— பண்டிதர் மு. கந்தையா

தமிழ் கவிதை வடிவங்கள் எல்லையற்றன

— மாவிட்டபுரம் க. சச்சிதானந்தம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் இதழ்கள்

— பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி

ஆநிரை கோடல்

— பேராசிரியர் க. ப. அறவாணன்

திருக்குறள் காட்டும் மனித விழுமியங்கள்

— பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்

குறையுற உணர்தல் : இலக்கண மெய்ம்மைகள்

— பேராசிரியர் இரா. பாலசுப்பிரமணியன்

ஈழத்துத் தமிழ்க் கவிதை வளர்ச்சி

— பேராசிரியர் க. அருணாசலம்

நாமக்கல்லார், வள்ளத்தோள் கவிதைகளில் காந்தியம்

— முனைவர் பா. ஆனந்தகுமார்

மொழிவளர்ச்சி

— திரு. இ. ஜெயராஜ்

ஒல்காந்தர் கால ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் அனந்தசுப்பையர்

— பேராசிரியர் இரா. வை. கனகரத்தினம்

என்பதுகளில் ஈழத்து நாவல்கள்

— கலாநிதி செ. யோகராசா

தமிழ் இலக்கணத்தில் ஐயப்படுத்தல்கள் சில

பண்டிதர் மு. கந்தையா B.A. ; D.Lit

அளபெடை

இலக்கியத்திற் காணும் அமைதியே இலக்கணம். ஆதி தொட்டுத் தமிழர் சார்பில் இருந்து வந்த உலகியல் வழக்கும் செய்யுள் வழக்கும் தமிழ் இலக்கியம். தொல்காப்பியர் முதலியோர் அவ் விலக்கியத்தின் எழுத்தமைதி, சொல்லமைதி, பொருளமைதிகளைக் கண்டுணர்ந்து விதியும் விளக்கமுமாகப் படைத்து வைத்துள்ளது இலக்கணம்.

குறித்த இரு வழக்கிலும் அமைந்த எழுத்தொலி அமைதிகளை அவர்கள் வெளி யிடுகையில் உயிர்க்குற்றெழுத்துக்கள் ஒரு மாத்திரை அளவும் நெட்டெழுத்துக்கள் இரு மாத்திரை அளவும் ஒலிப்பதாகவும் உலக வழக்கில் இசை, புலம்பல், கூப்பீடு முதலியவற்றின்போதும் செய்யுள் ஓசையிற் சில சந்தர்ப்பங்களிலும் நெட்டெழுத்துக்கள் இரு மாத்திரையிற் கூடி ஒலித்தலையும் கண்டு தெரிவித்துள்ளனர். ஒரு சில சந்தர்ப்பங்களில் அவ்விரு வழக்குக்களிலும் குற்றெழுத்து நெட்டெழுத்தாம் நிலையெய்திப் பின் நீண்டிசைப்பதையும் ஒற்றெழுத்துக்கள்கூடத் தம் அரை மாத்திரையில் மிக் கொலித்தலையுங் கண்டு காட்டியுள்ளனர். இவ்வகையான 'ஓசைநீளல்' நிலையைக் குறிக்க அவர்கள் இட்ட பெயர் அளபெழுதல்.

"இசைகெடின் மொழிமுதல் இடைகடை நிலை நெடில்
அளபெழு மவ்வவற் றினக்குறில் குறியே "

என்ற நன்னூற் சூத்திரம் நெடில் அளபெழும் என்றே கூறுகின்றது. அளபெழும் – தம் மாத்திரையின் மிக்கொலிக்கும். அளபெழுவது எது எனும் ஆசங்கைக்கு நெடில் அளபெழும் என்ற விடையும் இதில் தெளிவாயுள்ளது. அத்துடன் மிக்கொலிப்பது எம்மட்டுக்கு என்பதைச் சம்பந்தப்பட்ட வார்த்தையை எழுத்தில் வடித்து வைத்துப் பார்ப்பார் தெரிந்து கொள்ள வைக்கும் பொருட்டாக அளபெழுந்த எழுத்துக்குரிய குற்றெழுத்தோ, உரிய குறில் இயல்பில் இல்லாத உயிரெழுத்துக்களுக்கு அவ்வவற்றுக் கினமான உயிர்க்குற்றெழுத்தோ அறிகுறியாக எழுதப்படும் என்றும் இச் சூத்திரந் தெரிவிக்கின்றது. இது உயிர் நெடில் அளபெழுதற்கு மட்டும் உள்ள விதி. மேல் ஒற்றெழுத்து அளபெழுதல் சொல்லுமிடத்தும் இங்கு இனக்குறில் என்றதற்குப் பதில் அங்கு அளபெழுந்த அதே ஒற்றெழுத்து அறிகுறியாக எழுதப்படுதல் சொல்லப்படும்.

உலக வழக்கில், தன் உளவேதனை சகிக்காத ஒருவன் ஐயோஒ என ஒலித்து அவ்வேதனைக்குப் போக்குவீடு காண்பன். செப்பலோசையை உளங் கொண்டு செய்யுள் இசைக்குமொருவன் 'ஓதல் வேண்டும்' என்பதை 'ஒஓதல் வேண்டும்' என்பன். இவை அவனவன் நெடிலோசைக்குக் குறிலோசையை நினைந்து சேர்த்து நீட்டிக் கொண்டனவாகக் கொள்ளல் பொருந்தாது. மேற்குறித்த நன்னூற் சூத்திரமும் நெடில் அளபெழும் என்றல் மூலம், அது தன்னியல்பான் நிகழ்வதென்ற கருத்தையே தருகின்றது. தொல்காப்பியம் எழுத்ததிகாரத்திற் செய்யுளியலை நோக்கி எதிரது போற்றிக் கூறப்பட்டதெனும் நூன்மரபு 33 ஆஞ் சூத்திரமும் (உயிர்)

'அளபிறந்திசைத்தலும் ஒற்றிசை நீடலும்' என இதனை இயல்பு நிகழ்வாகவே காட்டுகின்றது. ஆனால் நூன் மரபு 6ஆஞ் சூத்திரத்திரல் 'நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய கூட்டி எழுஉதல்' என்பதற்காம் உரை "வழக்கிடத்துஞ் செய்யுளிடத்தும் ஓசையும் பொருளும் பெறுதல் காரணமாக இரண்டு மாத்திரை பெற்ற எழுத்து அம்மாத்திரையின் மிக்கொலித்தலை விரும்புவாராயின் தாம் கருதிய மாத்திரையைத் தருதற்குரிய எழுத்துக்களைக் கூட்டி அம் மாத்திரைகளை எழுப்புக" என இருத்தல் விசாரத்துக்குரியதாகின்றது. வேண்டின் – விரும்புவாராயின்; அவ்வளபுடைய – தாம் கருதிய மாத்திரையைத் தருதற்குரிய எழுத்துக்கள், கூட்டி எழுஉதல் – உரிய எழுத்துக்களைக் கூட்டி அம் மாத்திரைகளை எழுப்புக, என்றிருக்கும் விளக்கங்கள் அளபெடை தன்னியல்பால் நிகழ்வ தொன்றன்று; நினைந்து முயன்று செய்யப்படும் ஒன்று என்ற நிலையைப் பிரதிபலிப்பனவாகின்றன.

இங்ஙனம் கொள்ளுதல் மூலம் நச்சினார்க்கினியரும் உரையாசிரியரும் தவிர தொல்லாசிரியர் எல்லாரும் தத்தம் உரை விளக்கங்களாற் புலப்படுத்தியிருக்கும் அளபெடை பற்றிய இயல்பு நிலையான கருத்திலேயே இச்சூத்திரமும்,

நீட்டம் வேண்டின் – வழக்கிலும் செய்யுளிலும் நெட்டெழுத்தோ ஒற்றெழுத்தோ தன் மாத்திரையின் நீண்டொலித்தல் வேண்டுமிடத்து. அவ்வளபுடைய அச் சந்தர்ப்பம் எவ்வளவு மாத்திரைகள் அதிகரிக்க உள்ளதோ அவ்வளவு மாத்திரைகள் கூட்டி எழுஉதல் அதிகரித்து எழுந்தொலித்தல் (வழக்கு)

எனப் பொருள் செய்யப் பெறுதல் தவறாகுமா?

❖❖❖❖❖❖❖

(II) 'ஐ', 'ஔ' அளபினுங் குன்றா தென்றமை

உயிரளபெடை சார்பில் நெட்டெழுத்தேழும் அளபெடுத்தற்குரியவை. அளபெடுக்குங்கால் ஒவ்வோரெழுத்தும் தன் தனக்குரிய இரண்டு மாத்திரை ஓசையிற் குறைவுபடாமல் நின்று மேலும் வேண்டுமளவு விரிந்திசைக்கும் என்பது பொது விதி. ஆனால், ஐ, ஔ என்ற இரண்டும் ஏனை நெட்டெழுத்துக்கில்லாத பிரத்தியேகமான ஒரு இலக்கண நியமத்திற்கும் உட்பட்டவை ஆதலால், அளபெடையிலும் அவை தம் இயல்பான இரு மாத்திரையிற் சுருங்கா எனத் தெரிந்து கூறப்பட வேண்டிய அவசியமுண்டு. அது என்னையெனின்,

ஐயும் ஔவும் என்பவற்றில் ஐ மொழி முதல் இடை, கடை என்னும் மூவிடத்தும் ஔ முதலிடத்தும் தம் மாத்திரையிற் குறுகுமியல்புடையவை. அதாவது தத்தமக்கு இயல்பாக உள்ள முயற்சிப் பிறப்பு முற்றுப் பெறமாட்டா நிலையிலுள்ளவை. இலக்கணப்படி, ஐ ஒலி அங்காத்தல் முயற்சியோடு அண்பல்லை அடிநா ஓரங்கள் (விளிம்பு) பொருந்தும் முயற்சியும் பெற்று இரு மாத்திரை ஒலித்தற்குரியது. ஔ வாயிதழ் முன் நோக்கிக் குவிதல் மூலம் அவ்வாறொலித்தற்குரியது. ஐ மொழிமுதல் இடை கடைகளிலும் ஔ மொழி முதலிலும் வருங்கால் அவை அங்ஙனம் முயற்சிப் பிறப்பை முழுமையாகப் பெற்று வரும் சூழ்நிலை இல்லை. முன்னும் பின்னும் இரு மருங்கினும் வரும் எழுத்துக்களின் தொடர்பால் அது நேர்வதாகச் சங்கர நமச்சிவாயர் தெரிவிப்பர்.

இது இவ்வாறாதலால் மேற் சொன்னவாறு தம் இயல்பான மாத்திரையிற் குறுகும் நிர்ப்பந்தமுள்ள ஐ யும் ஔ வும் அளபெடுப்பதெப்படி? என்ற ஆசங்கை தன்னில் தானே உளதாகும். அதை விடுவிக்க வேண்டி நன்னூலாசிரியர், இச் சுருங்கும் நிலைக்கு வேறாக இவ்வீரெழுத்துக்களும் தம்மையே தனித்து உச்சரிக்கப்படும் நிலையிற் போல, தான் தான் அளபெடுக்க நிற்கும் நிலையிலும் தம் இயல்பான இரண்டு மாத்திரை ஒலித்தலில் தவறமாட்டா என்று சுட்டி உரைக்க வேண்டியவர் ஆயினார். அதன் வழி,

"தற்சுட்டளபு ஒழி ஐ மூவிடத்தும்
நையும் ஔவும் முதலற்கும்"

என்றெழுந்திருக்கின்றது நன்னூற் சூத்திரம்.

தன்னையே குறித்துரைக்குமிடமும் அளபெடுக்குமிடமுந் தவிர ஐ மொழிமுதல் இடை கடை என்னும் மூவிடத்துங் குறுகும். ஔவும் முதலில் அங்ஙனமாம் என்பது இதன் இயல்பான பொருள். சடகோபராமானுஜ சாரியரும் இலக்கண விளக்க நூலாரிசிரியரும் இதே பொருளை அநுவதித்துள்ளனர். யாப்பிலக்கண விருத்தியிலும் யாப்பருங்கலக் காரிகையிலும் மேற்கோள் காட்டப்பட்ட, 'அளபெடை தனி இரண்டல் வழி ஐ, ஔ உளதாம் ஒன்றரை தனிமையுமாகும்' என்ற சூத்திரமொன்று இவ்வுண்மையை நன்னூற் சூத்திரத்திரனும் பார்க்கத் தெளிவாகத் தெரிவிக்கின்றது. நன்னூலின் முன்னை உரையாசிரியர் மயிலை நாதரும் குறித்த நன்னூற் சூத்திரவுரையில் தமது உரைக்கு இச் சூத்திர உரையை மேற்கோள் காட்டியுள்ளார். அவிநயர் என்ற இலக்கண ஆசிரியரும் எங்கோ இவ்வுண்மைக்கு இதனை மேற்கோள் காட்டியிருப்பதாக ச. தண்டபாணி தேசிகராற் பதிப்பிக்கப்பட்ட நன்னூல் விருத்தி யுரையில், இச் சூத்திரவுரைக்கான அடிக்குறிப்புத் தெரிவிக்கின்றது.

இது இங்ஙனமாக, இந் நன்னூற் சூத்திரத்திற்கு உரை வகுத்த சங்கர நமச்சிவாயர், 'அளபு' க்குப் பதில் அளவு எனப் பாட பேதங் கொண்டு,

> "ஐகாரந் தன்னைக் கருதித் தன் பெயர் கூறுமளவிற் குறுகாது, ஒழிந்த மொழி முதல் இடை கடை யென்னும் மூன்றிடத்தும், முன்னும் பின்னும் இரு மருங்குமாய எழுத்தின் தொடர்பால், தன் மாத்திரையிற் குறுகும் "

என உரை கண்டுள்ளார். மேலும், தற்சுட்டளபு என்ற சூத்திரத் தொடர், தற் சுட்டும், அளபும் என உம்மைத் தொகையாக விரிக்கப்படுதலைத் தவிர்க்க வேண்டி, சுட்டளவு வினைத்தொகை (சுட்டும் அளவு) எனக் குறிப்பிட்டு விட்டு;

> "இனி, அளபெனப் பாடங்கொண்டு அளபென்பதனை அளபெடையாக்கித் தன்னைச் சொல்வதற்கண்ணும் அளபெடுத்தற் கண்ணும். குறுகாதெனப் பொருள் கூறுவாருமுளர். தன்னியல்பாய இரண்டு மாத்திரையினின்றும் குறுகுதல் இல்லனவற்றை ஒழிப்பார், விகாரத்தால் மூன்று மாத்திரையும் நான்கு மாத்திரையுமாய் மிக்கொலிக்கும் அளபெடையை ஒழிக்க வேண்டாமையின் அது பொருந்தா தென்க".

எனக் கூறி மறுத்துள்ளார்.

இவ்வுரையைத் திருத்திய சிவஞான சுவாமிகள் சங்கர நமச்சிவாயரின் இவ்வுரைப் பகுதிக்கு, மேற்காட்டிய 'அளபெடை தனியிரண்.....' என்ற உரை மேற்கோளை முதலிற் சேர்த்து, 'எனக் கூறினாரும் உளராலோ எனின்', எனுங் கடாவையும் முடிவில் நிறுத்தி 'இது மறுத்தல் என்னும் மதம்' என்ற தம் துணிபையுஞ் சேர்த்துச் சீர்செய்துள்ளார்.

உண்மை நோக்கில் ஐகாரம் மொழி முதல் இடை கடைகளிலும் ஔகாரம் மொழி முதலிலும் அளபெடை ஏற்குங்கால் முன் காட்டப்பட்டுள்ள அவ்வவற்றின் முயற்சிப் பிறப்பு நிரம்பப் பெறுதல் மூலம் இரண்டு மாத்திரையாக ஒலித்தபடியே நின்று அளபெடுத்தல் கண்கூடு. அதை 'உரனசைஇ' 'வரனசைஇ' என உச்சரித்தறிதல் சாலும். (ஔகார அளபெடைக்கு உதாரணம் யாருங் காட்டக் கண்டதில்லை)

இவ்வமைதிக்கு 'ஐ மூவழியும் நையும், ஔவும் முதலற்றாகும்' என்ற நியமம் குந்தகமாகுமோ என்ற ஐயம் நீக்குதற் பொருட்டு அவை அளபினுங் குறுகா எனல் சொல்லித்தானாக வேண்டும் என்பதை மறுத்தற்கியலாது. இங்கு சங்கர நமச்சிவாயர் சொல்லும் மிக் கொலிக்கும் அளபெடையை விலக்க வேண்டாமை அன்று; அம் மிக்கொலித்தலுக்குக் குந்தகமாகும் விதியொன்றால் அது பாதிப்புண்ண விருக்கும் சூழ்நிலையை விலக்க வேண்டுவதே பிரதானம் என்பது வெளிப்படை.

எனவே இதன்கண் இடம் பெற்ற சங்கர நமச்சிவாயரின் மறுப்பும் சிவஞானமுனிவரின் விதப்பும் உண்மையொடுபட்டனவ்வாமோ என்பது இதன்கண் ஐயம்.

❖❖❖❖❖❖❖

வேற்றுமையியல்

பெயரியற்கு முன் ஆனமை

வேற்றுமை பெயர் சார்ந்து வருவது. பெயர்ப் பொருளிடத்திலேயே அதன் தாக்கமாகிய வேறுபடுதல் நிகழ்கிறது. அவ் வேறுபடுதலைச் சொல்வடிவில் வைத்துக் காட்டும் குறிகளாகிய உருபுகளும் பெயரையே ஒட்டி வருகின்றன. இக் காரணங்களில் வைத்துப் பார்க்கும் போது பெயர் பற்றிய விவரம் முதலில் அறியப்பட்டுப் பின் வேற்றுமை பற்றிய விவரம் அறியப்படுதலில் ஒரு பொருத்தமுண்டெனத் தெரிகின்றது. நன்னூல் அவ்வொழுங்கையே பின்பற்றியிருத்தல் இதற்கு நிதர்சனமாகும். ஆனால், தொல்காப்பியம் சொல்லதிகாரத்தில் வேற்றுமை வரலாறு பற்றிய மூன்றியல்கள் முன்னும் பெயர் வரலாறு பற்றிய பெயரியல் பின்னுமாக அமைந்திருத்தல் இலக்கண ஆர்வலர்களுக்கோர் புதிராகும். அதனையுளங் கொண்டு உரையாசிரியர் சேனாவரையர் அதற்கு மூன்று ஏதுக்கள் காட்டி அமைதி கூறுகின்றார். முதலியலாகிய கிளவி யாக்கம், பெயர், வினை, இடை, உரி என்ற நால்வகைச் சொற்களுக்கும் பொது இலக்கணங் கூறுவதை அடுத்துப் பெயரும் உருபெனப்படும் இடைச்சொல்லுமாகிய இரு சொற்களுக்குப் பொதுவான இலக்கணங் கூறுவதென்ற நோக்கில் அது பொருத்தமாகலாம் என்பது ஒன்று. வேற்றுமை இலக்கணம் உணர்த்துதற்கு வேறிடம் இன்மை என்பது ஒன்று. வேற்றுமை உணர்த்திப் பெயருணர்த்துதல் முறை என்பதொன்று. இவற்றில் முன்னைய இரண்டும் ஏதோ இருக்க, மூன்றாவதில் சற்றே அர்த்தப்பிடிப் புள்ளதாகத் தோன்றுதலின் அதையே விரித்து விளக்கி வேற்றுமை முதலிற் கூறப் பட்டமைக்கு ஏதுவாகக் கொள்ளலாமோ என்பது ஐயம். அதன் விவரம் வருமாறு:

பின் நிறுத்தப்பட்டிருக்கும் பெயர், வேற்றுமை நிகழ்வுக்கு இடமாகிறது. அது வேறுபடு நிலையில் முதல் நிலையாகிய வினை முதலாம் நிலையே, அவாய் நிலை வகையால் வினை தோன்ற உதவுகிறது. அவ் வினையும் வேற்றுமை நிலைகள், அதாவது பெயர்பொருள் வேறுபடுநிலைகளாகிய செய்பவன், செய்பொருள், கருவி, நிலம், இன்னதற்கு இதுபயன் என்ற வினைக் காரணிகள் ஆறை உட்கொண்டவை ஆகின்றன. இவ்வகையில் வினைச் சொல்லை அறிதலிலும் வேற்றுமையின் செல்வாக்கே அதிக இடம் பெறுவதாகின்றது. இனி, வேற்றுமைத் தொடர் ஒன்றில் பெயர் பெயராயிருக்க வினை வினையாய், அதாவது தொழில் நிகழ்வு உணர்த்துவதாய் இருக்க இவற்றிடை அவ்விரண்டுமாகாமல் அதேவேளை அவற்றின் சார்பை இன்றியமையாமலும் நிற்கும் வகையால் தம்மை இரண்டுக்கும் இடை நிகரனவாகக் காட்டும் உருபுகளே இடைச்சொல்லை அறிவிப்பனவும் ஆகின்றன. இதன் மூலம் இலக்கணத்தில் மேல் வரும் பெயர், வினை, இடை எனுஞ் சொல் வகை மூன்றும் வேற்றுமையில் வைத்தே அறிமுகமாகும் விசேஷம் நோக்கி இங்கு நாற் சொற் பொது விலக்கணமாய கிளவியாக்கத்தை அடுத்து வேற்றுமை முதலில் இடம் பெறுவதாயிற்று.

மொழியொன்று செம்மையாக அறிமுக மாவதற்கு அம்மொழியின் வேற்றுமையே சரியான திறவுகோல் என்பதும் ஒன்று. சம்ஸ்கிருத இலக்கணத்தில் வேற்றுமை பற்றிக் கூறும் காரக படலம் முதலியன கூறியே வினையிலக்கணங் கூறும் திங்ஙுப்படலம் முதலியன இருத்தல் இதற்கு நிதர்சனமாகும்.

இதற்கிணங்க வேற்றுமை இலக்கணம் உணர்த்திப் பெயர் வினை இடைகளின் இலக்கணம் உணர்த்துவதே முறை என விரித்து அதுவே தொல் காப்பியம் சொல்லதிகாரத்தில் வேற்றுமை இலக்கணம் முதலில் இடம் பெற்றமைக்கு ஏற்கப்பட்ட காரணமாகலாமோ? இது அறிஞர் அபிப்பிராயத்துக்கு ஒவ்வுமோ.?

❖❖❖❖❖❖❖

எழுவாய் வேற்றுமை

தொல்காப்பியச் சொல்லதிகாரத்து வேற்றுமையியலில், ஐந்தாஞ் சூத்திரம் பெயர்ப் பயனிலைகளென ஆறை அறிவிக்கின்றது. நாலாஞ் சூத்திரம் எழுவாய் வேற்றுமை பெயர்

தோன்றுநிலையே என்றிருப்பதால், இங்கு பெயர்ப் பயனிலை என்பதில் பெயர் என்றது எழுவாய் வேற்றுமையே எனல் துணியப்படும். அதன்படி பெயர்ப் பயனிலை என்ற தொடர் எழுவாய்க்குப் பயனிலை எனப் பொருள்படும். அப்பயனிலைகள் ஆறில் ஒன்று பெயர் கொள வருதல். சேனாவரையர் அதற்கு 'ஆ பல' என உதாரணங் காட்டியுள்ளார். அத்துடன்,

> "ஆவெனும் எழுவாய் வேற்றுமைக்குப் பலவெனும் பெயர் பயனிலையாமெனில், அப்பெயர்க்குப் பயனிலை யாதாகும் எனக் கடாவி, அது (பல) பயனிலையாய் 'ஆ' என்பதனை முடித்தற்கு வந்ததாகலின் தான் பிறிதோர் சொல் நோக்காது அதை முடித்தமைந்து மாறும்"

என விடையும் இறுத்துள்ளார்.

நன்னூலில் வரும், 'எழுவாயுருபு திரிபில் பெயரே' (பெயரியல் 28) என்ற சூத்திரவுரையில் சங்கரநமச்சிவாயர், 'பயனிலையாவது பிறி தொன்றனையும் வேண்டாது பொருள் முற்றிநிற்கும் நிலையன்றே' எனக் கூறியிருப்பதும் இதனையே. இனி,

> "அற்றேல், பயனிலை கொள்ளாதது எழுவாய் வேற்றுமை ஆமாறென்னை எனின் உருபேற்றல் பெயர்க்கிலக்கணம் ஆயினும் உரு பேலா வழியும் பெயராமாறு போல எழுவாய் வேற்றுமை பயனிலை கொள்ளா வழியும் எழுவாய் வேற்றுமையே யாம் என்பது".

என, மேல் தொடரும் சேனாவரையர் கூற்றின் பொருந்துமாறு உணர்தற்கரிதாகின்றது. எங்கனமெனில்,

தன்னியல்பில் நின்ற பெயரொன்று வினைமுதலாக விகாரமுற்றுத் தோன்றுவது ஏதாவது ஒரு வினையைக் கொள நிற்கும் அவதரத்தில் மட்டுமே. அப்பெயர் வேற்றுமை, முதல் வேற்றுமை எனப் பெயர் பெறுவதும் அங்ஙனம் அது தன்நிலையில் இருந்து விகார முறுதல் காரணமாகவே என்பதும் பிரசித்தமான ஒரு வித்துவ அபிப்பிராயமாதல் பலரும் அறிவதொன்று. 'அவிகாரியாய் நின்றபெயர் இம் முடிக்குஞ் சொற்களை (வினை, பெயர், வினா) அவாவிய காலத்து அவிகாரியினின்றும் விகாரியாகத் தன்னைத் தானே வேற்றுமை செய்கின்றமையுங் காண்க எனவும் 'இதனை முதல் வேற்றுமை என்ற தென்னையெனின் பெயரேயாய் நிற்றலானும் வினைமுதற் பொருண்மையைத் தருதலானும் என்க' எனவும்.

'எழுவாயுருபு திரியில் பெயரே' என்ற நன்னூற் சூத்திர உரையில், சங்கரநமச்சிவாயரால் முன்மொழியப்பட்டுச் சிவஞான சுவாமிகளால் தமது விருத்தியுரையில் அநுவதிக்கப்பட்டிருக்கும் பகுதி நோக்கத் தகும். அத்துடன், அதே சூத்திர உரையில்,

> "எழுவாய் வேற்றுமைக்கு வேறுருபு இல்லை யென்பதும் வினையும் பெயரும் வினாவும், கொண்டு முடியுஞ் சொல்லாய் நிற்க அவற்றுக்குக் கருத்தாவாய் நிற்பதே அதன் பொருள் என்பதும் பெறப்பட்டன. திரிதலில்லாத பெயரை வேற்றுமை என்றது, தானே தன் பொருளைக் கருத்தாப் பொருளாக வேறுபடுத்தலால்"

எனவரும் சடகோபராமாநு ஜாசாரியர் கிருஷ்ணமாசாரியர் உரைப் பகுதியுங் கவனிக்கத் தகும்.

பயனிலையை அவாவி அது கொள்ளாதவழி பெயர் ஒன்று எழுவாய் வேற்றுமை யாகா தென்பதை இவ்விளக்கங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. இங்ஙனமாதலால்,

'பயனிலை கொள்ளா வழியும் எழுவாய் வேற்றுமை எழுவாய் வேற்றுமையே தான்' எனக் கொள்வதாயின் 'திரிபில்லாத பெயரே எழுவாய்' என்ற சாட்டில் பெயரெல்லாமே எழுவாய் வேற்றுமை எனக் கொள்ளவரும் விபரீதமும் தவிர்க்க முடியாத ஒன்றாகுமன்றோ?

இதன் சார்பிலாம் விசாரம் மேலுமுள. விரிவஞ்சி விடுத்தாம்.

தமிழ்க் கவிதை வழவங்கள் எல்லையற்றன

மாவிட்டபுரம் க. சச்சிதானந்தன்

ஐவகை அடியும் விரிக்குங்காலை
மெய்வகை அமைந்த பதினேழ் நிலத்தும்
எழுபது வகையின் வழுவில வாகி
அறுநூற் றிருபத் தைந்தா கும்மே.

(தொல். பொரு. செய்யு. 357)

என்றார் தொல்காப்பியர்.

குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி ஆகிய ஐந்து அடிகளையும், பதினேழு எழுத்து நிலங்களிலும் எழுபது வகையில் விரிக்கும்போது, அவை வழுவிலவாகி அறுநூற்றிருபத்தைந்து வகையாகும். இந்த அறுநூற்றிருபத்தைந்து வகையும் யாவையெனப் பேராசிரியர் கணக்கொப் படைத்துள்ளார். இந்த அறுநூற்றிருபத்தைந்தும் எழுத்தெண்ணும் கட்டளை அளவடிக்களுக்காகும். அடுத்த சூத்திரம் ஏனைய வகைகள் எல்லாவற்றிற்கும் விரித்தால் சேர்மானங்களில் (Urmutation) எல்லையற்று பாவகை விரியும் என்று கூறினார்.

ஆங்ஙனம் விரிப்பின் அளவிறந்தனவே.

(தொல்பொரு. செய்யு.358.)

இந்த அறுநூற்றிருபத்தைந்து வகைகளில் எண்பத்தேழு வகைகளே இன்றுவரை புலவர்களாற் பாடப்பட்டுள்ளன. மேற்கூறிய அறுநூற்றியிரு பத்தைந்தில் தொடை வகையால் வேறுபடுவன சேர்க்கப்படவில்லை. தொடை வகையால் உறழ்ந்தால் மேலும் எல்லையற்றுப் பெருகும்.

கவிதையின் வடிவம், தமிழில் இவ்வாறு கற்பனையின் மேற்பட்டு விரிக்கப்படக் கூடியதாய் இருக்க புதிது படைக்க விரும்புவோர், தங்களின் புதிய எண்ணங்களை வெளியிட கவிதை வடிவங்கள் இல்லையென்று அலுத்துக் கொள்கிறார்கள். **மோனை எதுகைக் கட்டுப்பாடு, தமிழ்க் கவிதையின் சட்ட வரம்பன்று.**

பூத்த வேங்கையின் வியன்சினை ஏறி
மயிலின மகவும் நாடன்

என்ற கவிதையும், இது போன்ற பல கவிதைகளும் மோனை எதுகை அற்றன. ஆனால், அவை அழகுக்கு மெருகூட்டுவன. இன்று, சாதாரண சினிமாக்கவிதை எழுதுபவர்களும், மோனை எதுகைகளின் அழகால், அழகுள்ள இலக்கியங் களாக்கியுள்ளார்கள்.

கண்ணதாசன்,

மலர்ந்து மலராத பாதிமலர் போல
மகிழ்ந்த இளஅன்னமே என்றும்,
உள்ளம் என்பது ஆமை – அதில்
உண்மை யென்பது ஊமை.

என்றும் தன் பாடல்களை அழகோடு உயிருள்ளவை யாக்கியுள்ளார்.

காந்தி பிறந்த நாடுக்காரன்
கம்பெடுத்தால் வேட்டைக்காரன்

என்ற அடிகளோடு தொடர்ந்து வரும்அடிகள் மக்கள் கவிஞர்களின் படைப்புகள்.

அடிகள் அளவொத்து வர வேண்டும் என்பதும் தமிழ்க் கவிதையின் சட்ட வரம்பன்று. நான்கு சீரடிகளுக்குள் முச்சீரும், இருசீரும், ஒரு சீரும், ஓரசையுங்கூட ஒசைக்கேற்ப வருகின்றன. கலிப்பாடலில் தனிச் சொல் ஓரடியாகும்; அம்போதரங்கம், அராகம், சுரிதகம் என்பன, தரவு தாழிசை என்பவற்றின் சீரெண்ணிக்கையிலும் வேறுபட்டன.

'வாள் வலந்தர மறுப்பட்டன' என்றற் றொடக்கத்தன அகவலோசைக்குள் வஞ்சியோசை இடையிட்டு நாற்சீரடிக்குள், இருவஞ்சிச்சீர் வருவன. இவை போன்றன, சங்க இலக்கியத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்டன. மேற்காட்டியது ஒன்று.

ஆகெழு கொங்கர் நாடகப் படுத்த
வேல்கெழு தானை வெருவரு தோன்றல்
உழைப்பொலிந்த மா
இழைப்பொலிந்த களிறு.
வம்பு பரந்த தேர்
அமர்க் கெதிர்ந்த புகன் மறவரொடு

என்பன பதிற்றுப்பத்தில் சிலவரிகள். அவற்றின் சீரமைப்பு, ஓசைமாற்றம் பொருளுக்கேற்ப இலயம்படுவதை நோக்குக.

அவனுந்தான்,
ஏனலிதணத் தகிற்புகை யுண்டியங்கும்
கானக நாடன் மகன்.

என்பது அடியளவு மாறுபடும் வகையைக் காட்ட கலித்தொகைப் பாடலில் ஒருதாரணமாகும். இவ்வாறு, அடிகளின் அளவு, பொருளுக்கேற்ப மாறுபடக்கூடிய பூரண சுதந்திரம் தமிழ்க்கவிதை வடிவ அமைப்பில் வேண்டியவாறுண்டு.

ஒரு புலவர், தாம் பாடும் பொருளுக்கேற்பவும் எண்ணமெய்ப்பாட்டு வேகத்துக்கேற்பவும், அடிகளின் நீளத்தைக் கூட்டக் குறைக்க, தமிழ் வடிவங்களில் பூரண சுதந்திரமுண்டு.

கவிதை வடிவங்களை, ஒருவன், தான் சொல்லவந்த எண்ணத்திற்கேற்ப வேறுபடுத்தி எழுத பரிபூரண சுதந்தர முண்டு. புலவனின் ஆக்கத் திறன், கற்பனை, புதுமை நாட்டம் என்பவற்றிற்குத் தமிழில் பூரண சுதந்தரமுண்டு. தொல்காப்பியனை ஒருதரம் படியுங்கள்; தொல்காப்பியம் என்றால், ஏதோ பேயோ பிசாசோ என்று ஒடுபவர்களும், அது விளங்காத ஒரு நூல் என்று மலைத்து நிற்பவர்களும், அதற்குக் கிட்டப் போக அஞ்சுகிறார்கள்; பயமும் மலைப்பும் வேண்டாம். தொல்காப்பியரைப்போல் எளிமையும், விளக்கமும் விஞ்ஞானத்தின் விதிகள் போன்று விதிகளும் (Principles) பொதிந்து நூல் செய்த வேறொருவர் கிடையார். நாடுங்கள் அவரை, புதிதான கவிதை வடிவங்கள் வேண்டுமென்று கூக்குரலிடுபவர்களே.

No were is free said eliot, for a man who wants to do a good job of work (Eng. Brt. 15:72)

தாங்கள், புதிது படைக்க, கட்டற்ற **கவிதைகளை** – இவற்றைப் புதுக்கவிதைகள் என்று முலாம் பூசி – நாடுபவர்கள், பரந்து எல்லையற்று விரியும் தமிழ்க் கவிதையின் கட்டற்ற சுதந்தரத்தை ஒருதரம் பாருங்கள். புதிது! புதிது! எவ்வளவு புதிது வேண்டுமானாலும் செய்யலாம்.

ஆனால், ஒன்று கூற வேண்டும். ஒரு மொழியில் கவிதை அடிப்படையில், சிலமொழித்தனித்தன்மையுண்டு. ஆங்கிலம், அழுத்தத்தை (Accent) அடிப்படையாகக் கொண்டு கவிதை வடிவம் அமைக்கு மொழி. சொல்லும் தொனியினால் கவிதை அடிப்படை பெற்றது சீனமொழி. இந்த அடிப்படைகள் என்றுமே மாறாது. அவை மொழியோடு பிறந்தவை.

Romeo and Juliut என்ற சேக்ஸ்பியரின் நாடகத்தில் Business என்று ஒரு சொல் வருகிறது. அதற்குக் குறிப்பெழுதியவர், அது மூவசைச் சொல் என்று எழுதியுள்ளார். வாசித்த பொழுது, முதலில், "மூன்றசைச் சொல், தானே. ஏன் அதை மூன்றசை என்று குறிப்பெழுத வேண்டும்" என்று தோன்றியது. அச் சொல் ஈரசையாக உச்சரித்தால் கருத்து வேறு, மூவசையாக உச்சரித்தால் கருத்து வேறு கொண்டது. ஒரே வரிவடிவம் அசையாலும்

அழுத்தத்தாலும் வேறுபடும். அசையழுத்தத்தால் ஒன்று பெயராகவும் ஒன்று வினையாகவும் வரும். இது ஆங்கில மொழி மரபு. அழுத்தத்தை அடிப்படையாகக் கொண்டது ஆங்கில கவிதை வடிவம். அதை அழுத்தம் குறியாது அச்சில் வடித்தாலும் மாறாது. ஆங்கிலேயர், ஆங்கிலம் பேசும்போது அழுத்தம் ஏற்ற இடத்தில் கொடுத்துத்தான் பேசுவார்கள். நாம் அதனைக் கவனிப்பதில்லை. சில இடங்களில் மெல்லழுத்தங்களாகவும் அமையும் (Weak Stress).

Do' not / for e'/ ver wit'h/ thy vai'lped lids
Se'ek for/ thy no/ ble fa'th/ ther 'in / the dust.

இவற்றுள் முதலாம் வரியில் மூன்றாவதும் இரண்டாம் வரியில் நான்காவதும் மெல்லழுத்தம் பெறுகின்றன. இந்த மொழியுச்சரிப்பிலான கவிதை அமைப்பு அம்மொழிக்குரியது. அவ்வாறே தமிழில் குற்றியலுகரம் குறைந்தொலிப்பதும் நம் மொழியின் ஒலி அடிப்படையில் எழுந்த கவிதை வடிவம். தொல்காப்பியன் இதற்கென்றே தனியான இரண்டு அசைகளை ஆக்கினான். அவை நேர்பு, நிரைபு என்னும் வாய்பாடுடையன.

உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ், ஞாயிறு கடற்கண்
டாஅங்கு

(திருமுருகாற்றுப்படை)

வலனேர்பு என்றசீர் 'நிரைநேர்பு' என்னும் வாய்பாடு பெற்றது.

தெரிவனநூ லென்றும் தெரியா தனவும்
வரிவளையார் தங்கண் மருங்கே – ஒருபொழுதும்
இல்லா தனவும் இரவே இகழ்ந்தெவரும்
கல்லா தனவும் கரவு. (நளவெண்பா)

கண்ணாரக் காணக் கதவு. (முத்தொள்ளாயிரம்)

கரவு என்பது நிரைபு என்னும் வாய்பாடு பெற்றது. கதவு என்பதும் நிரைபு என்னும் வாய்பாடு பெற்றது.

காசு, நாள், மலர், பிறப்பு என்பவற்றுள் ஒன்றால் வெண்பா முடியும் என்பது கொண்டு பார்த்தால், புகழேந்தியும் முத்தொள்ளாயிரகாரரும் வெண்பாவைப் பிழையாகப் பாடி விட்டார்கள் என்று தான் சொல்லத் தோன்றும். அவை நிரைபு என்னும் ஓரசையால் முடிந்தன.

இருக்கு வேதம் அழுத்தத்தையும் (Accent) அடிப்படையாகக் கொண்ட கவிதை அமைப்புப் பெற்றது. நான்கு வேத நூல்களிலும் இரு பிராமணங்களிலும் இந்த அழுத்தங்கள் குறிக்கப்பட்டுள்ளன. இது, அம்மொழியின் அடிப்படைக் கவிதை அமைப்புக்குரியது.

இவைகளை ஏன் காட்டுகின்றேனென்றால் மொழிகளின் கவிதைத் தன்மையின் அடிப்படையைக் காட்டுதற்காகவே.

ஆங்கிலத்தில் D. H. Lavarance என்பவரின் Smake என்பது கட்டற்ற கவிதையாயினும், அதிலுள்ள சொற்களின் ஆங்கில அசையழுத்தங்கள் மாறாதன. இந்த மொழி மரபுக்குள் அவருடைய கட்டற்ற தன்மை யுண்டு. நம் மொழியில், கட்டற்ற கவிதையைப் புனைவோர் இதனைத் தெரிந்து கொள்ளுதல் மிக முக்கியம். தெரிந்து கொண்டு கட்டற்ற கவிதை வடிக்கலாம்.

தமிழில், கவிதை வடிவங்கள் அளப்பிலவாகப் பரந்து கிடக்கின்றன. புதிது! புதிது!! புதிது வேண்டுபவர்களுக்குத் தொல்காப்பியம் ஒரு வழிகாட்டியாக அமையும். இற்றைவரையில் அளவடிக்குக் கூறிய இருநூற்று நாற்பத்தைந்தில் எண்பத்தேழு வடிவங்களே பாடப் பெற்றுள்ளன. ஏனையவை, அளவடியில் மாத்திரம் இனிமேல் பாடவுள்ள கவிதை வடிவங்கள். ஏனைய அடிகளில் எல்லையற்றுக் கிடக்கின்றன. தொடைகளோடு உறழ (Permutation) அளவிறந்தன. இவற்றைப் பாடல்களிலமைக்க எத்தனை காலம் எடுக்குமோ!

தமிழ் இலக்கிய வரலாற்றில் இதழ்கள்
விரிவான ஆய்வுக்கான முன்குறிப்புக்கள் சில

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி

நூல்களைத் தளமாகக் கொண்ட பாரம்பரியத்தைச் சேர்ந்தனவற்றை மாத்திரமே ஆதாரமாகக் கொண்டு தமிழிலக்கிய வரலாற்றினை நோக்கும் இயல்பு நம்மிடையே இருந்து வந்துள்ளது. நாம் ஒரு குறிப்பிட்ட எழுத்துப் பாரம்பரியத்தையே போற்றி வந்துள்ளோம். அதனுள்ளும் கூட சில அம்சங்களை விட்டுவிட்டோம். உதாரணமாகத் தமிழில் உள்ள அறிவியற் பாரம்பரியம் பற்றி நமது இலக்கிய வரலாற்று நூல்கள் பேசுவதில்லை. இலக்கிய வரலாறென்பது அந்த மொழியில் எழுதப்பட்ட எல்லா எழுத்துக்களினதும் வரலாறு ஆகும். அதாவது தமிழர் சிந்தனை எவ்வெவ்விடங்களிலெல்லாம் தொழிற்பட்டுள்ளதோ அந்த எழுத்துக்கள் யாவும் – அவை பிறமொழிகளில் இருப்பினும் – எடுத்துப் பேசப்படுதலே முறைமை (13 ஆம் நூற்றாண்டின் பின்னர் தென்னகத்தில் தோன்றிய சமஸ்கிருத நூல்களில் காணப்–படும் தமிழ்ச் சிந்தனைகள், பாரம்பரியங்கள் பற்றிய நேர்மையான ஆய்வுகள் இருந்திருப்பின் தமிழ்நாட்டில் சமஸ்கிருத எதிர்ப்பு குறைந்திருக்கும்.)

இத்தகைய ஒரு புறக்கணிப்பை நவீன தமிழ் இலக்கியத்தில் (காலணித்துவ, பின்காலணித்துவ காலங்களில்) செய்துவிட முடியாது. ஏனெனில் இக்காலத்தில் தமிழில் முன்னர் நிலவாத இரு முக்கிய அம்சங்கள் காணப்படுகின்றன. ஒன்று கல்வியில் தமிழ். இது இரண்டு விடயங்களை உள்ளடக்கியது.

அ. சகலருக்குமான கல்வி,

ஆ. புதிய பாடங்களின் அறிமுகம்.

இந்த இரண்டாலும் ஒரு புதிய உலக நோக்கு தமிழ் மக்களிடையே ஏற்பட்டது.

அடுத்து, வேறுபடும் வாசக மட்டங் களுக்கான எழுத்து முறை நம்மிடையே பரவத் தொடங்கிற்று. இது எழுத்தறிவின் காரணமாக ஏற்பட்டது. எழுத்தறிவு வளர்ச்சியுடன் வாசிப்பில் இரு மட்டங்கள் துல்லியமாகின்றன. ஒன்று காத்திரமான வாசிப்புநிலை. மற்றது ஜனரஞ்சக நிலை. இது உண்மையில் நமது சமூகத்தில் தோன்றியுள்ள ஒரு புதிய நிலைப்பாடு ஆகும். ஒருவரே இரண்டு மட்ட வாசிப்புக்களைச் செய்கின்றமையையும் அவ தானித்தல் வேண்டும்.

தமிழ்நாட்டில் அச்சிதழ்கள் வந்த சமூகப் பின்புலத்தைத் தெளிவுற விளங்கிக் கொள்ள வேண்டும். அவ்வாறு நோக்கும் பொழுது நாம் தமிழகத்தின் மீதான பிரித்தானிய ஆட்சியின் ஆரம்ப காலத் தாக்கத்திற்குச் செல்லல் வேண்டும்.

பிரித்தானிய ஆட்சியின் வருகையுடன் தமிழகத்தில் குறுநிலை ஆட்சியாளர்களின் அதிகார முறைமை சிதைக்கப்பட்டு தாமிரபருணி, காவேரி ஆகிய ஆற்றுப்படுகைகளிலும் கொங்கு நாட்டிலும் ஒரு புதிய சுதேச உயர்குழாத்தினர் (Elite) முக்கியம் பெறத் தொடங்குகின்றனர்.

இந்த நன்மைகளைப் பெற்றோர் பிராமண, வேளாள சாதியினரே. ஆற்றுப்படுகை நகரங்களான திருச்சி, திருநெல்வேலி போன்ற இடங்களில்

கிடைக்கப்பெற்ற கல்வி வசதி காரணமாக கீழ்மட்ட அரச உத்தியோத்துக்கு இவர்களிலிருந்து உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டனர். இந்த நடைமுறை காரணமாக அரசாங்கத்திற்கும் வெகு சனங்களுக்குமிடையே ஊடாடுகின்ற ஒரு சமூக வாய்ப்பு இவர்களுக்குக் கிடைக்கிறது மேற்குறித்த இந்தப் புதிய வட்டத்திலிருந்து வந்தவர்களிடையே தம்முடைய தனித்துவம், பாரம்பரியம் பழமை பற்றிய கருத்து பிரக்ஞை நிலைக்கு படிப்படியாக வளரத் தொடங்குகிறது. இது சமஸ்கிருதம் தமிழ்பற்றிய மொழிகளின் மீள்நோக்குக்கு இட்டுச் செல்லும் அதேவேளையில் குறிப்பாகத் தொண்டை மண்டலப் பகுதியில் இதுகாலம் வரை எத்தகைய கல்வி வசதிக்கும் வாய்ப்பற்றிருந்த அடிநிலை மக்கள், பிரித்தானியத் தொடர்புகளால் சமூக உணர்வு பெறுகிறார்கள். இது ஒரு முக்கிய பண்பாகும். இந்த அடிநிலை மக்களின் மேற்கிளம்புகையில் கிறித்தவத்துக்கு ஒரு முக்கிய பங்கு உண்டு.

மேற்கூறியவை காரணமாக தமிழ்நாட்டின் வரலாற்றில் தோன்றும் இரு சக்திகளும் (உயர் குழாத்தினரும் அடிநிலை மக்களும்) தங்களை நவ இந்தியமயவாக்கப் பின்புலத்தில் இனங்கண்டு கொள்ள முயன்றனர். இதனால் தமிழ்ச்சமூக நிலையில் நான்கு நிலைப்பட்ட ஒரு எழுகை தெரிய வருகிறது.

1. 'இந்தியாவுக்குள் தமிழ்நாடு' (தமிழிலும் பார்க்க இந்தியா வலியுறுத்தப்பட்டது.) என்ற நிலைப்பாடு.
2. தமிழ்நாடு பிரதானப்படுத்தப்படுகிறது (அதாவது தமிழ் என்பது இந்தியாவுக்குள் உள்ள ஒன்று என்பது மறுக்கப்படாமல் தமிழ் வலி யுறுத்தப்படுகிறது.)
3. தமிழ்நாட்டிற்குள் உள்ள சமூகக்குழுமங்கள் (பெரும்பாலும் அடிநிலைச் சாதிகள்) தங்கள் இருப்புப் பற்றிய பிரகஞையைக் கொள்ளுதல்.
4. நிறுவன எதிர்ப்புடைய, பகுத்தறிவு வாதக் கருத்துநிலை பேசும் ஒரு குழுமம்.

அச்சு சாதனப் பரவுகையுடன் மேற்கிளம்பும் இதழ்கள் மேற்கூறிய ஒவ்வொரு மட்டங்களிலிருந்தும் வெளிவருவதைக் காணலாம். உதாரணம்:–

1. சுதேமித்திரன், இந்தியா.
2. தமிழ்நேசன், நவசக்தி.
3. பஞ்சமர் (1871), திராவிட பாண்டியன் (1885), ஆன்றோர்மித்திரன் (1886), பறையன் (1893), தமிழன் (1907), திராவிடக்கோகிலம்.
4. அயோத்திதாஸ் (1841 – 1917), ஒருபைசாத் தமிழன்.

இவற்றுள் நாம் முதலிரண்டு பற்றியே இலக்கிய வரலாற்றில் விரிவாக ஆராய்ந்துள்ளோம். சஞ்சிகைகளின் தேவை பற்றிய சமூகப்பின்புலம் முக்கியமானதாகும்.

சஞ்சிகைகளின் எழுகையை இன்னொரு நிலைநின்றும் பார்க்கலாம். தமிழ்நாட்டின் எழுத்தறிவு மயவாக்கத்துடனும் சனநாயக மயவாக்கத்துடனும் சஞ்சிகைகள் தொடர்பு கொண்டுள்ளன.

அ. தமிழ், தமிழரின் நவீன மயவாக்கம். இது மேல்நாடுகளில் காணப்பட்ட வளர்ச்சிகளை தமிழுக்குள் கொண்டு வந்தது. சமூக மாற்றத்திற்கும் இதற்கும் ஒரு ஊடாட்டம் இருந்தது.

ஆ. இந்த நவீனமயப்பாட்டு வளர்ச்சி காரணமாக இதழ்களினூடே சிறப்பு நிலைப்பட்ட (Specialised) இதழ் வளர்ச்சி ஏற்பட்டது. அதாவது தொடக்க காலத்தில் அரசியல், சமூகம், அறிவியல், பண்பாடு, இலக்கியம் என்பனவற்றைத் தொகுத்துத் தருகின்ற மரபினையுடையனவாகிய இதழ்கள் படிப்படியாக ஒவ்வொரு துறைக்கும் உரியனவாகச் சிறப்பு நிலை பெறும் தன்மையே இங்குக் குறிப்பிடப் பெறுகின்றது (அரசியல் சஞ்சிகைகள், அறிவியற் சஞ்சிகைகள், இலக்கியச் சஞ்சிகைகள்).

இ. மகிழ்வளிப்பு வாசிப்பின் தொடக்கம் (பிரசண்ட விகடன், ஆனந்த விகடன்).

சுதந்திர காலம் வரையும் எந்தப் பத்திரிகைக்கும் அடிநாதமான ஒரு அரசியல் வரிப்புணர்வு (Commitment) இருந்தது. அந்தச் சூழல் மாறி, 'வாசிப்பதற்காகவே வாசிப்பு' என வாசிப்பு ஒரு விற்பனைப் பண்டமாகக் கையாளப்படும் நிலைமை ஏற்படுகிறது. இந்த நிலையின் எடுத்துக்காட்டாகக் 'குமுதம்'

அமைகிறது. விடுதலைக்கு முன்னர், பின்னர் என்ற கோடு பிரிப்பில் இது ஒரு முக்கிய அம்சமாகும். அதேவேளையில் இதழ்களின் வளர்ச்சியை ஒரு தொடர்ச்சியாகவும் பார்த்தல் வேண்டும். ஏனெனில் 1947க்குப் பின்னர் வருகின்ற வளர்ச்சிகளுக்கான விதைகள், முளைகள் (சில வேளைகளிற் செடிகள்) சுதந்திரப் போராட்டகாலத்திலேயே காணப்படுகின்றன.

இந்தப் பின்புலத்திலேயே நவீன தமிழ் இலக்கிய வரலாற்றில் இதழ்கள், பெறும் இடத்தினை நோக்கல் வேண்டும்.

II

தமிழில் நவீன காலத்திற்கு முன்னர், அதாவது அச்சுயுகத்திற்கு முன்னர் காணப்படாதனவும் நவீன யுகத்தோடு மாத்திரமே வருகின்றனவுமான எழுத்துக்கள் யாவை என்பது பற்றி ஒரு தெளிவு நமக்கு முதலில் தேவை. அவற்றைப் பின்வருமாறு விரித்து நோக்கலாம்.

1. அரசியல், சமூக விமர்சனங்கள்.
   இத்தகைய விமர்சனம் இப்பொழுது நடை பெறுகின்ற வகையில் முன்னர் நிகழவில்லை.
2. புனைகதை - சிறுகதை, நாவல்
   ஏற்கனவே நிலவிய கதை மரபுகளுக்கும் இதற்கும் வேறுபாடுகள் உள்ளன. அந்த வேறுபாடுகளை மீறி, இவை தமக்கே உரிய பெரும் வளர்ச்சியைப் பெற்ற முறைமைகளையே இவற்றின் வரலாறாகக் கொள்ளவேண்டும்
3. புதுக்கவிதை
   சந்த ஒத்திசையை நம்பியிருக்காததும் பிரதானமாகக் கட்புலனுக்கே உரியதுமான கவிதை வடிவம்.
4. புதிய நாடகம்
   கூத்துமரபில் வராது முற்றிலும் மேல்நாட்டு மரபினைச் சார்ந்தது.
5. இலக்கிய விமர்சனம்
   எந்த ஒரு இலக்கியப் பாடமும் தர ரீதியாக மதிப்பிடப்படலாம், படவேண்டும் என்ற எடுகோளை உடையது.

மேலே கூறிய ஐந்து எழுத்து வகைகளும் உலகப் பொதுவானவை ஆகும். இவற்றுக்கான பிரதான கூறுகள் இந்திய மரபிலிருந்தோ தமிழ் மரபிலிருந்தோ எடுக்கப்பட்டவை அல்ல.

இந்த வருகையில் இரண்டு நிலைகளைப் பிரித்துப் பார்த்தல் நலம்.

1. அவற்றின் வருகை அல்லது அவை மேற்கொள்ளப்படுகை.
2. வந்தவை, மேற்கொள்ளப்பட்டவை, தமிழ் அநுபவத்துடன் சுவறுகை. இந்தச் சுவறுகையுடன் தமிழ் அநுபவமும் சித்திரிப்பு முறையும் ஆழமாகின்றன.

இந்தச் சுவறுகையுடன்தான் உண்மையான நவீனத்துவம் வருகிறது. நவீனம் (modernism) 'நவீனமாம்தன்மை' யிலிருந்து (modernity) வருவது. இந்த modernity- யின் அடித்தளம் மனிதாயதச் சிரத்தையாகும் (Humanitarian Concern) இந்த நவீனத்துவம் தமிழில் இரு துறைகளில் வெளிப்படுகிறது.

அ. ஆக்க எழுத்து (creative writing)

ஆ. படைப்பாக்கம் சாரா எழுத்து (non-creative writing)

நவீன, தமிழ் இலக்கியத்தின் முதலாவது பெரு வளர்ச்சி எனக் கொள்ளப்பட வேண்டியது படைப்பாக்கம் சாரா எழுத்துக்களின் வருகையாகும். இதழ்கள் இதனைச் சனரஞ்சகப்படுத்தின. இதழியலின் (journalism) அடித்தளமே இதுதான். இது செய்திகளை அறிவித்தல் என்கின்ற புதிய தொடர்பு முறைமையை வளர்த்தது. மதம், கல்வி, அரசியல், சமூகம் சார்ந்த பல இதழ்கள் வெளிவரத் தொடங்கின. இவை ஒவ்வொன்றும் 'சராசரி வாசகர்' எனப்படுபவரை நோக்கி அளிக்கப்பட்டன. இங்கே சுதந்தரம் பற்றிய எழுத்துக்கள், தமிழ், தென்னிந்திய அரசியற் பிரச்சினைகள் பற்றிய எழுத்துக்கள் என இவை பல்கிப்பெருகின.

ஏற்கனவே கண்டபடி ஆரம்ப நிலையில் இவை அறிவுத் தகவல்களையும் குறிப்புரைகளையும் (அபிப்பிராயங்கள்) கூறுவனவாக அமைந்து படிப்படியே இலக்கியச் சிறப்புநிலையினை எய்தின. இப்போக்கினூடே புதிய இலக்கிய வடிவங்கள் படிப்படியாக அறிமுகமாயின – மாதவையாவின் 'பஞ்சாமிர்தம்',

வ. வே. சு. ஐயரின் 'பாலபாரதி' ஆகியன சிறுகதையின் வளர்ச்சிக்கு முக்கிய மானவையாகும்.

இந்த வளர்ச்சிகளினூடே 1930களில் வாசிப்பில் இரண்டு போக்குகள் துல்லியமாகத் தொடங்கின. (இவற்றுக்கான மூலக் கூறுகள் அதற்கு முன்னரேயே காணப்பட்டன. துப்பறியும் நாவல் வாசிப்பு – வெகுசனவாசிப்பு; விமர்சனங்கள் – காத்திர வாசிப்பு).

ஒன்று வெகுசன வாசிப்பு; மற்றது காத்திர வாசிப்பு. தமிழின் முதலாவது காத்திரமான சிறப்புநிலை இலக்கிய நவீனத்துவ இதழாக மணிக்கொடி கிளம்புகிறது. மணிக்கொடியின் வரலாற்றினுள்ளே இந்தச் செல்நெறியைக் காணலாம். 1933 – 35 வரை அது பிரதானமாக ஒரு அரசியல் விமர்சன இதழே. 1935 – 38 இல் அது இலக்கிய நவீனத்துவமுடைய இதழாகப் பரிணமித்தது.

இக்கட்டத்தில் இலக்கிய நவீனத்துவம் என்பது மேற்கில் தொழிற்பட்ட முறைமைக்கும் (இந்தியாவில்) தமிழில் தொழிற்பட்ட முறைமைக்கும் வித்தியாசம் உள்ளது என்பதை மனத் திருத்திக்கொள்ளல் அவசியமாகும். மேல் நாட்டில் என்பது பிரதானமாக முதலாவது உலக யுத்தத்துடன் வருகின்ற சமூக, உணர்முறைமை மாற்றங்களுடன் அதாவது மனிதர்களை புதிய நோக்கில் பார்க்கின்ற ஒரு முறைமையுடன் வருகின்றது.

தமிழில் நவீனத்துவம் என்பது புதியனவற்றின் வருகை தமிழினுள் உள்வாங்கப்படுவதன் வரலாறு ஆகும். இது 'பாலபாரதி', 'பஞ்சாமிர்தம்' முதலே நடைபெற்று வருவதாகும். ஆனால் மணிக் கொடியுடன்தான் சமூக மாற்றத்தினால் ஏற்படும் தாக்கங்களைத் தனிமனித உணர்வு நிலைநின்று சித்திரிக்கும் பண்பு கலாநேர்த்தியுடன் செய்யப்படும் முறைமை வளமடையத் தொடங்குகிறது. அத்துடன் தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் எடுத்துப் பேசப்பெறும் முக்கிய கட்டங்களை இக்கண்ணோட்டத்தில் மீள் நோக்குச் செய்யும் தன்மையும் காணப்படுகிறது. (புதுமைப்பித்தனின் 'அன்றிரவு', 'சாபவிமோசனம்' முதலிய கதைகள்) எனவே நவீனத்துவம் என்ற சொல்லைக் கையாளுகையில் ஒரு விமர்சன நிதானமிருத்தல் அவசியம்.

நவீனத்தின் (modernity) வருகை யோடேயே தமிழில் 'மறுமலர்ச்சி இயக்கம்' என்ற எண்ணக்கரு வருகிறது. மறுமலர்ச்சி என்பது Renaissance என்பதன் தமிழாக்கமாகும். அதாவது, புதிய வருகைகளுடன் தமிழை மீண்டும் முதனிலைப் படுத்தல் என்பது இதன் கருத்தாகும். இது இலக்கியம் பற்றிய ஒரு புதிய பார்வைக்கு இடமளித்தது. ஆனால் தமிழ்ப் புலமையாளரிடையே இந்த எண்ணக்கரு பற்றிக் கருத்துவேறுபாடு காணப்பட்டது. வையாபுரிப்பிள்ளை தமது கட்டுரைத் தொகுதி ஒன்றுக்குத் 'தமிழின் மறுமலர்ச்சி' என்றே பெயர் வைத்தார். ரா. பி. சேதுப்பிள்ளை மறுமலர்ச்சி என்ற எண்ணக்கருவையே எதிர்த்தார்.

இந்தக் காலகட்டம் முதல் ஐரோப்பிய, இந்திய மொழிகளிலிருந்த பல ஆக்கங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்படத் தொடங்கின. ரஷ்ய, ஃபிரெஞ்சு எழுத்தாளர்கள் ஆங்கிலம் வழியாக அறிமுகம் செய்யப்பட்டனர். முன்னர் சமஸ்கிருதத்திலிருந்து மாத்திரமே (ஒரோ வேளைகளில் பிராகிரு தத்திலிருந்தும்) இலக்கிய மாற்றம் செய்யும் முறைமை இருந்தது. இப்போது வங்காளம், மராட்டி, ஹிந்தி முதலிய இந்திய மொழிகளிலிருந்தும் மேனாட்டு மொழிகளிலிருந்தும் தமிழில் நாவல்கள் மொழிபெயர்க்கப்படத் தொடங்கின. தமிழ் நாவல் வளர்ச்சியில் வங்காள, மராட்டிய மொழிப்புனை கதைகளின் தாக்கம் மிகப்பெரியதாகும். பெரும்பாலான தமிழ் எழுத்தாளர்கள் சமூகத்தையும் குறிப்பாக பாத்திர மோதல்களையும் அவை பற்றிய சித்திரிப்புக்களையும் பார்க்கும் முறைமையினை காண்டேகர், தாராசங்கர் பானர்ஜி, சரத்சந்திரர் போன்றவர் தீர்மானித்தனர். இந்த வருகைகள் தமிழ் இலக்கியத்துக்கு அனைத்திந்தியப் பரிமாணத்தை வழங்கின.

எழுத்தைச் சமூக, அழகியல் விமர் சனத்துக்கான ஒரு விடயமாகப் பார்க்கின்ற தன்மை படிப் படியே ஆழமாகத் தொடங்குகிறது. இந்த ஆழப்பாடு நடக்கும் அதே வேளையில்தான் தமிழ்நாட்டின் இதழியல் வளர்ச்சியில் முக்கியம் பெறும் நான்கு அம்சங்கள் நிலைபெறத் தொடங்குகின்றன.

அரசியல் இதழியல்– திராவிட இயக்க எழுத்துக்கள், பொதுவுடைமை இயக்க எழுத்துக்கள்.

2. நவவாசக வட்டத்துக்கான எழுதுமுறைமை – தினத்தந்தியின் வருகையும் அது செய்திகளை அறிவித்த முறைமையும். இது தமிழ்ப் பத்திரிகை உலகில் பெரும் புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்தியது.

3. புலனாய்வுச்சஞ்சிகைகள் – தமிழ்நாட்டின் இதழியல் துறையில் இன்றுமிக முக்கியமான ஓர் இடத்தைப் பெற்றுள்ள இதழ் வடிவம் புலனாய்வு முறைமையாகும். பொது முக்கியத்துவம் உடைய, மக்கள் விடயங்கள், செய்திகள் பற்றிய பின்புல நடவடிக்கைகளை வெளிக்கொணர்ந்து 'பெரிய இடங்கள்' பற்றிய வாசக அவாவினைத் தீர்ப்பதில் இவை முக்கிய இடம் வகிக்கின்றன. தமிழ்நாட்டின் அரசியல் வாழ்க்கையில் இப்புலனாய்வு இதழ்கள் தமது தாக்கத்தை மிக வன்மையாகவே பதிவு செய்துள்ளன. 'இந்துநேசன்' காலம் முதலே இவ்வெழுத்து முறைமைக்கு ஒரு பாரம்பரியம் உண்டு. இன்றைய அரசியலில் இவற்றுக்கு ஒரு முக்கிய இடம் உண்டு. இதற்கான உதாரணங்களாக அமைபவை 'தாரசு', 'நக்கீரன்', 'ஜூனியர்விகடன்', 'தமிழன் எக்ஸ்பிரஸ்', 'நந்தன்' முதலானவை ஆகும்.

4. ஜனரஞ்சக வாசிப்புச் சஞ்சிகைகள்.
ஏற்கனவே குறிப்பிட்ட, குமுதத்தைக் குறியீடாக கொண்டவை.

இத்தகைய ஒரு பின்புலத்திலேதான் இலக்கியச் சிறப்பு நோக்குள்ள இலக்கியத்துக்கான சிற்றிதழ்கள் (little journals) தோன்றின. 1950 – 80 கள் வரையுள்ள காலப் பகுதியில் இவற்றின் போக்கும் தொழிற்பாடுகளும் நுண்ணியதாக அறியப்பட வேண்டியனவாகும். வல்லிக்கண்ணன் இலக்கியச் சிற்றிதழ்கள் பற்றிய பின்வரும் பட்டியலைத் தருவார். 'மணிக்கொடி', 'கலாமோகினி', 'கிராம ஊழியன்', 'சரஸ்வதி', 'சாந்தி', 'எழுத்து', 'கசடதபற', 'ஞானரதம்', 'அஃ', 'பிரக்ஞை', 'வானம்பாடி', 'கொல்லிப்பாவை' 'தெறிகள்', 'சுவடு', 'வைகை', 'மானுடம்', 'தாமரை 'சிகரம்', 'யாத்ரா', 'இலக்கிய வெளிச்சம்', 'விடியல் 'படிகள்', 'பரிமாணம்', 'மனவோசை', 'மல்லிகை 'கயோழி', 'தீபம்', ('சுபமங்களா', 'காலச்சுவ'ட்டை இதில் சேர்த்துக் கொள்ள வேண்டும்) 'புதிய பார்வை'.

இந்த இலக்கியச் சஞ்சிகைகளின் முக்கிய அம்சமாகக் குறிப்பிடப்பட வேண்டியது இவற்றின் கருத்துநிலை மையப்பாடு ஆகும். 'சனரஞ்சக எழுத்தானது வெகுசன வாசிப்புக்கான எழுத்தாக மாறி ஒரு குறிப்பிட்ட உலகப் பார்வையைக் கொண்டதாய், மக்களை எதிர்நோக்கும் பிரச்சினைகளை அவற்றின் காத்திரப்பாட்டுடன் எடுத்துக்கூறும் முறைமையிலிருந்து பிறழ்ந்ததாய் அமையும் ஒரு பண்பு படிப்படியாக மேற்கிளம்பத் தொடங்குகிறது. இந்த ஒரு அம்சமே வாசக எழுத்துக்களின் விசாலிப்புக்கும் கவர்ச்சிக்கும் அடித்தளமாக அமைந்துவிடுவது உண்டு. இத்தகைய ஒரு சூழலில் அதே சஞ்சிகைகளில் காத்திரமான விவாதங்களும் இலக்கியப் பரிசோதனைகளும் நடைபெறுவதென்பது முடியாது. ஆனால் இதே காலகட்டத்தில் இலக்கியத்தின் பயன்பாடு, கையாளுகை பற்றிய அடிப்படைக் கருத்து வேறுபாடு கொண்ட, இலக்கியத்தின் பால் ஒரு வரிப்புணர்வு கொண்ட (commitment) ஒரு எழுத்தாளர் குழாம் தோன்றியிருந்தது. இவர்களிடையே இலக்கியம் பற்றிய அடிப்படைக் கருத்து நிலை வேறுபாடுகள் காணப்பட்டன. இலக்கியத்தின் தன்மை, பயன், அழகியல் ஆகியன பற்றி ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களுடைய குழுக்கள் தொழிற்படத் தொடங்கின.

மேற்குறிப்பிட்ட இரு செல்நெறிகளும் இலக்கியச் சிற்றிதழ்களின் தோற்றத்திற்குக் காரணமாயின. 1970 – 80 – 90 களில் நடைபெற்ற இலக்கியக் கருத்துநிலைப் போர்கள் இவற்றின் வழியேயே நிகழ்த்தப்பட்டன. அந்த அளவில் தமிழ் இலக்கிய வரலாற்றில் இச்சஞ்சிகைகளுக்கு முக்கியமான இடம் உண்டு.

ஆனால் நமது இலக்கிய வரலாறு இன்னொரு முக்கிய விடயத்தைப் பதிவு செய்யவில்லை. யாதெனில் இத்தகைய சிறப்பு

நிலை முனைப்புக் கொண்ட சஞ்சிகைகள் போல மற்றைய தொழில்துறைகளிலும் சஞ்சிகைகள் வளரத் தொடங்கின. வேளாண்மை, தொழினுட்பம், தட்டச் செழுத்து, பொது அறிவியல், கணினி, தையற்கலை, சோதிடம் போன்றவற்றுக்கும் சஞ்சிகைகள் வெளியிட்டப்பட்டன என்பதை நோக்கும் பொழுது சஞ்சிகைத் துறையில் ஏற்பட்டு வருகின்ற சிறப்பு நிலைக்கூர்மை (specialisation) நன்கு தெரியவருகிறது. சினிமா பற்றியும் மகளிருக்கெனவும் பிரசுரிக்கப்படும் இதழ்களும் சனரஞ்சகத்தன்மையும் வெகுசன இயல்பும் கொண்டனவாகக் காணப்படினும் உண்மையில் இவற்றின் இலக்குவாசகர்களை (target readers) சிறப்புநிலைவாசகர்களாகவே கொள்ள வேண்டும். இதழ்களின் வரலாறு பற்றிப் பேசும்போது இவை அதிகம் முக்கியத்துவம் பெறாது போவது கவலைக் குரியது. இதழியல் துறையின் ஒரு துறையான நிழற்பட இதழியல் (photo journalism) சினிமா இதழ்களுக்குப் பெரிதும் பயன்படுவதை அவதானிக்கலாம். இது மகளிர் இதழ்களிலும் கணிசமான இடத்தைப் பெறுகிறது. உண்மையில் இலக்கியச் சஞ்சிகைகளின் வளர்ச்சியை இப்பின்புலத்திலிருந்து பிய்த்தெடுத்துப் பார்க்கக் கூடாது.

இலக்கியச் சிற்றிதழ்களால் ஏற்பட்ட முக்கிய பெறுபேறுகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

1. **புதுக்கவிதையின் ஏற்பும் நிலைப்பாடும்** - சிற்றிதழ்கள் வழியாகவே தமிழில் புதுக்கவிதை நிலைபெற்றது என்பது ஒரு பொருத்தமான கூற்றாகும். 'எழுத்து', 'கசடதபற', 'வானம்பாடி' ஆகியனவற்றின் வரலாற்றினுள் இவ்வுண்மை தொக்கு நிற்கிறது.
2. **புனைகதை மரபு வளமூட்டப்பட்டமை** – இதில் 'கணையாழி', 'சரஸ்வதி', 'சாந்தி', 'அலை', 'காலச்சுவடு', 'சுபமங்களா' ஆகியனவற்றின் பணி முக்கியமானது. ஜெயகாந்தன், அசோக மித்திரன், சா. கந்தசாமி, வண்ண நிலவன், அம்பை, நீல பத்மநாபன், கி. ராஜ நாராயணன், ஜெயந்தன் போன்றவர்களுடைய புனைகதைகள் சிறு சஞ்சிகைகள் மூலமாகவே முதலில் வெளிவந்தன.
3. **காத்திரமான இலக்கிய விவாதங்கள்** சிறு சஞ்சிகைகளின் இயல்பு காரணமாக இத்தகைய விவாதங்கள் தவிர்க்க முடியாதன ஆயின. மார்க்சிய, மார்க்சிய எதிர்ப்பு பற்றியும் கவிதையின் இயல்பு பற்றியும், அமைப்பியல் வாதம் பற்றியும், தலித் இலக்கியம் பற்றியும் ஆழமான **விவாதங்கள்** மேற்கொள்ளப்பட்டன.
4. **முன்னிலை நவவேட்கை வாத (avant - gardist)** அம்சங்கள் இவற்றில் பலவற்றில் காணப்பட்டன. அதாவது சர்வதேசிய மட்டத்தில் நவமாகத் தோன்றிய இலக்கியக் கொள்கைகளை, போக்குகளை அறிமுகம் செய்வதிலும் அவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுவதிலும் இச்சஞ்சிகைகள் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன.

இவற்றை எடுத்துக் கூறும்பொழுது இலக்கியச் சிற்றிதழ்களுக்கும் சனரஞ்சக இதழ்களுக்கும் இடையே நிலவிய ஊடாட்டத்தினை மறந்து விடக்கூடாது. உண்மையில் சனரஞ்சக இதழ்கள் இலக்கிய சிற்றிதழ்களைத் தமக்குப் பயன்படக்கூடிய எழுத்தாளர்களைப் பெறுவதற்கான நாற்றுப் பதிகளாகவே கொண்டிருந்தன. உதாரணங்களாக சு. சமுத்திரம், பாலகுமாரன், கி. ராஜ நாராயணன், பிரபஞ்சன், மேலாண்மை பொன்னுசாமி எனப் பல பெயர்களைக் குறிப்பிடலாம்.

இலக்கியச் சிற்றிதழ்களின் இப்பண்பினைக் கூறும்பொழுது இன்னொரு விடயமும் முக்கியப் படுத்தப்பட வேண்டும். அதாவது சில இலக்கியச் சிற்றிதழ்கள் தங்களுடைய ஏற்புடைமை காரணமாகச் சிற்றிதழ்கள் என்ற வட்டத்தை மீறி சிறு சனரஞ்சகச் சஞ்சைகளாக மாறக்கூடிய நிலைமை இருந்ததையும் மறந்துவிடக்கூடாது. தீபம், சுபமங்களா ஆகிய இரு சிற்றிதழ்களையும் இச்செல்நெறிக்கான **உதாரணங்களாகக்** கொள்ளலாம்.

III

இக்கட்டத்தில் இலங்கையில் இதழ்களின் வரலாறு பற்றிய ஒரு மிகச்சிறிய அறிமுகக் குறிப்பு அவசியமாகிறது. அது தமிழின் பொதுவான வளத்துக்கு உதவுகின்ற ஈழத்து இதழ் எழுத்து என்பதற்கு ஒரு வரலாற்று, சமூக, பொருளாதாரப் பின்புலம் உண்டு என்பதையும் நிறுவுகின்றது.

இங்கு இலங்கையின் முக்கியமான வளர்ச்சி நிலைகளே குறிப்பிடப்படுகின்றன. இலங்கையிலும் அச்சுச் சாதனம் மேனாட்டாட்சியாலும் கிறித்தவ தேவ ஊழியக் கருமங்களாலும் அறிமுகம் செய்யப்படுகின்றது. இவற்றுள் கிறித்தவமே அச்சு ஊடகத்தை மக்கள் நிலைகொண்டு செல்வதற்குத் தொடங்குகின்றது. சாதாரண சனங்களின் எழுத்தறிவு எழுகைக்கான காரணமாக அமைந்த புரோட்டஸ்தாந்த கிறித்தவர்களே இப்பணியிலும் ஈடுபடுகின்றனர். இதன் முதல் முயற்சியாக அமைந்தது 1841 இல் வெளியிடப்பெற்ற 'உதயதாரகை' என்ற இதழாகும். இதன் ஆங்கிலப் பெயர் Morning Star ஆகும். இதனைத் தொடர்ந்து வேறுசில இதழ்களும் வெளிவந்தன. குழந்தைகளை நோக்கி 'பாலியர் நேசன்' என்பது முக்கியமானது.

19ஆம் நூற்றாண்டின் நடுக்கூற்றில் யாழ்ப்பாணத்தில் நாவலருக்கும் கிறித்தவர்களுக்கு மிடையே அச்சு ஊடகக் கையாளுகையில் ஒரு பலப்பரீட்சையே நடைபெற்றது. யாழ்ப்பாணத்தில் அச்சுக்கூடம் நிறுவிக் கிறித்தவர்களை எதிர்க்க முடியாத நிலையில்தான் நாவலர் 1866 இல் தமிழகத்திற்கு வந்து இங்கு 'வித்யாநுபாலன அச்சியந்திரச் சாலை'யை நிறுவிப் பதிப்பு வேலைகளையும் தொடங்குகிறார். ஆறு வருடங்களின் பின்னரே ஈழம் திரும்புகிறார். 1870 களில் இலங்கையில் சுதேச நிலைப்பாட்டினை வற்புறுத்துவனவாக ஆங்கில, தமிழ் இதழ்கள் வெளியாயின. நாவலர் 'இலங்கைநேசன்' என்ற ஓரிதழோடு சம்பந்தப்பட்டிருந்தார். 1870 களின் பிற்கூற்றிலேயே ஈழத்துச் சைவ எழுச்சியின் பிரதான ஏடுகளாகிய 'இந்துசாதனம்' 'Hindu Organ' வெளியாகின்றன. மேல்நாட்டு மயவாக்கத்தை எதிர்த்து இலங்கை முஸ்லிம்களின் பண்பாட்டு நிலைப்பாட்டினை வற்புறுத்துகின்ற 'முஸ்லிம் நேச'னும் 19 ஆம் நூற்றாண்டின் பிற்கூற்றிற் குரியதே. இதனைப் பிரசித்தி பெற்ற சித்திலெப்பை அவர்கள் நடத்தினார். கத்தோலிக்கர்களின் இதழான 'சத்திய வேத பாதுகாவலன்' (the Cathalic Guardian) இக்காலத்தைச் சேர்ந்ததே.

இலங்கை அச்சு ஊடக வளர்ச்சியின் அடுத்த பிரதான கட்டமாக அமைவது சுதேச தேசிய உணர்வு முளைவிடத் தொடங்கிய 1930 களாகும். இக்காலகட்டத்திலேயே அரசியல், சமூக விமர்சன இதழ்கள் வரத் தொடங்குகின்றன. இவ்வகையில் 1930 ஒரு பிரிகோடாக அமைகிறது. அவ்வருடம்தான் யாழ்ப்பாணத்தின் 'ஈழகேசரி'யும் (அரசியல் சமூகவிமர்சன, செய்தி வாராந்திர இதழ்) கொழும்பிலிருந்து முதல் தமிழ்த் தினசரியான 'வீரகேசரி'யும் வெளிவந்தன. 1932இல் 'லேக்ஹவுஸ்' பத்திரிகை நிறுவனத்தினரால் 'தினகரன்' பத்திரிகை வெளியிடப்படத் தொடங்கிற்று. இவற்றினுள் 'ஈழகேசரி' இன்று இல்லை. தினகரன், வீரகேசரி ஆகியன தொடர்ந்து நாளிதழ்களாக வெளிவருகின்றன. 1930இல் இலங்கையின் தோட்டப்பகுதியாகிய மலையகத்தில் வாழும் தமிழக வம்சாவழித் தமிழர்க்கான தொழில்நிலை முன்னேற்ற நடவடிக்கைகளில் நடேசையர் என்பவரும் அவர் மனைவியும் ஈடுபடுகின்றனர். இக்காலகட்டத்தில் அங்கும் இதழ்கள் தொடங்குகின்றன. செய்தி நாளிதழ் வெளியீட்டில் இலங்கையில் நடந்தேறிய சில முக்கிய மைல்கற்களைக் குறிப்பிடவேண்டும்.

இலங்கையின் அரசியல் வளர்ச்சி கொழும்பை மையமாகக் கொண்டே இயங்கி வந்தமையால் நாளிதழ்கள் கொழும்பிலிருந்தே வெளிவந்தன. ஆனால் 60களின் பிற்கூற்றிலிருந்து வடகிழக்குப் பகுதியில் வாழ்கின்ற தமிழ் மக்களின் அரசியற் செயற்பாடுகள் யாழ்ப்பாணம் மட்டக்களப்பை மையமாக வைத்தே நடைபெறத் தொடங்கிய மையாலும் யாழ்ப்பாணத்தில் நாளிதழ்கள் தொடங்க வேண்டிய சூழலும் தேவையும் ஏற்பட்டது. இவ்வாறு தோன்றியதே 'ஈழநாடு' ஆகும். இதனைத் தொடர்ந்து 80களில் ஏற்பட்ட அரசியற் போராட்டங்கள் காரணமாக 'ஈழநாதம்', 'உதயன்'

எனும் நாளிதழ்கள் தொடங்கப்பெற்றன. இவற்றினுள் 'உதயன்' மட்டுமே இன்று தொழிற்படுகிறது.

இலங்கையின் இலக்கிய இதழியல் நடவடிக்கைகளை நோக்கும் பொழுது 'ஈழகேசரி' முக்கிய இடத்தைப் பெற்றதெனினும் சிறப்பு நிலை இலக்கிய இதழ்களாக வெளிவருபவை 1940லேயே வெளிவருகின்றன. 'மறுமலர்ச்சி' (யாழ்ப்பாணம்), 'பாரதி' (கொழும்பு) எனும் இரண்டு பத்திரிக்கைகளுடனும் ஈழத்தின் இலக்கிய நவீனத்துவம் ஆரம்பிக்கிறதென்று ஆய்வாளர்கள் வாதிட்டுள்ளனர். 'மறுமலர்ச்சி' ஒரு குழுவினரால் வெளியிடப்பட்டது. இந்த இரு இதழ்களினதும் பெயர்களே தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் நிலவிய இலக்கியத் தொடர்பினையும் தமிழ்நாட்டின் செல்வாக்கு மேலாண்மையையும் காட்டுகின்றன எனலாம்.

இலங்கையில் தனி இலக்கியப் பத்திரிகைகள் வெளிவந்தனவெனினும் இலங்கை எழுத்தாளர்கள் பலர் தமிழகச் சஞ்சிகைகளிலேயே எழுதினர். உதாரணமாக இலங்கையர்கோன், வைத்திலிங்கம் ஆகியோர் 'கலைமக'ளில் எழுதினர். 50களின் பிற்கூறு முதல் 60, 70 களில் முற்போக்கு இலக்கிய வீச்சு பரவியிருந்த காலத்தில் முற்போக்கு அணியையும் எதிரணியையும் சேர்ந்த பல சஞ்சிகைகள் வெளிவந்தன. இவற்றில் முக்கிய இடம் வகிப்பது 'மல்லிகை' ஆகும். 70 களில் தொடங்கிய மல்லிகை இன்றும் வெளிவருகிறது. முற்போக்கு எதிர்நிலைச் சஞ்சிகைகளாக முக்கிய பணியை ஆற்றியனவற்றுள் 'கலைச் செல்வி', 'அலை' முக்கியமானவை. இவற்றுள் 'அலை' முற்போக்கு எதிர்ப்பு நிலைப்பாட்டைத் தமிழக முற்போக்கு எதிர்ப்பாளர்களுடன் சேர்ந்து மேற்கொண்டது. 80 களில் ஏற்படுகின்ற மாற்றங்களோடு வெளிவரத் தொடங்கிய சஞ்சிகைகளுள் இரண்டு முக்கியமானவை. ஒன்று 'திசை' மற்றொன்று 'வெளிச்சம்'.

கொழும்பை மையமாகக் கொண்டு வெளிவரும் இலக்கியச் சிற்றிதழ்களுள் முக்கியமானவை மல்லிகை (இன்று) மூன்றாவது மனிதன், கிழக்குமாகணத்தில் வெளி வருவனவற்றுள் முக்கியமானது 'களம்' ஆகும்.

இலங்கையின் இன்றைய பிரதான நாளிதழ்கள் வீரகேசரி, தினக்குரல், தினகரன் உதயன் என்பனவாகும். தினமுரசு என்ற வாரஇதழ் மிகப்பிரபலமானது.

இலங்கையின் இதழியல் வளர்ச்சியில் அரசியல் தொழிற் சங்க இதழ்கள் முக்கிய இடம் பெறும். தமிழ்த் தேசியத்தின் வெளிப்பாடாக அமைந்த 'சுதந்திரன்' கம்யூனிஸ்ட் கட்சிகள் வெளியீடுகளாக 'தேசாமானி', 'தொழிலாளி' முக்கியமானவை ஆகும். மலையகத் தமிழ் எழுத்துகளின் களமாக வெளிவந்தவை 'செய்தி', 'அஞ்சலி' என்பன இப்பொழுது 'கொழுந்து' முதலிய இதழ்கள் வெளிவருகின்றன. இலங்கைத் தமிழ் இதழியல் வெளியீட்டில் இன்று ஒரு முக்கியமான இடம் வகிக்கும் 'சரிநிகர்' என்ற வாரஇதழ் கலை இலக்கியம் பண்பாடு பற்றிய உயர்நிலைவிமர்சனங்களைக் கொண்ட ஓர் இதழாகும். உண்மையில் இதனை வெகுசனப் பண்பாட்டு வட்டத்துள்ளிருந்து வரும் பத்திரிகைக்கான ஒரு மாற்றுப் பத்திரிகையாகவே (alternatre Journal) கொள்ள வேண்டும்.

மலேசியா, சிங்கப்பூரிலும் அவ்வந்நாடுகளின் சமூக அரசியற் பின்புலங்களிலிருந்து வரும் இதழ்களாக 'தமிழ்நேசன்', 'தமிழ்முரசு', புலம் பெயர்ந்த தமிழர்களிடையே இருந்து 'ஈழநாடு' போன்ற பத்திரிக்கைகள் பிரான்சிலும் கனடாவிலும் வெளிவருகின்றன. புகலிடத் தமிழர்களின் இலக்கியச் சிற்றிதழ்களாக 'சுவடுகள்', 'எக்ஸில்', 'உயிர்நிலை', 'அ, ஆ, இ' முதலானவை வெளி வருகின்றன.

IV

தமிழில் இதழ்களின் வளர்ச்சி பற்றி மிகமிக மேலோட்டமாக எடுத்துக் கூறப்பட்ட இவற்றின் பின்னர் இதழ்களின் தொடர்பு வன்மை குறித்தும் அவற்றின் வாசகத்தளம் குறித்தும் சிலவற்றைக் கூறுவது அவசியமாகிறது.

இதழ்கள் என்ற சொல் செய்திப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகிய இரண்டையும் பொதுப் படக் குறிப்பதாக உள்ளது. சஞ்சிகைகளை (Magazines-) நாளிதழ்களையும் மிகத் துல்லியமாகப் பிரித்து நோக்க வேண்டும். நாளிதழ்கள் ஒவ்வொரு நாளும் வருபவை. வந்த அடுத்தநாள், முதல்நாளின் வெளியீட்டுக்கு மதிப்பிருக்காது.

ஆனால் சஞ்சிகைகளைப் பொறுத்த வரையில் அடுத்த இதழ் வரும் வரையும் நடப்பிதழுக்கு முக்கியத்துவம் உண்டு. அத்துடன் நூல்களுக்கும் சஞ்சிகைகளுக்குமான தொடர்பியல் வேறு பாடுகளையும் அவதானித்துக் கொள்ளல் வேண்டும். நூல்களுக்கு சஞ்சிகைகளுக்கில்லாத ஒரு நிரந்தரத் தன்மை உண்டு.

சஞ்சிகைகளுடனேயே மகிழ்வளிப்புக்கான வாசிப்பு என்பது (entartainment reading) நிலை பெறத் தொடங்குகிறது. இந்த முக்கியத்துவத்தை வெகுசனப்பண்பாடு மிக நுட்பமாகப் பயன்படுத்தியுள்ளது. சஞ்சிகைகள் ஒரு பெரும்பொருள் பற்றிய சகல விடயங்களையும் தருவனவாகவும் அன்றேல் பல்வேறு விடயங்கள் பற்றிய பல்வேறு தரவுகளைத் தருவனவாகவும் அமையும். பண்பாட்டின் வடிவங்களை நம்மிடையே நிலை நிறுத்துவதற்கும் அவற்றின் செல்வாக்கை விரிவடையச் செய்வதற்கும் சஞ்சிகைகள் பயன்படுகின்றன. இதனை தமிழ்நாட்டின் இன்றைய பண்பாட்டு வடிவங்களை நோக்கும் போது தெரிந்து கொள்ளலாம். (சினிமா, தொலைக்காட்சி, வானொலி, சனரஞ்சக புனைகதை.)

இந்த நிலையில் மாத்திரமல்லாமல் பொதுவான மத, பண்பாட்டு நிலைகளிலும் சஞ்சிகை முக்கிய இடம் பெறுகிறது. பரந்துபட்ட வாசிப்பு என்பது நவீன யுகத்தின் ஒரு கொடையாகும். இன்றைய வெகுசனப் பண்பாட்டுச் சூழலில் வாசிப்பு என்பது தரவுகளைத் தருவது, சிந்தனையைத் தூண்டுவது என்கின்ற நியமங்களுக்கு அப்பாலே சில முக்கியப் பயன்பாடுகளுக்குத் தளமாகிறது என்று தொடர்பியற் சமூகவியலாளர் கூறுவர். அவை பின்வருமாறு:

1. எழுத்தறிவு நமது கற்பனையைத் தூண்டுகிறது. நமது நினைவு நிறைவேற்றங்களுக்காக நாம் வாசிக்கிறோம்; எழுதுகிறோம்.
2. எழுத்தறிவு அக உணர்வுகளை வெளிக் கொணர்ந்து மனதைச் சமநிலைப்படுத்துகிறது – பாலகுமாரனின் நாவல்கள் சில வாசிப்பு மட்டங்களில் ஒரு உளவியல் தேவையாக மாறுவதை அவதானிக்கலாம்.
3. இவற்றின் காரணமாக வாசிப்பு நம்மைச் சூழலை ஏற்க வைக்கிறது.

மிக நுணுக்கமாகச் சிந்திக்கும் பொழுது இவை ஒவ்வொன்றிலும் இதழ்களின் தொழிற் பாட்டினைக் காணலாம். விரிவஞ்சி இத்துடன் நிறுத்திக் கொள்ளுகிறோம்.

வாசிப்பில் வாசகரின் மனப்பக்குவம் முக்கியமாகும். இந்த அடிப்படையில் வாசகர்களை இரண்டு நிலைப்படுத்திப் பார்ப்பார்கள்.

அ. அவர்களின் உடல் வயது (physical age)

ஆ. அவர்களின் மனவயது (mental age)

உடல்வயதில் கூடியவர்கள் பலர் மனவயதில் குறைந்தவர்களாக இருப்பார்கள். தமிழின் சனரஞ்சக எழுத்துக்கள், புனைகதைகள் பெரும்பாலும் 18–35 வயதினரை நோக்கியே எழுதப்பட்டிருத்தலை அவதானிக்கலாம்.

இங்கும் மிக நுணுக்கமாக நோக்கும் பொழுது வெகுசன இதழியல் தொடர்பு வன்மைக்கான மிகத் துல்லியமாகத் தெரிகின்றன. வாசிப்பு தனி நிலைப்பட்ட ஒரு மனித முயற்சியாகையால் அது மனிதரின் தனித்துவப்பாட்டை மேலும் வலுக்கச் செய்கிறது எனலாம்.

V

நவீனத் தமிழிலக்கியத்தின் அச்சாணியான ஓர் அம்சத்தை நினைவு கூர்ந்து இச்சிறு கட்டுரையினை நிறைவு செய்யலாம்.

நவீனத் தமிழ் இலக்கியம் தமிழ்நாட்டில் முன்னர் எக்காலத்திலும் நிலவாத சனநாயக மயப்பாட்டின் சிசுவும் செவிலியுமாகும். இதழ்களின் தேவை, வளர்ச்சி, விரிவு எழுத்துச் சனநாயக மயப்படுகையின் தவிர்க்கமுடியாத பெறுபேறு ஆகும். அதற்குள் இனியவையுமுண்டு; இன்னாதவையு முண்டு.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நடத்தப் பெறும் தமிழ் இதழியல் பற்றிய தொடரின் இறுதிக் கருத்தரங்கிற் படிக்கப்படுதற்காக எழுதப்பட்ட தொடக்க உரை இது.

இக்கருத்தரங்கின் ஒழுங்கமைப்பாளர்கள் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி அவர்களுக்கும், முதல்வர் மா. ரா. அரசு அவர்களுக்கு நன்றி.

நிறுவன இயக்குனர் முனைவர் இராமர், இளங்கோவுக்கு இக்கட்டுரையைச் சமர்ப் பிக்கின்றேன்.

இதனைப் படியெடுத்துதவிய ஆய்வு மாணவர் கி. பார்த்திபராஜாவுக்கு நன்றி.

ஆநிரை கோடல்

பேராசிரியர் க. ப. அறவாணன்
துணைவேந்தர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

பகைப்புலத்தார் ஆக்களைக் கவர்ந்து வருதல் வெட்சியாகும்.
'வேற்றுப்புலக் களவின் ஆதந்து' என்பர் தொல்காப்பியர்.
'வெட்சி நிரை கவர்தல் மீட்டல் கரந்தையாம்' எனவரும் ஒரு பழம்பாட்டு.

வென்றி வேந்தன் பணிப்பவும் பணிப்பின்றியும்
சென்றிகல் முனை ஆதந்தன்று

எனவரும் புறப்பொருள் வெண்பாமாலை. சங்க இலக்கியங்களும் நிரை கவர்தலையும், மீட்டலையும் காட்டும். ஆநிரை அன்றி, யானைகளையும் கவர்தல் உண்டு என்பர் நச்சினார்க்கினியர்.

எருமைகளைக் கவர்தல்

பகைப்புலத்தாரிடத்துள்ள எருமைகளையும் வெட்சியார் கவர்தல் உண்டு; கரந்தையார் மீட்டல் உண்டு என்பதைப் பிற்காலக் கல்வெட்டுகள் காட்டும். கல்வெட்டுகளில் 'எருமைத் தொறு கொண்ட ஞான்று' 'எருமைத் தொறுக் இடுவித்த ஞான்று', 'எருமைத் தொறு மீட்ட ஞான்று' என்று வரும் தொடர்கள் இதனை வற்புறுத்தும்.

ஆடுகளைக் கவர்தல்

பசுக்களைக் கவர்தல், யானைகளைக் கவர்தல், எருமை மாடுகளைக் கவர்தல், ஆகியன மட்டுமின்றி, ஆடுகளும் வெட்சியில் கவரப்பட்டன. இதனைக் கல்வெட்டுகள், 'மறிதொறுக் கொண்ட ஞான்று' என்று குறிக்கும். கி.பி. 8ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தாழையூத்துக் கல்வெட்டொன்று, மறிதொறுக் கொண்ட ஞான்று பட்டவீரனுக்கு நடுகல் எடுக்கப்பட்டதைச் சுட்டிக் காட்டும்.

கோவிசைய நரசிங்க பருமற்கு யாண்டு பத்தாவது
மீவேண்ணாட்டுக் கோவலூர் ஊரரைசர்
பெரும்பாணதியரைசர் சேவகன் சிற்றுபாடி பனையனார்
மறிதொறுக் கொண்ட ஞான்று பட்டான்.

இவற்றால், தமிழகப் போர் முனைகளில், மாடு கவர்தல், ஆடு கவர்தல், எருமை கவர்தல், யானை கவர்தல் ஆகியன இருந்தன என்பது தெளிவாம். ஆனால், வெட்சித் திணையைப் பேசும், தொல்காப்பியமும், இளம் பூரணர் உரையும், பிற இலக்கண நூல்களும் மாடு தவிர பிற கவரப்படுதலைச் சுட்டவும் இல்லை.

ஆநிரை கவர்தலும் ஆநிரை காக்கப்படுதலும்

பகை நாட்டினின்று ஆநிரைகளைக் கவர்தலின் நோக்கம் அவற்றிற்குப் போரால் ஊனம் வருதலைத் தவிர்த்தலே. பகைவரது நாட்டின் மேல் படை நடாத்த விழையும் வேந்தன், அறவோர், அந்தணர், மகளிர், பிணியாளர் முதலிய தீங்கு செய்யத் தகாத மக்களைப் போரால் விளையும் துன்பங்களினின்றும் விலக்கி உய்வித்தல் வேண்டி, 'யாம் போர் கருதி நும் நாட்டிற் புகுகின்றோம். நீவிர் நுமக்குப் பாதுகாவலான இடங்களை நாடிச் செல்லுங்கள்' என அறிவிப்பான். அவ் அறிவிப்பினைக் கேட்டு உணர்ந்து வெளிச் செல்லும் பகுத்தறிவற்றவை பசுக்கள். அவற்றைக் காக்க விரும்பியவன், ஒருவரும் அறியாதபடி நள்ளிரவில் தன்படை வீரர்களை அனுப்பிக் களவில் கவர்ந்து வரச் செய்வன் என்பர். பசுக்களைக் காத்து ஓம்பும் நோக்கில் அவை கவரப்படவில்லை.

1. பசுக்களைக் காக்க நினைப்போர், நள்ளிரவில், ஒருவரும் அறியாதபடி தடுத்த கரந்தையாரைக் கொன்று களவு செய்வானேன்?
2. நள்ளிரவு, களவு, கொலை இவை அறமா?
3. காக்க வேண்டிய வீட்டு விலங்கு பசு மட்டுமா? மான், முயல், கோழி, ஆடு எருமை ஆகியன வளர்க்கப்பட்டனவே. அவற்றைக் காக்க அரசன் நினையாதது ஏன்?

இவ்வினாக்கள் அளிக்கும் ஒரே விடை, ஆநிரை கவர்ந்ததற்கும், காக்கப்பட வேண்டும் என்று எண்ணப்பட்டதற்கும் காரணம் வேறு இருத்தல் வேண்டும் என்பதே.

பசுமாடும் பார்ப்பனரும்

பசுமாடுகளுடன் பார்ப்பனர்க்கும் கேடு ஒன்றும் வரலாகாது என்பது சங்ககால நெறி.

ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம் அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின்
என

அறத்தாறு நுவலும் பூட்கை மறம்,

என்பது புறப்பாட்டு.

பார்ப்பார் அறவோர் பசு பத்தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவி எனும் இவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்க.

என்பது சிலம்பு. இவற்றுள், பசுவும், பார்ப்பனரும் காக்கப்பட வேண்டும் என்ற வேட்கை வெளிப்படையாகப் பேசப்பட்டிருக்கிறது. இதனால் பார்ப்பனர், அரசர், வணிகர், வேளாளர், என்ற நால்வருள் போரினின்று பார்ப்பனர் மட்டும் ஊனப்படாமல், பசுக்களுடன் காக்கப்பட்டனர் என்பது தெளிவாகிறது. 'வாழ்க அந்தணர், வாழ்க ஆனினம்' என்பது ஞானசம்பந்தர் தேவாரம். போர்ப்பணி, பார்ப்பனர்க்கு இல்லை என்பது தொல்காப்பிய உரையால் துலக்கமாகும். ஒதல், பகை, தூது என்ற மூன்று அடிப்படையில் பிரிவுகளைச் சமைத்த தொல்காப்பியம், அந்தணர், அரசர் என்ற உயர்ந்தோர்க்கே ஒதற் பிரிவும், தூதுப் பிரிவும் உண்டு (ஒதலும் தூதும் உயர்ந்தோர் மேன) என்று கூறுவதன் மூலம், அந்தணர்க்குப் பகைவயிற் பிரிவு இல்லை என்பதை எதிர்மறை முகத்தான் உணர்த்துகிறது. அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம் என்ற இடத்தும், இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகிய இரு பழைய உரையாசிரியர்களும் அந்தணர்க்குரியதாகப் போர்க் கடமையைச் சுட்டவில்லை. ஆக, தொல்காப்பியப் பார்வையிலும், பழைய உரையாசிரியர் பார்வையிலும் போர்க் கடமை அரசர் கடமை ஆகிவிட்டது. அரசரின் மகனே அரசன் ஆவன் என்ற கருத்து என்று தோன்றியதோ அன்றே பிறப்படிப்படையில் மனிதப் பகுப்பு அடக்கப்பட்டு விட்டது என்றாகிறது. சங்க இலக்கிய அரசர்மரபு, பிறப்பு அடிப்படையில் அமைந்தது. அமையவே ஏனைய இனப் பிரிவுகளும் பிறப்பு அடிப்படையில் அமைந்திருந்தன. ஆக, போர்களில், அரசரும்,

வேளாளரும், தலைமை பெற்றனர். சங்க காலத்தில் போர் யாவர்க்கும் கட்டாய மாக்கப்பட்டது போலத் தோன்றும். 'ஒளிறுவாள் அரும்சமம் முருக்கிக் களிறு எறிந்து பெயர்தல் களைக்குக் கடனே' என்பது போன்ற கூற்றுகள் அத்தோற்றத்தை வற்புறுத்தும், ஆனால், ஊன்றிப் பார்ப்பின், இவையெல்லாம் அந்தணரைத் தவிர்த்த ஏனையோர்க்கே என்பது விளக்கமுறும். அதனால்தான் போர்க்காலத்தில் பிறப்பால் அந்தணர் ஆனவர்க்குக் காப்பு அளிக்கப்பட்டது. அந்தணர்க்கு மட்டுமன்றி அவர் மிகவாகப் போற்றும் பசுக்களுக்கும் பாதுகாப்பு நல்கப்பட்டது. வேதங்களில், பல துதிப் பாடல்கள், பசுக்களைக் காப்பாற்றுமாறு வேண்டுவதாக அமைந்துள்ளன. வேத வேள்விகளில், பசு தலைமை வாய்ந்ததாகக் கருதப்பட்டது. 'கபிலை கண்ணிய வேள்வி நிலை காளை பசு' என்றே தொல்காப்பியம் சுட்டுகிறது. மணிமேகலையில் இடம் பெற்றுள்ள ஆபுத்திரன் வரலாறு, அந்தணர், வேள்விக்காகக் கட்டி வைத்திருந்த பசுவைச் சுற்றிப் படைக்கப்படுகிறது. வேத வழக்கைப் பின்புலமாகக் கொண்டு படைக்கப்பட்ட மகாபாரத விராட பருவத்தில், விராட நகரத்திலிருந்த ஆநிரைகளைத் திரிகர்த்தன் என்பான் கவர்ந்து செல்லும் நிகழ்ச்சிகளும் இடம் பெற்றுள்ளன. பிரம்மா பசுவையும், பிராமணரையும் ஒரே நாளில் படைத்தனர் என்பர். பசுவும், பிராமணரும் ஒத்த தூய்மைய என்பர். பசுவைக் கொல்வது பிராமணரைக் கொல்வதற்கு நிகர் என்பர். பசு ஆழ்ந்த மதிப்பிற்குரியது என்பர். ஆரியருடன் மிகு தொடர்புடையது என்பர். சமற்கிருதம் உள்ளிட்ட இந்தோ ஈரோப்பிய மொழிகளிலே போர் வீரர்குழு எனில், 'பசுக்களைத் தேடிச் செல்வோர் கூட்டம்' எனவும், பாதுகாப்பு அளித்தல் எனவும் பொருள்படும் சொற்கள் உள்ளன. ஆக, இவை அனைத்தையும் ஒருங்கு நோக்க, ஆநிரை, தமிழரைக் காட்டிலும், ஆரியரோடுதான் நெருங்கத் தொடர்புடையது என்பது புலனாகும். எனவே, பசுக்களைக் கவரும் பழக்கம், பண்டைத் தமிழர்தம் சொந்தப் பண்பாடு அன்று என்பதும் தெளிவாகும்.

இச்செய்தியை 'ஆநிரை'யுடன் தொடர்புடைய 'தொறு' என்ற சொல் வரலாறும் உறுதி செய்கிறது. ஆநிரை கோடல், பிற்காலக் கல்வெட்டுகளில் 'தொறுக் கொண்ட ஞான்று' என்றே சுட்டப்படுகிறது. பதிற்றுப்பத்து, பசுமாடுகள் கட்டி நிறுத்தப்பட்ட வயலைத் 'தொறுத்த வயல்' என்றே வழங்குகிறது. ஆனால், இச்சொல் வழக்காறு தொல்காப்பியத்துள் இல்லை. 'தொழுவும் ஆனிரையும் தொகுதியும் தொறு எனல்' என்பது பிங்கல நிகண்டு.

'தொறு' என்பது 'துரு' என்றும் வழங்குகிறது. இச்சொல் தமிழ், கன்னடம், கிரேக்கம், இலத்தீன், சமற்கிருதம், செக்கு, செர்மனி, ஆசீரியம் ஆகிய மொழிகளிலும் ஏறத்தாழ ஒத்த வடிவத்தில் புழங்குகிறது. இச்சொல் எம்மொழிக்கு உரியது என்பது ஆய்விற்குரியது.

தவ்ரசுமலையைச் சார்ந்த இடங்களில் வாழ்ந்து வந்த இட்டைட் (Hittiles) மக்கள் புயற்காற்றுத் தெய்வத்தையும் அந்தத் தெய்வத்தின் ஊர்தி ஆகிய எருதையும் வணங்கினார்கள். தவ்ரசு மலைகளிலே ஆங்காங்கே எருதுகளுக்குச் சிறுசிறு கோவில்கள் அமைந்திருந்தன. இங்கிருந்துதான் எருது வழிபாட்டு வழக்கம் வேறு நாடுகளுக்குச் சென்றது என்பர். எகிப்து, பாபிலோனியம், கிரேக்கம் முதலிய நாடுகளுக்கு எருது வழிபாடு இங்கிருந்து சென்றது. இங்கிருந்து எருது வழிபாடு இந்தியாவிற்கும் வந்திருத்தல் கூடும்.

ஆக, ஆநிரை என்பதனோடு இணையான 'தொறு' என்ற சொல், எருது வழிபாடு என்பன தமிழர்தம் உடைமைகள் அல்ல என்பது இச்சொல்லாய்வாலும் உறுதி ஆகிறது.

ஆநிரை கோடலே அயல்நாட்டுப் பழக்கமா?

பசுக்கள், தமிழரினும், ஆரியருடனே நெருக்கத் தொடர்டையவை. ஆனால், இவ்வாறு நிரை கவரும் பழக்கம் எல்லாருக்கும் உரியது.

மிகப் பழங்காலத்தில் ஆடு, மாடு முதலாயினவே செல்வங்களாகக் கருதப்பட்டன. திருவள்ளுவர் செல்வம் என்ற பொருளிலேயே 'மாடு' என்பதை ஆளுவர். பழங்குடி மக்கள் பக்கத்துள்ளார்தம் செல்வத்தைக் கவருதல் பண்டைய மரபாக இருந்தது. தமிழரிடமும் இப்பழக்கம், பழங்காலத்தில் எருமை கவர்தலாகவே இருந்திருத்தல் வேண்டும். எருமை மாடுகளே, பழந்தமிழரின் உடைமைகள். இன்றும் தென்புலப் பழங்குடியினரான தோடர், கோத்தர் ஆகியோர் எருமைகளையே செல்வமாகப் போற்றுவர்.

திராவிடப் பழங்குடியினரிடம் எருமைச் செல்வம்

நீலகிரிப் பகுதியில் இன்றும் வாழும் தோதுவர், திராவிடப் பழங்குடியினர். இவர் பேசும் மொழி திராவிடம் ஆகும். இவர்தம் வாழ்வு, எருமைச் செல்வத்தைச் சுற்றியே அமைந்துள்ளது. அதனால் இவரை, எருமையின் குழந்தைகள் என்றே மொழிவர். எருமையை வைத்தே இவர்தம் செல்வம் கணக்கிடப்படும். இவர் பேசும் தோடர் மொழியில் எருமையைக் குறிக்க நூற்றிற்கு மேல் சொற்கள் புழங்குகின்றன. தெய்வத்திற்கு அடுத்தபடியாக எருமையைத்தான் தெய்வமாக வழிபடுகின்றனர். இவர்தம் வாழ்க்கையில் பலவகைச் சடங்குகள் உள்ளன. அச்சடங்குகள் பெரும்பாலும் எருமைகளை அடிப்படையாகக் கொண்டவை. தோதுவர் மட்டுமின்றி, திராவிடப் பழங்குடியினரான கோத்தர்களும் எருமையைப் பெரிதாகப் போற்றுவர்.

சங்க இலக்கியத்துள், தமிழ் நாட்டவராகக் குறிக்கப்படும், 'எருமை வெளியனார்', 'எருமை வெளியானார் மகனார் கடலனார்' என்ற புலவர் பெயர்கள் வழங்குகின்றன. 'எருமை வெளிய' என்ற பெயரினை உடையவன் சங்கப் புலவர்களால் பாடப்பட்டிருக்கிறான். 'எருமை ஊரன்' என்றே ஒருவன் குறிக்கப்படுகிறான். பண்டு, மைசூர் நாடு தமிழ்ப் புலமாக இருந்தபோது அஃது எருமை நல்நாடு என்றே வழங்கப்பட்டது. மைசூர் எருமை ஊர் என்றே போற்றப்பட்டது. எருமை ஊரே, சமற்கிருத ஆதிக்கக் காலத்தில் மகிஷனூர், மைசூர் என்று ஆகி இருத்தல் வேண்டும். இச்சங்க இலக்கியச் சான்றுகள், எருமை, தமிழரோடு ஒன்றி இருந்த உயர்வைக் காட்டுகின்றன.

தொல்காப்பியர் காட்டும் கருப்பொருட் பட்டியலை, ஒவ்வொரு நிலத்திற்கும் பொருத்தி விளக்கும் இளம்பூரணர் பசுவை யாண்டும் சுட்டாமல், எருமையை மருதக் கருப்பொருளாகச் சுட்டிப் போற்றுகிறமை ஈண்டு எண்ணத்தகும்.

மாடு - செல்வம்

செல்வக் கவர்ச்சியே வெட்சிப் போருக்கு மூலம். அக்காலச் செல்வம் மாடுகளே. தமிழரைப் பொறுத்த அளவில் மாடுகளே ஒரு காலத்தில் செல்வமாக இருந்தன என்பதை 'மாடு அல்ல மற்றையவை' என்ற குறளாட்சி காட்டும். மாடு என்பது எருமைகளையே குறிப்பது. இன்றும் திராவிடப் பழங்குடியினரான தோதுவர் எருமை மாடுகளையே செல்வமாகப் போற்றுவது இதனை வற்புறுத்தும். சங்க இலக்கிய வழக்காறும் எருமையைப் போற்றும். ஒரு நாட்டையே 'எருமை நன்னாடு' என்று அன்றைய தமிழர் போற்றினர். எருமைமாடுகளைக் கவர்தலையும், மீட்டலையும் கல்வெட்டுகள் குறிப்பிடும். இவற்றை நோக்க பண்டைய வெட்சிப் போரில் தமிழரிடத்து எருமைத் தொறுகவர்தலே இருந்திருத்தல் வேண்டும். காலப் போக்கில் பசுமாடுகளுடன் வந்த ஆரியர்தம் வரவும், உறவும் பெருகிய பிறகு போரில் புண்படாமல் அந்தணர் காக்கப்பட்டது போன்று, தம் பசுநிரைகளையும் காக்க ஆரியர் வழிவகை செய்தனர் போலும்.

(கட்டுரையாசிரியர், சென்னைப் பல்கலைக் கழகத்தில் 1977 இல் வழங்கிய பி. எச்.டி ஆய்வேட்டின் ஒரு பகுதி இக்கட்டுரை)

திருக்குறள் காட்டும் மனித விழுமியங்கள்

பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்
தலைவர், இந்து நாகரிகத் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மனிதன் மனிதனாக வாழ வழிகாட்டும் ஓர் ஒப்பற்ற நூல் திருக்குறள். அகப்புற நிலைகளில் முழுமை பெற்ற மனிதனாக வையத்துள் வாழ்வாங்குவாழ திருக்குறள் கூறும் மனித விழுமியங்கள் என்றென்றும் வழி காட்டி நிற்கின்றன. எனவே வள்ளும் ஒரு வாழ்விலக்கண நூல். அந்நூல் கூறும் விழுமியங்கள் அது தோன்றிய காலத்திற் குரியனவாக மட்டுமன்றி எமது காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் உரியவையாகும். மனித விழுமிய சிந்தனைகளை எல்லாத் தேசத்தைச் சேர்ந்த வர்களுக்கும் எம்மதத்தினர்க்கும் வழங்கும் நூலாக விளங்குவதே அதன் சிறப்பு. உலகில் வாழும் மனிதருக்கு வேண்டிய அறக்கருத்துக்களைச் சுருங்கச் சொல்லி, பரந்த அளவில் பொருள் கொள்ள வைப்பதில் திருக்குறள் முதன்மை பெறுகின்றது. திருக்குறளைப் படித்தாலும் கேட்டாலும் சொன்னாலும் எண்ணினாலும் இன்ப அனுபவமே ஏற்படும். பண்டைக் காலக் கவிஞரான கவுணியனார்:

சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கு மாமருந்து – முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள்வெண் பா.

எனப் போற்றுகின்றார். இலக்கியத்தை உவந்து நயப்பதற்குச் சில அம்சங்கள் துணை செய்கின்றன. கவிதையை உணர்ந்து நயக்கும் திறன், சொற்பொருள் அறியும் திறன், இலக்கண நூலறிவு, தருக்கம், இலக்கியத்திறன் ஆகியவற்றில் புலமை பெற்றவர்கள் திருக்குறளில் இழையோடி நிற்கும் சிந்தனைகளை ஆழ்ந்து நோக்கும்போது புதுப்புதுக் கருத்துக்கள் தோன்றிக் கொண்டே இருக்கும்.

திருக்குறள் முப்பாலாகப் பிரிந்துள்ளது. அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என அந்நூலுக்குப் பெருமை சேர்க்கின்றன. நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களைக் கொண்ட இந்நூல் ஆயிரத்து முந்நூற்றுமுப்பது குறட் பாக்களைக் கொண்டு விளங்குகின்றது. திருக்குறளின் பெருமைபற்றி முத்தமிழ்க் காவலர் கி. ஆ.பெவிசுவநாதம் கூறியுள்ள கருத்து சிந்தனைக் குரியது.

"மனிதன் கேட்க கடவுள் சொன்னது பகவத்கீதை;
கடவுள் கேட்க மனிதன் சொன்னது திருவாசகம்;
மனிதன் கேட்க மனிதன் சொன்னது திருக்குறள்;
அதுவும் வாழ்ந்து காட்டிய ஒரு பெருமகனால் வாழ
வகுத்துக் காட்டிய ஒரு வழிகாட்டி. இதனால்
திருக்குறள் ஒரு வாழ்வு நூல் எனலாம்."

எனக் குறிப்பிட்டுள்ளார். மனித வாழ்வு நலம் பெற வேண்டுமானால் மனிதன் அனைத்து நிலைகளிலும் நிறைவு பெற்றவனாக வாழப்பழக வேண்டும். குறள் வழி மூலம் வள்ளுவரது இதயத்தைப் புரிந்து கொள்ள முற்படுவோமானால் அவர் எவ்வளவு தூரம் குறளுக்குக்குறள் மனித விழுமியங்களை வற் புறுத்திக் கூறியுள்ளார் என்பது

தெளிவாகும். மனிதன் எப்படியும் வாழலாம் என்ற நினைப்பை விடுத்து இப்படித்தான் வாழ வேண்டும் என்று திட்டமிட்டு வகுத்துக் கொடுத்தவர் வள்ளுவப் பெருந்தகை. கல்வி, ஒழுக்கம், வாய்மை, வள்ளன்மை, அறம் பற்றி வள்ளுவர் காட்டிய வழிகள் மனிதகுல மேம்பாட்டிற்கு என்றும் வேண்டிய விழுமியங்கள்.

பெருங்கவிஞன் படைக்கும் இலக்கியத்தின் பண்புபற்றிப் பேராசிரியர் கைலாசபதியின் கருத்து இங்கு சிந்தனைக்குரியது.

> "பெருங் கவிஞராகப் பரிணமிப்பவர்கள் மொழியாற்றல் முதலியவற்றைக் குறைவின்றிப் பெற்றிருக்கும் அதே வேளையில் தாம் வாழும் காலத்துச் சமுதாயத்தின் அடிப்படைப் பிரச்சினைகளையும் அறிந்து அவற்றுக்கும் பரிகாரம் காண முற்படுபவர்களாகவும் இருக்கின்றனர். பெருங் கவிஞன் தன் சொந்த அனுபவங்களை மாத்திரம் பொருளாகக் கொள்ளாது மனுக்குலத்தின் நிலைமையினை உணர்ந்து அதனோடு தான் கலந்து எழுகின்றான்."

எனக் குறிப்பிட்டுள்ளார். மானுடம் கேடின்றி வாழவே பெருங்கவிஞர் இலக்கியம் படைத்தனர். காலத்துக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்த அவர்கள் காலங்கடந்து சிந்தித்ததன் பயனாய் காலத்தை வென்ற கவிஞராகின்றனர். வள்ளுவன் காலத்தைக் கடந்த கவிஞன். வள்ளுவன் வகுத்த அறம் அவன் காலத்து நடைமுறைகளின் ஒரு கூட்டுத் தொகுப்பு எனக் கூறமுடியாது. மனிதன் கடைப்பிடிக்க வேண்டும் என அவன் விழைந்த விழுமியங்களை அவன் குறட்பாக்கள் மூலம் வெளிப்படுத்தினான்.

வள்ளுவரோடு பெருங்கவிஞனாகிய பாரதியை ஒப்பிட்டு நோக்குவதனால் மனிதப் பண்பு பற்றிய ஒரு தெளிவான கருத்தை உருவாக்கிக் கொள்ளலாம். தமிழை உயிருக்கு மேலாக நேசித்த பாரதிக்கு இலக்கியச் செல்வங்களாகிய குறள், சிலம்பு, கம்பராமாயணம் ஆகியவற்றில் அளவற்ற ஈடுபாடிருந்தது. அந்த ஈடுபாடு,

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்
போல் இளங்கோவைப் போல்
பூமியதனின் யாங்கணுமே பிறந்ததிலை உண்மை
வெறும் புகழ்ச்சியில்லை.

ஆகியவரிகளால் புலப்படுகின்றது. இம்மூவருள்ளும் திருவள்ளுவர் மீதே பாரதிக்கு அதிக ஈடுபாடு இருந்தது என்பதை,

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

என்ற வரிகள் மூலம் உணரமுடிகின்றது.

"திருக்குறள் உறுதியும் தெளிவும் பொருளின்
அழமும் விரிவும் அழகும் கருதியும்
..... முன்பு நான் தமிழ்ச் சாதியை அமரத்
தன்மை வாய்ந்தது என்று உறுதி
கொண்டிருந்தேன்"

என்ற பாடல் வரிகள் மூலமும் பாரதிக்கு வள்ளுவத்தின் மீதிருந்த ஈடுபாடு தெளிவாகத் தெரிகின்றது. ஓர் உலகக் கவியைப் போற்றிய இம்மகாகவி பாரதி, மனிதன் பற்றி நன்கு சிந்தித்தான்.

பெறுதற்கரிய மானிடப் பிறவி பெற்றும் நல்லனவற்றை உள்ளத்தில் நினைந்து, நல்லனவற்றைக் கூறி, நல்லதொரு குறிக்கோள் கொண்டு நல்வாழ்வு வாழாது போலி வாழ்வு வாழ்ந்து பொய்யாய்க் கனவாய்ப் பழங்கதையாய் மெல்ல மாய்ந்து மறையும் மக்களை வேடிக்கை மனிதர், போலி மனிதர், மனித வேடந்தாங்கிய நடிகர் என்றெல்லாம் பாரதி எள்ளி நகையாடுகின்றான். பிறிதோர் சந்தர்ப்பத்தில் நிலைகெட்டமனிதர் எனவும் சாடுகின்றான். நாள்தோறும் பலவேளை வயிற்றை நிரப்ப ஓய்வின்றிக் காலமெல்லாம் உழைத்து ஒழுக்கமில்லாதவர்களோடு கூடிச் சூழ்ந்து இழுக்கைத் தரும் சின்னஞ் சிறு அற்பக் கதைகளைப் பேசி, தான் வருந்தி அமைதியுறாது, அழுக்காறு கொண்டு அயலான் வருந்தத் தீய செயல் பல செய்து, நல்ல செயல் பல செய்தலால் நல்ல பண்பு பலவற்றோடு வாழ்தலால் முதுமையடையாது, நரையாலும், திரையாலும் கிழத் தன்மையடைந்து வானுறையும் தெய்வத்தோடு வைக்கப் பெறும் பேற்றினை இழந்து, இரக்கமில்லாத கொடுங்கூற்றுவனுக்கு இறையாகும் மனிதரை,

தேடிச் சோறு நிதந்தின்று – பல
சின்னஞ் சிறு கதைகள் பேசி – மனம்
வாடித் துன்பமிக உழன்று – பிறர்

வாடப் பல செயல்கள் செய்து – நரை
கூடிக் கிழப்பருவம் எய்தி – கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின்மாயும் – பல
வேடிக்கை மனிதர் .....

என்று இடித்துரைக்கின்றான். இவ்வாறு ஏளனத்துக்குரியவனாகாமல் பண்புடையவனாக மனிதன் தான் வாழும் சமூகத்தில் உலவ வேண்டும் என்ற விருப்பில் வள்ளுவர் ஆழமான விழுமிய கருத்துக்களை குறள்வழி எடுத்துக் கூறியுள்ளார். திருக்குறளின் பரப்பளவினூடே மனித விழுமியக் கருத்துக்கள் இழையோடி அணி செய்கின்றன. பல்வேறு நிலைகளில் இவற்றை வகுத்துக் கூறலாம்:

1. தனிமனித நிலையில் ஒருவன் பேணி வளர்க்க வேண்டியவை.
2. இல்வாழ்வில் இன்பமுடன் இனிதே வாழ பேண வேண்டியவை.
3. சமூகத்துடன் இணைந்து வாழும் போது பேண வேண்டியவை.
4. தலைமைத்துவம் வழங்கும் தலைவனாக விளங்கும் போது பேண வேண்டியவை.

எனப் பல நிலைகளில் வள்ளுவர் மனித விழுமியங்களைப் போற்றியுள்ளளார்.

தனிமனித நிலையில் அடக்கமுடைமை, அருளுடைமை, அவாஅறுத்தல், அழுக்காறாமை, அறன் வலியுறுத்தல், இனியவை கூறல், இன்னா செய்யாமை, ஈகை, ஊக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, கல்வி, கள்ளுண்ணாமை, கூடாவொழுக்கம், கொல்லாமை, சான்றாண்மை, சிற்றினஞ் சேராமை, செய்ந்நன்றியறிதல், தெரிந்து செயல்வகை, நலம்புனைந்துரைத்தல், பண்புடைமை, பயனில் சொல்லாமை, புலால் மறுத்தல், வெகுளாமை, மெய்யுணர்தல் போன்றவை ஒழுக்கத்தின் அடிப்படையில் சிறப்புப் பெறுகின்றன.

மனித விழுமியங்களுள் சிறப்புப் பெறுவது அடக்கமுடைமை. அடக்கத்தை உறுதிப் பொருளாகக் கொண்டு போற்றிக் காக்க வேண்டும். அந்த அடக்கத்தைவிட மேம்பட்ட ஆக்கம் உயிர்க்கு இல்லை எனக் கூறுவார் வள்ளுவர்.

காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு.

(அடக்கமுடைமை - 2)

தனிமனித மேம்பாட்டிற்கு அடக்கம் என்னும் பண்பு எவ்விடத்தும் உயர்வுக்கு இட்டுச் செல்வதாகும். உடைமை என்பது செல்வத்தையும் பெறுமதிமிக்க பொருட்களையும் நிலத்தையுமே குறிக்கும் எனக் குறுகிய நிலையில் எண்ணும் மக்களுக்கு வள்ளுவர் மனித விழுமியங்களாக வேறுபல உடைமைகளைக் கூறுகின்றார். அடக்கமுடைமையைத் தொடர்ந்து அருளுடைமை, அறிவுடமை, அன்புடைமை, ஆள்வினையுடைமை, ஊக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, நாணமுடைமை, பண்புடைமை, பொறையுடைமை என்பனவே அவை. இத்தகைய உடைமைகள் மனிதனுக்கு இன்றியமையாது வேண்டப்படும் விழுமியங்கள். 'கற்றுணர்ந்து அடங்கல்' உயர்ந்தோருக்குரிய பண்பு. அவையடக்கமும் அவர்களுக்குரியதே. தொன்மைக் காலம் முதல் இத்தகைய பண்புகளைக் கொண்ட சான்றோர்கள் சமுதாயத்தை முன்னின்று வழிநடத்த வேண்டும் என எதிர் பார்க்கப்பட்டது. மன மொழி மெய்களடங்குதலே உண்மையான அடக்கமாகும். இவற்றை மன அடக்கம் நாவடக்கம், உடலடக்கம் எனக் கூறலாம். அடக்கம் ஒருவனுக்குத் தருவது இன்ப அனுபவம். அடங்காமை இன்னல் தரவல்லது. மனித வாழ்வு செம்மையுற்று உயர்ச்சியடைவதற்கு அடிப்படையாக அமைவதே அடக்கம். மனித ஆளுமைக்கு இது சிறந்த அடிப்படை. எனவேதான் அதனை விடச் சிறந்த ஆக்கம் வேறில்லை உயிர்க்கு என அறுதியிட்டுக் கூறுகின்றார்.

வள்ளுவர் தரும் குறள்களில் நாம் காணும் சில சிறப்பம்சங்களை முதலில் உணர்ந்து நயத்தல் வேண்டும். எடுத்துக் கொண்ட ஒரு பொருளின் இலக்கணம், அதன் இன்றியமையாமை, அதன்மூலம் பெறப்படும் பயன், அதனை அடைவதற்கான வழியை உணர்த்துதல், உலகப் பொருள்களின் மூலம் அதன் உண்மைத் தன்மையை உறுதி செய்தல், போன்றவை குறிப்பிடத்தக்கவை.

அறிவுடைமை பற்றி வள்ளுவர் வலியுறுத்தும் கருத்து மனித ஆளுமைக்கு மிகவும் தேவையானது. அறிவு பற்றிப் பல்வேறு கோணங்களில் ஆராயப்பட்டுவரும் இக்காலத்தில் நாம் வள்ளுவர் விளக்கும் அறிவு பற்றிச் சிந்தித்தல் வேண்டும். இந்த உண்மையை நாம் அறிந்து கொள்ளாவிடில் நாம் அறிவைப் பெற்றிருக்கிறோம் எனக் கூறுவது எவ்வாறு? அறிவு கண்களின்

பார்வைக்குரியதன்று. எனினும் மக்களின் செயல்களைக் கொண்டு அதை ஆராய்ந்து அறிய முடிகின்றது.

மண், பெண், பொன், பொருள் ஆகியவற்றைக் கண்டால் மனம் அவற்றையடையத்தாவும் எனக் கூறும் வள்ளுவர், அவற்றைத் தவறான வழியில் அடைய மனம் எண்ணும், மனத்தை அவ்வாறு செல்லவிடாமல் தடுத்து, தீய எண்ணங்கள் தீய செயல்களிடமிருந்து விலக்கிக் காப்பாற்றி, நல்ல எண்ணங்கள் நல்ல செயல்களிடத்து அதைச் செலுத்துவது எதுவோ அதுவே அறிவு என்று விளக்கம் தருகின்றார். மனிதனுக்குரிய விழுமியங்களுள் அறிவுடைமை மிகவும் முக்கியத்துவமுடையது.

சென்ற விடத்தாற் செலவிடாது தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு.

(அறிவுடைமை - 2)

மனம் சென்ற விடமெல்லாம் அதனைச் செல்லவிடாது தடுத்து, அதைத் தீமைகளிலிருந்து விலக்கி, நல்லவைகளிடத்தே செலுத்துவது எதுவோ அதுவே அறிவு. மனம் வேறு அறிவு வேறு என்றும் மனத்திற்கும் அப்பாற்பட்ட ஒன்றே அறிவு என்றும் மனதை அடக்கி ஆள்வதே அறிவு என்றும் வள்ளுவர் வகுத்துக் காட்டுவதிலிருந்து நமது ஐயங்கள் தெளிகின்றன. போகாத இடந்தனிலே போகக் கூடாது என நெறிப்படுத்துவதே அறிவு. அறிவின் வழி செல்லாது ஆசையால் தூண்டப்பட்ட மனதின் வழி சென்று மனிதன் தவறிழைக்கின்றான். கண்ட விடமெல்லாம் கருத்தைச் செலுத்தி ஓடிஅலையும் மக்களுக்கு உண்மையை உணர்த்தி நல்வழி நடக்க அறிவுரை கூறுபவனே நல்லாசிரியன். எனவே அறிவின் வழிசெல்லும் மனிதன் அறிவைப் பெற்றவன் என்றும் மனதின் வழிசெல்லும் மனிதன் அறிவை இழந்தவன் என்றும் நன்கறியலாம்.

அன்பைச் சிவமெனக் கண்டவர் திருமூலர். அனைத்து சமயங்களுக்கும் அன்பே அடிப்படை. சான்றோர்கள் போற்றும் உயர்ந்த விழுமியப் பொருள் அன்பே ஆகும். எனவே வள்ளுவர் கூறும் மனித விழுமியங்களுள் அன்புடைமை சிறந்ததொன்றாகக் கருதப்படுகின்றது. அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர் நின்ற உடம்பாகும். அன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்பு எலும்பைத் தோல் போர்த்த வெற்றுடம்பே ஆகும் எனக் கூறுகின்றார் வள்ளுவர்.

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

(அன்புடைமை - 10)

எனக் கூறும் வள்ளுவர் அன்புடையார் தம் உடம்பையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வர் எனக் கூறுகின்றார்.

அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

(அன்புடைமை. 2)

என்ற குறள் சிந்தனைக்குரியது.

வள்ளுவர் கூறும் உடைமைகளில் அடுத்து முக்கியத்துவம் பெறுவது ஒழுக்கமுடைமை.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்.

(ஒழுக்கமுடைமை - 1)

ஒழுக்கமே எல்லோர்க்கும் மேன்மையைத் தருவதால் அந்த ஒழுக்கமே உயிரைவிடச் சிறந்ததாகப் போற்றப்படும் என வள்ளுவர் குறிப்பிடுகின்றார். மனிதன் ஒழுக்கம் என்னும் விழுமிய பொருளால் மேன்மையடைவான் என்பதை,

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

(ஒழுக்கமுடைமை 7)

எனக் குறிப்பிடுகிறார். மக்களாய்ப் பிறந்தவர் உயர்வை அடைய வேண்டும். அதற்குரிய ஒரே வழி ஒழுக்கத்தைப் பெறுவது தான். ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை என்பதனால் அது இல்லாத கல்வி, கேள்வி, ஆடை, அணி, பட்டம், பதவி, வீடு, நிலம், வண்டி, வாகனம், பொன், பொருள் முதலியவைகளால் மேன்மையடைய முடியாது என்பதை இக்குறள் வெளிப்படையாகவே கூறுகின்றது. இதனால் பிற பலவற்றால் அடைய முடியாத உயர்வை ஒழுக்கம் ஒன்றினாலேயே அடையலாம் என்பது பெறப்படுகின்றது. மக்கட்பண்பு ஒழுக்கத்தை அடைவதே. அதனை அடையாதவர் மக்கள் அல்லர். 'அவர் மரம்' என்பது

வள்ளுவர் கருத்து. இதனை 'மரம் போல்வர் மக்கட் பண்பில்லாதவர்', என்று மற்றொரு குறளால் காட்டுகின்றார் (பண்புடைமை –7)

'ஒழுக்கத்தின் எய்துவர்' என்ற குறளின் மேற்பகுதிக்கும் கீழ்ப்பகுதிக்கும் இடையில் 'இழுக்கம்' என்ற சொல் உள்ளது. ஒழுக்கம் என்பதற்கு நேர்மாறானது இழுக்கம். ஒழுக்கம் நல்லொழுக்கத்தைக் குறிக்கும். இழுக்கம் தீய ஒழுக்கத்தைக் குறிக்கும். இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி' என்ற குறளின் இறுதிப்பகுதி ஒழுக்கத்தில் தவறிய மக்கள் பழியை அடைய நேரிடும் என எச்சரிக்கின்றது. பழியிலும் கடும்பழி, கொடும்பழி, பெரும்பழி எனப் பலவகையுண்டு. அவற்றுக்கு மேலாக 'எய்தாப்பழி' என்ற புதுப் பழியை குறள் கூறுகின்றது. ஒழுக்கம் தவறிய ஒருவன் தவறு செய்தான் என ஒருவன் பொய்யாகக் கூறினாலும் உலகம் நம்பிவிடும். எனவே அவன் ஏற்காத பழியை ஏற்க நேரிடும். இதுவே எய்தாப்பழி. சாலை அமைத்தல், சத்திரம் கட்டுதல், அன்னமிடுதல், கோயில் புதுப்பித்து திருப்பணி செய்தல், பள்ளி தொடங்குதல் முதலியவை நல்லோர் செய்யும் நற்பணிகள். இவை புகழுக்குரியவை. எனினும் ஒழுக்கத்தை இழந்த ஒருவன் இவற்றில் ஒன்றைச் செய்தவிடத்தும் அதற்குரிய புகழை அவனால் அடைய முடியாது. செய்த இழி செயல்களை மறைப்பதற்காகவே அவன் இத்தகைய நற்செயல்களைச் செய்கின்றான் என மேலும் பழிக்கப்படுவான். இது அவன் அடைய வேண்டாத பழி – எய்தாப்பழி. இவ்வதிகாரத்தில் வந்துள்ள,

'வழுக்கியும் வாயால் சொல்லதீது'
'ஒழுக்கமில்லான் கண் உயர்வில்லை'
'பிறப் பொழுக்கம் குன்றக் கெடும்'
'இழிந்த பிறப்பாய் விடும்'
'என்றும் இடும்பை தரும்'

ஆகிய குறட் பகுதிகளும் இங்கு சிந்தனைக்குரியவை.

முழுமனிதன் பண்போடு வாழ்வான் என்று கூறுவது போல் திருக்குறளில் நூறாவது அதிகாரமாக பண்புடைமை அணிசெய்கின்றது.

'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்'

பண்பு உடையவர் பொருந்தி யிருப்பதால் உலகம் உள்ளதாய் இயங்குகின்றது. அஃது இல்லையாயின் மண்ணில் புகுந்து அழிந்து போகும். எனவே பண்புள்ளவர்களே உலகம் வாழ உந்து சக்தியாக விளங்குவர் என்பது பெறப்படுகின்றது. மக்கட் பண்பு உயர்ந்த விழுமியப் பொருள். மக்களுக்குரிய பண்பு மேலிட்டவர்களாக வாழ்தல் வேண்டும் என்பது வள்ளுவர் காட்டும் மனித வாழ்வு.

பண்புடன் வாழ ஒருவன் சான்றோனாக விளங்குதல் வேண்டும். எனவே பண்புடைமைக்கு முன்னே தொண்ணூற்றொன்பதாவது அதிகாரமாக சான்றாண்மை பற்றிக் கூறுகின்றார் வள்ளுவர். சான்றாண்மை இன்றேல் மனிதப் பண்பே இல்லை. சான்றாண்மை தன்னை ஆள்வதாகும். மற்றவர் பின்பற்றும்படி நடந்து காட்டிய ஆண்மை என்றும் சான்றோர் என்பவர் பிறருக்குச் சான்றாக வாழ்ந்தவர் என்றும் பொருள் கொண்டால் தவறில்லை. சான்றாண்மைக்கு எமது மரபு மிகப்பெரும் பெருமை தந்துளது. மனித விழுமியத்தில் உயர் இடம் பெறுவதால் வள்ளுவர் இதற்குத் தனியிடம் வழங்கியுள்ளார். ஒழுக்கத்தை உயிரிலும் பெரிதாகக் கருதும் நற்குணம் படைத்தோர் அக்குணங்கள் எதுவும் தம்மை விட்டுப் பிரிந்து போய் விடாமல் வாழ்பவர் சான்றாண்மையுடையோர்.

ஊழிபெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படுவார்.

(சான்றாண்மை - 9)

சால்பு என்னும் தகைமைக்குக் கடல் என்று புகழப்படுகின்றவர் ஊழிக்காலத்தின் வேறுபாடுகளே நேர்ந்தாலும் தாம் வேறுபடாமல் இருப்பவர்.

வள்ளுவர் கூறும் மனித விழுமியங்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதவை. மனிதன் நிறைமனிதனாக ஆக்கம் பெற உதவுபவை. அவற்றின் வழி நின்றால் மனிதன் அடைவது,

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்'

என்ற உயர் நிலையாகும்.

குறையுற உணர்தல்: இலக்கண மெய்ம்மைகள்

பேராசிரியர் இரா. பாலசுப்பிரமணியன் Ph. D.
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

தொல்காப்பியர் அகத்திணை மாந்தர் களுக்குரிய கூற்றுக்களை களவிற்குரியன என்றும் கற்பிற்குரியன என்றும் வரையறுத்துக் கூறுகிறார். களவில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், தோழியிற்கூட்டம் போன்றவை குறிக்கப்பெறும். இவற்றில் தோழியிற் கூட்டத்தில் ஒரு பிரிவாகத் தோழி மதியுடன்பாடு அமையும். தோழி மதியுடன்பாட்டில் குறையுற உணர்தல் ஒரு வகையாகும். குறையுற உணர்தல் பற்றிய இலக்கண மெய்ம்மைகளைக் காண்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

குறையுற உணர்தல்

குறையுற உணர்தல் என்பது, "தலைவன் தோழியின்பால் குறையிரந்து நின்ற நிலையில் இவன் என்னை இரந்து பின்நிற்கின்றது எது கருதியோ என ஆராய்ந்துணர்தல்" என்று குறிப்பிடுவர். தலைவன் தோழிபால் குறையுற்று நிற்க, அவன் உள்ளக்கருத்தினைத் தோழி உணர்தல் குறையுற உணர்தல் ஆகும்.

தலைவன் தோழியிடம் தனது குறையினைக் கரந்த மொழியால் அறிவிப்பான். தலைவனது உள்ளக் கருத்தினைத் தோழி ஆராய்ந்து உணர்தல் குறையுற உணர்தல் ஆகும்.

தோழி மதியுடன்பாட்டில் குறையுற உணர்தல் முதல்வகையாகும். தொல்காப்பியர் குறிப்பிடு வதாவன: (1) பெட்டவாயில் பெற்றிரத்தலை வலியுறுத்திக் கூறுதல் (2) ஊர் வினாதல் (3) பெயர் வினாதல் (4) கெடுதி வினாதல் (5) பிறவும் வினாதல் (6) தலைவன் (தன்) குறிப்புத் தோன்றத் தோழியைக் குறையுதல் (7) தோழி குறையவட்சார்த்தி மெய்யுறக் கூறல். இவ் ஏழு கூற்றுக்களில் முதல் ஆறும் தலைவன் கூறுவன. இறுதிக் கூற்றுத் தோழிக்குரியதாகிறது.

குறையுற உணர்தலுக்குரிய கூற்றுக்களை தொல்காப்பியர் தனித்த நூற்பாவில் சுட்டவில்லை. தலைவன் கூற்றாக அமையும் நூற்பாவில் குறையுற உணர்தலுக்குரிய கூற்றுக்களைத் தொகுத்துக் கூறியுள்ளார். பிற்கால இலக்கண நூல்கள் குறையுற உணர்தலுக்குரிய கூற்றுக்களைத் தனி நூற்பாவில் குறிப்பிட்டுள்ளன.

இளம்பூரணர் கருத்து

'பெட்டவாயில் பீற்று' என்று தொல்காப்பியர் குறிப்பிட்டதற்கு இளம்பூரணர் இருபொருள் கொள்கிறார். தலைவன் தோழியைப் பின்னிரந்து குறையுற நினைப்பினும் கூற்று நிகழ்தல், இரவு வலியுறுத்தல் என்ற இரண்டும் பெட்டவாயில் பெற்று என்பதற்கு இளம்பூரணர் கொண்ட கூடுதல் பொருளாகும். இறுதியில் உள்ள 'தோழி குறையவட் சார்த்தி மெய்யுறக்கூறல் என்பதற்கு தோழி கூற்றுள் அருமையின் அகற்றி ஓதப்பட்டது' என்று கூடுதலாக மற்றொரு கூற்றையும் இளம்பூரணர் கூறுவார்.

நச்சினார்க்கினியரின் கருத்து

நச்சினார்க்கினியர் தொல்காப்பியர் சுட்டிய ஏழு கூற்றுக்களைவிடக் கூடுதலாகச் சில கூற்றுக்களை அமைக்கிறார்.

நச்சினார்கினியர் கூற்றுக்கள்

1. பெட்ட வாயில் பெற்று இரவு வலியுறுத்தல்.
2. தலைவிக்கு வாயிலாவதற்கு உரியவரைத் தலைவன் ஆராய்தல்.
3. தலைவியால் விரும்பப்பட்ட தோழியை வாயிலாகப் பெறுதல்.
4. இரவு வலியுறுத்தல்.
5. ஊர் வினாவுதல்.
6. பேர் வினாதல்.
7. தலைவியும் தோழியும் ஓரிடத்தில் இருக்கும் போது தலைவன் பதியும் பெயரும் வினாதல்
8. தோழி தனியாக இருக்கும்போது தலைவன் பதியும் பெயரும் வினாதல்.
9. கெடுதி வினாதல்.
10. யானை வினாவுதல்.
11. புலி வினாவுதல்.
12. நெஞ்சும் உணர்வும் இழந்ததை வினாவுதல்.
13. பிறவும் வினாதல்.
14. தலைவன் தோழியிடம் வழி வினாவுதல்.
15. தலைவன் அவரிடையே உறவு தோன்றுமாறு கூற்று நிகழ்த்தல்.
16. தலைவன் தனது குறிப்புத் தோன்றத் தோழியைக் குறையுறுதல்.
17. கண்ணி முதலிய கையுறையோடு சென்று தலைவன் கூற்று நிகழ்த்தல்.
18. தோழி குறையவட் சார்த்தி மெய்யுறக் கூறல்.
19. தோழி தலைவனது குறையைத் தலைவிடத் தேயாய் இருந்ததென்று அவன்மேல் சேர்த்து ஆராய்தல்.
20. தோழி அக்குறை உண்மையென்று உணரும்படி தலைவன் கூற்று நிகழ்த்துதல்.

'தோழி குறையவட் சார்த்தி மெய்யுறக் கூறலும்' என்ற கூற்றினை இளம்பூரணர் தோழி கூற்றாகக் கருதினார். நச்சினிக்கியர் தலைவன் கூற்றாகக் கருதுவார்.

'பெட்டவாயில் பெற்று இரவு வலியுறுப்பினும்' என்ற தொடரில் உள்ள இரவு வலியுறுத்தல் என்றதனால் "தலைவன் தலைவிக்கு வாயிலாதற்கு உரியாரை ஆராய்ந்து பலருள்ளும் தலைவியாற் பேணப்பட்டார் தனக்கு வாயிலாதற்றன்மை யையுடைய தோழியை அவள் குறிப்பினான் வாயிலாகப் பெற்று இவளை இரந்து பின்னிற்பலென வலிப்பினும் என்றும் மறைந்து தலைவியைக் கண்டு நின்றான் அவட்கு அவள் இன்றியமையாமை கண்டு அவளை வாயிலெனத் துணியும்" என்பார் நச்சர்.

"ஊரும் பெயரும் என்றதனால் தலைவன், தலைவியுந் தோழியும் ஒருங்கு தலைப்பெய்த செவ்விபார்த்ததாயினும், தோழி தனித்துழியாயினும் நும்பதியும் பெயரும் யாவையெனவும் வினாவுவான் ஏதிலர் போல ஊரினை முன்வினாய்ச் சிறிது உறவு தோன்றப் பெயரினைப் பின்வினாய் அவ்விரண்டினும் மாற்றம் பெறாதான் ஒன்று கெடுத்தானகவும் அதனை அவர் கண்டான் போலவும் கூறினான்" என்று குறிப்பார். 'கெடுதி' என்ற சொல்லைக் கொண்டு, யானை, புலி முதலியனவும், நெஞ்சும் உணர்வும் இழந்தேன் அவை கண்டீரோ எனவும் வினாவுவன பலவுமாம்.

பிறவும் என்றதனாற் "வழி வினாதலும் தன்னொடு அவரிடையே உறவு தோன்றற்பாலனவுங் கூறுதலுங் கொள்க" என்று நச்சினார்கினியர் கருத்துத் தெரிவிப்பார். தோழியைக் குறையுறும் பகுதி என்பதை, "குறையுறூஉம் பகுதி, குறையுறு பகுதி எனவுமாம். எனவே குறையுறுவார் சொல்லுமாற்றானே கண்ணி முதலிய கையுறையோடு சேறலுங் கொள்க" என்றும் விளக்கம் தருவார். இவ்வாறு நச்சினார்கினியர் குறையுற உணர்தலுக்குரிய கூற்றறுக்களாக இருபதினை வரையறுக்கிறார்.

இறையனார் களவியலுரை

"குறையுறு புணர்ச்சி தோழி தே எத்துக்
கிழவிக் கில்லை தலைப்பெயல் ஆன
புணர்தல் பிள்ளை யாங்ஙனம் ஒழுகாது
பணிந்த மொழியால் தோழி தேஎத்து
இரந்துகுறை யுறுதலுங் கிழவோன் மேற்றே"

என்பது இறையனார் களவியலாகும். தோழியும் தலைவியும் கூடியிருப்பர். இந்நிலையில் தோழியிடம் தனது குறையினைக் கூறாள். தலைவன்தான் தோழியிடம் தழை, கண்ணி

முதலியவற்றைக் கையுறையாகக் கொண்டு செவ்வான். பணிந்த மொழியால் தனது குறையினைக் கூறுவான் என்பது கருத்தாகும். மேலும்,

"இரந்து குறையுறாது கிழவியுந் தோழியும்
ஒருங்கு தலைபெய்த செவ்வி நோக்கிப்
பதியும் பெயரும் பிறவும் வினாஅயி
புதுவோன் போலப் பொருந்துபு திறந்து
மதியுடம் படுத்தற்கும் உரிய னென்ப"

என்று குறையுற உணர்தலுக்குரிய கூற்றுக்களைக் 'களவியல்' வரையறுக்கும்.

தொல்காப்பியம் ஊர் வினாதல் என்று கூறியதை இறையனார் களவியல் மதி வினாதல் என்றும் தொல்காப்பியம் கூறிய கெடுதி வினாதல், பிறவும் வினாதல் என்ற இரண்டையும் ஒன்றாக இணைத்தும் குறிப்பிடும். தோழி குறையவட் சார்த்தி மெய்யுறக்கூறல் என்று தொல்காப்பியர் குறிப்பிட்ட ஒரு துறையை களவியல் இருதுறையாக விரிக்கும்.

பிற இலக்கண நூல்கள்

வீரசோழியம் குறையுற உணர்தலுக்குரிய கூற்றுக்களாகப் பதினொன்றினைச் சுட்டும். இக்கூற்றுக்கள் தலைவன் கூற்றுக்களாக உள்ளன. நம்பியகப் பொருளும் பதினொன்றினைக் குறிப்பிடும். முதல் எட்டுக் கூற்றுக்கள் தலைவன் கூற்று எனவும் இறுதி மூன்று கூற்றுக்கள் தோழி கூற்று எனவும் வரையறுக்கும். தொல்காப்பியம் 'பெட்டவாயில்' என்று சுட்டியதை இந்நூல் 'பாங்கி' எனக்குறிப்பிடும். நம்பியகப்பொருள் குறையுற உணர்தலுக் குரியனவாகச் சுட்டியவற்றில் இறுதி அடியை நீக்கி மற்ற அடிகளை 'இலக்கண விளக்கம்' அப்படியே சுட்டுகிறது. கூற்றுக்கள் மட்டும் விரிக்கப் பெற்றுள்ளன (21). சுவாமிநாதம் தோழியை 'சிலதி' எனச் சுட்டி பத்துக் கூற்றுக்களைக் குறிப்பிடும்.

முடிவுரை

களவியலில் நான்காவதாகத் தோழியிற் கூட்டம் அமையும். அவற்றில் தோழிமதியுடன்பாடு ஒரு பிரிவாகும். மதியுடன்பாட்டில் முதலாவதாகக் குறையுற உணர்தல் இடம் பெற்றுள்ளது

தொல்காப்பியர் குறையுற உணர்தலுக்குரிய கூற்றுக்களைத் தனித்த நூற்பாவில் சுட்டாமல், தலைவன் கூற்றாக அமையும் நூற்பாவிலேயே குறிப்பிடுகிறார். இறையானார் களவியல், நம்பியகப் பொருள் போன்ற நூல்கள் குறையுற உணர்தலுக்குரிய கூற்றுக்களைத் தனி நூற்பாவில் அமைத்துள்ளன.

தொல்காப்பியர் கூற்றுக்களாக ஏழினைக் குறிப்பிட, இளம்பூரணர் பத்தாக்கியும் நச்சர் இருபதாக்கியும் விளக்கம் கூறுவார்கள்.

களவியல், குறையுற உணர்தலுக்குரிய கூற்றுக்களாகப் பத்தினைக் குறிப்பிட வீரசோழியம் பதினொரு கூற்றினைக் குறிப்பிடும். நம்பியகப் பொருளும் அவ்வாறே கூறும். நம்பியகப் பொருள் கருத்தை இலக்கண விளக்கமும் குறிப்பிடுகிறது. சுவாமிநாதம் பத்துக்கூற்றினைக் குறையுற உணர்தலுக்குரியனவாகச் சுட்டும்.

தொல்காப்பியர் கருத்துக்களை உரையாசிரியர்கள் விரித்துப் பொருள் விளக்கம் தருகின்றனர். தாங்கள் புதிதாகச் சேர்த்த கூற்றுக்களுக்கு இயன்றவரை மேற்கொள் விளக்கப் பாடல்களை இலக்கியங்களிலிருந்து தருகின்றனர். பிற்காலத்திய நூல்கள் தனித்த நூற்பாக்களில் விரிக்கப்பெற்ற கூற்றுக்களைத் தருகின்றன. தொல்காப்பியர் கருத்துக்கள் பரிணாமம் பெற்று, புது இலக்கண நூல்களை சிந்திக்க வைக்கும் ஆற்றலுடன் திகழ்வது கருத்திற்குரியதாகும்.

பார்வை நூல்கள்

1. இளம்பூரணர் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம்.
2. நச்சினார்க்கினியர் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம்.
3. நக்கீரனார், களவியல் என்ற இறையனார கப்பொருள்.
4. கா. உ. கோவிந்தராசமுதலியார், வீரசோழியம்.
5. நாற்கவிராச நம்பி, நம்பியகப் பொருள்.

ஈழத்துத் தமிழ்க் கவிதை வளர்ச்சி

1970களின் ஆரம்ப முதல் இற்றைவரை

பேராசிரியர் க. அருணாசலம்
தமிழ்த்துறை,
போதனைப் பல்கலைக்கழகம்.

நவீன தமிழ்க்கவிதை வளர்ச்சியில் ஈழமும் குறிப்பிடத்தக்க அளவிற்கு முக்கியத்துவம் பெறுவதை அவதானிக்கலாம். நவீன தமிழ்க் கவிதையின் பிதாமகரெனப் போற்றப்படும் யுகப் பெருங்கவிஞன் பாரதியின் காலத்திலேயே ஈழத்திலும் நவீன தமிழ்க் கவிதை மெல்லமெல்ல அரும்பத் தொடங்கிற்று. இவ்வகையிலே பாவலர் துரையப்பாபிள்ளையின் கணிசமான கவிதைகள் மனங்கொளத்தக்கவை. தொடர்ந்து சோமசுந்தரப் புலவர், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, பேராசிரியர் கணபதிப்பிள்ளை, மறுமலர்ச்சிக் கவிஞர்கள் எனக் குறிப்பிடப்படும் அ.ந. கந்தசாமி, நாவற்குழியூர் நடராசன், சாரதா, மஹாகவி, சோ. நடராசன், செ. கதிரேசப்பிள்ளை முதலியோரும் இவர்களுக்குப் பின்னதாகத் தமிழ்க் கவிதையுலகிற் புகுந்த இ. முருகையன், இ. சிவானந்தன், ஆரையூர் அமரன், நீலாவணன், சில்லையூர் செல்வராசன், ராஜபாரதி, புரட்சிக்கமால், எருவில் மூர்த்தி, தாமரைத்தீவான், கவிஞர் காசி ஆனந்தன், பசுபதி, சுபத்திரன், அண்ணல், திமிலைத்துமிலன், சக்தி. அ. பாலையா, எம். சி. எம். சுபைர், அம்பி, பார்வதிநாதசிவம், சி. வி. வேலுப்பிள்ளை, குறிஞ்சித் தென்னவன், தமிழோவியன், அல் அஸுமத், பண்ணாமத்துக் கவிராயர், பரமஹம்சதாசன், சோ. பத்மநாதன் முதலியோரும் ஈழத்தின் நவீன தமிழ்க்கவிதை வளர்ச்சிக்கு வெவ்வேறு வகையிற் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைச் செய்துள்ளனர்.

இவர்கள் யாவருள்ளும் தமது கவிந்துவ ஆற்றலாலும் மானிட நேயத்தாலும் ஆழ்ந்தகன்ற சமூகப் பார்வையாலும் உயர்ந்தோங்கி நிற்பவர் 'மஹாகவி' யேயாவர். மஹாகவிக் கடுத்த நிலையில் முருகையன், நீலாவணன், புரட்சிக்கமால் முதலியோர் விளங்குகின்றனர்.

மேற்கண்டவர்களது முயற்சிகளுடனேயே ஈழத்து நவீன கவிதை அர்த்தம் நிறைந்ததாகவும் வீறுமிக்கதாகவும் தேசியப் பிரக்ஞையுடையதாகவும் சமகால அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளை அலசுவதாகவும் தமிழ் பேசும் மக்களது உணர்வுகளையும் அபிலாஷைகளையும் மனக்குமுறல்களையும் பிரதிபலிப்பதாகவும் வளர்ச்சியடையலாயிற்று.

1960களின் இறுதி அல்லது 1970 களின் ஆரம்பத்திலிருந்து ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் வளர்ச்சியானது புதிய பரிமாணங்களையும் பெறுமானங்களையும் பெறலாயிற்று. ஏறத்தாழ 1960களின் பிற்பகுதியிலும் 1970களிலும் கவிதையுலகில் முக்கியத்துவம் பெறுபவர்களுள் மேற்குறிப்பிட்டோருட் கணிசமானவர்களும் சண்முகம் சிவலிங்கம், சி. மௌனகுரு, எம். ஏ. நுஃமான், ஈழவாணன், மருதூர்க்கனி, காரை சுந்தரம்பிள்ளை, பாண்டியூரான், வி. கந்தவனம், கலைவாதிகலீல், மு. சடாட்சரன், பா. சத்தியசீலன், அன்புமுகைதீன், கல்வயல் வே. குமாரசாமி, மு. பொன்னம்பலம், அ. யேசுராசா, ஜீவா ஜீவரத்தினம், பஸீல் காரியப்பர் முதலியோரும் குறிப் பிடத்தக்கவர்கள். இவர்களது கவிதைகளின் முக்கிய பண்புகளை அவதானிக்க முன்னர் அப்பண்புகளை நிர்ணயித்த காரணிகளை மிகச் சுருக்கமாக இங்கு நோக்குதல் இன்றியமையாததாகும்.

இலங்கை சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து பொருளாதாரப் பிரச்சினைகளும் இனமுரண்பாட்டு உணர்வின் அடிப்படையிலான பிரச்சினைகளும் தலையெடுக்கத் தொடங்கின. ஏகாதிபத்தியங்களிடமிருந்து விடுதலை பெற்ற கீழை நாடுகள் பலவற்றிற் காணப்பட்டது போன்றே இலங்கையிலும் சுதந்திரம் என்பது வெறுமனே அரசியற் சுதந்திரமாகக் காணப்பட்டதேயொழிய பொருளாதார, சமூக, பண்பாட்டுத்துறைகளில் நெருக்கடிகளே அதிகரிக்கத் தொடங்கின. இந்நிலைமைகள் இனமுரண்பாட்டு உணர்வினடிப்படையிலான பிரச்சினைகள் மேன்மேலும் அதிகரிப்பதற்கு வழிகோலின. இனமுரண்பாட்டுப் பிரச்சினைகள் மேன்மேலும் அதிகரிக்கப் பொருளாதாரப் பிரச்சினைகளும் அதிகரித்துக் கொண்டே வந்துள்ளன.

சுதந்திரத்திற்குச் சற்று முன்னதாகவும் பின்னதாகவும் ஆட்சி அதிகார வேட்கை கொண்டபலர் மேற் கொண்ட நடவடிக்கைகளால் இலங்கையின் இன, மொழி முரண்பாட்டுணர்வுகள் வேகமாக வளர்ச்சியடையலாயின. மலையகத்தமிழ் மக்களின் குடியுரிமைப்பறிப்பும் தனிச்சிங்களச் சட்டமும், 1958, 1977, 1981, 1983, (கால இடை வெளிபடிப்படியாகச் சுருங்கிய நிலையில்) ஆகிய ஆண்டுகளில் இடம் பெற்ற கொடூரமான இனசங்காரச் செயல்களும், பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் யாழ்ப்பாணத்தில் 1974 ஆம் ஆண்டு நடைபெற்ற அனைத்துலகத்தமிழாராய்ச்சி மாநாட்டு இறுதி நாளில் இடம் பெற்ற திட்டமிட்ட சதிச் செயல்களினால் ஏற்பட்ட துன்பகரமான நிகழ்வுகளும், தரப்படுத்தல் என்னும் பெயரில் கல்வித்துறையில் சிறுபான்மை இனத்தவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியும் திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் நிகழ்ந்து கொண்டிருக்கும் பிரதேச ஊடுருவல்களும், 1981 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பொதுநூலகம் கடைத்தனமாக எரிக்கப்பட்டமையும், தொடர்ந்து இடம் பெற்ற மிலேச்சத்தனமான அடக்குமுறைகளும் பிறசம்பவங்களும் இலங்கையின் இன, மொழி முரண்பாட்டுப் பிரச்சினைகளைப் புதியதொரு எல்லையை நோக்கித் திருப்பலாயின.

பல தசாப்தங்களாக நாப்புலர ஜனநாயகம் பேசிக் கொண்டிருந்தவர்களுக்கு மத்தியலிருந்து தோன்றிய இளந்தலை முறை பேசுவதை இயன்றவரை குறைத்துக் கொண்டு செயலில் இறங்கிற்று; சாத்வீகப் போராட்டம் ஆயுதப் போராட்டமாகப் பரிணமிக்கலாயிற்று. வாய்ப் பேச்சுக்குப் பதில் 'சுடுகலன்கள்' முழங்கத் தொடங்கின. படிப்படியாக உள்நாட்டுப் போர் உக்கிரமடையலாயின; மதித்தற்கரிய மனித உயிர்கள் பல்லாயிரக் கணக்கில் அழிக்கப்படலாயின; கோடிக்கணக்கிலான ரூபா பெறுமதியுடைய உடைமைகள் இழக்கப்படலாயின; வருடாவருடம் பாதுகாப்புச் செலவுகள் பன்மடங்கு அதிகரிக்கலாயின; நாட்டின் பொருளாதார நெருக்கடி நாளுக்கு நாள் விஸ்வரூபமெடுக்கலாயிற்று; விலைவாசிகள் ரொக்கட் வேகத்தில் உயரலாயின; வீடு வாசல்களை இழந்தோர், அங்கங்களை இழந்தோர், உறவினர்களை இழந்தோர் தொகை பல இலட்சக் கணக்கினை எட்டலாயின; உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அகதிமுகாம்கள் பெருகலாயின; வட்டமேசை மாநாடுகளும் சமாதான உடன் படிக்கைகளும் முதலாம் இரண்டாம் மூன்றாம் தரப்புகளின் தலையீடுகளும் பேச்சுவார்த்தைகளும் அமைதிகாக்கும் படையின் செயற்பாடுகளும் போர் நிறுத்தங்களும் விழலுக்கிறைத்த நீராகின; மேன்மேலும் அவநம்பிக்கையை வளர்க்கச் செய்தன; மக்கள் அமைதியிழந்து தீயின் மேல் நிற்பவர் போலாகின்றனர்; வெறுமனே உள்நாட்டுப் பிரச்சினையென அலட்சியப்படுத்தப்பட்டிருந்த இனப்பிரச்சினை படிப்படியாக உலகநாடுகள் பலவற்றின் கவனத்தை ஈர்க்கலாயிற்று; புலம் பெயர்ந்து சென்ற நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் அகதிகளின், பிரச்சினைகள் இவற்றை மேலும் அதிகரிக்கச் செய்யலாயின.

இத்தகைய நிலைமைகள் யாவும் முன்னொரு போதுமில்லாத அளவிற்கு இலங்கையின் ஆட்சியாளர்கள், சமயங்களின் தலைவர்கள், நாட்டு நலன் விரும்பிகள், பொருளாதார நிபுணர்கள், சமூக, பண்பாட்டுக் காவலர்கள் முதலியோரைப் பெரும் விசனத்திற்குள்ளாக்கியுள்ளன; நாட்டின் எதிர்காலம் பற்றி ஆழமாகச் சிந்திக்க வைத்துள்ளன; இனங்களுக்கிடையில் சிறிது சிறிதாக ஏற்பட்ட விரிசல்கள் கடந்த ஒருசில தசாப்தங்களாக நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருவதையிட்டுத்

'தேசிய ஒருமைப் பாட்டினை' இதய சுத்தியுடன் வற்புறுத்தியும் அதற்காகப் பாடுபட்டும் வந்தவர்களைக் கதிகலங்கவைத்துள்ளன; கண்ணீர் சொரியச் செய்துள்ளன. இனப்பிரச்சினை விஷ்வரூபமெடுத்துக் கொண்டிருக்கும் நிலையில் நாட்டின் மிகமுக்கியமான பொருளாதாரப் பிரச்சினை முதல் சாதாரண பிரச்சினைகள்வரை யாவும் பின்தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றின் எதிர்காலவிளைவு பற்றி இப்பொழுதே ஆரூடம் கூறமுடியாது.

இத்தகைய நிலைமைகள் ஈழத்துத் தமிழ் பேசும் இலக்கியகர்த்தாக்களை எந்த அளவிற்குப் பாதித்துள்ளன என்பதை அவர்களது படைப்புகள் தெள்ளத்தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. அதே சமயம் நாட்டிற் பெரும்பான்மையினரான சிங்கள இலக்கியகர்த்தாக்கள் சிலரையோ பலரையோ ஓரளவேனும் பாதித்துள்ளமையை அவர்களது படைப்புகள் மூலம் அறியலாம்.

மேற்கண்ட சூழ்நிலைகளால் இந்நாட்டின் சகல சமூகங்களிலும் சமூக அமைப்புகளிலும் சமுதாயமதிப்பீடுகள், சமூக, சமய விழுமியங்கள், நியதிகள், நம்பிக்கைகள், ஆசாரங்கள் முதலியவற்றிலும் மாற்றங்கள் பலமிகவேகமாக ஏற்பட்டுக் கொண்டிருப்பதை இலக்கிய கர்த்தாக்களின் பல வகைப்படைப்புகளிலும் துல்லியமாகக் காணமுடிகின்றது.

இலங்கை சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து பல்வேறு காரணங்களால் நாட்டில் முற்போக்குச் சிந்தனைகள் வேகமாகப் பரவலாயின. இலசவக் கல்வித்திட்டத்தினால் ஏற்பட்ட கல்வி வளர்ச்சி, பல்கலைக்கழக மட்டம் வரையிலான தாய் மொழிக் கல்விவிருத்தி, இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் வீறார்ந்த செயற்பாடுகள், அவற்றுக்கெதிரான சக்திகளின் செயற்பாடுகள், பொதுவுடமைக் கொள்கை தொடர்பான நூல்களும் இலக்கியங்களும் தமிழ் பேசும் மக்கள் மத்தியிற் செல்வாக்குப் பெறத் தொடங்கியமை, வர்க்க உணர்வு கூர்மையுறத் தொடங்கியமை, காலம் காலமாகப் பின்தங்கியிருந்த கிராமப்புற மக்களும் சமூகத்தின் அடிநிலை மக்களும் சாதியின் பெயரால் அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த மக்களும் விழிப்புற்று எழுச்சியுறத் தொடங்கியமை, பெண்விடுதலை தொடர்பான கருத்துகளும் செயற்பாடுகளும் முனைப்புப் பெறத் தொடக்கியமை, இவை யாவற்றுக்கும் உந்துதலாக உலக அரங்கில் வேகமாக ஏற்பட்டுக் கொண்டிருந்த மாற்றங்கள், குறிப்பாக முதலாம் இரண்டாம் உலகமாகயுத்தங்கள் ஏற்படுத்திய பாதிப்புகள், ஏகாதிபத்தியங்களின் வீழ்ச்சி, பொதுவுடைமைக் கருத்துக்களின் பரம்பல், அறிவியல், தொழில் நுட்பத்துறைகளின் வேகம் மிக்க வியத்தகு வளர்ச்சி, 1960 களிலிருந்து பிரான்சிலும் தொடர்ந்து ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் பிறநாடுகளிலும் முன்னர் என்றும் இல்லாத அளவிற்கு இளந்தலை முறையினர் மத்தியில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் எழுச்சி, மூன்றாம் உலக நாடுகளில் வேகமாக ஏற்படுக் கொண்டிருக்கும் மாற்றங்கள் முதலியவை ஏறத்தாழ 1960 களின் பிற்பகுதியிலிருந்து ஈழத்துத் தமிழ்க் கவிதை வளர்ச்சியினை வெகுவாகப் பாதிக்கலாயின.

1970 களிலிருந்து ஈழத்துத் தமிழ்க் கவிதை வளர்ச்சியிற் பல மாற்றங்கள் ஏற்படுவதை அவதானிக்கலாம். 1960களில் அரும்பத்தொடங்கிய சிலவளர்ச்சிப் போக்குகள் 1970களிலிருந்தே வேகம் பெறத் தொடங்கின. கவிதைகளின் களங்கள் விரிவடைந்து அகலுலகத் தொடர்பு கொள்ளலாயின. இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் மட்டுமன்றி மலையகத்தைச் சேர்ந்தவர்களும் பெரும்பான்மை மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களைச் சேர்ந்த தமிழ் பேசும் மக்களும் (தென்னிலங்கை, தென்மேற்கு, வடமத்திய, வடமேற்குப் பிரதேசங்கள்) குறிப்பிடத்தக்க அளவிற்குக் கவிதைத் துறையிற் பங்கு கொள்ளலாயினர். முன்னர் என்றும் இல்லாத அளவில் முஸ்லிம்சமூகத்தின் இளந்தலை முறையினர் பலர் கவிதைகளைப் படைக்கலாயினர்; பெண்கள் பலர் ஆர்வத்துடன் கவிதை இயற்றுவதில் ஈடுபாடு கொள்ளலாயினர். ஈழத்துத் தமிழ்க் கவிதையானது மலையகக் கவிதை, புதுக்கவிதை; புகலிடக் கவிதை எனப் பல புதிய பரிமாணங்களைப் பெறலாயிற்று.

1970 களிலிருந்து இற்றைவரை எழுந்துள்ள கவிதைகளில் இலங்கையின் போர்க்காலச் சூழல், போரினால் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் சொல்லொணா அனர்த்தங்கள், உயிர் உடைமை இழப்புகள், இடப் பெயர்வுகள், புலம் பெயர்வுகள்; மக்களது ஏக்கங்கள், அவலங்கள்,

தவிப்புகள், அகதி வாழ்வு, எதிர்காலம் பற்றிய வினா, மண்ணின் மீதான பற்றுதல், கோடி இன்னல்கள் வந்துற்ற போதும் வாழ்ந்தே தீருவோம் என்னும் திடநம்பிக்கை முதலியனவே அதிகமான கவிதைகளில் முனைப்புப் பெற்றுநிற்றலை அவதானிக்கலாம்.

இலங்கையின் முது பெருங் கவிஞர்களுள் ஒருவரான முருகையன் முதல் இளங் கவிஞர்களான புதுவை இரத்தினதுரை முதலியோர்வரை, வ. ஐ. ச. ஜெயபாலன், சேரன் முதலியோர் முதல் நிலாந்தன், செழியன், கீதப்பிரியன் முதலிய வயதிற் குறைந்த ஆரம்பநிலைக் கவிஞர்கள்வரை, சோலைக்கிளி, மேமன்கவி, இப்னு அஸுமத், ஒட்ட மாவடி அறபாத், நட்சத்திரன் செவ்விந்தியன், றஸ்மி, நவதர்ஷிகன், பௌசர், ஏ. ஹசன், மலர்ச்செல்வன், றஹீம், கவியுவன், தியாக சேகரன், மருதூர் ஏ. மஜீத் முதலியோர் முதல் பராக்கிரம கொடித்துவக்குவரை, பெண் கவிஞர்களான ஊர்வசி முதல் மைத்ரேயிவரை, புகலிடக் கவிஞர்களான கி. பி. அரவிந்தன் முதல் தமயந்தி, அருந்ததி, கல்யாணி, கௌரி, நளாயினிமூர்த்தி, தர்மினி முதலியோர் வரை இவ்வகையில் மனங்கொளத்தக்கவர்கள்.

1971 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் இந்நாட்டில் இடம்பெற்ற இளைஞர்களின் கிளர்ச்சிமுதல் 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று இடம்பெற்ற துயர நிகழ்ச்சிகள், பல்வேறு ஆண்டுகளில் மலையத்திலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இடம்பெற்ற இனசங்காரச் செயல்கள், யாழ்ப்பாணப் பொதுநூலகம், யாழ்ப்பாண நகரம் முதலியன தீக்கிரையாக்கப்பட்டமை, ஊரடங்குச்சட்ட நேரங்களில் இடம்பெற்ற குரூரங்கள், இளைஞர்வதை, அடையாள அட்டையின் இன்றியமையாமை, சோதனைக் கெடுபிடிகள், சிறைச்சாலைப் படுகொலைகள், மனிதப் புதைகுழிகள், திடீர் திடீரென இளைஞர்கள் காணாமற்போதல், பேருந்து வண்டிப் பிரயாணிகளை இறக்கிச் 'சன்னம் முடியு மட்டும் சன்னதம் ஆடிய' குரூரங்கள், குமுதினிப் படகு முதல் கிளாலிப் படகுகள் வரை அவற்றிற் பயணம் செய்தோர் படுகொலை செய்யப்பட்டமை, கொடூரமான கற்பழிப்புகள் முதல் இரத்தத்தையே உறைய வைக்கும் குரூரச் செயல்கள், சிறைச்சாலைச் சித்திர வதைகள் முதலியன வரை இத்தியாதி விடயங்களையெல்லாம் கவிதைகளாகவும் வரலாற்று ஆவணங்களாகவும் கவிஞர்கள் படைத்துள்ளனர்.

இவ்வகையில் வகைமாதிரிக்கு ஒருசில கவிஞர்களது ஒரு சில கவிதைகளை இங்கு நோக்கலாம். 1985 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 'மரணத்துள் வாழ்வோம்' என்னும் தலைப்பில் வெளிவந்த கவிதைத் தொகுதி பலரது கவனத்தை மிகுதியும் ஈர்த்தது. வெவ்வேறு தரத்தினராகவும் வயதினராகவும் கொள்கையினராகவும் விளங்கிய முப்பத்தொரு கவிஞர்களின் எண்பத்திரண்டு கவிதைகள் இத்தொகுதியிலமைந்துள்ளன.

இக்கவிதைகளை அருமுயற்சியுடன் தொகுத்தளித்த தொகுப்பாசிரியர்களான யேசுராசா, சேரன், பத்மநாபஐயர், நடராசன் ஆகியோர் பாராபட்டப்பட வேண்டியவர்கள். மானிடநேயம் மிகுந்த அவர்களது முயற்சியைப் பிறரும் மேற் கொண்டிருந்தால் 'மரணத்துள் வாழ்வோம்' தொகுதியைப் போன்று 'மரணங்கள் மலிந்து விட்ட பூமி', 'குருதிநாடு', 'நரகத்துள் வாழ்வோம்', 'வாழ்க்கைக்காகப் போராட்டமா? போராட்டத்திறகாக வாழ்க்கையா?', 'மடியும்வரை வாழ்வோம்' என ஆகக் குறைந்தது பத்துத் தொகுதிகளையாவது வெளிக்கொணர்ந்திருக்கலாம்.

அதே சமயம் 'மரணத்துள் வாழ்வோம்' கவிதைத்தொகுதிக்கு முன்னரும் பின்னரும் வெளிவந்த 'பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்' (பதினொரு ஈழத்துக் கவிஞர்களின் ஐம்பத்தைந்து கவிதைகள் அடங்கிய தொகுதி), 'தாயகம் கவிதைகள் அறுபத்தாறு' (இருபத்தைந்து கவிஞர்களின் கவிதையாக்கங்கள்) முதலிய கவிதைத் தொகுதிகளையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டியது அவசியமாகும். "தொகுதிகளாக வெளிவந்தவை மிகக் குறைவு; வர வேண்டியவை மிக அதிகம்" எனக் கூறக்கூடிய அளவிற்குக் கடந்த முப்பது ஆண்டுகளுள் மேற்கண்ட விடயங்கள் தொடர்பாக ஆயிரக்கணக்கான கவிதைகள் சஞ்சிகைகளிலும் மலர்களிலும் தினசரிப் பத்திரிகைகளிலும் பிறவற்றிலும் வெளி வந்துள்ளமையை அவதானிக்க

முடிகின்றது. வெளிவந்துள்ள கவிதைகள் எல்லாம் மிகச் சிறந்தவையா? சிறந்தவையா? தரமானவையா? தரக்குறைவானவையா? என, சில 'காரசாரமான' விமர்சகர்கள் 'நெற்றிக் கண்'ணைத் திறக்கலாம். தரநிர்ணயத்தை அதியற்புத விமர்சகர்களிலும் பார்க்கக் 'கால தேவனே' மிகச் சரியாக எடைபோட்டு வந்துள்ளதைக் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்டகாலத் தமிழ் இலக்கிய வரலாறு நிரூபித்து நிற்கின்றது.

'மரணத்துள் வாழ்வோம்' என்னும் தொகுதியில் அமைந்துள்ள கவிதைகள் ஏறத்தாழ 1970 களின் ஆரம்ப முதல் இலங்கையின் கொடூரம் மிக்க கறைபடிந்த கால கட்டங்களுள் ஒன்றான கறுப்பு ஜூலை, 1983 ஆம் ஆண்டுக்குச் சற்றுப் பிற்பட்ட காலம் வரையிலான இந்நாட்டின் அரசியல் நிகழ்வுகளையும் போர்ச் சூழலையும் பலப் பரீட்சைக் கெடுபிடிகளையும் அராஜகத் தனங்களையும் 'அதியுன்னத தார்மீகத்தனங்களை'யும் மிகக் கொடூரமான முறையில் அடக்கி ஒடுக் கப்பட்டமக்களது சோதனைகளும் வேதனைகளும் அவலங்களும் இழப்புகளும் கையறு நிலையும் மிகுந்த வாழ்க்கைப் போராட்டங்களையும் படம் பிடித்துக் காட்டுவனவாகவும் அலசுவனவாகவும் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை ஊட்டுவனவாகவும் விளங்குகின்றமை விண்டுரைக் கத்தக்க தொன்றாகும். இத் தொகுதியிலமைந்துள்ள எந்தக் கவிதையையும் நாம் மறக்க முயன்றாலும் மறக்க முடியாத கவிதைப் பகுதியாக இத்தொகுதியின் இறுதியிலமைந்துள்ள 'பாப்பாக்களின் பிரகடனம்' எமது இதயத்தைக் குத்திக்கிளறுகின்றது. இன்றைய பாப்பாக்களே நாளைய பெரியவர்கள் என்பதும் நாம் மனங்கொள வேண்டியதாகும்.

வகைமாதிரிக்கு, எடுத்துக்காட்டாக இத்தொகுதியிலமைந்துள்ள வ. ஐ. ச. ஜெயபாலனின் 'உயிர்த்தெழுந்த நாட்கள்' என்னும் தலைப்பிலமைந்துள்ள நெடுங் கவிதையும் சேரனின் 'இராணுவமுகாமிலிருந்து கடிதங்கள்', 'எல்லா வற்றையும் மறந்துவிடலாம்.....', 'அவர்கள் அவனைச் சுட்டுக் கொன்ற போது.....', 'யமன்', 'உயிர்ப்பு' முதலிய தலைப்புகளிலமைந்துள்ள கவிதைகளும் சு. வில்வரத்தினத்தின் 'அகங்களும் முகங்களும்', 'விடுதலைக் குருவியும் வீட்டு முன்றிலும்', 'எங்கள் வீதியை எமக்கென மீட்போம்', 'தூது', 'புத்தரின் மௌனம் எடுத்த பேச்சுக்குரல்', மு. புஷ்பராஜனின் '81 மே 31 இரவு', 'பலஸ்தீனமும் எமது மண்ணும்', 'இக்கணத்தில் வாழ்ந்துவிடு', 'பீனிக்ஸ்', ஆதவனின் 'தத்துவத்தின் தொடக்கம்', 'உனக்கு மட்டுமல்ல இருட்டு', 'ஆதரே.....!' முதலிய தலைப்புகளில் அமைந்துள்ள கவிதைகளும் நோக்கத்தக்கவை.

மேலும் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளனவும் இடம் பெறாதனவுமான சோ. பத்மநாதன், தா. இராமலிங்கம், முருகையன், சி. சிவசேகரம், எம். ஏ. நுஃமான், வ.ஐ.ச. ஜெயபாலன், அ. யேசுராசா, சாருமதி, இளவாலை விஜயேந்திரன், ஹம்சத்வனி முதலியோரது கவிதைகளும் புதுவை இரத்தினதுரை, மேமன்கவி, இப்னுஅஸுமத், ஒட்டமாவடி அறபாத், சோலைக்கிளி முதலியோரது கவிதைகளும் பிரசுரமாகாதனவும் பிரசுரமாகியும் நூல்வடிவம் பெறாதனவுமான 'போராளிகளின்' கவிதைகளும் சுவரொட்டிக் கவிதைகளும் அஞ்சலிக் கவிதைகளும் 1970 கள் முதல் இற்றைவரையிலான நிலமைகளையும் அல்லற்பட்டு ஆற்றாது அழுது கண்ணீர் வடிக்கும் மக்களின் மனக்குமுறல்களையும் பிரதிபலிப்பனவாகவும் அனுபவங்களின் வெளிப்பாடுகளாகவும் உரிமைப் போராட்டக் கீதங்களாகவும் வரலாற்று ஆவணங்களாகவும் விளங்குதல் கவனிக்கத்தக்கது.

மேற்கண்டோரது கவிதைகள் பல வெறுமனே அவலங்களையும் இழப்புகளையும் மட்டும் பிரதிபலிப்பதுடனமையாது அதற்கும் அப்பால் எதிர் காலம் பற்றிய நம்பிக்கையை ஊட்டுவனவாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வெங் கொடுமைச் சாக்காட்டில் ஜீவமரணப் போராட்டம் நடாத்திக் கொண்டிருக்கும் மக்கள் எதையும் தாங்கும் இதயமுடையவர்களாகவும் இழக்கக் கூடாதன வற்றையெல்லாம் இழந்து விட்ட நிலையிலும் மீளப் பெறவேண்டியவற்றைப் பெற்றே தீருவோம் என்னும் அசுரத்தனமான நம்பிக்கையுடனும் தீரத்துடனும் உரிமை வேட்கையுடனும் செயற்பட உந்துதல் அளிப்பனவாகவும் அமைந்துள்ளன.

இத்தகைய கவிதைகளுக்கு முன்னோடியாக 1971 ஆம் ஆண்டு ஜூன் மாதம்

அமரத்துவமடைந்த 'மஹாகவி'யின் 'இதயகீதம்' என்னும் தலைப் பிமைந்துள்ள பாடல் விளங்குகின்றதெனலாம். அப்பாடலின் ஒரு பகுதிவருமாறு;

'..... உப்பை இனிமேல் ஒதுக்கி
விடும்! என்றார்
ஐயகோ! ஏற்றேன், அரிய
முயற்சிகளை
வை ஓர் புறத்தே: வருந்திப்
பெரும் பணியில்
ஈடுபடாதே! இரவு
துயில் குறைத்தல்
கூடாது; கொஞ்சம் நினைப்பைக்
குறுக்கு! என்று
பட்டியலை நீட்டிப் பளீர் என்றெதிர்
எறிந்தார்.
தொட்ட தொழிலைத் தொடரா
தொழிவதோ?
இம்மாநிலத்தே இறவாது
பல்லாண்டு
சும்மா கிடந்து சுகமாய்
இருப்பதிலும்
கொண்டு வாபார்ப்போம்
கொலை எருமை பூட்டியநின்
வண்டியினை எனது வாசலுக்கு!
நான் இங்கே
சூழ்வேன்; சுழல்வேன், சுமப்பேன்;
சுவைத்திருப்பேன் வாழ்வேன்
மடியும்வரை'.

சோ. பத்மநாதனின் 'வடக்கிருத்தல்' என்னும் கவிதைத் தொகுதியில் இடம் பெற்றுள்ள பாடற் பகுதிகள் சில வருமாறு;

"உடைந்த வீடுகள்
இழந்த உடைமைகள்
பிரிந்த உறவுகள்
.....
.....கணக்கு
முடிக்கும் வேளையில்
உன்பேரில் உள்ளவரவு
என்னிடம் நீ பற்றியதைவிட
அதிகமாய்ப் போனதால்
அடக்க முடியவில்லை"

"உள்ளே கூரையில்லா வீடு
குடியிருப்போர் யாருமில்லை
ஆனாலும் முற்றத்தில் ஓங்கி வளர்கிறது
தானாய், தனியே வடலிப்பனையொன்று!
ஷெல்லடிக்கும் குண்டுக்கும் சிறிதும் சளைக்காது
வல்லமையாய் ஓங்கி வளரும் பனைவடலி
.....
நெருக்குவார்க்கு என்றும் பணியாத தன்மானம்
காக்கும் பனையை வியந்து வியந்து கண்ணால்
நோக்கினேன் நின்றேன் நொடிந்து வீழ்ந்தேன்
நிச்சயமாய்....."

இங்கு வடலியைக் குறியீடாகக் கொண்டு கவிஞர் எதிர் காலம் பற்றிய நம்பிக்கையை ஊட்டுவதை அவதானிக்கலாம்.

வ. ஐ. ச. ஜெயபாலனின் 'உயிர்த்தெழுந்த நாட்கள்' என்னும் நெடுங்கவிதையில் இடம் பெறும் பாடற் பகுதிகள் சிலவருமாறு;

"..... உத்தமனார்,
காட்டு மிராண்டித் தனங்களைத் தொகுத்து
உத்தியோக தோரணையோடு
'சிங்கள மக்களின் எழுச்சி' என்றார்.
தென்னை மரத்தில் புல்லுப் பிடுங்கவே
அரசும் படையும் ஏறியதென்றார்.
உலகம் உண்மையை உணர்ந்து கொண்டது."

"எழுந்தோம்
வெறுங்கைகளோடு
உடைந்த கப்பலை விட்டு அகன்ற
ரொபின்சன் குருசோவைப் போல;
குலைந்த கூட்டை விட்டு அகன்ற
காட்டுப் பறவையைப் போல,
நாம் வாழவே எழுந்தோம்.
சாவை உதைத்து,
மண்ணிலெம் காலை ஆழப்பதித்து
மரணதேவதை இயற்கையாய் வந்து
வருக என்னும் இறுதிக் கணம் வரை
மூக்கு முழியுமாய்
வாழவே எழுந்தோம்!"

1983 ஆம் ஆண்டு 'கறுப்பு' ஜூலை மாதம் இடம் பெற்ற இனசங்காரத்தின் பலவகைப் பாதிப்புகளையும் புலப்படுத்தும் இப்பாடற் பகுதி சிந்தனையைத் தூண்டுவதாகும். சேரனது 'எல்லாவற்றையும் மறந்து விடலாம்.....' மு. பொன்னம்பலத்தின் 'வீரத்தைத்தூக்கு' முதலிய

தலைப்புகளிலமைந்துள்ள பாடற் பகுதிகளும் இவ்வகையில் நோக்கத்தக்கவை.

புதுவை இரத்தினதுரையின் 'மரணங்கள் மலிந்து விட்ட பூமி' என்னும் தலைபிலமைந்துள்ள நெடுங்கவிதையின் சில அடிகள் வருமாறு;

"அழிவுக்குத் தோள் கொடுக்கும் அக்கிரமப் பூமியிது
இறப்புக்குள் வாழ..... இப்போது பழகி விட்டோம்
சாவுக்குள் வாழ்ந்து சாகத் துணிந்து விட்டோம்
மரணம் எமக்கிப்போ மலிவான பொருளொன்று
கருச்சிதைவு கூட கடுங்குற்றம்
இப்போதோ,
தெருக்கொலைகள் இங்கே சிறு விடயம் ஆகியது
கேட்க ஒரு நாதி
கிளர்ந்தெழும்ப ஒரு கூட்டம்
மீட்கவொரு இயக்கம்
மூச்சு விட ஒரு கவிஞன்
கட்டாயம் தேவை..... இது
காலத்தின் குரலாகும்."

இக்கவிதை ஜனவரிமாதம் 1986 ஆம் ஆண்டு மல்லிகை இதழில் வெளிவந்துள்ளது. கவிதை வெளிவந்த காலத்தையும் இன்றைய நிலையையும் ஒப்பு நோக்குமிடத்து வீறார்ந்த கவிஞன் ஒருவனது 'ஆழ்ந்திருக்கும் உள்ளத்தையும் ' நாம் சிந்திக்காமல் இருக்க முடியாது.

போர்க்காலச்சூழல் காரணமாக ஒரு மொழி பேசும் தமிழ் – முஸ்லிம் மக்களிடையே நீண்டகாலம் நிலவி வந்த நெருங்கிய பிணைப்பு விரிசலடைந்துள்ளமையை மிகுந்த கவலையோடு சில கவிஞர்கள் கவிதைகளாக்கியுள்ளனர். இவ்வகையில் எடுத்துக்காட்டாக வ. ஜ. ச. ஜெயபாலன், சேரன், கலைமகள் ஹிதாயாறிஸ்வி, மருதூர் மஜீத், புதுவை இரத்தினதுரை முதலியோரது கவிதைகளைக் குறிப்பிடலாம். கலைமகள் ஹிதாயாறிஸ்வியின் 'குருதி பாய்ச்சும் இதயம்' என்னும் தலைப்பிலமைந்துள்ள பாடல் உள்ளத்தை உருக்குவதாகும். "ஒரு மொழி பேசும் இருஇனமக்கள் கீரியும் பாம்புமாய்ப் போரடித்து மாய்தலைக்" கண்டு அவரது இதயம் குருதி பாய்ச்சுவதை எவரும் அலட்சியப்படுத்திவிட முடியாது. இதே போன்று ஒரு மொழிபேசும் இரு இனமக்களிடையே ஏற்பட்டு விட்ட விரிசலை எண்ணி இரு இனமக்களும் தவிப்பதையும் காலம் காலமாக நிலவிவந்த 'நெருக்கமான இணைப்பு' மீண்டும் வராதா என எங்குவதையும் மனதை நெருடும் வகையில் மணிப் புலவர் மருதூர் ஏ. மஜீத் அவர்களின் 'கிழக்கின் வசந்தமே! நீ எங்கு போய்விட்டாய்?' என்னும் தலைப்பிலமைந்துள்ள கவிதைப் பகுதியில் வெளிப்படுத்தியுள்ளார். பாழாய்ப் போன கலவரங்களாலும் போர்க் கொடுமைகளாலும் தமிழ் – சிங்கள் மக்களிடையே நிலவி வந்த உறவு தகர்ந்து விட்டதே என்னும் ஏக்கத்தையும் தவிப்பையும் புதுவை இரத்தினதுரை, சேரன், வ. ஐ. ச. ஜெயபாலன் முதலியோரது நெடுங்கவிதைகள் சில வெளிப் படுத்துகின்றன.

பல்வேறு காரணங்களால் மலையகத் தமிழ்க் கவிதை பற்றித் தனியாகவும் விரிவாகவும் நோக்கப்பட வேண்டும். ஏறத்தாழ 1960 களில் மலையகத்தின் நவீன கவிதை வளர்ச்சிக்குப் பலர் அரிய பங்களிப்புகளைச் செய்துள்ளனர். எனினும் 1970 களிலிருந்தே நவீன கவிதையும் புதுக்கவிதையும் வேகமாக வளர்ச்சியடையலாயின; மலையகத் தொழிலாளர்களின் இன்பதுன்பங்களையும் வாழ்க்கைப் போராட்டங்களையும் அவர்களது எழுச்சிக்குத் தடையாக அமையும் காரணிகளையும் ஆழமாகவும் அகலமாகவும் பலர் நோக்கலாயினர்; அலசலாயினர்; பிரச்சினைகளுக்கான தீர்வுமார்க்கங்களையும் விண்டு காட்ட முயன்றுள்ளனர். (இவை பற்றியெல்லாம் இக்கட்டுரையாசிரியரால் எழுதப்பட்ட 'மலையகத்தமிழ் இலக்கியம், என்னும் நூலில் விரிவாக நோக்கப்பட்டுள்ளது.)

1970களிலிருந்து முன்னர் என்றும் இல்லாத அளவிற்கு முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த இளந்தலைமுறையினர் நூற்றுக் கணக்கில் கவிதைத்துறையில் காலடி எடுத்து வைக்கலாயினர். இவர்களுட் சிலர் இன்று நாடறிந்த கவிஞர்களாகவும் 'தமிழ் கூறும் நல்லுலகின்' கவனத்தை ஈர்ப்பவர்களாகவும் ஈழத்துத்தமிழ்க் கவிதை வளர்ச்சிக்குக் குறிப்பிட்டுக் கூறக் கூடிய அளவிற்குப் பங்களிப்புச் செய்து கொண்டிருப்பவர்களாகவும் புதிய பல பரிமாணங்களை நல்கிக் கொண்டிருப் பவர்களாகவும் விளங்குதல் விண்டுரைக்கத் தக்க

தொன்றாகும். இவர்களது கவிதைகளையும் தனியாகவும் விரிவாகவும் ஆராய்வது இன்றியமையாததாகும்.

1970 களிலிருந்து முன்னர் என்றும் காணப்படாத அளவிற்கு ஈழத்துத் தமிழ்க் கவிதை வளர்ச்சிக்குத் தமிழ் – முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த பெண்கவிஞர்கள் பலர் (கவிஞன் என்னும் ஆண்பால் பதத்துக்குப் பொருத்தமான பெண்பாற் சொல் தமிழில் உண்டா? இல்லையெனில் அதற்கான காரணங்கள்!) மிகவும் கார்த்திரமான பங்களிப்புகளைச் செய்து வருகின்றனர். "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு" எனச் சிலர் நையாண்டி செய்தாலும் சங்க காலம் முதல் இற்றைவரை கவிதைத்துறையிலும் பிறதுறைகளிலும் பெண்கள் ஆற்றியுள்ள பெரும் பணிகளை எம்மால் அலட்சியப்படுத்த முடியுமா? பெண்களைப்பற்றி அலட்சியமாகக் கருத்துகளை வெளியிடும் ஆண்கள் சிலர், தாம்பெண்ணின் கருவறையில் கருவாகி உருவாக்கிப் பிறந்து தாய்ப்பால் உண்டு வளர்ந்து "ஆண்திமிர்" கூடியதும் நன்றிகெட்ட இழி பிறப்பினர்களாகி விடுகிறார்கள்.

1970 களிலிருந்து இற்றைவரை ஈழத்துத் தமிழ்க்கவிதை வளர்ச்சியில் எவருத் தட்டிக் கழிக்க முடியாத, மிகமுக்கியமான இடத்தைப் பெற்றுக் கொண்டிருப்பது புதுக்கவிதைகளே. 1970 களிலிருந்து இற்றைவரையிலான ஈழத்துத் தமிழ்க்கவிதைகளை ஆராயப்புகும் எவரும் புதுக் கவிதைகளைத் தவிர்த்துத்தமது ஆய்வினை நிறைவு செய்ய முடியாது என்று கூறும் அளவிற்கு இன்று புதுக்கவிதையும் அதன் இன்னொரு வடிவமான "ஹைக்கூ" கவிதையும் துரிதகதியில் வளர்ந்து வருகின்றன.

ஈழத்துத்தமிழ் கவிதை வளர்ச்சியில் முன்னர் என்றும் இல்லாத ஒரு புதுப்பிறவி 'புகலிடக் கவிதைகள்' என்பதாகும். ஏறத்தாழ 1970 களிலிருந்து கருவாகி உருவாகி இன்று நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து கொண்டிருக்கும் புதுப் பிறவி இதுவாகும். இது பற்றியும் நாம் விரிவாகவும் தனியாகவும் ஆராய வேண்டியது மிக மிக இன்றியமையாததாகும்.

ஈழத்திற் குழந்தை இலக்கியமும் இன்று குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அளவிற்கு வளர்ந்து வருகின்றது. குழந்தை இலக்கியம் என்னும் போது குழந்தைகளுக்கான கவிதை, கதை, நாடகம் முதலிய பலதுறைகளையும் குறிக்கும். குழந்தைப்பாடல்களை இயற்றுவது மிகவும் சிரமமான ஒன்றாகும். குழந்தைகளின் மனஇயல்புகளையும் உளப்பாங்கையும் ஆர்வங்களையும் அறிவுத் தரத்தையும் நன்கு அறிந்தவர்களாகவும் சமூகவியல், உளவியல் முதலியதுறைகள் சார்ந்த அறிவுடையவர்களாகவும் குழந்தைக் கவிஞர்கள் இருத்தல் இன்றி யமையாததாகும். 1970 களிலிருந்து இற்றைவரை குழந்தைப் பாடல்களை இயற்றியவர்களுள் பா. சத்தியசீலன், சாரணாகையூம், சுபைர், நிஹ்மத்துல்லா, ஏ.யு. எல். செல்வி அரபா, கல்வயல் வே. குமாரசாமி, தாமரைத்தீவான், திமிலை மகாலிங்கம், ச. அருளானந்தம், அன்பு முகைதீன், எம். சி. எம். ஷம்ஸ், வாகரைவாணன் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். குழந்தைப் பாடல்களும் விரிவாக ஆராயப்பட வேண்டியதொன்றாகும்.

ஈழத்துத் தமிழ்க்கவிதை வளர்ச்சிக்கு மொழி பெயர்ப்பு முயற்சிகளும் குறிப்பிடத்தக்க பங்கினை நல்கிவந்துள்ளன. 1970 களுக்குச் சற்று முன்னரும் பின்னருமான மொழி பெயர்ப்பு முயற்சிகளைக் கூர்ந்து நோக்கினாற் சில உண்மைகள் புலப்படும். இலங்கைச் சிறுபான்மை மக்களின் உரிமைப் போராட்டங்கள், அவலங்கள், அகதிவாழ்வு, அடக்குமுறைகளுக்கெதிரான கிளர்ச்சிகள், தாயகம் பற்றிய ஏக்கம் விடுதலைத் தாகம் முதலியவற்றிற்குச் சமமானதும் அவற்றுக்கு உந்துதல் அளிப்பனவும் காலத்தின் தேவையை நிறைவேற்றுவனவுமான பிறமொழிக் கவிதைகளே அதிக அளவிற்குத் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம். இக்காலப் பகுதியில் பிறமொழிக் கவிதைகளைத் தமிழாக்கம் செய்தவர்களுள் கே. கணேஷ் முதலிடம் வகிக்கிறார் எனலாம். இவர் தவிர சி. சிவசேகரம், பண்ணாமத்துக் கவிராயர், எம். ஏ. நுஃமான், சண்முகம் சிவலிங்கம், மு. பொன்னம்பலம் , தென்னிலங்கையைச் சேர்ந்த சில முஸ்லிம் கவிஞர்கள் (சிங்களக் கவிதைகள் பலவற்றை மொழி பெயர்த்தவர்கள்) முதலியோரைக் குறிப்பிடலாம். இவர்களால் தமிழாக்கம் செய்யப்பட்ட கவிதைகளுள் கணிசமானவை நூலுருப் பெற்றுள்ளன.

நாமக்கல்லார், வள்ளத்தோள் கவிதைகளில் காந்தியம்

முனைவர் பா. ஆனந்தகுமார்
காந்திக்கிராமம் பல்கலைக்கழகம்.
தமிழ்நாடு.

இந்திய தேசியத்தின் முதல் எழுச்சியில் – திலகர் வழியில் – உருவான இந்தியக் கவிஞர்களுக்கு பாரதி, கேசவசுதர் (மராத்தி), மைதிலி சரண்குப்தா (இந்தி) போன்றோர் சிறந்த எடுத்துக்காட்டுக்கள். இந்திய தேசியத்தின் இரண்டாவது எழுச்சியில் – காந்திய அலையில் – உருப்பெற்ற கவிஞர்களுக்கு ஹிந்தியில் சியாராம் சரண்குப்தாவும் தெலுங்கில் கரிமெள்ள சத்யநாராயணாவும், தமிழில் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையும் (1888 – 1972) மலையாளத்தில் வள்ளத்தோள் நாராயணமேனோனும் (1888 – 1958) சிறந்த எடுத்துக்காட்டுக்களாக விளங்குகின்றனர்.

0.1. நாமக்கல்லாரும் வள்ளத்தோளும் பொதுவான சமூக, அரசியல் தத்துவப் பின்னணியில் உருவானவர்கள். நாமக்கல்லார் 1920 – இல் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மாநாட்டிற்குச் சென்று காந்தியக் கொள்கையை ஆதரித்தார். வள்ளத்தோள் 1925 இல் கேரளத்திலுள்ள வைக்கம் எனுமிடத்தில் நடந்த ஆலயப் பகுதி நுழைவு சத்தியாகிரகத்தில் காந்தியைச் சந்தித்தார் 1927, 1928 ஆம் ஆண்டுகளில் முறையே சென்னை, கல்கத்தா நகரங்களில் நடந்த காங்கிரஸ் மாநாடுகளில் கலந்து கொண்டார். காந்தியின் அஹிம்சை கொள்கையினை அவரது கதர், மதுவிலக்கு, வகுப்பு ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு முதலான நிர்மாணத் திட்டங்களை மக்களிடையே பிரசாரம் செய்யும் நோக்கில் இருவரும் மிகுதியான பாடல்களை எழுதியுள்ளனர். அன்றைய சென்னை மாகாண அரசாங்கம் (1949 இல்) தமிழில் இராமலிங்கம் பிள்ளையையும் மலையாளத்தில் வள்ளத்தோள் நாராயணமேனோனையும் 'அரசவைக் கவிஞராக' அறிவித்து, பட்டம் வழங்கிப் பாராட்டியது. இந்திய அரசு இருவருக்கும் 'பத்மபூஷன்' விருது வழங்கியுள்ளது. இவ்வாறு பல வரலாற்றுப் பொதுமைகள் இருவருக்கும் இருப்பினும், இக்கவிஞர்கள் இருவரும் ஒருவரையொருவர் அறிந்ததாக அகச்சான்றுகள் எதுமல்லை. இக்கவிஞர் நேரடியாக சந்தித்திருக்கா விட்டாலும் இவர்களின் கவிதைகள் 'காந்தியம்' என்கிற புள்ளியில் சந்திக்கின்றன. இதனை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1. காந்தி பற்றிய சித்திரிப்பு

1.0. மகாத்மாகாந்தியைத் தலைவராகவும், குருவாகவும், கண்கண்ட தெய்வமாகவும் ஏற்று நாமக்கல்லாரும், வள்ளத்தோளும் கவிதைகள் பல புனைந்துள்ளனர். நாமக்கல்லார் காந்தியைப் பற்றி எழுதிய கவிதைகள் 'காந்தி அஞ்சலி' எனும் பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன. வள்ளத்தோள் காந்தியைப் பற்றி எழுதிய கவிதைகளில் 'என்றெகுருநாதன்', 'பாபமோசனம்', 'ஓம் சாந்தி சாந்தி', 'பாபுஜி', 'பாதபாம்சு' ஆகிய கவிதைகள் குறிப்பிடத்தக்கன.

1.1. பல்சமயப் பெரியோரின் உருவகம்

புத்தர், ஏசு, நபி என அனைத்து மதப் பெரியோர்களின் உருவகமாக காந்தியக் காட்டும் தன்மை இருவரது கவிதைகளிலும் காணப்படுகிறது. இவ்வுருவகத் தன்மை வள்ளத்தோளின் 'என்னுடைய குருநாதன்' கவிதையில் பின்வருமாறு அமைந்துள்ளது.

"கிறிஸ்துதேவனின் தியாகப் பண்பும்
கண்ணபர மாத்மாவின் தருமம் காத்தலும்
புத்தனின் அஹிம்சையும் சங்கரனின்
அறிவாற்றலும் ரஞ்சிதேவனின் இரக்கவுணர்வும்
அரிச்சந்திரனின் வாய்மையும் முகம்மது நபியின்
மனவுறுதியும் ஒன்றாய்ச் சேர்ந்த ஓராளைக்
காணவேண்டுமெனின் என் குருவினருகே செல்வீர்
ஆங்கவன் வரலாற்றை வாசிப்பீர்".

(பக். 260 - 61)

காந்தியைப் பல்சமயப் பெரியோரின் உருவகமாகக் காணும் இத்தன்மை நாக்கல்லாரின் பின்வரும் 'சத்தியமூர்த்தி நம் காந்தி' கவிதையில் இடம் பெற்றுள்ளது.

"மகம்மது நபியே என்று
மதியுளார் சொல்லுவா ருன்னை
வன்பெரும் சிலுவைதன்னில்
வைத்தவர் அறைந்த போதும்
இன்பமே நுகர்ந்த தேவன்
ஏசுவே என்பாருன்னை
புனிதன் அப் பௌத்தனென்று
போற்றுவா ருன்னை யாரும்"

(பக். 66-67)

இராமலிங்கம்பிள்ளை 'உலகம் வாழ்க' (ப. 111) கவிதையில் இதே விதமாக காந்தியைச் சித்தரித்துள்ளார்.

1.2.புராணமயமாக்கலும் தமிழ்மயப்படுத்தலும்

வள்ளத்தோள் பல்சமயத் தலைவர்களின் உருவகமாகக் காந்தியைக் காட்டும் அதே நேரத்தில், இந்தியப் புராண புருடர்களின் உருவகமாகவும் காந்தியைக் காண்கின்றார். வைக்கம் சத்தி யாக்கிரகத்திற்கு வந்த காந்தியை வள்ளத்தோள் இப்படிப் பார்க்கிறார்:

"விசுவாமித்திரனின் கடுந்தவ வலிமையும்
மிதிலை மன்னனின் அருங்கர்ம யோகமும்
பீஷ்மரின் அறப்போர்த் திறமும்
விதுரனின் இன்சொல் திறமும்
ஒன்று சேர்ந்திருந்த ஓர் ஆண்மகனிடம்
இளம்பருதியின் ஒளியருகே சென்றேன்"

(பாபமோசனம், பக். 323)

இக்கவிதையில் காந்தியை விழுந்து வணங்குவதை, காசிக்குச் சென்று கங்கையில் மூழ்கிப்பெறும் பாவவிமோசனத்திற்கு ஒப்பானதாகக் கூறுகிறார். இதேபோலக் காந்தியின் பாதத்தூசியின் (அடிப்பொடி) புனிதப் பெருமையினை விளக்கும் 'பாதபாம்சு' எனும் தலைப்பிலமைந்த கவிதையில் காந்தியை 'நவதர்மனாக' வள்ளத்தோள் காட்டுகின்றார். காந்தியை புராணமயமாக்கும் இத்தன்மை இராமலிங்கம் பிள்ளையின் கவிதையில் இல்லை; மாறாக, காந்தியை – காந்தியத்தை – தமிழ்மயப்படுத்தும் முயற்சி காணப்படுகிறது. நாமக்கல்லார் தமது கவிதைகளில் பல இடங்களில் காந்தியை வள்ளுவரின் வழிவந்த தமிழனாகக் காண்கிறார். சான்றாகச் சில:

"வல்லாண்மை நமக்குவர வாழ்ந்து சென்ற
வள்ளுவனே மறுபடியும் வந்தான் என்னச்
சொல்லாண்மைப் புகழவொண்ணாக்
கருணைஜோதி
சுத்தன் எங்கள் காந்திமகான் நாமம் வாழ்க"

(புகழவொண்ணாக் கருணைஜோதி, பக். 70)

"வள்ளுவரின் வழிவந்த தமிழா! நீதான்
வாய்மையுடன் தாய்மைஅறம் வளர்த்த வள்ளல்"

(ஜோதி மறைந்து கொண்டதே, பக். 93)

"திருக்குறள் அறிவெல்லாம் – ஒன்றாய்த்
திரண்டுள நெறியனவாம்
உருக்குறள் காந்திமகான் – தந்துள
ஒப்பரும் சாந்தவழி"

(தமிழா மறக்காதே, பக். 103)

காந்தியை வள்ளுவராகவும் காந்தியத்தை வள்ளுவமாகவும் தமிழ் அடையாளத்தோடு காணும் இத்தன்மை இன்னொரு வகையிலும் நாமக்கல்லார் பாடல்களில் வெளிப்பட்டுள்ளது. அதாவது, காந்தியை வள்ளலாரின் அடையாளத்தோடு தமிழ்மயப்படுத்தும் முயற்சியும் நாமக்கல்லார் பாடல்களின் தென்படுகின்றது. இராமலிங்கம் பிள்ளை காந்தியை 'வள்ளலார்' என்ற அடைமொழியோடு அழைக்கிறார்; அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை வடிவாய்க் காண்கிறார்.

"வாழிஜெய வாழிஜெய வாழிகாந்தி
வள்ளலார் திருநாமம் வாழ்க என்போம்"

(ஜோதி மறைந்து கொண்டதோக், பக். 94.)

"ஜோதிபெருங் கருணைவள்ளல் காந்தி சொல்லே
சுருதியென மக்களெல்லாம் தொழுதல் வேண்டும்"

(படிப்பினை, பக். 108)

"அருட்பெருஞ் ஜோதியின் தனிபெரும் சுடராம்
அண்ணல் காந்தி மகான்"

(அருட்பெருஞ்சோதிக், பக். 357)

1.2.1. ஆக, வள்ளத்தோள் காந்தியை இந்தியப் புராணீக அடையாளங்களோடு ஒரு புராணத் தலைவராக மலையாள மக்களுக்கு அறி முகப்படுத்தியிருக்கிறார். நாமக்கல்லாரோ வள்ளுவராக – வள்ளலாராக – தமிழ் அடையாளங்களோடு காந்தியைத் தமிழ் மயமாக்கி தமிழ்ப்பண்பாட்டோடு இணைத்துக் காட்டியுள்ளார். இவ்வேறுபட்ட தன்மைகளுக்கு மாறுபட்ட இலக்கியப் பின்புலங்களிலிருந்து இவ்விருவரின் கவிதை ஆளுமை உருப்பெற்றதே காரணமாகும். இதனைச் சற்று விரிவாகக் காண்போம்.

வள்ளத்தோள் பெரிதும் புராணச் சார்புடைய மலையாள பெருங்காப்பியப் போக்கின் பின்னணியில் மரபுக் கவிஞராக இலக்கியவுலகில் அடியெடுத்து வைத்தார். சமஸ்கிருத புராணங்களில் ஈடுபட்டு அவற்றை மலையாளத்தில் மொழிபெயர்த்தார். எனவே புராண நிகழ்வுகளையே பெரிதும் கவிதைப் பொருளாக்கிய வள்ளத்தோளின் கவிதை ஆளுமையில் புராணிகத் தன்மை தலையாய இடம் பெற்றுள்ளது. எனவே எதனையும் – எவரையும் – புராணப் பின்னணியில் வைத்துக் காண்பது வள்ளத்தோளின் தவிர்க்க முடியாத இயல்பாக இருக்கிறது. இது மட்டுமின்றி மலையாளப் பண்பாட்டுத் தளத்தில் வைதிக புராணமரபு ஆழமாக தாக்கம் செலுத்தியிருப்பதும் ஒரு காரணமாகும். நாமக்கல்லார் கவிஞராக உருப்பெற்றகாலம் இந்திய தேசியவுணர்வோடு தமிழ்த் தேசியவுணர்வும் எழுச்சிபெற்ற காலமாகும். தமிழ்த் தேசியத்தில் வைதிகமும் புராணிகமும் தமிழ் மரபுக்கு எதிரானதாகக் கருதப்பட்டன. திருக்குறளும் சைவசித்தந்தமும் தமிழர் தத்துவநூல்களாக – தமிழ்ப் பண்பாட்டுச் சின்னங்களாக முன்வைக்கப்பட்டன. இப்பின்னணியில் உருவான இராமலிங்கம் பிள்ளை இயல்பாகவே தமிழ்மொழி, தமிழர் இனம், தமிழ் இலக்கியம் மீது அளவற்ற பற்றுக்கொண்டு தமிழின் தனித்த அடையாளங்களைக் கண்டு பெருமிதம் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டார். இதனை அவரது தமிழ்த்தேன், தமிழன் இதயம், தமிழ் மணம் ஆகிய கவிதைத் தொகுப்புக்களில் காணலாம். எனவே இராமலிங்கம் பிள்ளையின் கவிதை ஆளுமையில் தமிழுணர்வு ஒரு மேலோங்கிய அம்சமாக இருக்கிறது. இதன்காரணமாக நாமக்கல்லார் காந்தியையும் காந்தியத்தையும் தமிழ்ப்பண்பாட்டோடு இணைத்து உட்செரித்து – உள்வாங்க முயற்சித்துள்ளார். இனி காந்தியின் கொள்கைகளும் நிர்மாணத் திட்டங்களும் இவ்விருவரது கவிதைகளில் எங்ஙனம் போற்றப்பட்டுள்ளன என்பதைக் காண்போம்.

2. காந்தியின் சித்திரிப்பு

2.1. அஹிம்சை - சத்தியம்

அஹிம்சை, சத்தியம் ஆகிய இரண்டும்தான் காந்தியத்தின் அடிப்படைக் கருத்தாக்கங்களாகும். இதனை இராமலிங்கம் பிள்ளை வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகத்தின்போது இயற்றிய பாடலின் தொடக்கத்தில் மிக அருமையாக விளக்கியுள்ளார். அப்பாடலடிகள் இதோ:

"கத்தி யின்றி ரத்த மின்றி
யுத்த மொன்று வருகுது
சத்தி"யத்தின் நித்தி யத்தை
நம்பும் யாரும் சேருவீர்! (பக்.115)

'அஹிம்சை என்பதன் அகராதி'யாக காந்தியைக் காட்டும் நாமக்கல்லார் அஹிம்சை என்பதன் பொருளைப் பின்வருமாறு வரையறுக்கிறார்.

"கொல்லாதிருப்பது ஒன்றே தான்
கூறும் அஹிம்சை என்றல்ல
எல்லாச் செயலிலும் நன்னோக்கம்
இணைந்த (து) அஹிம்சை தன்னாக்கம்"

('காந்திவழி', பக். 99)

சத்தியத்தின் மூர்த்தியாக காந்தியைக் காட்டி, 'சத்திய சங்க நாதம்' ஊதத் தமிழரை அழைக்கும் நாமக்கல்லார், சத்தியம் வெல்லும் என்கிற கருத்தைப் பல பாடல்களில் வலியுறுத்தியுள்ளார். மேலும், நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி காந்தியை வள்ளுவராக தமிழ் அடையாளப்படுத்தும் இராமலிங்கம்பிள்ளை காந்தியத்தின் அடிப்படைக் கருத்தாக்கங்களான அஹிம்சை, சத்தியம் என்பதனை முறையே வள்ளுவர் கொல்லாமை, வாய்மை என்பதாக ஒத்திணைவு செய்து பின்வரும் பாடலில் அடையாளப்படுத்துகிறார்.

"வள்ளலக் காந்தி செய்த
அறந்தரு வாழ்க்கை முற்றும்
தள்ளாடும் அறங்க ளாகத்
தமிழ்த்திருக் குறளில் முன்பே
வள்ளுவன் வாழ்ந்து சொன்ன
கொலைதவிர் வாய்மை யாகும்"

(தமிழ்வழி அரசு பக். 151)

வள்ளத்தோள், அஹிம்சையின் சிறப்பை வலியுறுத்தி 'அஹிம்ஸ' எனும் தலைப்பில் கவிதையொன்று வரைந்துள்ளார். அதில், அஹிம்சையை பூசிக்கத் தக்க பெண்தெய்வமாகச் சித்திரிக்கிறார். அச்சித்திரிப்பு வருமாறு:

"நெடுங்காலமாய் இம்சையால் வெற்றி ஈட்டியதால்
தோல்வியடைந்து போயிருக்கிறது இவ்வுலகம்
நும்மன்னை பூமியின் அமைதியெனும்
புகழ்பட்டாடையில்
உடன் பிறந்தாரின் குருதி தெறிதிடாமல்
அஹிம்சையையே பூசை செய்திடுவீர்
அஹிம்சை தான் நமக்கு வேண்டியதைத் தருபவள்'

(பக். 638)

இக்கவிதையில் ஓர் அரசியல் ஆயுதம் என்கிற நிலையில் மட்டுமல்லாது எல்லா நிலையிலும் வன்முறையை (இம்சை) சமூகத்திற்கு எதிரானதாகக் காட்டுகிறார். சத்தியத்தை ஒரு தேவதையாக்கி அவளின் சிறப்புக்களை விளக்கும் முறையில் 1917 இல் 'ஸ்த்யகாத' என்னும் பாடலை வள்ளத்தோள் எழுதியுள்ளார். இதில் சத்தியத்தை உபநிடதக் கருத்தாகக் காட்டியுள்ளார். காந்தியக் கருத்தியலான 'சத்தியம்' இங்கு புராண தேவதையாக உருவகிக்கப்பட்டு புனிதப்படுத்தப்பட்டுள்ளது. நாமக்கல்லாரைப் போலவே வள்ளத்தோளும் காந்தியை 'சத்தியசீல'னாகவும் 'அஹிம்சாமூர்த்தி' யாகவும் பல கவிதைகளில் சித்திரித்துள்ளார். இனி புதிய இந்தியாவின் மேம்பாட்டிற்காக காந்திவகுத்த 18 அம்ச நிர்மாணத் திட்டம் இவ்விருவரது கவிதைகளில் எங்ஙனம் சிறப்பிக்கப் பெற்றுள்ளதெனக் காண்போம்.

2. 2. கதர் - கைத்தொழில்

இந்தியாவின் சுதேசியப் பொருளாதாரத்தின் முன்னேற்றத்திற்காக காந்தி முன்வைத்த நிர்மாணத்திட்டம் கதர் – கைத்தொழில், முன்னேற்றமாகும். கதர் தொழிலுக்கு அடிப் படையான கதர்நூலை உருவாக்கிடும் இராட்டையின் மீது நாமக்கல்லாரும் வள்ளத்தோளும் பாடல்கள் புனைந்துள்ளனர். இவ்வகையில் நாமக்கல்லாரின் பாடலும் வள்ளத்தோளின் இராட்டைப் பாடலும் ('சக்ரகாத') குறிப்பிடத்தக்கன.

"ஆடுராட்டே சுழன்றாடு ராட்டே
சுழன்று சுழன்று சுழன்றாடு ராட்டே – இனிச்
சுகவாழ்வு வந்ததென்று ஆடுராட்டே"

(பக். 367)

என்று பாம்பாட்டின் சித்தர் பாடல் மெட்டில் பல்லவி, அனுபல்லவியோடு தொடங்கும் நாமக்கல்லாரின் இப்பாடல், இராட்டைத் தொழிலால் இந்தியாவில் எல்லாத் துன்பங்களும் நீங்கி நல்வாழ்வு மலரும் எனக் கூறுகிறது.

"கூட்டாளிகளே! பஞ்சப்பேயினை ஓட்ட
இராட்டையைச் சுழற்றுவோம் சுழற்றுவோம் நாம்"

(பக். 273)

எனத் தொடங்கும் வள்ளத்தோளின் இராட்டைப்பாட்டு காந்தியடிகள் தந்த இராட்டையை 'சுதர்ஸன சக்கர'மாகவும், 'ஸ்ரீசக்ரயந்திர'மாகவும் புராணப்படுத்தியும், புனிதப்படுத்தியும் காட்டுகிறது.

"நம்முடைய உலகநாயகன் ஒப்படைத்த
நவ சுதர்ஸன சக்கரம் இதுவே!
தியாகியாம் அம்மஹாத்மாவால் ஒளிபெற்ற
புனித ஸ்ரீசக்கரம் இதுவே!"

(பக். 273 - 274)

இப்பாடலில் இராட்டையிலிருந்து வெளிவரும் 'முத்துப்போன்ற வெண்ணிற நூலினை 'காந்தியடிகளின் புன்னகை'யாகவும், 'வைகறைச் சூரியனின் ஒளிக்கீற்றாகவும்' வள்ளத்தோள் காட்சிப் படிமமாக்குகிறார். நாமக்கல்லாரின் காந்தியப் பிரச்சாரப் பாடல்களில் இத்தகைய கவித்துவப் பகுதிகளைக் காண்பது அரிதாகும்.

கதர் இராட்டினத்தின் பெருமையினைக் காட்டியதோடு கைத்தொழிலின் பெருமையினையும் கதராடை அணிவதன் சிறப்பையும் இவ்விருவர்களும் வலியுறுத்தியுள்ளனர். அதே சமயத்தில் இயந்திரத் தொழிலினைக் கடிந்து பேசுகின்றனர்.

"கதர்த் துணியுடுத்தச் சித்தமில்லாத நீ
கத்தியெடுத்தென் செய்குவாய்"

(கேள்விகள், பக், 385)

எனக் கேட்கும் இராமலிங்கம் பிள்ளை,

"கதர்த்துணி வாங்கலையோ – அம்மா!
கதர்த்துணி வாங்கலையோ – ஐயா!
ஏழைகள் நூற்றது; எளியவர் நெய்தது
கூழும் இல்லாதவர் குறைபல தீர்ப்பது"

எனக் கதர்பிரசாரப் பாடல் ஒன்றையும் இயற்றியுள்ளார். இதேபோல காந்தியடிகள் 1929–ஆம் ஆண்டு கதர் நிதிக்காகப் பணம் திரட்ட வந்தபோது 'கதராடை கைக்கொள்வீர் எவரும்?' (காதி வஸனங்கள் கைக்கொள்வின் எவரும்?) என்ற பிரசாரப் பாடலை வள்ளத்தோள் இயற்றினார். இப்பாடலிலிருந்து சில வரிகள்:

"கைவிரல் பத்தும் இன்றில்லையோ நமக்கு
பூப்பதில்லையா முறையாய்ப் பருத்திகள்
யந்திரங்கள் துப்பிய நூல்களால் உருவாகும்
ஆடைகளை அறவே கைவிடு நீ!
கைகளால் உருவாகும் கதராடையை
பக்தியோடு தரிப்பாயென் கேரளதேசமே"

(ப.க் 393)

2. 3. வகுப்பு ஒற்றுமை

இந்தியச் சமூகத்தின் மேம்பாட்டிற்காக காந்தியடிகள் வகுத்த நிர்மாணத் திட்டங்களுள் பல்சமயப் பிரிவினரின் ஒற்றுமையும் இன்றியமையாத ஒன்றாகும். இதனை நாமக்கல்லார், வள்ளத்தோள் ஆகிய இருவரும் தம் கவிதைகளல் வலியுறுத்தியுள்ளனர்.

"மதங்களின் பெயரால் மாறுபட் டினும்
மற்று நம் சுகதுக்கமெல்லாம்
நிதங்கலந் தெல்லா விதத்திலும் பின்னி
நீக்கொணத் தொடர்புகள் உடைத்தாம்"

('சுதந்தரச்சபதம்', பக். 122)

எனக்கூறும் இராமலிங்கம்பிள்ளை, நவகாளியில் நடந்த இந்து – முஸ்லீம் கலவரத்தைக் கண்டித்து வகுப்பு ஒற்றுமையை வற்புறுத்தி 'வடநாட்டில் கொடுமை' என்ற பாடலையும் இயற்றியுள்ளார்.

"பள்ளிவாசலில் மகேசனும் ஆலயத்தில் அல்லாவும்
பள்ளி கொண்டிருந்தது ஓ! பழங்கதையாய்ப் போனதே"

(இரட்டிப்படி, பக்.499)

என வருத்தப்படும் வள்ளத்தோள் இந்திய அன்னையைத் தொழுவதே நமது முதலாம் மதம் என்று 'ஒந்நாமத்தெ மதம்' என்ற கவிதையில் வருமாறு கூறுகின்றார்;

''முதலில் இந்தியர் நாம், முஸ்லீம் – இந்து – கிறிஸ்துவ
வாதிகளாய் மாறுவது இரண்டாவதாய் இருக்கட்டும்
அத்துவைதம் பேசும் நாமோர் ஒற்றைச் சமூகம்
பாரதத்தாயைத் தொழுவதே நமக்கு முதலாம் மதம்"

(பக். 544)

2.4. தீண்டாமை ஒழிப்பு

இந்திய தேசிய ஒற்றுமைக்கும் வளர்ச்சிக்கும் தடையாக இருக்கிற சாதி வேறுபாட்டினைக் களைய காந்தியடிகள் முன் வைத்த தீண்டாமை ஒழிப்பினை ஆதரித்து வள்ளத்தோளும் நாமக்கல்லாரும் கவிதைகள் பல எழுதியுள்ளனர்.

"இந்துக்களிடையே தீண்டாத போர்கள்
ஹரிஜன ஏழைகள் தம்மைப்
பந்துக்கள் போலப் பரிவுடன் நடத்தி
அவருடன் பழகுதல் வேண்டும்"

('சுதந்திரச் சபதம்', பக். 122)

என்று தீண்டாமை ஒழிப்பை சுதந்திரச் சபதமாக மொழியும் இராமலிங்கர் தீண்டாமைத் தீமையை நாட்டைவிட்டு ஓட்டச் சொல்லுகிறார்.

"ஓட்டடா! ஓட்டடா
நாட்டை விட்டே ஓட்டா
தீட்டடா மனிதருக்குள்
தீண்டலென்ற தீமையே"

('ஓட்டடா', பக். 168)

வள்ளத்தோள் காந்தியடிகளின் தீண்டாமை ஒழிப்பு நோக்கில் எழுதிய கவிதைகளில் 'தோணியாத்திரை'. 'சுத்தரில் சுத்தன்' எனும் இரு கவிதைகள் குறிப்பிடத்தக்கன. படிப்பதற்குக் கூட தடை விதிக்கும் தீண்டாமையின் கொடுமையினை அவரது 'தோணியாத்திரை' கவிதை விளக்குகிறது. 'வீடெரிந்து போனாலும் பரவாயில்லை எந்தன் வீட்டுக் கிணறு தீட்டாக நான் அனுமதியேன்' எனக் கூறும் உயர்சாதிக்காரன் ஒருவனின் சாதிய மேலாண்மையுணர்வு 'சுத்தரில் சுத்தன்' கவிதையில் புலப்படுத்தப்படுகிறது. இக்கவிதையின் இறுதியில் ''மலையாளக் குடும்பங்களெல்லாம் தீண்டாமைத் தீயில் எரிகிறதே'' என வள்ளத்தோள் வருத்தப்படுகிறார். வள்ளத்தோளின் 'ஜாதிப்பாவம்' என்ற கவிதை தீண்டாமைக்கு அடித்தளமான சாதியை இப்படிக் கண்டிக்கின்றது:

"ஜாதி! இது நரகத்திலிருந்து உயரும் ஓசை
பார் தின்னும் பிசாசின் ஏட்டில் இரண்டெழுத்து"

(பக். 408)

இதுவரை விளக்கிய கதர், கிராமத்தொழில்கள், வகுப்பு ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு ஆகிய காந்திய நிர்மாணத்

திட்டங்கள் தவிர விவசாயிகள் முன்னேற்றம் என்ற நிர்மாணத்திட்டம் குறித்தும் வள்ளத்தோள் சில கவிதைகள் புனைந்துள்ளார். நாமக்கல்லார் பாடல்களில் மதுவிலக்கு, சுகாதாரக் கல்வி என எஞ்சிய பிற நிர்மாணத் திட்டங்கள் அனைத்தும் பிரசாரம் செய்யப்பட்டுள்ளன. காந்தியடிகள் மறைவின்போது நாமக்கல்லார் 'ஜோதி மறைந்து கொண்டதே!' என்ற பாடலைப் புனைய, வள்ளத்தோள் 'பாபுஜி' என்ற இரங்கற் கவிதையை இயற்றினார். காந்தியடிகளின் மறைவுக்குப் பின்னரும் இக்கவிஞர்கள் காந்தியையும் காந்தியத்தையும் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

3. காந்தியவாதிகள் மீதான விமர்சனம்

காந்தியடிகள் மறைவிற்குப் பின் அவரது சீடர்களால் காந்தியம் சரிவரப் பின்பற்றப்படவில்லை என்பதை வள்ளத்தோளும் இராமலிங்கம் பிள்ளையும் தம் கவிதைகளில் விமர்சனமாக முன் வைத்துள்ளனர். நாமக்கல்லார் காந்தியம் வெறும் பேச்சளவினதாக செயல்தன்மையற்றுப் போய் விட்டதைப் பின்வருமாறு விளக்குகிறார்.

"காந்தி காந்தி காந்தியென்று காதடைக்கக் கூவினோம்
காந்தி சொன்ன சாந்திமட்டும் காதில் ஏறவில்லையே
பூசையோடு கோயிலுக்குள் பூட்டிவைக்கும் சாமிபோல்
ஓசையோடு காந்திபொம்மை ஊர்வலங்கள் செய்கிறோம்"

('எச்சரிக்கை', பக். 98-99)

வள்ளத்தோள் 1951 இல் எழுதிய 'காந்தியின் தேஜஸ்' என்ற கவிதையில் போலி காந்தியவாதிகளின் தோற்றத்திற்கும் செயலுக்குமான முரணை இப்படி விமர்சிக்கிறார்:

"பண்பு மாறிய காந்தி சீடர்கள் தம்
கதராடையில் ஒளித்து வைத்த கபடமும்"

(பக். 570)

இவர்களின் விமர்சனம் இன்றும் தமிழ் – மலையாள இலக்கியவுலகில் தொடர்ந்து ஒலிக்கின்றது.

முடிவுகள்

4.1. காந்தியை புத்தன், ஏசு, நபியென பல்சமயப் பெரியோரின் உருவகமாகக் காணும் போக்கு நாமக்கல்லலார், வள்ளத்தோள் ஆகிய இருவரது கவிதைகளிலும் காணப்படுகிறது.

4.2. இராமலிங்கம் பிள்ளை காந்தியை வள்ளுவராகவும், வள்ளலாராகவும் காந்தியின் அடிப்படைக் கருத்தியலான அஹிம்சை மற்றும் சத்தியத்தை முறையே வள்ளுவரின் கொல்லாமை, வாய்மையாகவும் தமிழ் அடையாளங்களோடு காண்கிறார். காந்தியையும் காந்தியத்தையும் தமிழ்மயப்படுத்தும் இம்முயற்சிக்கு தமிழ்த் தேசியவுணர்வு நாமக்கல்லாரின் கவிதை ஆளுமையில் ஆதிக்கம் செலுத்தியதே காரணமாகும்.

4.3. வள்ளதோள் கவிதைகளில் காந்தியும் காந்தியக் கொள்கைகளும் புராணப்படுத்தல், தெய்வீகப்படுத்தல் ஆகிய தன்மைகளைப் பெற்றுள்ளன. இதற்கு வள்ளதோள் கவிதை ஆளுமையிலும் மலையாளப் பண்பாட்டிலும் 'புராணீகம்' தலையாய அம்சமாக ஆதிக்கம் செலுத்தியுள்ளதே காரணமாகும்.

4.4. தேசியத் தலைவரான காந்தியையும் அவரது கொள்கைகளையும் இருவரும் தத்தம் இன, மொழி, பண்பாட்டு அடையாளங்களோடு வட்டார தேசிய உணர்வோடு உள்வாங்க முயற்சித்துள்ளனர். இந்திய தேசியத்தின் புராணிகமரபு என்கிற பொது அடையாளத்திலிருந்து வேறுபட்ட சில தனித்த பாரம்பரியமான அடையாளங்களோடு தமிழ்த் தேசியம் அமைகிறது. ஆனால் மலையாளத் தேசியமென்பது இந்திய தேசியத்தின் பொதுவான அடையாளமான புராணீகமரபு என்பதோடு இணைந்தே செல்கிறது.

4.5. நாமக்கல்லார் காந்தியின் நிர்மாணத் திட்டங்கள் அனைத்தையும் தம் பாடல்களில் பிரசாரம் செய்ய, வள்ளத்தோள் தலையாய நிர்மாணத் திட்டங்களை மட்டுமே தம் கவிதைகளில் பிரசாரம் செய்துள்ளார். இவ்விருவரது கவிதைகளிலும் காந்தியவாதிகளின் மீதான விமர்சனமும் இடம்பெற்றுள்ளது.

4.6. நாமக்கல்லாரின் காந்தியக் கவிதைகளில் பிரசார அம்சமே மேலோங்கிக் காணப்பட வள்ளத்தோள் கவிதைகளில் பிரசாரத்தோடு கலையம்சமும் இணைந்து காணப்படுகிறது.

துணைநூற்பட்டியல்

1. இராமலிங்கபிள்ளை, நாமக்கல் கவிஞர் பாடல்கள், லிப்கோ, சென்னை, இரண்டாம் பதிப்பு, 1988.
2. வள்ளத்தோள் நாராயணமேனோன், வள்ளத்தோளின்றெ பத்யக்ருதிகள், பாகம் – 2, நேஷனல் புக்ஸ்டால், கோட்டயம், முதற்பதிப்பு, 1975 (மலையாளம்).

மொழிவளர்ச்சி

திரு இ. ஜெயராஜ்
கம்பன் கழகம்.

உலகில் மானுட இனத்திற்கு இறைவனால் தனித்து வழங்கப்பட்ட வரமாய்
விளங்குவது, மொழி.
ஐந்தறிவுக்குட்பட்ட மற்றைய ஜீவராசிகள் இப்பேறு எய்தில.
அவற்றுக்கு மனம் எனும் சூக்கும உறுப்பு பூரணப்படாமையின்,
எண்ண விரிவு இலதாமிற்று.
உடற்றேவையே அவற்றின் உணர்வாக வரையறுக்கப்பட்டது.
காமம் போன்ற உணர்வுகளிற் கூட அவை கால வரையறைக்குட்பட்டு நிற்பதே,
அதற்காம் சான்று.
ஆதலால்,
சொற்பமான தம் உணர்வுகளை வெறும் சப்தங்களால் அவை பகிர்ந்து
கொண்டன.
மனம் எனும் சூக்கும உறுப்பைப் பூரண வளர்ச்சியோடு பெற்ற மனிதனோ,
மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் அறிவுக்கருவிகளால்,
உள் வாங்கிய செய்திகள் கொண்டு,
மனதை இயக்கி,
பலவாய்ச் சிந்திக்கத் தலைப்பட்டான்.
இச் சிந்தனை விரிவில்,
உணர்வுகள் பிறந்தன.
உணர்வுக் கலப்பினால் எண்ணங்கள் ஆயிரமாய் விரிய,
அவ்வெண்ணங்களை மற்றவரோடு பகிர்ந்து கொள்ளும் தேவை,
மானுடனுக்கு அவசியமாயிற்று.
மற்றைய ஜீவராசிகள் போல் விரிந்த தம் எண்ண வெளிப்பாட்டினை,
ஒரு சில சப்தங்களுக்குள் அடக்க இயலாமை அறிந்து,
அவன்,
உணர்வுகளை முழுதாய் உள்வாங்கி,
மற்றவரோடு பகிர்ந்து கொள்ளும்,
ஒரு கருவியின் தேவை உணர்ந்தான்.
செவ்விதாய ஒரு மொழியை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு,
முதல் முயற்சியாய் ஓசைகளை வரையறுத்து,
அவற்றை அட்சரங்களாக்கினான்.
பின் அவ்வட்சரங்களைத் தொகுத்துப்,
பொருள் குறிக்கும் சொற்களாக்கினான்.
நிறைவாக, அச் சொற்களை இணைத்து வாக்கியங்களாக்கிய அவன்,
அவ் வாக்கியங்களைத் தன் கருத்தினைக் காவும் கருவியாக்கி,
பின் அக்கருவியை நுட்பங்களுடன் கையாளும் திறன் பெற்று
மொழியாக்க முயற்சியில் முழு வெற்றி கொண்டான்.

☆☆☆

இட எல்லைகளால் மனித இனம் குழுக்களாய்ப் பிரிக்கப்பட,
அக் குழுக்களின் பிரிவுக்கேற்ப,
அவற்றால் ஆக்கப்பட்ட மொழிகளும் பலவாயின.

அக் குழுக்களின் காலத்தொன்மையால்,
அவற்றின் அனுபவப் பதிவு நீள,
அவ் அனுபவத்தாற் பெறப்பட்ட அறிவுக் கூர்மையே,
அவ்வக்குழுக்களின் மொழிக் கூர்மை ஆயிற்று.
ஆதலால்,
காலம் தரும் அனுபவம்,
அனுபவம் தரும் அறிவு,
அறிவு தரும் கூர்மை,
எனும் தொடர்பு கொண்டு,
மறுதலையாய்,
அவரவர்மொழிக் கூர்மையால் அம் மொழி பேசும் இனத்தின்,
காலத் தொன்மை வரையறை செய்யப்பட்டது.
தன் அழிவோடு,
தான் அனுபவத்தால் பெற்ற அறிவும் அழியும் அபாயமுணர்ந்த மனிதன்,
மொழியாக்கத்தினால் அவ் அபாயத்தினைத் தடை செய்தான்.
நித்தியமற்ற மனிதன்,
தன் எண்ண வளர்ச்சியை மொழியில் பதிவு செய்ததால்,
அவன் அனுபவப்பதிவுகள்,
அவனோடு அழிந்து போகும் அவலம் நீங்கி நித்தியம் பெற்றன.
அதனால்,
திரும்பத்திரும்ப ஒரே அனுபவத்தைப் பெறுதலின்றி,
ஒருவர் அனுபவத்தை மற்றவர் பெற்று,
புதிது புதிதாய்த் தேடும் வாய்ப்பு மானுடர்க்குக் கிட்டியது.
பல்லாயிரக்கணக்கான மானுடரின் பல நூற்றாண்டு அனுபவங்கள்,
மொழியில் தொகுப்பாக,
மொழி அறிவுக் களஞ்சியமாயிற்று.
அதுவே பின் கல்வி எனப்பட்டது.
தேடுவோர் தொகை காலத்தால் நீண்டு முடிவற்றுப்போக,
கல்வியும் கரையிலதாயிற்று,
உணர்வு வெளிப்பாட்டுக்காய் மனிதனால் வளர்க்கப்பட்ட மொழி,
அறிவுக்களஞ்சியமாகி,
பின் அவனையே வளர்த்தது.
அறிவைத்தேக்கும் களஞ்சியமாகவும்,
பின் அவ்வறிவை வெளிப்படுத்தும் கருவியாகவும் ஆகி,
மொழி அற்புதம் செய்தது.
இதனால் மொழி மானுடத்தின் தனி அடையாளமாய்ப் போக,
வாழ்வின் பல கூறுகளிலும் அதன் அவசியம் உணரப்பட்டது.
மானுட வாழ்வைப் பூரணமாகத் தம் நூலுள் அடக்கிய வள்ளுவரும்,
சமூக இணைப்பு நோக்கி,
இல்லறத்திற்கு மொழியினை,
இன்சொல்லாகவும்
அறவரையறை செய்வதன் அவசியம் நோக்கி,
துறவறத்திற்கு மொழியினை,
வாய்மையாகவும்
செயலின் வெற்றி குறித்த நிர்வாகத்திறன் நோக்கி,
பொருட்பாலில் மொழியினைச்
சொல்வன்மையாகவும்
மயக்க நிலையாகிய காம இன்பத்திற்குப் பொய்ம்மையே இனிமைபயத்தலின்,
அது நோக்கி காமத்துப் பாலில் மொழியினை,

புனைந்துரையாகவும்,
வரையறை செய்து வியப்பூட்டுவர்.
இங்ஙனமாய்,
வாழ்வின் பல நிலைகளிலும் மொழியின் தேவை,
வள்ளுவத்தாலும் விரிக்கப்படும்.

☆☆☆

அறிவு வெளிப்பாட்டுக் கருவியாய் மொழி அமைந்து போக,
விதியினாலும், அனுபவத்தினாலும் கல்வியினாலும் அமையும்,
தனிமனித அறிவு,
அவரவர் வாய் மொழி கொண்டே கணிக்கப்பட்டது.
ஆதலால்,
மொழி,
மனித அறிவுத் திறனை எடைபோடும் நிறை கோலாயிற்று.
ஆரம்பத்தில் உணர்வுகளை வெளிப்படுத்த,
நீண்டு வளர்ந்து வெளிப்பட்டமொழி,
மனித அறிவு கூர்மைப்படக் கூர்மைப்பட,
சுருங்கலாயிற்று.
மானுடன்,
ஒரு சில சொற்களுக்குள்,
நீண்ட உணர்வை வெளிப்படுத்தும் வன்மை பெற்றான்.
அவ்வளர்ச்சியில்,
மொழிக்கருவியின் முதலங்கமான,
தனி அட்சரங்களும் பொருள்தரும் சொற்களாயின.
அட்சரங்களற்ற சப்தங்களும்,
பொருள் வெளிப்பாடு செய்தல் சாத்தியமாயிற்று.
சப்தங்களற்ற அங்க அசைவுகளும் கூடப் பாஷையாயின.
இதன் உச்ச நிலையாய்,
பார்வைக் கூறுகளே பாஷையாய்ப் பமிலப்பட்டன.
இந் நிலையையே,
"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"
என அறத்துப் பாலிலும்,
"பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்,
வகைமை உணர்வார்ப் பெறின்"
எனப் பொருட் பாலிலும்,
"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்,
என்ன பயனும் இல"
எனக் காமத்துப் பாலிலும்,
வள்ளுவரும் பதிவு செய்கிறார்.
உணர்வொத்த இருவரிடத்து,
சப்தத்தினாலும், அங்க அசைவுகளாலும், பார்வைகளாலும்,
வெளிப்படும் குறிப்புக்களே,
விரிந்த மொழி வெளிப்பாட்டின் தேவையைப் பூர்த்தி செய்தன.
இது தவிர,
உணர்வொத்த இருவர் குறிப்பால் வெளிப்படுத்தும் வாய்ச் சொற்கள்,
தம் வழமைப் பொருள் இழந்து,
அவ்விருவர்க்குமாம் தனியர்த்தம் பேசின.
மொழியாக்கத்தின்முன்,
அங்கங்களாலும், பார்வைகளாலும்,
உணர்வைப் பரிமாறிய மனிதனின் ஆரம்ப நிலையே,

மொழி வளர்ச்சியில்,
கருத்து வெளிப்பாட்டின் உச்ச நிலையும் ஆயிற்று.
மொழி வல்லமை கூர்மை பெற்றுக் கைவர,
குறிப்பினால்,
ஒரு சில சொற்களுள்,
பல பொருட்களை உள்ளடக்கி,
பேசும் வல்லமை,
புலவர்க்குச் சாத்தியமாயிற்று.
அவ்வல்லமையால் கவிதைகள் தோன்றின.
அங்ஙனம் புலவர்களால் ஆக்கப்பட்ட கவிதைகள்,
சூத்திரங்கள் எனப்பட்டன.
அப் புலவர்களின் அறிவு நிலையை ஒத்து,
குறிப்பறியும் வல்லமை பெற்ற,
பின்வந்த வல்லார் சிலர்,
சில வரிகளால் அமைந்த அக்கவிதைகளுள் நுழைந்து,
பல பொருள் கண்டனர்.
இவ் வளர்ச்சியில்,
குறிப்பறிதலே மொழியின் உயர் நிலையாயிற்று.
அதுவே,
மானுட வளர்ச்சியின் மாண்புறு நிலையாகவும் பேசப்பட்டது.
"குறிப்பறியமாட்டாதான் நன்மரம்" என ஔவை பேச,
வள்ளுவரோ குறிப்பறிதல் எனும் ஒரே தலைப்பில் இரு அதிகாரங்களை,
பொருட்பாலிலும், காமத்துப்பாலிலும் அமைத்து,
குறிப்பறிதலின் உயர்வுணர்த்தினார்.

இங்ஙனமாய் மீண்டும் மொழி சுருங்க.
சுருங்கப் பேசுதலும், விளங்கப்பேசுதலுமே,
மொழி வன்மையாயிற்று.
இவ்விரு தகுதிகளின் உச்ச வெளிப்பாடே,
வள்ளுவர்தம் குறளாம்.
அறிவுக் கூர்மையால் சுருங்கிய மொழி,
காலவோட்டத்தில்,
தமிழர் மத்தியில் மீண்டும் விரியத் தலைப்படுகின்றது.
மொழிப் பிரயோகத்தில்,
நீளமாய் எழுதலும், பேசலுமே,
அறிவு வளர்ச்சியாய்க் கருதப்படும் தாழ்நிலை இன்று.!
பரீட்சைகளில் கட்டுரை எழுதப் பணிக்கப்படும் மாணவர்க்கு,
கட்டுரை பற்றிய அறிவுறுத்தலும், புள்ளியிடலும்,
பொருளளவினாலன்றி,
சொல்லளவினாலேயே வரையறை செய்யப்படுகின்றன.
பத்திரிகைகளும்,
பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கான சன்மானத்தை,
இச் சொல்லளவு கொண்டே தீர்மானிக்கின்றன.
பல்கலைக்கழக ஆய்வுகள் கூட,
பக்கங்களின் அளவு கொண்டே பரிசீலிக்கப்படுகின்றன.
ஆதலால்,
கூர்மையுற்றுச் சுருங்கிய நம் தமிழ் மொழி,
இன்று பின் நோக்கிச் சிதைவுற்று நீண்டு வருகின்றது.
இந் நிலை தவிர்க்க முன்வாருவார் யார்?
அனைவரும் முயல்வோம்.

☆☆☆

ஒல்லாந்தர் கால ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் அனந்தசுப்பையர்

பேராசிரியர் இரா. வை. கனகரத்தினம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

ஒல்லாந்து ஆட்சியின் கீழ் உள்நாட்டு நிலப்பரப்புக்களும் வியாபாரிகளும் தரகர்களும் நல்ல நிலையிலிருந்தனர். இந்த வகையில் கொச்சிக்கணேசையர் தரகர் வழிவந்த உள்நாட்டு நிலப்பிரபு என்று குறிப்பிடலாம். இவரின் தன்மையை, பிரபுத்துவ நிலையை நோக்கி இவர் பிராமண முதலி என்று அழைக்கப்பட்டமை இங்கு நினைவு கூரத்தக்கதாகும். இக் கணேசையர் புத்திரனே அனந்த சுப்பையர். ஆனால் யாழ்ப்பாண வைபவ கௌமுதி என்ற நூல் கணேசையரின் பௌத்திரன் வண்ணை அனந்த சுப்பையப்புலவர் எனக் குறிப்பிடும். ஆனால் அனந்தசுப்பையரின் பௌத்திரரான ஆதிநாராயணன் சண்முகரத்தின ஐயர் என்பார் 1911ஆம் ஆண்டு தாம் வெளியிட்ட 'அனந்தசுப்பையரின் பிரபுத்துவம்' என்னும் நூலில் பாரத்துவாசி அனந்தசுப்பையர், பிராமண முதலியார் என்று அழைக்கப்பட்ட கொச்சிக்கணேசையர் புதல்வர் எனக் குறிப்பிடுவார்.

அனந்தசுப்பையர் வைத்திலிங்கச் செட்டியாரின் நண்பர். இருவரும் ஒரே ஆசிரியரிடத்தில் கல்வி பயின்றவர்கள். கூழங்கைத் தம்பிரானே இவர்களின் ஆசிரியர். மாதகல் மயில்வாகனப் புலவர் ஆசிரியராகவும் நண்பராகவும் விளங்கினார். அனந்தசுப்பையர் பிற்காலத்தில் பெரும் புலவராக விளங்கினார். தனிநிலைச் செய்யுட்களையும் தொடர்நிலைச் செய்யுட்களையும் பாடினார். அவரது பாடல்கள் பலவும் தனது நண்பரான வைத்திலிங்கச் செட்டியார் 1787ஆம் ஆண்டு கட்டி 1791 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்த வண்ணை வைத்தீசுவரர் ஆலயத்தில் எழுந்தருளி இருந்த தெய்வங்களின் மகிமையைப் போற்றும் பிரபந்தங்களாகவே அமைந்தன. சண்முகசுந்தர ஐயர், சுப்பையரின் நூல்கள் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுவது அவர் புலமைமிக்க பிரபந்த நூல்களின் ஆசிரியர் என்பதை வெளிப்படுத்தும்.

> "இது நிற்க, அளவிறந்த கீர்த்தனைகளையும் பதிகங்களையும் திருவூஞ்சல், சுக்கிர வாரந்தோறும் தேவியார் எழுந்தருளித் திருவுலாப் போகும் காலங்களில் ஓதப்படுமாறு மகைசுவரிய மகௌதாரிய மகாபிரபுவாகிய ஸ்ரீவைத்திலிங்கச் செட்டியாரவர்கள், கட்டுவித்துப் பிரதிஷ்டை செய்வித்த வரலாறுகளை விளங்க வைத்து ஒரு கலிவெண்பா, ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி திருவூஞ்சல் சூர்ணிகை ஒன்று இத்தொடக்கத்தனவாகிய பிரபந்தங்களையும் இச்சிவாலயத்தின் பொருட்டு இயற்றித் தந்துதவிய பாரத்துவாசி அனந்தசுப்பையர்."

அனந்த சுப்பையர் தையல்நாயகி கலிவெண்பா, முத்துக்குமாரசுவாமி திருவூஞ்சல், கீர்த்தனைகள் முதலான பிரபந்தங்களைப் பாடியுள்ளார் என அறிய முடிகின்றது.

தையல்நாயகி கலிவெண்பா சத்தியின் பல்வகைப் பிரபாவங்களையும் ஆலயக்கிரியை முறைகளையும் கூறுவதோடு வைத்திலிங்கச் செட்டியாரின் குடும்பச்

சிறப்புக்களையும் செல்வச் சிறப்புகளையும் எடுத்து இயம்புகின்றது. பக்திப் பனுவல்களில் சாதாரண மானுடனைப்பாடுவது மிக அருமை. ஆயினும் பதினொராம் திருமுறைகளில் இப்பண்பினைக் காணலாம்.

முதன் முதலாக இத்தகையதொரு மரபினை ஈழநாட்டில் சுப்பையர் தொடக்கி வைக்கும் பான்மையினை இங்கு அவதானிக்கலாம்.

தையல்நாயகி கலிவெண்பாவில் வைத்திலிங்கச் செட்டியாரின் குடும்பச் சிறப்பை பின்வருமாறு புலப்படுத்துவார்.

"..... .....பண்டை
இயக்கர்கோ னென்னும் பெயரு மிசைய
வயித்திய லிங்கமென மாண்போ – நயந்தாங்கு
மையார் தடங்கண் மணமார் செழுங்கமலச்
செய்ப்பாள் மனைவிபுடன் சேர்ந்தழகாய் – வையமதில்
எண்ணு மிராம ரிலக்குமணர் போலிரண்டு
கண்ணிகர்கோ பாலன்கந் தப்பனெனும் – தண்ணுலவு
சந்திர சூரியர்போற் தாரணியின் மேல்விளங்க
மைந்தரை யீன்று மகிழ்வினுடன்---"

செட்டியார் முத்து சங்கு முதலிய பொருட்களின் வியாபாரத்தில் ஈடுபட்டுக் காசி, சேது, மதுரை முதலான பிறதேசத்தவர் போற்றும்வகையில் வாழ்ந்து, தாம் ஈட்டிய பொருட்களைக் கொண்டு ஆலயம் எழுப்பியும் அங்கு நித்திய நைமித்திய பூசைகள் நாடோறும் நடைபெறச் செய்தும் தையல்நாயகின் அருட்கடாட்சம் பெற்று சிறப்புடன் வாழ்ந்த செய்திகளை சுப்பையர் மகிழ்ந்து பாடுவதைப் பின்வரும் பகுதி காட்டும்.

காசி வடதேசம் காவிரிசூழ் சோணாடு
மாசிலிம் சேது மதுரைதொல் – தேசாதி
தேசமன்னர் செய்யுஞ் சிறப்பும் வெகுமதியும்
பேசுமுப சாரமும் பெற்றரியோன் – ஓசைசோர்
சங்கு சலாபத் தனிக்குத் தகையேற்று
வங்காள மச்சி மலையாளம் – எங்கெல்லாம்
கப்பல் முதலாங் கவினார் மரக்கலமேல்
சிப்பியொடு வெண்சங் கினஞ்சொரியும் – ஒப்பிலா
முத்துநவ ரத்ன முதலாஞ் சரக்கேற்றி
வர்த்தகஞ் செய்து வரும்பொருள்கொண்–டொத்து
திருவுலா வுங்கதிரோன் சேர்மீன மாசம்
திருவிழா வுஞ்சிறக்கச் செய்து – மருவிவரு
மாதங்க டோறும் வகுத்திடுகை மித்திகமு
நீதியாய் நித்தியமும் நேர்படவே – யாதேனுந்
தப்பாம லென்றுந் தவறாத் திருப்பணியு
மொப்பவே நடத்தி யுண்மையாய் – எப்பொழுதும்
வாழாது வாழ்ந்து இணையுடன் வத்திக்கத்
தாழா திவர்க்கருளுந் தயைலே

சுப்பையர் பாடிய முத்துக்குமாரசுவாமி திருவூஞ்சல் காப்பு முதலாக மொத்தம் ஒன்பது பாடல்களைக் கொண்டது. வைத்திலிங்கச் செட்டியார் கட்டியது வைத்தீசுவர ஆலயம். கோபாலச் செட்டியாரின் பிறப்பிடமாகிய திரூவாரூர்க் கண்மையில் உள்ள புள்ளிருக்கும் வேளூர் என்னும் தேவாரப்பாடல் பெற்ற தலம் உள்ளது. அது இக்காலப் பகுதியில் வைதீசுவரன் ஆலயம் என்று பொதுமக்களால் போற்றுப்பட்டது. செட்டியாரின் முன்னோர்கள் இவ்வாலயத்தின் பெருமானைக் குலதெய்வமாக வழிபட்டு வந்தனர். அது சோழப் பெருமன்னரின் கட்டடக்கலை ஆர்வத்துக்கும் உட்பட்டது. அத்தகைய, கோயில் அமைப்பின் சுருங்கிய வடிவத்தையே வைத்திலிங்கச் செட்டியார் யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணையில் அமைக்க விழைந்தார். 1787ஆம் ஆண்டு ஆலயக் கட்டட அமைப்பு வேலைகளை ஆரம்பித்த செட்டியாரவர்கள் சாதாரண வருடம் சித்திரை மாதம் (1791) வளர்பிறையில் புனர்பூசத் திதியில் வைத்தீசுவரநாதருக்கு குடமுழுக்கு விழாவினைக் கொண்டாடினார். ஆலயத்தில் அமைந்திருக்கும் முத்துக்குமாரசுவாமிக்கு ஆலய விழாவின்போது சிறப்பு விழா நடைபெறுவது வழக்கம். அப்போது பாடப்படுவதே முத்துக் குமாரசுவாமி திருவூஞ்சல் ஆகும். இத் திருவூஞ்சலில் உள்ள பின்வரும் பாடலில் செட்டியாரின் எண்ணப் பாங்கினையும் முத்துக் குமாரசுவாமியின் அருட் பிரவாகத்தையும் ஒசைச்சிறப்பையும் காணலாம்.

பொன்னாடு நிகர்சோழ மண்டலத்திற்
புள்ளிருக்கும் வேளூரில் பொலிதல்போல்
எந்நாளும் புகழீழ மண்டலத்தி லினிமையுடன்
வண்ணைநகர் மேவியன்பால்
நன்னாமந்துதிசெய்யு மடியார்யாரும்
நாடரிய வற்புதமெய்ஞ் ஞானமெய்த

மன்னாக நல்லூரு வந்தாட் கொள்ளும்
வரமுத்துக் குமாரரே யாடீரூஞ்சல்

(மு. சுவாமி. செ.4)

நாலாய சுருதிகள்நாற் கால்களாக
நலந்திகழா றங்கமணி விட்ட மாக
மேலாய சிவாகமங்க ளிழைக ளாக
விளங்கியிடு சடாக்ஷரமே கயிற தாக

என வரும் பாடல்களின் பகுதிகள் ஊஞ்சலின் அங்கங்களை உருவகித்துப் பாடியிருக்கும் சிறப்பைக் காட்டும்.

இப்பாடல்களில் சித்தாந்தக் கருத்துக்களை இளையோடவிட்டுப் பாடியிருப்பது இப்புலவரின் தத்துவஞான உணர்வையும் தனித்துவ சாமார்த்தியத்தையும் காட்டுவதாக அமைகின்றது. அப்பாடல் வருமாறு.

அருவுருவா யமலமா யநாதி யாகி
யற்புதமா யாருந்த விளைவுமாகி
பரவொலியாய் நிர்க்குணமாய கண்டமாகிப்
பாசவிரு ளகலவொளிர் பரிதியாகிக்
குருமுகமா யொருபொருளாய் நித்தமாகிக்
கூறரிய வாறெழுத்தின் கோலமாகி
வருமருண வடிவாகி வண்ணை வாழும்
வரமுத்துக்குமாரே யாடீரூஞ்சல்

(மு. சுவாமி. செ.3)

யாழ்ப்பாணத்தில் வண்ணை வைத்தீசுவரன் ஆலயத்தில் மார்கழி மாதத்தில் திருவாதிரையிலே ஒதப்படும் திருவூடல் அனந்தசுப்பையராலே பாடப்பட்டதாக அறிய முடிகின்றது. ஆ. சண்முகரத்தின ஐயர் 1911ஆம் ஆண்டு வெளிப்படுத்திய நூலொன்றில்,

> "யாழ்ப்பாணம் வண்ணார் நகர் ஸ்ரீ வைத்தீஸ்வரசுவாமி கோயில் சந்நிதானத்தில் மார்கழி மாதத் திருவாதிரையிலே ஒதப்படும் திருவூடல் யாழ்ப்பாணம் வண்ணை பரத்துவசி க. அனந்தசுப்பையர் அவர்கள் கோவை செய்தது"

எனக் குறிப்பிடுவது இங்கு மனங்கொள்ளத்தக்கது. மார்கழித் திருவாதிரை தினத்தன்று சுவாமி திருவுலா வந்தபின் இத்திருவூடல் படிக்கப்படுகின்றது. பார்வதி அம்மையார் சுவாமிகள் தாமிருக்கத்தக்கதாகக் கங்காதேவியைச் சடையில் தாங்கிக் கொண்டதால் ஊடல் கொள்கின்றார். சுவாமிகள் சுந்தர மூர்த்திநாயனாரை அழைத்து "முன்னரே பரவையாருக்கும் உமக்கும் உண்டான உடலை நாமல்லவோ தீர்த்துவிட்டோம். நீரும் நம்முடைய ஊடலைப் போய்த்தீர்த்து பார்ப்பதியாரை அழைத்துவாரு" மென்று கூறிவிட்டார். சுந்தமூர்த்தி நாயனார் பலமுறை அம்மையாரிடம் சென்று அவரிடையே ஊடலைத் தீர்க்க முடியவில்லை. கடைசியாகச் சுவாமிகளை சமாதானம் செய்யும்படி வேண்டி சுந்தமூர்த்திநாயனார் ஊடலைத் தீர்த்து வைத்தார். இத்தகைய திருவூடல் உற்சவங்கள் தமிழ்நாட்டில் வேதாரணியம் புள்ளிருக்கு வேளூர் வைத்தீசுவரர் கோயில் முதலான இடங்களில் இடம்பெற்று வருகின்றன. செட்டியார் அவர் முன்னோர்களின் வழிபாட்டுத் தலமாகிய புள்ளிருக்கும் வேளூரில் நடைபெற்றுவரும் இத்திருவூடல் உற்சவத்தை இங்கும் கொண்டாட விரும்பியதன் விளைவாகச் சுப்பையர் இத்திருவூடலைப் பாடினார் எனலாம். ஈழநாட்டில் இத்திருவூடல் உற்சவம் காரைநகரில் உள்ள ஈழத்துச் சிதம்பரம் சிவன் கோயிலில் நடைபெற்று வருகின்றது. அங்கு படிக்கப்படும் திருவூடல் பாடல் பெரும்பாலும் அனந்தசுப்பையர் தொகுத்த திருவூடலை ஒத்திருக்கின்றது என்பர். எது எவ்வாறு இருப்பினும் சுப்பையர் திருவூடல் பாடலே ஈழத்துத் திருவூடல் பாடல்களுக்கு முன்னோடியாக அமைந்தது எனலாம்.

சுப்பையர் பாடிய தையல்நாயகி திருவூஞ்சல் (காப்பு உட்பட) மொத்தம் ஒன்பது பாடல்களைக் கொண்டது. இவ்வூஞ்சற் பாடல்கள் ஆசிரிய விருத்தத்தால் ஆக்கப்பட்டுள்ளன. மிகவும் இலகுவான பதங்களைக் கொண்டு அதனூடே தத்துவக் கருத்துக்களை விரவவிட்டு, உலகியல் வாழ்விலும் சடங்குகளிலும் கிரியைகளிலும் மானுடன் ஆன்றாடம் அநுபவிக்கும் நிகழ்ச்சிகளைப் பெய்து, ஓசைச்

சிறப்புடன் படிப்போர் இன்புறும் வண்ணம் சிறப்புறப் பாடியுள்ளார். ஆங்காங்கே இவ்வாலய வரலாற்றில் தன்னையும் இணைத்துப் பாடியுள்ளமை ஊஞ்சல் வரலாற்றில் புதுமையான அம்சம் எனலாம். இதனால் இஃதொரு திருக்கடைக் காப்புப்போல் அமைந்துள்ளது எனலாம்.

ஆலயக் கிரியைகளை உருவகப்படுத்தி பின்வருமாறு பாடுவார்.

எண்ணரிய கதிர்மதி தீவர்த்தியாக
ஏகாந்தமான தென்றல் தூபமாக
நண்ணியகோள் நவரத்தின தீபமாக
நல்லமிர்தம் மகாநைவே தனமாக
புண்ணியமே தவளமணிக் குடையதாகப்
புகழ்கற்பதருத்தால விருத்தமாக
வண்ணமுளை வாணிலட்சுமி வடத்தொட்டாட்ட
மாதுமை வாலாம்பிகையே யாடீரூஞ்சல்

வாழ்க்கையோடு தொடர்புடைய பொருட்களையும் எளிமையான சொற்பதங்களையும் கையாண்டு இன்னோசை பயக்கும் வண்ணம், படிப்போரை மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டும் வண்ணம் பாடியுள்ளமை கவித்துவத்தின் உண்மைத் தன்மையை சரியாக புரிந்து கொண்டமையின் விளைவே எனலாம். அந்தவகையில் சுப்பையர் ஈழத்தின் பொதுமக்கள் கவிஞன் என்னும் வகையில் சிறப்பிடம் பெறுகின்றார்.

முல்லைமலர் தாழையுடன் கொழுந்து கூடி
முகையவிழுந் தாமரைசெவ்வந்திசூடி
மல்லிகை வெண் பிச்சியிரு வாட்சிசூடி
மருவுடனே பாதிரிமந்தாரஞ் சூடி
அல்லியுறு சண்பகம் புன்னாகஞ்சூடி
யணியணியாய் மலர்பிறவுமாய்ந்து சூடி
வல்லபஞ்சேர் வாணிலட்சுமி வடந்தொட்டாட்ட
மதுமைவாலாம்பிகையே யாடீரூஞ்சல்

என்னும் பாடல் மேற்காட்டியவற்றின் உண்மைத் தன்மைக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது எனலாம்.

மன்னுபுகழ் வைத்தியலிங்கேசர் வாழி
மாதுதையலம்மை யென்றும் மகிழ்ந்து வாழி
நன்னயஞ்சேர் திருவண்ணை நகரம் வாழி
நான்மறையோர் வாழி மனுநீதி வாழி
வன்னமுறு வைஸ்யகுல வைத்திலிங்கன்
வமிசமுடன் சிவதருமம் முஞற்றி வாழி
அன்னகரிலிருக்கும் வேறெவரும் வாழி
அனந்தசுப்பையன்பா மாலை வாழி வாழி.

இப்பாடல் கட்டியம் கூறுவதாயும் ஒரு முத்திரைக் கவியாயும் அமைந்து விடுகின்றது. இவ்வுத்தி இக்காலத் தமிழ் இலக்கியத்துக்கு புதியது எனலாம்.

சுப்பையர் நாடறிந்த புலவராக இருந்திருத்தல் வேண்டும். இவர் வைத்தியலிங்கச் செட்டியாரின் தமிழ்ச்சங்க அவையில் தலைமைப் புலவர்களுள் ஒருவராகத் திகழ்ந்தனர் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவருடை புகழ் வரலாற்றில் துலங்காமைக்குக் காரணம் யாது என்று தெரியலில்லை. அவர் பிராமண குலத்தவர் என்பதால் அவர் பின்னர் ஆலய சேவையில் ஈடுபட்டவராக இருந்திருந்தால் அவர் தனது புலைமையைக் காட்டத் தவறியிருக்கலாம். ஆனால் அவரது வாழ்க்கை அவ்வாறு அமையவில்லை. அவருடைய தந்தையார் பிராமண முதலி எனப் பெயர் பெற்ற ஒரு மகா பிரபு. ஒருவகையில் இவரது செல்வச் செழிப்பு இவரை இத்தகைய புலமை நெறியில் செல்லத்தடையாக அமைந்திருக்கலாம். இக் கூற்றில் உண்மை இருக்கலாம். இவரது இப்பாடல்கள் நட்பின் நிமித்தம் பாடப்பட்டவையாக இருக்கலாம். ஆனால் நல்ல கவிஞனின் கவிதா சக்தி நட்புக்கும் கட்டுப்பாட்டிற்கும் அப்பாற்பட்டது. அவனை மீறி அவனது கவிதா சக்தி பீறிட்டெழும்பும். அப்படியானால் ஈழத்து இலக்கிய வரலாற்றில் சுப்பையரின் நிலை யாது? என்ற கேள்வி இயல்பாகத் தோன்றும்.

சுப்பையருக்கு ஒரு மாணவ பரம்பரை உண்டு என அறிய முடிகின்றது. அவரது மகன், ஆதிநாராயணன், அவரது மகன் அ. சண்முகரத்தின ஐயர் முதலானவர்களைக் குறிப்பிடலாம். அனந்த சுப்பையர் கொச்சிக் கணேசையரின் மகன் என்பதால் இவருக்கும் சேனாதிராச முதலியார், கரைதீவு கார்த்திகேயப்புலவர், சிற்றம்பலப்புலவர், நல்லூர்

சின்னத்தம்பிப்புலவர், கந்தபிள்ளை முதலான புலவர்களுக்கு இடையில் மிகுந்த நட்புறவு இருந்திருக்க வேண்டும். இத்தகைய உறவுகள் ஆராயப்படல் வேண்டும்.

சுப்பையரின் பேரனாகிய சண்முகரத்தின ஐயர் சுப்பையரின் நூல்கள் சிலவற்றைத் தொகுத்து 1911ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். அத்துடன் திருணோமலைப்புராணம் என்னும் நூலை 1909ஆம் ஆண்டு பரிசோதித்து வெளிப்படுத்தியுள்ளார். திருவூடல், சுப்பிரமணியப்பிரவாகம் ஆகிய இருநூல்களையும் சுப்பையரே எழுதினார். இவை இரண்டும் பின்னர் பிரசுரம் செய்யப்பட்டன. இவை எல்லாவற்றுக்கும் மேலான வரலாற்று உண்மை, வண்ணை கொச்சி கணேசையரின் புத்திரர் அனந்த சுப்பையரின் பூட்டன் முறையானவரே புன்னாலைக்கட்டுவன் சி. கணேசையர் ஆவார். சி.கணேசையர் வித்துவசிரோமணி பொன்னம்பலப் பிள்ளையின் நேரடி மாணவன் ஆதலால் அனந்த சுப்பையருக்கும் மேற்குறிப்பிட்ட புலவர்களுக்கும் மிகுந்த தொடர்பு இருந்து வந்தது என்பது வெளிப்படை.

அனந்த சுபையர் கொச்சிக் கணேசையரின் மகன் கூழங்கைத் தம்பிரானின் மாணவர். வைத்திலிங்கச் செட்டியாரின் நண்பர். வைத்தீசுவர ஆலய மூர்த்திகள் மீது பிரபந்தங்கள் பாடியவர். இவரது பிரபந்தங்களை உவமை, உருவகம் முதலான அணிகள் அழகுபடுத்துகின்றன. வித்துவச் செருக்கு நிறைந்த காலத்தில் இனிமையும் எளிமையும் கொண்ட பாடல்களைப் படைத்து பல்லோரும் படிக்கும்வகையில் அவற்றை ஆக்கியளித்தவர். திருவூடல் என்னும் பாடல் முறையினை ஈழநாட்டிற்கு முதன்முதல் அறிமுகப்படுத்தியவர். ஈழத்தின் புலமைச் செல்நெறியினை வளர்த்துச் செல்லும் வகையில் மாணவ பரம்பரையை உருவாக்கி விட்டுச் சென்றவர். அவ்வகையில் இதுவரை ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் கணிக்கப்படாது இருந்த சுப்பையர் இன்று இவ்விலக்கிய வரலாற்று முன்னோடிகளுள் ஒருவராகவும் அதனை வளர்த்துச் சென்றவர்களுள் ஒருவராகவும் விளங்கி அதன் சென்னெறிப் பதத்திற்கும் நிலைப்பேற்றுக்கும் காலாக அமைந்து விடுகின்றார்.

உசாத்துணை:

1. சிவத்தம்பி கா, 1995, புலமைத்துவ மரபு – ஓர் இலக்கிய கண்ணோட்டம்.

2. வேலுப்பிள்ளை. க., 1918 யாழ்ப்பாண வைபவ கௌமுதி., ஜயசிறீ சாரதாபீடேந்திர சாலை, வயாவிளான்.

3. அம்பிகைபாகர் க., 1979, யாழ்ப்பாணத்தின் கொச்சிக் கணேசையர் பரம்பரை,

4. தையல்நாயகி வெண்பா.

5. முத்துக்குமாரசுவாமி திருவூடல், தையல்நாயகி திருவூஞ்சல் ஆகிய இருநூல்களும் கையெழுத்துப் பிரதிகளாக பார்வையிடப்பட்டன.

எண்பதுகளில் ஈழத்து நாவல்கள்

கலாநிதி செ. யோகராசா
மொழித்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

1. காலச்சூழல்:

எண்பதுகள் முன்னைய காலப் பகுதிகளைவிட, ஈழத்துக் கவிதை, சிறுகதை, நாடகம், ஓவியம் என நவீன கலை இலக்கியத்துறைகள் அனைத்திலும் மாற்றங்கள் ஏற்பட்ட காலத்தின் தொடக்கமாகும்.

எண்பதுகளிலே ஏற்பட்ட அரசியல், சமூக மாற்றங்கள் காரணமாக, முதன்முதலாக ஈழத்தின் எல்லாப் பிரதேசங்களையும் சார்ந்த – எல்லா மட்டங்களையும் சார்ந்த – தமிழ்பேசும் மக்கள் அனைவரும் பொதுவான சமூக அனுபவங்களுக்குட்பட்டனர். இத்தகைய பரந்துபட்ட அனுபவம் நாவல் வளர்ச்சிக்கான அடிப்படை அம்சங்களுள் ஒன்றென்பது அனைவருமறிந்ததே.

மேற்குறித்தவாறான அரசியல், சமூக மாற்றங்கள் எவை? (சிங்களவர், தமிழர் ஆகிய இரு சமூகங்களுக்கிடையிலான) 'இனப்பிரச்சினை' என்பது குறிப்பாக எழுபதுகளின் நடுப்பகுதியிலிருந்து அதுவரை காலமும் வகுப்புவாதமாகக் கருதப்பட்டுவந்த நிலைமாறி, 'தேசிய இனப்பிரச்சினை' என்ற நிலைக்கு பரிணாமங் கண்டது. ஒருபுறம் அது தனிநாட்டுக் கோரிக்கை, அதற்கான தமிழீழ விடுதலை இயக்கங்களின் ஆயுதப் போராட்டம் என்பனவாகவும் மறுபுறம் அரச இராணுவ ஒடுக்குமுறையின் உச்சமாகவும் விரிவு கண்டது. இத்தகைய சூழ்நிலையில் 1983 இல் ஏற்பட்ட இனக் கலவரத்தின் விளைவாக ஈழத்தமிழர் புலம்பெயர்ந்து ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா, தமிழ்நாடு ஆகியவற்றிற்குச் சென்று வாழத் தொடங்கினர்.

தவிர, ஈழத்தமிழ்ப் பெண்கள் மத்தியில் உயர்கல்வி அதிகரித்தமையும் தமிழீழ விடுதலை இயக்கங்கள் பெண்கள் பிரசனைகளில் கரிசனை காட்டத்தொடங்கியமையும் பெண்கள் மத்தியிலேற்பட்ட உலகளாவிய விழிப்புணர்ச்சியும் இக்காலப்பகுதியிலிருந்து பெண்நிலைவாதச் சித்தனைகள் பரவ வழிவகுத்தன.

மேற்குறித்த அரசியல், சமூக மாற்றங்களின் பின்புலத்திலே எண்பதுகளுக்குப் பிற்பட்ட ஈழத்தமிழ் நாவலின் செல்நெறிகள் எவ்வாறமைகின்றன என்று காண்பது பொருத்தமானது.

2. எண்பதுகளிலிருந்து ஈழத்துத் தமிழ் நாவல்களின் முக்கிய செல்நெறிகள்:

2.1. தேசிய இனப்பிரச்சினை:

இக்காலப் பகுதியின் முக்கியமான செல்நெறியாகி தமிழ்த் தேசிய இனப் பிரச்சினையும் அதன் விளைவுகளும் வெவ்வேறு விதங்களிலே இக்காலப் பகுதி நாவல்களில் இடம்பெற்றுள்ளன. வசதிக்காக, இவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்,

2.1.1. இராணுவ ஒடுக்குமுறைகள்:

இவ்விதத்தில் சித்திரவதைகள், படுகொலைகள் என்பன சித்திரிக்கப்படுதல் எ–டு: செ. யோகநாதனின் நியாயப்படுத்தப்பட்ட கொலை.

2.1.2. பரஸ்பர இராணுவ - இயக்க செயற்பாடுகளின் மத்தியிலான அன்றாட வாழ்வு:

எ–டு : தாமரைச் செல்வியின் தாகம், பொ. தொடுவானம் தூரத்தில். முறையே இவை கிளிநொச்சி பிரதேச மக்களின் வாழ்வையும், யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் வாழ்வையும் விவரிக்கின்றன.

2.1.3. அகதி நிலைமையும் இடப் பெயர்வுகளும் :

எ–டு: தெணியானின் சிதைவுகள், செ. யோகநாதனின் துன்பகேணியில், செங்கை ஆழியானின் மரணங்கள் மலிந்த பூமி.

2.1.4. இயக்கங்களின் பேராட்டங்கள்:

எ–டு: துரையின் சுயம்வரம், மலரவனின் போருலா, கோவிந்தனின் புதிய உலகம்; இவற்றில், சுயம் வரத்தின் ஒரு பகுதியும் போருலாவின் முழுப்பகுதியும் இயக்கமொன்றின் போராட்டச் செயற்பாடுகள் பற்றி விவரிக்கின்றன. புதிய உலகம் இக்கமொன்றின் செயற்பாடுகள் பற்றி விமர்சிப்பது.

2.1.5. அண்மைக்கால (யாழ்ப்பாண) மக்களின் வாழ்வு :

குறிப்பாக, நீண்டகாலத்தின் பின் இராணுவத்தினாட்சிக்குட்பட்ட மக்களின் வாழ்க்கை நிலை சித்திரிக்கப்படுதல், எ–டு: செங்கை ஆழியானின் போரே நீ போ.

2.1.6. முற்பட்ட ஈழத்தமிழரது வாழ்வு :

மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளின் உந்தல் காரணமாக, முன்னைய வாழ்க்கை நிலை பற்றிச் சித்திரித்தல். எ–டு: செ. யோகநாதனின் நேற்றிந்தோம் அந்த வீட்டினிலே, வ.அ. இராசரத்தினத்தின் ஒருவெண்மணற்கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது. இவற்றில், தமிழரது நீண்டகால வரலாற்றைச் சொல்வது என்ற விதத்திலே அதன் முதற்பகுதியாக குறிப்பாக சென்ற நூற்றாண்டு யாழ்ப்பாணத் தமிழரின் வாழ்க்கையை விவரிப்பது முதல்நாவல். ஏறத்தாழ, முப்பதுகளளவிலான திருகோணமலைப் பிரதே சம்சார்ந்த ஆலங்கேணி மக்களது வாழ்க்கையை விவரிப்பது அடுத்த நாவல்.

2.2. புகலிட நாவல்கள் :

புகலிடக் கவிதைகள், சிறுகதைகள் என்பவற்றுடன் ஒப்பிடும்போது புகலிடத்திலிருந்து வெளிவரும் நாவல்கள் எண்ணிக்கை ரீதியில் குறைவாகும். (கவிதை, சிறுகதை என்பவற்றைவிட நாவல் வடிவம் ஆழ்ந்தகன்ற அனுபவத்தை விழைத்து நிற்பதும் அத்தகைய நிலை ஏற்பட அதிக காலமெடுப்பதும் புகலிட அனுபவங்கள் அத்தகைய வாய்ப்பினை மிக அண்மைக்காலமாகவே தருவதும் இதற்கான – அதிக நாவல்கள் வெளிவராமைக்கான – காரணமாகின்றன. ஆயினும், இப் புகலிட நாலவ்களில் பின்வரும் செல்நெறிகளை ஓரளவு இனங்காண முடிகின்றது.

2.2.1 ஈழத்தமிழரது பிரச்சினைகள் :

நுணுகி நோக்கும்போது இவற்றினைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

2.2.1.1 இராணுவ ஒடுக்குமுறைகள் / இயக்கங்களின் போராட்டங்கள் :

ஆதவன் எழுதிய (முற்றுப் பெறாத தொடர் கதையாகிய) மண்மணம் குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் பொதுவாக ஈழச் சூழலில் இடம்பெற்ற இவ்விடயங்கள் பற்றிச் சித்திரிப்பதனையும், துரை எழுதிய சுயம்வரம் 1987ல் வடமராட்சிப் பகுதியில் நடை பெற்ற 'ஒப்றேசன்', முதற் கடற்சமர் முதலியனபற்றிப் பேசுவதையும் இங்கு எடுத்துக் காட்டாகக் குறிப்பிடலாம். இத்தியாதி விடயங்கள் ஈழத்திலிருந்து எழுதப்படுவதை விட புகலிட நாடுகளிலிருந்து எழுதப்படும் போது கூடுதலான எழுத்துச் சுதந்திரம் இருப்பதையும் விமர்சன ரீதியில் சிலவற்றைக் கூற வாய்ப்பிருப்பதையும் இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தமானது. இவ்வாறான படைப்புகளில் அது வெளிப்படுவது குறிபடத்தக்கது.

2.2.1.2. சாதிப் பிரச்சினை / சீதனப் பிரச்சினை :

முறையே பார்த்திபன் எழுதிய வித்தியாசப்படும் வித்தியாசங்கள், ஆண்கள் விற்பனைக்கு என்பன இவ்விதத்தில் நினைவு கூரப்பட வேண்டியன. புகலிட நாட்டு அனுபவங்களே (அங்கு வாழும் தமிழர் மத்தியில்

இவை நிலவி வருவது காரணமாக) இவை எழுவதற்கு மறைமுக உந்து சக்தியளிக்கின்றன என்பது கவனத்திற்குரியது.

2.2.2.புகலிடத் தமிழரது வாழ்க்கை :

ஜேர்மனியில் அகதி முகாமொன்றில் வாழும் தமிழ் இளைஞர்களின் நாளாந்த வாழ்க்கையைச் சித்தரிக்கும் பார்த்திபன் எழுதிய (முற்றுப் பெறாத தொடர்கதையாகிய) கனவை மிதித்தவன், அத்தகு பின்னணியில் அண்மைக்காலத்தில் பொ. கருணாகரமூர்த்தி எழுதிய வானம் வசப்படும் என்பன இவ்வித செல்நெறிக்குச் சில எடுத்துக் காட்டுகளாம். இலண்டன் வாழ் தமிழ் இளைஞர்கள், குடும்பங்கள் பற்றி ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் எழுதிவரும் நாவல்களும் விதந்துரைகற்பாலனவே. (எ–டு: உலகமெல்லாம் வியாபாரிகள், தேம்ஸ் நதிக்கரையில்) இத்தகைய நாவல்கள் யாவும் குறிப்பிட்ட வட்டத்தினுள் சுழல, (தியாகலிங்கம் எழுதிய) 'அழிவின் அழைப்பு' வித்தியாசமான பின்னணியில் – 'எயிட்ஸ்' நோய்க்குள்ளாகிவிட்ட தமிழ் இளைஞன் ஒருவனது மன உணர்வுகளைச் சித்திரிகின்றது;

2.2.3.புகலிட நாட்டினது வாழ்க்கை :

ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா ஆகிய இடங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்வை முதன்மைப்படுத்தி தமிழ் எழுத்தாளர் எழுதிய நாவல்கள் எதுவும் இதுவரை வெளிவந்ததாகத் தெரியவில்லை. (அத்தகு சிறுகதைகள் சில வெளியாகியுள்ளன). ஆயினும் முற்குறிப்பிட்ட நாவல்கள் சிலவற்றில் (எ–டு: தேம்ஸ் நதிக்கரையில், அழிவின் அழைப்பு) புகலிட நாட்டு மக்களது வாழ்வு அவற்றின் ஒரு பகுதியாக இணைந்து இடம்பெற்றுள்ளது. இவற்றுள், டேனிஷ் குடும்ப மொன்றின் வாழ்வு இடம்பெறும் 'சுயம் வரம்' குறிப்பிடத்தக்கது. மேலைத் தேயத்தவரது நற்பண்புகள் இங்கு பேசப்பட்டுள்ளன.

தவிர, தமிழ்நாட்டு மக்களது வாழ்க்கையை விதந்து பேசும் ஈழத்து எழுத்தாளரது நாவல்கள் சில வெளியாகியுள்ளன. ஜெயலலிதா காலத்துத் தமிழ்நாட்டு அரசியல் நிலை பற்றிச் சித்திரிக்கும் (செ. கணேசலிங்கனின்) ஒரு அரசியலின் கதை, சிவகாசி சிறுவர் உழைப்புப் பற்றிப் பேசும் 'அடைப்புகள்', சூழல் மாசடைதல் பற்றி எழுந்துள்ள நரகமும் சொர்க்கமும் முதலியன இவ்விதத்தில் குறிப்பிடத்தக்கன.

2.3. பெண்நிலை வாதம் :

மேற்கூறியவாறு வகைப்படுத்திப் பார்ப்பது ஈழத்துக் கவிதைகளுக்கும், சிறுகதைகளுக்குமே பொருத்தக்கூடியது. ஏனெனில், இத்தகைய நோக்குடைய நாவலாசிரியைகள் ஈழத்தில் மிகக் குறைவே. சாதாரண குடும்ப வாழ்விலே பெண்ணுக்கு ஏற்படும் பிரச்சினைகள் பற்றிப்பேசும் ஒரு நாவலினைத் தவிர (கோகிலா மகேந்திரனின் தூவானம்கவனம்) விதந்துரைக்க வேறெதுவுமில்லை. ஆயினும், பெண்நிலை வாதச் சிந்தனை கொண்ட பாத்திரங்கள் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் சில நாவல்களில் (எ–டு: உலகமெல்லாம் வியாபாரிகள்) இடம் பெற்றுள்ளன.

ஆயினும், பெண்நிலைவாத நோக்குடன் ஆண் நாவலாசிரியர்கள் எழுதியுள்ள சில நாவல்கள் (எ–டு: செ. யோகநாதனின் தனியாக ஒருத்தி, செ. கணேசலிங்கனின் வன்முறைவடுக்கள், கலகச் சந்தையில் ஒரு பெண்) கவனத்திற்குரியன.

3. ஏனைய செல்நெறிகள் :

3.1. சாதிப் பிரச்சினை :

முன்னர் (எழுபதுகள்) போன்று இக்காலப் பகுதியிலும் சாதிப் பிரச்சினை பற்றிய நாவல்கள் வெளிவந்துள்ளன. அடிநிலை மக்களது ஏறத்தாழ நூற்றாண்டுக்கால சாதி ரீதியான ஒடுக்கு முறையும் அண்மைக்காலம் வரையிலான அவர்களது வாழ்க்கைப் போராட்டமும் பற்றிய டானியலின் பல நாவல்கள் (பஞ்சமர், அடிமைகள், கானல், தண்ணீர், கோவிந்தன், பஞ்ச கோணங்கள்) இக்காலப் பகுதியிலேயே வெளியாகின. முற்காலகட்ட (குறிப்பாக, செ. கணேசலிங்கனின்) நாவல்கள் போன்று தெளிவான வர்க்கப் பார்வை இவற்றிலே வெளிப்படவில்லையெனினும் இவை நாவலாசிரியரது நேரடியான அனுபவங்களினதும்

ஆழமான தோடல்களினதும் பதிவுகள் என்பது முக்கியமானது.

தவிர, பிராமணச் சாதியினர் பற்றிய இரு நாவல்களின் வரவு இக்காலப் பகுதியில் நிகழ்ந்துள்ளது. தமிழ்நாடு போன்று ஈழத்திலே பிராமணர் அதிக எண்ணிக்கையினருமல்லர்; பொருளாதார ரீதியில் உயர்ந்தவர்களுமல்லர். இத்தகையவர்களது வாழ்வுப் போராட்டங்களையே (தெணியான் எழுதிய) பொற்சிறையில் வாடும் புனிதர்கள், (ஈழத்துச் சோமு எழுதிய) விடிவெள்ளி வந்தது ஆகிய படைப்புகள் வெளிப்படுத்துகின்றன.

மேலும், உயர்வர்க்கத்தினரில் ஒருசாராராகிய மணியகாரர், உடையார் ஆகியோரின் இன்றைய வாழ்நிலையையும், அவர்களது வீழ்ச்சியையும் முதன்மைப்படுத்தி எழுதப்பட்ட (தெணியானின்) மரக்கொக்கு நாவலும் இக்காலப் படைப்புகளுள் குறிப்பிடத்தக்கதே.

3.2. சீதனப் பிரச்சினை :

இப்பிரச்சினையும் சாதிப்பிரச்சினை போன்று ஈழத்தமிழ்ச் சூழலில் முக்கிய இடம் பெற்றுள்ள தெனினும் முன்னர் போன்றே இக்காலப் பகுதியிலும் இப்பிரச்சினை ஈழத்து எழுத்தாளரை ஈர்த்துக் கொண்டது குறைவு. ஒரிரு நாவல்களே வெளிவந்துள்ளன. புகலிடச் சூழலிலிருந்து வெளியான ந. பார்த்திபன் எழுதிய ஆண்கள் விற்பனைக்கு இவ்விதத்தில் முக்கியமானது.

3.3. தொழிலாளர் வாழ்க்கை :

முன்னர் போன்று இக்காலப்பகுதியிலும் இத்தகைய நாவல்கள் வெளிவந்துள்ளன. இவ்விதத்தில் மலையக தொழிலாளர் பற்றி வெளிவந்துள்ள நாவல்களுள் சில குறிப்பிடத்தக்கன. குறிப்பாக, மாத்தளைச் சோமு எழுதிய எல்லை தாண்டா அகதிகள் என்ற நாவல் களுகங்கைப் பிரதேசத்தில் மாணிக்கக்கல் தோண்டும் மக்கள் வாழ்க்கை பற்றியும் தி. ஞானசேகரின் லயத்துச் சிறைகள், தோட்டத் தொழிலாளரின் வாழ்க்கை பற்றியும் செ. யோகநாதனின் மீண்டும் வந்த சோளகம் மீனவத் தொழிலாளர் வாழ்க்கை பற்றியும் சித்தரிப்பன.

கடந்த சில வருடங்களாக, ஈழத்தில் இயங்கி வரும் ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் (முஸ்லிம்) தொழிலாளர் பற்றியும் அவர்களது தொழிற்சங்கப் போராட்டம் பற்றியும் சித்திரிக்க முற்படுகின்றது என்ற விதத்திலே திக்வெல்லை கமாலின் 'ஒளி பரவுகின்றது' கவனிக்கப்பட வேண்டிய படைப்பாகின்றது.

3.4. பிரதேச நாவல்கள் :

தமிழ் நாட்டுடன் ஒப்பிடும்போது ஈழத்துத் தமிழ் பேசும் மக்கள் தொகையும் வாழ்விடப்பரப்பும் குறைவானதே. அத்துடன் இவர்கள் வாழும் பிரதேசங்கள் அருகருகே உள்ளவாகவும் பரப்பளவிலே குறுகியனவாயுமுள்ளன. ஆயினும், இத்தகைய பிரதேசங்களிடையே வாழ்வோரிடம் பண்பாட்டு ரீதியில் ஒருமைப்பாடு நிலவினும் நுணுகி நோக்கும்போது வேறுபாடுகளும் தனித்துவப் பண்புகளும் (அசமத்துவ ரீதியிலான வளர்ச்சி நிலையும்) காணப்படுகின்றன. இப்பின்னணியில் ஈழத்திலே பிரதேச நாவல்களின் வரவு தவிர்க்க இயலாததே. முன்னைய காலகட்டம் போன்று அதிக அளவிலான பிரதேச நாவல்கள் இப்போது வெளிவரவில்லையாயினும் சில குறிப்பிடத்தக்க நாவல்கள் வெளிவந்துள்ளன. (ஆயினும், ஈழத்திலே இன்றுவரை வெளிவந்துள்ள பிரதேச நாவல்களின் தொகை குறைவானதுதான்). பின்வருவன இவ்விதத்தில் குறிப்பிடற்பாலன.

3.4.1. யாழ்ப்பாணம் / நாயினாதீவு :

இவ்விதத்திலே தேவகாந்தன் எழுதிய கனவுச்சிறை நயினாதீவு மக்களின் குறிப்பிட்ட காலப்பகுதி வாழ்க்கை நிலைமைகளை ஓரளவு தத்ரூபமாக வெளிப்படுத்த முற்படுகின்றது.

3.4.2. யாழ்ப்பாணம் / வடமராட்சி:

முன்னர் குறிப்பிட்ட துரை எழுதிய 'சுயம்வரம்' நாவலின் நடுப்பகுதி போராட்டம் ஆரம்பித்த எண்பதுகளின் பிற்பகுதியில் இப்பிரதேச மக்களது வாழ்க்கையை நுணுக்கமாகப் படம்பிடிக்கின்றது.

3.4.3. அம்பாறை / அக்கரைப்பற்று :

ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் தில்லையாற்றங்கரை நாவல் கிராம மக்களின் வாழ்வினைச் சித்தரிப்பது.

3.4.4. வடமேல் மாகாணம் / நீர்கொழும்பு :

நீர்கொழும்பூர் முத்துலிங்கம் எழுதிய ஒரு உதயத்தின் அஸ்தமனம் நீர்கொழும்புப் பிரதேச மக்களது வாழ்க்கையின் சிற்சில அம்சங்களை அழகாக வெளிக்கொணர முற்படுகின்றது.

3.4.5. திருகோணமலை / ஆலங்கேணி :

வ. அ. இராசரத்தினம் எழுதிய 'ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது' என்ற நாவல் இப் பிரதேசமக்களின் வாழ்க்கை நிலைமைகளைச் சுருக்கமாக எடுத்துக் காட்டுகின்றது.

3.4.6. தென்னிலங்கை / திக்வெல்லை :

மூன்னரும் திக்வெல்லைப் பிரதேச முஸ்லீம் மக்களின் 'வாழ்க்கையை எழுத்திலே பதிவு செய்த திக்வெல்லை கமால் 'ஒளி பரவுகிறது' நாவலில் பிறிதொரு கோணத்தில் அதனை வெளிப் படுத்தியுள்ளார்.

3.4.7. மட்டக்களப்பு / ஓட்டமாவடி :

வை. அகமத் எழுதிய 'கிராமத்துப் பெண்' இப்பிரதேச முஸ்லீம் மக்களது வாழ்க்கையினை மேலோட்டமாகச் சித்திரித்திருப்பினும் சுவைபடச் சொல்கின்றது.

3.4.8. மலையகம் :

இவ்விதத்தில் 'மாத்தளை சோமு' வின் பலபடைப்புகள் குறிப்பிடத்தக்கவை. இவற்றின் 'நான்காவது உலகம்' மலையகத்தில் அரசுசார்பற்ற நிறுவனங்கள் செய்யும் சுரண்டல்களையும், 'ஆயுதங்கள்' இங்கு தலை தூக்கும் போராட்ட நிலைமைகளையும் அழகாக வெளிப்படுத்துகின்றன.

3.5. முஸ்லீம் மக்களது வாழ்க்கை :

தமிழ்நாடு போலன்றி, ஈழத்திலே முஸ்லீம் மக்கள் (தமிழ் மொழி பேசினும்) தம்மைத்தனி இனமாகக் கருதுகின்ற நிலையுள்ளது. இதனால் ஈழத்தமிழ் இலக்கியத்திலே முஸ்லீம் இலக்கியம் என்பது தனி இடத்தைப் பெற்றுள்ளது. இவ்விதத்தில் முற்கூறப்பட்ட ஒளிபரவுகிறது, ஒரு கிராமத்துப் பெண் முதலானவற்றோடு ஜுனைதா ஷெரிப் எழுதிய நாவல்களுட் சிலவும் (எ–டு: சாணைக்கூறை) கவனத்திற்குரியது.

3.6. வித்தியாசமான படைப்புகள் :

வித்தியாசமான களங்கள், பிரச்சினைகள் கொண்ட நால்கள் என்ற விதத்திலே சில குறிப்பிடத்தக்கன. செங்கை ஆழியான் எழுதிய 'ஒ' அந்த அழகிய கிராமம்' (சூழலியல் காடழித்தல் பற்றிச் சித்திரிப்பது என்பதுடன்) தொடர்புடையது முற்குறிப்பிட்ட 'சொர்க்கமும் நரகமும்' தமிழ் நாட்டினைக் களமாகக் கொண்டாலும் சூழலியலுக்கு முதன்மை கொடுப்பது, செ. யோகநாதன் எழுதிய 'கிட்டி' காட்டு வாழ் மக்கள் பற்றியது.

இதுவரை கூறப்பட்டவை தொடர்பாக இரு விடயங்கள் கவனத்திற்குரியன. முக்கியமான போக்குகள் பற்றிய சில முக்கியமான படைப்புகளே எடுத்துக் காட்டாகக் கூறப்பட்டுள்ளன என்பது ஒன்று. பொழுதுபோக்கு அம்சங்கள் மிகுந்த நாவல்கள் (இவை, தமிழ் நாட்டுடன் ஒப்பிடும் போது ஈழத்தில் குறைந்தளவே வெளிவருகின்றன) இங்கு கவனத்திற் கொள்ளப்படவில்லை, (எ–டு: சோ. ராமேஸ்வரனின் பல படைப்புகள்), என்பது மற்றொன்று.

மேற்கூறப்பட்டுள்ளவாறான ஈழத்துத் தமிழ் நாவல்களின் சமகாலச் செல்நெறிகள் பற்றித் தொகுத்துப் பார்க்கும் போது தமிழ் நாட்டுடன் ஒப்பிடுகையில் இருபுதிய செல்நெறிகள் விதத்துறைக்கப்பட வேண்டியனவாகின்றன. தேசிய இனப் பிரச்சினையும் புகலிட அனுபவங்களுமே அவை. இவ்விதத்தில், பொதுவான தமிழ்நாவல் செல்நெறிகளுடன் ஈழத்துத் தமிழ் நாவல் செல்நெறிகள் சங்கமித்துக் கொள்கின்றன என்பதிலே தவறில்லை.

மேலும், முன்னைய காலகட்டச் செல்நெறிகளின் தொடர்ச்சியாக இக் காலப்பகுதியிலே எழுந்துள்ள சாதிப் பிரச்சினை பற்றிய டானியலின் நாவல்கள் தமிழில் தலித் நாவல்களின் தோற்றத்தினை ஈழத்திலிருந்து ஆரம்பிக்க வைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

4. இக்காலப்பகுதி நாவல்களின் படைப்பாக்க முறைமை :

இனி மேற்கூறப்பட்ட ஈழத்து நாவல்களின் படைப்பாக்க முறைமை பற்றிக் கூர்ந்து அவதானிக்கும் போது அது முக்கியமாக இரு தடங்களில் அமைந்து வந்துள்ளமை புலப்படுகின்றது.

4.1. விவரண ரீதியிலான பதிவு :

இக்காலப் பகுதிக்குரிய பெரும்பாலான நாவல்கள் இப் பண்பினவே. இதுபற்றி நாவலாசிரியரொருவரின் கூற்றினை எடுத்தாள்வது பொருத்தமானது. அது பின்வருமாறு:

> " இத்தகைய மாபெரும் மக்கள் வெளியேற்றத்தைச் சுட்டிக்காட்டி நாவல் வடிவில் பதிவு செய்யும் நோக்கிலேயே இந்நாவலை எழுத முயன்றேன்.... மேலே கூறப்பட்ட நிகழ்வுகள், சூழ்நிலை, சம்பவங்களை மட்டுமே மாதிரியாகக் கொண்டு ஒரு சில பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மூலம் சுட்டிக் காட்ட முனைந்தேன்....."

இத்தகைய விவரணப்பதிவிலான நாவல்களில் பின்வரும் பண்புகள் இடம் பெற்றுள்ளன.

அ. நாவல் நிகழ்ச்சிகள்/ சம்பவங்களின் தொகுப்பாகல்.

ஆ. இயல்பான பாத்திர உருவாக்கமும் உரையாடலும் இடம்பெறுதல்.

இ. கதையம்சம் முக்கியம் பெறுதல்.

4.2. கருத்து / கருத்தியல் விளக்கம் :

மேற்குறிப்பிட்ட பண்பிலான நாவல்களில் பின் வரும் பண்புகள் இடம் பெற்றுள்ளன:

அ. பாத்திரங்கள் எலும்புக் கூடுகளாக அமைத்தல்.

ஆ. பிரச்சாரம் முதன்மை பெறுதல்.

இ. ஒரே பாணியில் அமைதல்.

ஈ. செயற்கைப் பாங்குடன் அமைதல்.

உ. நாவல் நிகழ்ச்சிகள், சம்வங்களின் தொகுப்பாதல்.

ஊ. கதையம்சம் முக்கியம் பெறுதல் அல்லது முக்கியம் பெறாமை.

இவ்விருவகைப் படைப்பாக்க முறைமை கொண்ட நாவல்கள் சிலவிதங்களில் ஒன்று படுகின்றன. அவையாவன.

அ. உலக நோக்கோ வாழ்க்கை பற்றிய தரிசனமோ இடம்பெறாமை.

ஆ. பாத்திரங்களின் அக உணர்வுகள் வெளிப்படாமை.

இ. மொழிநடை வளம் பெறாமை.

ஈ. படைப்பாக்க முறைமையிலும் கலையழகிலும் கவனஞ் செலுத்தாமை.

உ. எடுத்தாளப்படும் பிரச்சினைகள் பன்முகத் தன்மையுடன் இடம் பெறாமை; ஆழமாக அணுகப்படாமை.

5. மதிப்பீடு:

5.1. எண்பதுகளிலே, புதிய செல்நெறிகளுக்கு எடுத்துக் காட்டான நாவல்கள், முன்னர் குறிப்பிட்டது போன்று (கவிதை, சிறுகதை ஆகியவற்றுடன் ஒப்பிடும் போது) பெருமளவு வெளிவரவில்லை.

5.2. எனினும், புதிய செல்நெறிகளாக இனங்காணப்பட்ட தேசிய இனப் பிரச்சினை பற்றிய நாவல்களும் புகலிட நாவல்களும் பொதுவான தமிழ் நாவல் வளர்ச்சிக்கு ஈழத்து நாவல் துறையின் பங்களிப்பாகின்றன.

5.3. எண்பதுகளில், முன்னைய செல்நெறிகளின் தொடர்ச்சியாக அமையும் சாதிப் பிரச்சினை பற்றிய (டானியலின்) நாவல்கள் தமிழில் தலித் நாவல்களின் முன்னோடிகளாக அமைகின்றன. இவ்விதத்திலே அவை தமிழ் நாவல் வளர்ச்சிக்கு ஈழத்து நாவல் துறையின் பங்களிப்பாகின்றன.

5.4. புதிய செல்நெறிகள் என்ற விதத்தில் கவனிக்கப்பட்ட நாவல்களின் முக்கியத்துவம் உள்ளடக்கம் சார்ந்ததே தவிர படைப்பாக்க முறைமை சார்ந்ததன்று.

5.5. எண்பதுகளின் தமிழக நாவல் செல்நெறிகளுடன் ஒப்பிடும்போது ஈழத்து நாவல்கள் உள்ளடக்க ரீதியிலே ஓரளவு ஒப்பிடக் கூடியனவே தவிர, படைப்பாக்க முறையிலே தேக்கநிலையையே எட்டியுள்ளன. இதற்கான காரணங்கள் விரிவான ஆய்வை நாடி நிற்கின்றன.

தேசிகம்

வித்துவசிரோமணி
பிரம ஸ்ரீ சி. கணேசையர் அவர்களின்
தலைமாணாக்கரும்
பண்டிதர்,
செந்தமிழ்த்திலகம்,
மஹாவித்துவான்,
இலக்கணவித்தகர்
எனும் விருதுகளுக்குரித்தாளரும்
இன்றைய ஈழத்திருநாட்டின்
தலைமைச் சால்பாளருமான
பேராசான்
இ. நமசிவாய தேசிகர் அவர்களுக்கு
கட்டுவன்,
மயிலிட்டி தெற்கு,
வருத்தலை விளான்,
'பாலர் ஞானோதய சங்கம்' எடுத்த
சதாபிஷேகப் பெருவிழாவின்போது
அன்போடு
அருச்சிக்கப்பட்ட
'மலர்' இது.

GRAPHICS DESIGNED & PRINTED BY UNIE ARTS (PVT) LTD, COLOMBO-13. TEL.: 330195,478133